# சங்க இலக்கியத்தில்
# உவமைகள்

பேராசிரியர்
**டாக்டர். ரா. சீனிவாசன்,**
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்டி.

## அணியகம்

5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030.

# சங்க இலக்கியத்தில் உவமைகள்

பேராசிரியர்
**டாக்டர். ரா. சீனிவாசன்,**
எம்.ஏ.,எம்.லிட்.,பிஎச்டி.

அணியகம்
5, செல்லம்மாள் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030.

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| முதற்பதிப்பு | : | 1973 |
| இரண்டாம் பதிப்பு | : | 1979 |
| மூன்றாம் பதிப்பு | : | 1990 |
| நான்காம் பதிப்பு | : | 1997 |
| நூல் பெயர் | : | **சங்க இலக்கியத்தில் உவமைகள்** |
| **ஆசிரியர்** | : | ரா. சீனிவாசன் |
| பொருள் | : | இலக்கியம் |
| பதிப்பகம் | : | அணியகம்<br>5, செல்லம்மாள் தெரு,<br>செனாய் நகர், சென்னை-600 030. |
| தாள் | : | 16 kg. |
| அளவு | : | D. Demmy 14 x 22 cm |
| எழுத்து | : | 10 புள்ளி |
| பக்கம் | : | 184 |
| விலை | : | ரூ. 50/- |
| ஒளியச்சு | : | லேசர் இம்ப்ரெஷன்,<br>சென்னை - 600 030. |
| அச்சீடு | : | நெல்சன் பிரிண்டிங்<br>சென்னை - 600 029. |
| விலை | : | ரூ.50/- |

## பிற நூல்கள்

| | |
|---|---|
| திருக்குறள் செய்திகள் | ரூ.40.00 |
| திருக்குறள் மூலம் | ரூ.20.00 |
| சிலப்பதிகாரம் மூலமும் திறனாய்வும் | ரூ.40.00 |
| மணிமேகலை மூலமும் திறனாய்வும் | ரூ.40.00 |
| கம்பராமாயணம் உரைநடை | ரூ.50.00 |
| மாபாரதம் | ரூ.30.00 |
| சீவக சிந்தாமணி | ரூ.30.00 |
| மொழியியல் | ரூ.50.00 |

# முன்னுரை

சங்க இலக்கியத்தில் உவமைகள் என்பது எடுத்துக் கொண்ட தலைப்பாகும். இதுவே முதன் முறை இத்தலைப்பில் வெளிவரும் ஆய்வு நுலாகும். தொல்காப்பியத்திற்குப் பிறகு குறிப்பிடத் தக்க அணிநூல் தண்டியலங்காரமாகும். இது பொது வகையான் அமைந்த இலக்கண நூலேயன்றி எந்தத் தனிப்பட்ட இலக்கியத்தின் மரபுகளையும் சுட்டிக்காட்ட அமையவில்லை. சங்க இலக்கியம் பொருள் நிலையிலும், சொல் வகையிலும், யாப்பு அமைதியிலும் தனி மரபுகளைப் பெற்று விளங்கு கின்றது. அதே போல உவம அணி வகையிலும் தனி மரபுகளைத் தாங்கியுள்ளது. அவற்றைச் சுட்டிக் காட்டுவதே இவ்வாய்வின் அடிப்படையாகும்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன ஒரு குறிப்பிட்ட மரபினைப் பெற்று விளங்கும் நூல்களாகும். இவற்றையே சங்க இலக்கியங்கள் என்று குறிப்பிட்டு வருகின்றனர். இவை ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சார்ந்தன என்று கருதப்படுகிறது. தொல்காப்பியத்திற்குப் பின்னும் சிலம்பு மேகலைக்கு முன்னும் எழுந்தவை இவை என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. கி.பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முற்பட்டவை என்ற கருத்தே பொதுவாக விளங்குகிறது. இந்நூல்களின் மரபுகளே ஈண்டு ஆராயப்படுகின்றன.

இவ்வாய்வு ஏழு தலைப்புகளைக் கொண்டு விளங்கு கிறது. (1) உவமை வகைகள் (2) உருபுகள் (3) உருவகம் (4) சொல்லியல் மரபுகள் (5) நயச்சிறப்புகள் (6) பொருளியல் மரபுகள் (7) உள்ளுறையும் இறைச்சியும் ஆகிய இத் தலைப்புகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இதில் ஆய்வுச் செய்திகளுக்குச் சான்றுகளாக ஆங்காங்கு எடுத்துக்காட்டுகளும் வருமிடங்களும் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன. அடிக் குறிப்புகளும் பிற்குறிப்புகளும் தரப் பட்டுள்ளன. அடிக் குறிப்புகள் வரும் இடங்கள் முழுமையும் தரப்பட்டுள்ளன. மிகை என்று படும் இடங்களில் மட்டும் ஒரு சிலவே தரப்பட்டுள்ளன. இக்குறிப்பு ஆங்காங்கே சுட்டப் பட்டுள்ளது. உள்ளுறை இறைச்சி வரும் இடங்கள், உவம

உருபுகள் வரும் இடங்கள், உவமைகள் வரும் பகுதிகள் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

இவ்வாய்வுக்கு அடிப்படையாக விளங்கிய நூல்களின் பட்டியலும் துணையாக அமைந்த நூல்களின் பட்டியலும் இறுதிப் பக்கத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

இவ்வாய்வில் விளக்கவியல் முறையே பின்பற்றப்பட்டுச் செயதிகள் தரப்பட்டுள்ளன. ஒப்பியல் யாண்டும் மேற் கொள்ளப்படவில்லை. ஒப்பியல் என்று எடுத்துக் கொண்டால் அதற்கு வரையறையே செய்ய இயலாது என்பதால் ஒப்பியல் முறை மேற்கொள்ளப்படவில்லை. இலக்கியங்களைப் பற்றிய செய்திகள் மட்டும் இதில் இடம் பெற்றுள்ளன. தொல்காப்பிய மரபினைச் சங்க இலக்கியம் பின்பற்றுவதால் ஆங்காங்குத் தொல்காப்பிய அடிப்படைகளைக் கொண்டு சங்க இலக்கிய உவமவியல் ஆராயப்பட்டுள்ளது.

அடிக் குறிப்புகளிலும், பிற்குறிப்புகளிலும், பின் னிணைப்புகளிலும் செய்யுள் எண்ணும் வரியும் தரப் பட்டுள்ளன. நூல்களின் முதல் சில எழுத்துகளால் நூற் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. பத்துப்பாட்டு நூல்கள் மட்டும் பத் 1, பத் 2, பத் 3 என எண்களால் குறிக்கப்பட்டுள்ளன.

இந்நூல் டாக்டர் பட்டத்துக்கு (Phd) சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1971 ஜூலையில் தரப்பட்டது.

ஆய்வுத்துறையில் என்னைப் புகுத்தி, என் அறிவு வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த என் பேரராசிரியர் டாக்டர். மு. வரதராசனார் அவர்களுக்கு மிக்க கடப்பாடுடையேன். இந்நூலை வெளியிட அனுமதி தந்த சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றி உரித்தாகுக.

- ரா. சீனிவாசன்

# 1. சங்க இலக்கிய உவமையும் அதன் வகைகளும்

1. உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்னும் பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகின்றார். அவர் கருத்தின்படி உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது என்பதாகும். வினை, பயன், மெய், உரு ஆகிய பொருளின் தன்மைகளை உவமைகள் சிறப்பிக்கின்றன என்பது அவர் தரும் விளக்கமாகும்.

''வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம்''

- தொல். சூ 272

எனத் தொல்காப்பியர் உவமையை வகைப்படுத்திக் காட்டுகின்றார்.

வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கினைப் பண்பு, தொழில், பயன் என மூன்றாக அடக்கிக் காட்டுவர் தண்டியலங்கார நூலாசிரியர்.

''பண்பும் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்ந்து
ஒப்புமை தோன்றச் செப்புவது உவமை''

- தண்டி. சூ. 31

என விளக்கம் தருவர். ஒப்புமை அறிதற்குக் காரணமாய் நிற்கும் பொருளை உவமை என்றும், உவமிக்கப்படும் பொருளைப் பொருள் என்றும் கூறுவர். இவற்றைத் தண்டி உரையாசிரியர் உவமானம் எனவும், உவமேயம் எனவும் குறிப்பிடுவர்.[1]

''புலி போலப் பாய்ந்தான்'' என்பது வினை; ''மாரியன்ன வண்கை'' என்பது பயன் : துடிபோலும் இடை என்பது வடிவு; தளிர்போலும் மேனி என்பது நிறம். இவ் எடுத்துக் காட்டுகளால் நால்வகை உவமைகள் விளக்கப்படுகின்றன.[2] வடிவையும்

1. தண்டி. பக். 38
2. தொல். சூ 272 - இளம்பூரணர் உரை

நிறத்தையும் பண்பு என்னும் பொதுச் சொல்லால் தண்டி ஆசிரியர் குறிப்பிடுவர்.

2. உவமை என்பது கவிஞனின் அனுபவப் பொரு ளாகும்; பொருள் என்பது அவன் காணும் புதிய பொருளாகும். அவன் ஏற்கனவே கண்டு வைத்த பொருளைப் புதிதாகக் காணும் பொருளோடு பொருத்திவைத்து அப்பொருளின் உயர்வு தாழ்வுகளை அளந்து அறிவிக்கின்றான் எனக் கூறலாம். பொதுவாகப் பொருளின் சிறப்பை வற்புறுத்தவே உவமை அமைக்கப்படுகிறது. அதன் உயர்வைக் காட்ட அதனினும் உயர்ந்த பொருளையே வரையறையாக அமைக்க வேண்டி யுள்ளது. எனவே உவமை பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்கருத்தை ஆசிரியர் தொல்காப்பியனார் வற்புறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

''உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை''

- தொல். சூ. 274

என்பது அவர் தரும் குறிப்பு ஆகும்.

''அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்''.[1]

என்றவழித் துப்புடையன பலவற்றினும் அரிமா உயர்ந்த தாகலின் அஃது உமையாகக் கூறப்பட்டது என்று இளம்பூரணர் காட்டுவர். மற்றும்,, 'தாமரை புரையும் காமர் சேவடி[2] என்ற வழிச் சிவப்புடைய பலவற்றினும் தாமரை உயர்ந்ததாதலின் அஃது உவமையாகக் கூறப்பட்டது' என்று மேலும் விளக்கம் தருகிறார்[3].

3. மற்றும் உவமை என்பது உயர்ந்த பொருளாக வரும் என்பதோடு அது சிறப்பு, நலன், காதல், வலி ஆகிய சிறப்பு களால் அமைகின்றது என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

''சிறப்பே நலனே காதல் வலியொடு
அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப''

-தொல். சூ. 275

1. பத். 9/298
2. குறுந் கடவுள் வாழ்த்து
3. தொல் உவமை இயல் உரை - இளம்பூரணர். -பக் 397

4. இவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகக் கீழ்வருவற்றை இளம்பூரணர் தருகின்றார்.

''முரசுமுழங்கு தானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடை எழா அல்''

- பொருநர், 54-6

என்பது சிறப்புப் பற்றி வந்தது என்றும்,

''ஓவத்தன்ன வியனுடை வரைப்பின்''[1] - புறம் 25/26

என்பது நலம் பற்றி வந்தது என்றும்,

''கண்போல்வான் ஒருவன் உளன்''
என்பது காதல் பற்றி வந்தது என்றும்,
''அரிமான் அன்ன அணங்குடைத் துப்பின்''

- பட்டினப். 298

என்பது வலிமை பற்றி வந்தது என்றும் காட்டுவர்[2]

5. இவ் உவமைகளைக் கூறிப் பொருளின் பெருமையையும் சிறுமையும் உணர்த்தும்பொழுது எண்வகை மெய்ப்பாடுகளின் சுவைகள் மேம்பட்டு விளங்கும் என்பர்.

''பெருமையும் சிறுமையும் மெய்ப்பாடு எட்டன்
வழிமருங்கு அறியத் தோன்றும் என்ப''

-தொல். சூ. 260.

இவ் உவமைகளோடு எண்வகைச் சுவைகளும் கலக்கின்றன என்பது அவர் உணர்த்தும் கருத்தாகும். உவமைகளைக் கூறுவதால் அவற்றின் வழியே உவகை, அவலம், வெகுளி, நகை முதலிய சுவைகளை வெளிப்படுத்த இயல்கின்றது என்பது தெரிகிறது. எனவே உணர்வுமிக்க பாடல்களுக்கு உவமைகள் ஒளி விளக்காக நின்று செய்யுட் செய்திகளை விளக்கப்படுத்துகின்றன எனக் கூறலாம்.

6. உவமைகளை வெளிப்படை உவமை எனவும், குறிப்பு உவமை எனவும் இருவகைப்படுத்தலாம் என்பது தெரிகிறது. மேலே கூறப்பட்ட இலக்கணம் அனைத்தும்

1. ''ஓவத்தன்ன இடனுடை வரைப்பு'' என்னும் பாடமும் உள்ளது.
2. ''அரிமா அன்ன'' என்னும் பாடமும் உள்ளது.

பொதுவாக வெளிப்படை உவமங்களுக்குப் பொருந்தும் எனலாம். இவற்றை அமைக்கும் பொழுது தொகை உவமம் எனவும், விரி உவமம் எனவும் பிரித்துக் காட்ட இயலும். உவமை உருபும் பொதுத்தன்மையும் விரித்துக் கூறப்படுவன விரி உவமை எனப்பட்டன; தொக்கு வருவன தொகை உவமம் எனப்பட்டன.

பிறைநுதல்-நற். 120/7... தொகை உவமை;
தளிரேர் மேனி-நற்.251/7... உருபு விரிக்கப்பட்டது;
வேய்மருள் பணைத்தோள். -பத். 2/25 உருபும்
தன்மையும் விரிக்கப்பட்டன.

7. இவ் வெளிப்படை உவமங்களே அன்றி உவமையே பொருளாகி ஒன்றிவிட்ட நிலை உள்ளது. அதனை உருவகம் என்பர். உவமையினின்று வடிவால் இவ் உருவகங்கள் மாறுபட்டு விளங்குகின்றன. சங்க இலக்கியத்தைப் பொறுத்த வரை உருவகங்கள் அருகியே வழங்கின எனலாம். உவமையின் பயில்வு மிகுதியால் ஒரு சில உருவகங்கள் ஆகிவிடுகின்றன எனக் கூறலாம். உவமை முதல் நிலை: அதன் முற்றிய நிலை உருவகமாகும். உவமையின் ஒருவகையே உருவகம் எனினும் வடிவால் வேறுபடுதலின் அதனைத் தனியே ஓர் அணியாகக் காட்ட வேண்டியுள்ளது.[1]

8. முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனச் செய்யுளின் பொருளியல் பிரித்து உணரப்படுகின்றது. முதற் பொருளுக்கும் உரிப்பொருளுக்கும் கருப்பொருள் துணை செய்கிறது. அகப்பொருட் பாடல்களுள் வரும் கருப்பொருட் செய்திகளினின்று உவமச் செய்திகள் ஒரு சில வெளிப்படு கின்றன. இவற்றினின்று பெறப்படும் குறிப்புப் பொருளைக் குறிப்புவமம் என்று கூறலாம். கருப்பொருள் செய்திகளிலே இருந்து குறிப்பாகப் பெறப்படும் உவமச் செய்திகளை உள்ளுறை உவமம் என்றனர். இதனை உவமப்போலி என்றும் கூறினர். இவ் உள்ளுறையைப் போலக் குறிப்பாகப் பெறக் கூடிய மற்றோர் பொருளை இறைச்சி என்றும் கூறினர். உள்ளுறை இறைச்சி ஆகிய இவற்றைக் குறிப்புவமைகள் என்று கூறலாம். இவற்றின் தனிச்சிறப்பை ஒட்டி இவை தனித் தலைப்புகளில் ஆராயப்படுகின்றன.[2]

1. இந்நூலின் மூன்றாவது தலைப்பில் ஆராயப்படுகின்றது.
2. இந்நூலின் பத்தாவது தலைப்பில் ஆராயப்படுகின்றது.

9. தமிழ் இலக்கிய மரபைப் பொறுத்த வரையில் உவமை என்றால் உருவகம், உள்ளுறை, இறைச்சி என்பனவும் அடங்குகிறது என்பது பற்றி மாறனலங்காரம் இவை அனைத்தையும் ஆராய்ந்து விளக்குகின்றது.[1] தொல்காப்பியர் உவமவியலில் உருவகத்தைக் குறிப்பாகப் பெறவைக்கின்றார்.[2] உள்ளுறை உவமத்துக்கு விளக்கம் தொல்காப்பிய உவமை இயலிலும் அகத்திணை இயலிலும் தரப்படுகின்றது.[3] இறைச்சி என்பதற்குப் பொருளியலில் மட்டும் விளக்கம் தரப்படு கின்றது.[4] உரையாசிரியர்கள் இறைச்சிப் பொருள்களில் உவமச் செய்திகளையும் பெற வைக்கின்றனர். தண்டியலங்காரம் உவமை உருவகங்களை மட்டும் கூறுகின்றது.[5] எனவே உவமை என்று கூறும்பொழுது பல்வகை உவமை வகைகளை ஆராய்வது மரபாக விளங்குகிறது.

10. தொல்காப்பிய உவம இயலோடு சங்கப் பாடல்களில் வரும் உவமைகள் நெருங்கிய தொடர்பைப் பெற்றுள்ளன; மற்றும் இவ்வடிப்படைகளே பிற்கால அணி நூல்களுக்கு முன் மாதிரியாக விளங்கியுள்ளன. சங்கச் செய்யுள்களில் உள்ளுறை இறைச்சிகளுக்கு விளங்கங்காணும் உரையாசிரியர்கள் தொல் காப்பியச் சூத்திர நெறிவகைகளைக் கொண்டே விளக்கம் தருகின்றனர். எனவே சங்கப் பாடல்களின் உவம இயல் பினைத் தொல்காப்பியமும் ஏனைய அணிநூல்களும் காட்டும் அணியியல் அடிப்படையில் ஆய்வு காண்பது இன்றி யமையாததாகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

11. ஏனை உவமம் எனக் கூறப்படும் பொது உவமைகள் உவமை, பொருள் என்ற இருவேறு செய்திகளைத் தாங்கி உருபு இன்றியும் உருபு பெற்றும் இயைந்து நின்றன எனலாம். இப்பொது அமைப்பினின்று மாறுபடுவனவற்றை வெவ் வேறு அணிவகைகளாகக் காட்டினர். தொல்காப்பியத்தில் வேறுபட வந்த உவமைத் தோற்றத்தின் இயல்பு பேசப் படுகிறது.[6] ஏனைய அணி நூல்களும் இவ் உவமையின் பல்வேறு

1. மாறனங்காரம் பக். 117 முதல் 209; 270-274
2. தொல். சூ. 280
3. தொல். சூ. 294 முதல் 304; 49, 50, 51
4. தொல். சூ. 225, 226, 127
5. தண்டி - பொருளணியியல் 34-187 பக்.
6. தொல், உவமை இயல் சூ.307

வகைகளைத் தனித்தனிப் பெயரிட்டு அணி வகை களாகக் காட்டுகின்றன. இவற்றின் அடிப்படையை வைத்துக் கொண்டு சங்க இலக்கிய உவமைகளைக் காணும் பொழுது அவற்றின் அணிவகைகளும், சொல்லியல் நயங்களும், மரபு களும் புலப்படுகின்றன. அவற்றை ஈண்டு உவமை வகைகள் எனக்காட்டுதல் தேவையாகின்றது.

12. அகரவரிசையில் அமைத்துத் தனித்தனியாகக் காட்டும் பொழுது இவற்றைக் கீழ்வருமாறு வரிசைப்படுத்திக் காட்ட இயலும்.

1. அந்தாதித் தொடை உவமை
2. இடம் மாற்று உவமை
3. இணைப்பு உவமை
4. இரட்டை உவமை
5. இல்பொருள் உவமை
6. எடுத்துக்காட்டு உவமை
7. எதிர்மறுப்பு உவமை
8. ஐய உவமை
9. தடுமாறு உவமை
10. தற்குறிப்பேற்ற உவமை
11. திரிபு உவமை
12. நிந்தை உவமை
13. நிரல்நிறை உவமை
14. பல்பொருள் உவமை
15. பிறிது மொழிதல் அணி
16. பொது நீங்கு உவமை
17. பொருள் உவமை
18. மாலை உவமை
19. முரண் உவமை
20. முற்று உவமை
21. வேற்றுமை உவமை

எனப் பலவாறாகப் பிரித்துக்காட்ட இயலும். இவை சங்க இலக்கியத்தில் பயில்கின்ற அணிவகைகளாம்.

### 12.1. அந்தாதி உவமை

அந்தாதி உவமை வேறு; மாலை உவமை வேறு எனப் பிரித்து உணரப்படுகின்றன. அந்தாதி உவமை என்பது உவமையைப் பொருளாக்கியும் பொருளை உவமமாக்கியும் இயைபுபடுத்தித் தொடுப்பது என்பர்.[1] மற்றும் மாலை உவமை என்பது உவமச் செய்திகளுள் தொடர்ச்சி உண்டாகும்படி மாலை போலக் கருத்துத் தொடர்புபட அமைப்பது என்பர்.[2]

12.1.1. சிறுபாணாற்றுப்படையில் இவ்வந்தாதி உவமை சிறப்பிடம் பெற்றுள்ளது.

> நெய்கனிந்து இருளிய கதுப்பின் கதுப்பென
> மணிவயின் கலாபம் பரப்பிப் பலவுடன்
> மயில்மயில் குளிக்கும் சாயல் சா அய்
> உயங்கு நாய்நாவின் நல்லெழில் அசை இ
> வயங்கிழை உலரிய அடியின் அடி.தொடர்ந்து
> ஈர்ந்து நிலம்தோயும் இரும்பிடித் தடக்கையின்
> சேர்ந்துடன் செறிந்த குறங்கின் குறங்கென
> மால்வரை ஒழுகிய வாழை வாழைப்
> பூவெனப் பொலிந்த ஓதி ஓதி
> நளிச்சினை வேங்கை நாண்மலர் நச்சிக்
> களிச்சுரும்பு அரற்றும் சுணங்கின் சுணங்குபிதிர்ந்து
> யாணர்க் கோங்கின் அவிர்முகை எள்ளிப்
> பூணகத் தொடுங்கிய வெம்முலை முலையென
> வண்கோட் பெண்ணை வளர்த்த நுங்கின்
> இன்சேறு இகுதரும் எயிற்றின் எயிறெனா.
>
> -பத். 3/14-28

கதுப்பு என்ற உவமை மீண்டும் பொருளாகியது. இவ்வாறே சாயல், அடி, குறங்கு, வாழை, ஓதி, சுணங்கு, முலை, எயிறு முதலிய உவமைகள் பொருள்களாக அமைக்கப்பெற்று ஒரு தொடர்பினைப் பெற்றுள்ளது.

12.1.2. இவ்வாறே கலித்தொகையில் அந்தாதி உவமைக்கு மற்றும் இரண்டு சான்றுகள் கிடைக்கின்றன. அவை பின்வருமாறு:

---

1. மாறன். பக். 151
2. தண்டி. சூ. 32; உரை பக். 52. மாறன் உரை பக். 140

*12.1.2.*அ.

மடியிலான் செல்வம்போல் மரம்நந்த அச்செல்வம்
படிஉண்பார் நுகர்ச்சிபோல் பல்சினை மிஞறு ஆர்ப்ப
மாயவன் மேனிபோல் தளிர்ஈன அம்மேனித்
தாய சுணங்குபோல் தளிர்மிசைத் தாதுஊத,

-கலி. *35/1-4*

'செல்வம்' 'மேனி' என்ற சொற்கள் அந்தாதியாக மீண்டும் தொகுக்கப்பட்டுள்ளன. 'செல்வம்' 'மேனி' ஆகிய உவமைகள் அடுத்துவரும் செய்திகளுக்குத் துணையாக நிற்கின்றன.

*12.1.2.*ஆ.

அணிமுகம் மதியேய்ப்ப அம்மதியை நனியேய்க்கும்
அணிமுகம் மாமழை நின்பின் ஒப்பப் பின்னின் கண்
விரிநுண்ணூல் சுற்றிய ஈரிதழ் அலரி.

-கலி. *64/1-3*

அணிமுகம், மதி, பின் (பின்னல்) என்பன அடுத்து வரும் பொருள்களுக்கு உவமையாக நின்றுள்ளன.

இவ்வந்தாதி உவமைகளுள் வந்த சொற்களே மீண்டும் மீண்டும் வருதல் ஓசை இனிமையும், சொல்லழகும், தொடையழகும் பெற்று விளங்குமாறு செய்கிறது.

## 12.2. இடம் மாற்று உவமை

பொருளின் இயல்பும் தன்மையும் உவமைக்கு ஏற்றிக் கூறும் அழகு ஒரு சில இடங்களில் காணப்படுகிறது. அதே போல உவமையின் தன்மையும் பொருளுக்கு ஏற்றிக் கூறப்படுகின்றது. இதனை இடம் மாற்று உவமை எனக் கூறலாம். இவ் அணியைச் 'சமாதி' என்பர் தண்டி அலங்கார ஆசிரியர்.

"உரிய பொருளின்றி ஒப்புடைப் பொருள்மேல்
தரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்"

-தண்டி.சூ.*25*

*12.2.1.* ஒரு தலைவியின் நெற்றியில் அணியப்படும் திலகத்தைத் திங்களுக்கு ஏற்றி அது திலகம் தாங்கியுள்ளதாகவும் அத்தகைய மதி அவள் முகத்திற்கு நிகரென்றும் கூறப்படுகிறது.

மாக விசும்பின் திலகமொடு பதித்த
திங்கள் அன்ன நின் திருமுகத்து.

-அகம 253/24

12.2.2. பூ உயிர்த்தல் என்பது நடைபெறாத ஒன்று. உயிர்த்தல் என்பது மக்கட் பண்பாகும். இப்பண்பினை உவமையாக அமைக்கப்படும் மலருக்கு ஏற்றிக் கூறியிருப்பதும் இடம் மாற்று உவமை எனக் கூறலாம்.

பூ உயிர்த்தல் என்பது நடைபெறாத ஒன்று. உயிர்த்தல் என்பது மக்கட் பண்பாகும். இப்பண்பினை உவமையாக அமைக்கப்படும் மலருக்கு ஏற்றிக் கூறியிருப்பதும் இடம் மாற்று உவமை எனக் கூறலாம்.

பூ உயிர்த்தன்ன புகழ்சால் எழில் உண்கண்.

-கலி. 142/1

உருவகங்களில் இவ்வாறு உவமத்தன்மை பொருளுக்கு ஏற்றிக் கூறப்படுதல் காணப்படுகிறது. கன்னி விடியல்,[1] குமரி ஞாழல்,[2] குழவித்திங்கள்,[3] நிலமகள்[4] முதலியன இவற்றிற்கு எடுத்துக்காட்டாக அமைகின்றன. இவை உருவகம் என்ற தலைப்பில் ஆராயப்படும்.

## 12.3 இணைப்பு உவமை

அணிநூல்கள் இத் தனிச்சிறப்பை எடுத்துக்காட்ட வில்லை. உவமப்பொருள்களில் சில குறிப்பிட்ட பொருள்கள் இணைத்துக் கூறப்படுதல் சங்க கால மரபாக உள்ளது. மணியும் பொன்னும், ஓவியமும் பாவையும், ஐம்பெரும் பூதங்களும், திருமாலும் பலராமனும், காமனும் சாமனும், ஞாயிறும் திங்களும் மற்றும் இதைப்போன்று ஏனைய சில பொருள்களும் இணைத்துக் கூறல் ஒரு மரபாக உள்ளது. இவ்விலக்கிய மரபை ஒட்டி இணைப்பு உவமை என்ற ஒன்றினைத் தனித்துப் பிரித்துக் காணல் தகும்.

### 12.3.1. மணியும் பொன்னும்

மகளிரின் மேனி பொன்னுக்கும் அவர்களின் கூந்தல் நீலமணிக்கும் இணைத்து உவமப்படுத்தப்பட்டுள்ளன.

---

1. ஐங். 68/1-2
2. நற். 54/9-16
3. கலி. 102/15; பத். 4/384
4. புறம். 365/11

பொன்னும் மணியும் போலும் யாழநின்
தன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்.

-நற். *166/1-2*

இத்தகைய அமைப்பை உடைய பல எடுத்துக்காட்டு களைச் சங்க இலக்கியத்தினின்று காட்ட முடிகிறது. மிகுதி பற்றி ஒரு சிலவே ஈண்டுக் காட்டப்படுகின்றன.

பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல். -நற் *10/1-2*

மணியேர் நெய்தல் மாமலர் நிறையப்
பொன்னேர் நுண்தாது புன்னை தா அம்.

-நற் *78/2-3*

பொன்னுடை மணியன்ன மாமை. -கலி. *48/17*

பொன்வாய் மணிச்சிரல். -பத். *3/1-1*

இவ்வமைப்புப் பெருகிய வழக்காக உள்ளது.

*12.3.2.* மகளிரைப் பாவைக்கும் அவர்கள் உறையும் இல்லினை ஒவியத்திற்கும் உவமைப்படுத்தி இணைத்துக் கூறல் ஒரு மரபாக உள்ளது.

ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை அன்ன நப்புறங் காக்கும்
சிறந்த செல்வத்து அன்னையும் துஞ்சினள்.

-நற். *18/2-4*

ஓவத்தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன நல்லோள் கணவன். -பதிற். *61/3-4*

ஓவத் தன்ன உருகெழு நெடுநகர்
பாவை அன்ன மகளிர் நாப்பண். -பதிற்.

ஓவத் தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன பலராய் மாண்கவின். *-98/11-12*

ஓவத் தன்ன இடனுடைவரைப்பு
பாவை அன்ன குறுந்தொடி மகளிர். -புறம். *251/12*

*12.3.3.* ஐம்பெரும் பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய இவை ஐந்தும் இணைத்துக் கூறப்படுதல் ஒரு

மரபாக விளங்கியது. இவற்றுள் ஒரு சில கூட்டியும் குறைத்தும் கூறுதலும் உண்டு.

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.
-குறு.3/1-4

நீர்நிலம் தீவளி விசும்பொடு ஐந்தும்
அளந்து கடை அறியினும் அளப்பருங் குரையை.
-பதிற். 24/15-16

சிறுகுடிக் குறவன் பெருந்தோட் குறுமகள்
நீர் ஓரன்ன சாயல்
தீஒ ரன்ன என்உரன் அவித்தன்றே. -குறு.98/4-5

நிலம் நீர் வளிவிசும்பு என்ற நான்கின்
அளப்பு அரியையே
நாள்கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்து ஒருங்குபுணர்த்த விளக்கத்து அனையை.
-பதிற் 14/1-4

ஈரம் உடைமையின் நீர்ஓர் அனையை
அளப்பு அரு மையின் இருவிசும்பு அனையை
கொளக் குறைபடாமையின் முந்நீர் அனையை
-பதிற். 90/14-16

மண் திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை போல. -புறம் 2/16-

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ் ஞயிற்றுப் பரிப்பும்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந்து அறிந்தோர் போல. -புறம். 30/1-5

காற்றொடு
எரிநிகழ்ந்தன்ன செலவின். -புறம்.41/16-17

நீர்மிகின் சிறையும் இல்லை தீ மிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை
வளிமிகின் வலியும் இல்லை ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி. -புறம். 51/1-4

ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும். -புறம்-55/13-15

12.3.4. இமயமும் பொதிகையும் இவ்வாறு இணைப் படுத்திக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

முத்தீ விளக்கில் துஞ்சும்
பொற்கோட்டிமமும் பொதியமும் போன்றே.
-புறம். 2/24-25

12.3.5. மணியும் பொன்னுமே அன்றி ஏனைய உலோகங்களும் இணைத்துக் கூறப்பட்டன. நீலமும் வெள்ளியும், பவழமும் மணியும், பவழமும் பொன்னும் ஏனைய உலோகங்களும் இணைத்துக் கூறப்பட்டன.

நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி அன்ன ஒள்வீ உதிர்ந்து. -பதிற். 6/279-80

நீலத் தன்ன பாசிலை அகந்தொறும்
வெள்ளி அன்ன விளங்கிணர் நாப்பண். -நற். 249/2-3

காயாஞ் செம்மல் தா அய்ப் பலவுடன்
ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைத் தன்ன குன்றம் -அகம். 14/2-4

மணிமிடை பவளம் போல அணிமிகக்
காயாஞ் செம்மல் தா அய்ப் பலவுடன்
ஈயன் மூதாய் ஈர்ப்புறம் வரிப்ப. -அகம். 304/13-15

மணிமண்டு பவழம் போலக் காயா
அணிமிகு செம்மல் ஒளிப்பன மறைய
-அகம். 374/13-14

இனச்சிதர் உகுத்த இலவத்து ஆங்கண்
சினைப்பூங் கோங்கம் தண்தாது பகர்நர்
பவளச் செப்பில் பொன்சொரிந் தன்ன.
-அகம். 25/9-11

### 12.3.6. ஏனைய உலோகங்கள்

திருமணி பொருத திகழ்விடு பசும்பொன்
வயங்கு கதிர்வயிரமோடு உறழ்ந்துபூண் சுடர்வர
-பதிற். *16/1561*

தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழா அலவும்
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்.
-பத். *3/147-49*

வெள்ளி அன்ன விளங்கு சுதைஉரீஇ
மணிகண்டன்ன மாத்திரள் திண்காழ்
செம்பியன் றன்ன செய்வுறு நெடுஞ்சுவர்.
-பத். *7/110-112*

*12.3.7.* திருமாலும் பலராமனும், காமனும் சாமனும், ஞாயிறும் திங்களும், மள்ளரும் மகளிரும், களிறும் பிடியும், மானும் பிணையும், அன்றிலும் இணையும், மகன்றிலும் இணையும், அன்னமும் பெடையும், மீனும் மதியமும், கடலும் கானலும், இருளும் நிலவும், புலியும் யானையும் இவ்வாறு இணைப்படுத்திக் கூறியமை சங்க இலக்கிய மரபுகளுள் ஒன்றாகும். இம்மரபு இணைப்பு உவமை அமையக் காரணமாக இருந்துள்ளது. இவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக் காட்டுக் கீழே தரப்படுகின்றது.

**திருமாலும் பலராமனும்:**

வலியொத் தீயே வாலியோனை
புகழ்ஒத் தீயே இகழுநர் அடுநனை. -புறம். 56/12-13

**காமனும் சாமனும்:**

மீனேற்றுக் கொடியோன்போல் மிஞுறார்க்கும் காஞ்சியும்
ஏனோன் போல் நிறங்கிளர்பு கஞலிய ஞாழலும்
-கலி. 26/3-4

**ஞாயிறும் திங்களும் :**

தண்கதிர் மதியம் போலவும் தெறுசுடர்
ஒண்கதிர் ஞாயிறு போலவும்
மன்னிய பெரும நீ நிலமிசை யானே. -புறம். 6/27-29

**மள்ளரும் மகளிரும் :**

மள்ள ரன்ன தடங்கோட் டெருமை
மகளிரன்ன துணையொடு வதியும். -ஐங். 94/1-2

**களிறும் பிடியும் :**

பிடிமிடை களிற்றில் தோன்றும்
குறுநெடுந் துணைய குன்றம். -அகம் 99/13-14

**மானும் பிணையும் :**

சிறுதலைப் பிணையின் தீர்ந்த அறுகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல் நமரே. குறு. 183/2-4

**அன்றிலும் இணையும் :**

நெருப்பி னன்ன செந்தலை அன்றில்
இறவின் அன்ன கொடுவாய்ப் பெடையொடு.
-குறு. 160/1-2

**மகன்றிலும் இணையும் :**

குறுங்கால் மகன்றில் அன்ன
உடன்புணர் கொள்கைத் காதலோரே. -ஐங். 381/4-5

**அன்னமும் பெடையும் :**

மென்னடை பேடை துணைதரத் தற்சேர்ந்த
அன்னவான் சேவல் புணர்ச்சி போல.
-கலி. 147/65-66

**மீனும் மதியும் :**

மதிசூழ் மீனின் தாய்வழிப் படூஉஞ்
சிறுகுடி மறவர். -அகம். 297/15-16

**கடலும் கானலும் :**

கல்லறை கடலும் கானலும் போலவும். -பரி. 15/11

**இருளும் நிலவும் :**

இருள் திணித் தன்ன ஈர்ந்தண் கொழுநிழல்
நிலவுக் குளித்தன்ன வெண்மணல். -குறு. 123/1-2

**புலியும் யானையும் :**

இரும்புலி தொலைத்த பெருங்கை
வெஞ்சின உருமின் உரறும் யானை
அஞ்சுவரு சிறுநெறி. -நற். 453/9-11

எனவே இவ்வாறு இணைத்துக் கூறுதல் சங்ககால மரபாக விளங்குவதால் இணைப்பு உவமை அணி என்ற ஓர் அணிவகையை அமைத்துக் காட்டலாம் என்பதும், இது சங்க கால உவமைகளின் சிறப்பியல்புகளுள் ஒன்று ஆகும் என்பதும் கூறலாம்.

## *12.4* இரட்டை உவமை

தொல்காப்பியச் சொல்லியலில் 'இரட்டைக் கிளவி' என்ற தொடர் விளக்கப்படுகிறது. வந்த அசையே திரும்ப வருவது இரட்டைக் கிளவி எனப்படும். அவை பிரிந்திசையா எனவும் கூறப்படுகிறது. அதே போல உவமவியலில் இரட்டைக் கிளவி என்பதைப் புகுத்துகின்றார்.

"இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே"- தொல்.சூ. 293. என்று கூறி அடையும் அது சிறப்பிக்கும் பொருளும் வருவதுபோல உவமையிலும் அடையும் பொருளுமாக இயைந்து வரும் என்று கூறுவர்.

இவ்வாறு உவமைகள் இரட்டைக் கிளவியாக வருதல் சங்க இலக்கியத்தில் பெருகிய வழக்ககாக உள்ளது.[1] இதனை ஓர் அணியாகவே மாறனலங்காரம் போற்றி இரட்டை உவமை எனச் சிறப்பிக்கின்றது.

அடையொடு பொருட்கு அடைபுணர்க்கும்
அஃதிரட்டை. -மாறன்.சூ. 103

'இரட்டைக் கிளவியும் இரட்டை வழித்தே' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு உரை எழுதும் உரை யாசிரியர்கள் இரட்டைக் கிளவியும் ஒரு பொருளை உவமை யாகப் பெறுதல் உண்டு என்று காட்டுவர்.

கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையின் தோன்றும். குறு. 47/1-2

என்பதைக் காட்டுவர்.[2] வேங்கை மலர் உகுந்து வீழும் பொற்றைக்கல் புலிக்குட்டியைப் போல் தோன்றும் என்பது இதன் கருத்தாகும்.

பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பு. பத். 4/222-223

1. பிற்குறிப்பு 2-இல் வருமிடங்கள் தரப்பட்டுள்ளன.
2. தொல் சூ. 293 வரை

இதனை இரட்டைக் கிளவிக்கு எடுத்துக் காட்டாகக் காட்டுவர். சண்பின் காயின் சுண்ணம் பூசப்பெற்ற மார்பு பொன்துகள் படிந்த உரைகல்லை உவமையாகப் பெற்றுள்ளது.

இரட்டைக் கிளவிகள் சங்க இலக்கியத்தில் பயின்று வரும் உவமையாகும். ஈண்டு ஒவ்வொரு நூலினின்று ஒவ்வோர் எடுத்துக் காட்டுத் தரப்படுகின்றது.

**நற்றிணை :**

நீரின்று அமையா உலகம் போலத்
தம்மின்று அமையா நந்நயந்து அருளி. -நற். 1/6-7

குறுந்தொகை

சிறுகோட்டுப் பெரும் பழம் தூங்கியாங் கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே. -குறு. 18/4-5

**ஐங்குறுநூறு**

அம்பணத் தன்ன யாமை யேறிச்
செம்பின் அன்ன பார்ப்புப்பல துஞ்சும். -ஐங். 43/1-2

பரிபாடல்

கல்லறை கடலும் கானலும் போலவும்
புல்லிய சொல்லும் பொருளும் போலவும். -15/11-12

கலித்தொகை

குன்றுஅகல் நன்னாடன் வாய்மையில்
பொய்தோன்றில் திங்களுள் தீத்தோன்றி யற்று.
-கலி. 41/23-24

அகநானூறு

வேங்கை தா அய தேம்பாய் தோற்றம்
புலிசெத்து வெரீ இய புகர்முக வேழம். அகம் 12/11-12

புறநானூறு

குன்றத் திருந்த சூரீஇயினம் போல
அம்புசென் றிறுத்த அரும்புண் யானை, புறம். 19/89

## பத்துப்பாட்டு

நகைதாழ்பு துயல்வரும் வகையமை பொலங்குழை
சேண் விளங்கு இயற்கை வான்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்ப. -பத். 1/36-90

முள் அரைத் தாமரை முகிழ்விரி நாட்போது
கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்
மதிசேர் அரவின் மானத் தோன்றும். -பத். 3/183-185

மாரிக் குன்றம் மழைசுமந் தன்ன
ஆரை வேய்ந்த அறைவாய்ச் சகடம் பத்.-4/49.50

நீள் அரை இலவத்து இலங்குசினை பயந்த
பூளை அம் பசுங்காய் புடைவிரிந் தன்ன
வரிப்புற அணிலொடு. -பத். 6/84-85

பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்தஎம்
பின்னிருங் கூந்தல். -பத். 9/59-60

மாமலை அணிந்த கொண்மூப் போலவும்
தாய்முலை தழுவிய குழவி போலவும்
தேறுநீர்ப் புணரியொடு யாறுதலை மணக்கும்.
-பத். 9/95-97

படுத்துவைத் தன்ன பாறை மருங்கில்
எடுத்துநிறுத் தன்ன இட்டுஅருஞ் சிறுநெறி.
-பத். 10/15-19

## 12.5. இல்பொருள் உவமை

இல்லாத பொருளை உவமையாகக் கொண்டு வந்து சித்திரிக்கும் அழகை இல்பொருள் உவமை என்பர். இதனைத் தண்டியலங்காரம் அபூத உவமை என்று கூறும்.[1]

*12.5.1.* ஞாயிறும், திங்களும் ஒன்று சேர்ந்து மண்ணகத்திற்கு வருவது என்பது நடவாத ஒன்று; நிகழ முடியாத செயல் ஆகும். ஞாயிறும் திங்களும் ஒன்று சேர்ந்து இணைந்து பூமிக்கு வருதல் போலத் தமிழக மன்னர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து பகை மன்னர்களை வென்றனர் என்று கூறப்படுகிறது.

1. தண்டி பக். 50.

உருவச்சினம் திருகிய உருகெழு ஞாயிறு
நிலவுத்திகழ் மதிய மொடுநிலன் சேர்ந்தாங்கு
உடலருந் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை
அணங்கரும் பறந்தலை உணங்கப் பண்ணி.

-புறம். 25/3-6

**12.5.2.** திங்களுள் தீ தோன்றுவது என்பது நடவாத நிகழ்ச்சியாகும். தலைவன் வாய்ச் சொல்லில் பொய்மை தோன்றினால் அது திங்களில் தீத் தோன்றியது போல ஆகும் என்று கூறப்படுகிறது.

குன்று அகல் நன்னாடன் வாய்மையில் பொய்தோன்றில்
திங்களுள் தீத்தோன்றி யற்று. -கலி. 412 3-24

இதே கருத்து மீண்டும் அப்பாடலில் இரண்டு இடங்களில் வேறு வகைக் கற்பனைகளோடு இயங்குகின்றன. கலித் தொகையில் ஒரே கருத்தை மூன்று முறை சொல்லும் பொது மரபை ஒட்டி உவமைகளும் மூன்று கூறப்படுகின்றன.

தொடர்புள் இனையவை தோன்றின் விசும்பில்
சுடருள் இருள் தோன்றி யற்று. -கலி. 41/37-38

ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழற்கய்த்துள்
நீருள் குவளைவெந் தற்று -கலி. 41/30-31

திங்களுள் தீத்தோன்றலும், சுடருள் இருள்தோன்றலும், நீருள் குவளை வேதலும் இல்பொருள் உவமைகளாம்.

**12.5.3.** விண்ணிலே திலகமொடு கூடிய திங்கள் இருப்பது இயலாத காரியம். அது கீழ்வரும் உவமையில் இடம் பெற்றுள்ளது.

மாக விசும்பில் திலகமொடு பதித்த
திங்கள் அன்ன நின் திருமுகம். -அகம். 253/24-25

### 12.6. எடுத்துக்காட்டு உவமையணி

பொதுவாக எல்லா உவமைகளையும் எடுத்துகாட்டுகள் என்று கூறிவிடலாம். எனினும் இதில் கூறப்படும் செய்திகள் அனைவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய பொதுச் செய்திகளாக இருக்கும் என்பது இதன் தனிச் சிறப்பாகும். இதில் கூறப்படும் உவமச்செய்திகள் அனைவரும் அறிந்தவையாக இருக்கும். இவை பிறிதுமொழிதல் அணியைப் போலப் பழகிய செய்தி

களைக் கொண்டு இயங்குகின்றன. பிறிது மொழிதலில் உவமச் செய்திகள் மட்டும் கூறப்படும்; பொருள் அவற்றோடு புணர்த்தப்படாது, இவற்றில் பொருள் புணர்த்தப்படும். இதுவே எடுத்துக்காட்டு உவமை அணிக்கும் பிறிது மொழிதல் அணிக்கும் உள்ள வேறுபாடாகும் எனலாம்: பிறிது மொழிதல் அணி பின்னர்க் காட்டப்படும்.

ஒரே எடுத்துக்காட்டைக் கூறுதல் பொதுவாகத் தமிழ் இலக்கியத்தில் காணப்படும் பொது இயல்பு எனலாம். பல எடுத்துக் காட்டுகளை அடுக்கிக் கூறுகூது சங்க இலக்கியத்தின் தனிச் சிறப்பாகும். எடுத்துக்காட்டுகளை அடுக்கிக் கூறி அவற்றை உவமையாக அமைத்தல் எடுத்துக் காட்டுவமை அணி ஆகும். உவம உருபு கெடாமல் இவ்உவமை அமைதல் சிறப்பு என்பர்.

12.6.1. பாண்டிய மன்னன் போர்க்களம் புகுந்தால் யாரும் அவனை எதிர்க்க முடியாது என்பது சொல்ல வந்த கருத்தாகும். அதற்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தரப்படு கின்றன. நீர் அளவுக்கு மீறி மிகுந்தால் அதனைத் தடுத்து நிறுத்த அணைகள் அமைக்க இயலாது. தீ மிகுந்தால் அதனின்று உயிர்களைக் காக்கும் வழியே இல்லை. காற்று மிகுதியாக வீசினால் அதனை யாரும் தடுக்க இயலாது. இம்மூன்று செய்திகளைக் கூறி அவற்றிற்கு நிகராக அரசன் சினம் கொண்டு சீறி எழும் இயல்பு சிறப்பிக்கப்படுகின்றது.

நீர்மிகின் சிறையும் இல்லை; தீமிகின்
மன்னுயிர் நிழற்றும் நிழலும் இல்லை;
வளிமிகின் வலியும் இல்லை; ஒளிமிக்கு
அவற்றோர் அன்ன சினப்போர் வழுதி. -புறம். 51/1-4

ஈண்டு "அவற்றோர் அன்ன" என உருபு கொடுக்கப் பட்டுள்ளது.

12.6.2. இதே போன்ற கருத்துடைய பாடல் மற்றொன்று புறநானூற்றில் வந்துள்ளது. மலைச்சாரலில் மறப்புலி மாறு பட்டால் அதனை எதிர்க்கும் மான்கூட்டம் இல்லை. ஞாயிறு உருத்து எழுந்தால் அதன் முன் இருள் நிற்காது. நுண்ணிய மணல் தெறிக்கவும் கல் பிளக்கவும் நடக்கும் எருதுக்கு ஒரு குறிப்பிட்ட துறை இல்லை. இவற்றைப் போல அரசன் போரில் எதிர்த்து நின்றால் அவனை எதிர்க்கும் வீரர்கள் இல்லை என்று

கூறப்படுகிறது. இச்செய்யுளில் முன்னதைப் போலவே ஒன்றுக்கு மேற்பட்ட எடுத்துக் காட்டுகள் வந்துள்ளன.

அடைமல்கு குளவியொடு கமழும் சாரல்
மறப்புலி உடலின் மான்கணம் உளவோ
மருவின் விசும்பில் மாதிரத் தீண்டிய
இருளும் உண்டோ ஞாயிறு சினவின்
அச்சொடு தாக்கப் பாருற்றியங்கிய
பண்டச் சாகாட்டு ஆழ்ச்சி சொல்லிய
அரிமணல் ஞெமரக் கற்பக நடக்கும்
பெரும்பகட்டுக்குத் துறையும் உண்டோ.....
பொருநரும் உளரோ நீ களம் புகினே.

-புறம். 90/2-9, 13

*12.6.3.* முன்னமே மழை பெய்து விட்டதால் மழை மீண்டும் பெய்யாமல் மறுத்துவிட்டாலும் ஏற்கனவே தன் வளத்தை வாரி வழங்கிய மேகம் அதனால் மீண்டும் வளம் தரா விட்டாலும் உலகத்து உயிர்களுக்கு வாழ்க்கை இல்லை. அவ்வாறே பரிசிலர் ஏற்கனவே பரிசில் பெற்றுச் சென்று விட்டதால் மீண்டும் தர இயலாது என்று கூறுவது பொருந்தாது என்னும் கருத்தில் அமைந்துள்ள புறப்பாடலும் எடுத்துக் காட்டுவமைக்கு எடுத்துக் காட்டாகும்.

கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்
தொல்லது விளைந்தென நிலம் வளங்கரப்பினும்
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை
இன்னும் தம்மென எம்மனோர் இரப்பின்
முன்னும் கொணடிர் என நும்மனோர் மறுத்தல்
இன்னா தம்ம இயல்தேர் அண்ணல்.

-புறம். 203/1-6

*12.6.4.* புலி யானையை நோக்கிப் பாய்ந்து குறி தவறு மேயானால் அது ஒரு போதும் மனம் சோர்ந்து எளிதில் கிடைக்கக்கூடிய எலியை நாடிப் பாயாது. அது போலக் குறிப் பிட்ட வள்ளலை நாடிச் செல்லும் இரவலன் வேறு எவரையும் நாடான் என்று கூறப்படுகிறது. இதில் ஒரே எடுத்துக்காட்டு உவமை வந்துள்ளது.

புலிபார்த்து ஒற்றிய களிற்றிரை பிழைப்பின்
எலிபார்த்து ஒற்றா தாகும்

கடல்மண்டு புனலின் இழுமெனச் சென்று
நனியுடைப் பரிசில் தருகம். -புறம் 237/15-18

12.6.5. எடுத்துக்காட்டு உவமைகளை அடுக்கிக் கூறுதல் அக்கால இலக்கிய மரபு எனக் கூறத்தக்க வகையில் மற்றோர் எடுத்துக்காட்டும் அமைந்துள்ளது. பொதுவாக இவ் எடுத்துக் காட்டுகள் பழகிய கருத்தாகவே உள்ளன. அக் காலத்தில் அவர்கள் ஏற்றுக் கொண்ட கருத்துக்கள் எனக் கூறலாம்.

குரவு, தளவு, குருந்து, முல்லை என்று கூறப்படும் நான்கு பூக்கள் அல்லது வேறு பூக்கள் சிறப்புப் பெற்றில; வரகு, கதிர்த்தினை, கொள், அவரை இந்நான்கல்லது சிறந்த உணவுப் பொருள்கள் இல்லை; துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று நான்கு குடிகள் அல்லாமல் வேறு சிறந்த பழங்குடி மக்கள் இல்லை. இம்மூன்று செய்திகள் எடுத்துக்காட்டு உவமைகளாய் அமைகின்றன. அதே போல வீரக்கல்லைத் தொழுது வழிபாடு செய்வதே உயர் வழிபாடு ஆகும் என்றும், அதுவே தெய்வமும் ஆகும் என்றும் கூறப்படுகின்றன.

குரவே தளவே குருந்தே முல்லை என்று
இந்நான்கு அல்லது பூவும் இல்லை;
கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே
சிறுகொடிக் கொள்ளே பொறிகிளர் அவரையொடு
இந்நான்கு அல்லது உணவும் இல்லை;
துடியன் பாணன் பறையன் கடம்பன் என்று
இந்நான்கு அல்லது குடியும் இல்லை. -புறம். 335/2-6

12.6.6 பத்துப்பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டில் மிகச் சிறப்பான செய்தி உவமையாக வந்துள்ளது. 'முத்தும் மணியும் பொன்னும் அமைந்த அணிகலன் கெட்டால் மீண்டும் அவற்றைச் செப்பனிட்டு அவ் அணிகலனைத் திருத்தலாம். மனிதரின் சான்றாண்மை குன்றிவிட்டால் மீண்டும் அதனை நிறுத்த இயலாது என்ற மிக உயர்ந்த கருத்தினை வைக்கின்றார்.

முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வரும் குரைய கலம்கெடில் புணரும்;
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசு அறக் கழிஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசு அறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய என்னார் தொல்மருங்கு அறிஞர். -பத்.8/13-18

இதில் உணர்த்தப்படும் கருத்தும் அதற்கு அமைந்துள்ள உவமையும் சிறந்த மணியைப் போல் ஒளி பெற்று விளங்குகின்றன. அனைவருக்கும் தெரிந்த செய்தியையும் உயர்ந்த ஓர் கருத்தினையும் விளக்க அமைந்திருப்பது இதன் தனியழகாகும்.

முத்தும் மணியும் பொன்னும் சேர்ந்த அணி ஒளி பெற்றுத் திகழும், சான்றோரும் தம் புகழால் ஒளிபெற்றுத் திகழ்வர் இவ்விருவருக்கும் உள்ள ஒற்றுமைப் பண்பு இது எனினும் உடைந்த அணிகளைத் திருத்த முடியும், புகழ் கெட்டால் அதனைத் திருத்த முடியாது என்பது இரண்டுக்கும் உள்ள வேறுபாடு. இதில் வேற்றுமை அணியும் கலந்துள்ளது. உவமையைக் கூறிப் பொருளை வேறுபடுத்திக் காட்டி இருப்பது இதன் அழகை மிகுவிக்கின்றது. பிற இடங்களிலும் இவ்வமைப்பும் வந்துள்ளது.

### 12.7 எதிர் மறுப்பு உவமை அணி அல்லது விலக்கு உவமை அணி

உவமைகளை முதற்கண் அமைத்து அவற்றைக் காரணம் கூறி மறுத்துக் கூறலும் உண்டு. அதனை எதிர் மறுப்பு உவமை அணி என்று கூறலாம்.

*12.7.1.* இவ்விலக்கு உவமை அணி கலித்தொகையில் தனித்து வருகின்றது. வழக்கமாகக் கூறப்படும் நிலவு, மூங்கில், குவளைமலர், மயிர், கிளி முதலியவை தலைவியின் பல்வகை அழகுகளுக்கு உவமையாகக் கூறப்பட்டு அவை பொருந்தா என்று விலக்கும் எதிர்மறைக் கூற்று உடன் அமைகிறது. இவ்வாறு மறுப்பதால் உவமைகளிலும் பொருள் உயர்ந்தது என்னும் கருத்தைத் தோற்றுவிக்க முடிகிறது.

தலைவன் தலைவியின் நலத்தை வியந்து பாராட்டு கின்றான். அவளைத் தனித்துக் கண்டு நில் என்க் கூறி அவள் நெற்றியையும் முகத்தையும் தோள்களையும் கண்களையும் மெல்லிய சாயலையும் இனிய சொற்களையும் கண்டு வியக் கின்றான். பிறகு அவற்றைத் தக்க உவமைகளோடு பொருத்திக் காண்கிறான். அவை அவனுக்கு மனநிறைவு தருவதாக இல்லை. அவற்றை விலக்கிப் பொருந்தா என்று கூறிவிடுகின்றான்.

---

1. பிற்குறிப்பு 3ல் காண்க.

"நெற்றி வியத்தற்குரிய அளவில் தேய்ந்து சிறுகி உள்ளது. அதனால் இது பிறைமதி அன்று; முகத்தில் மாசு ஒன்றும் இல்லை. அதனால் அது முழுமதி அன்று; தோள்கள் மூங்கிலை ஒத்து உள்ளன; எனினும் மூங்கில் தோன்றும் இடமாகிய மலை அங்கு இல்லை; கண்கள் பூவினை நிகர்த்து உள்ளன, எனினும் அப்பூக்கள் பூக்கும் சுனை அங்கு இல்லை; அவள் மெல்ல நடக்கின்றாள் எனினும் அவள் மயில் அல்லள்; குழைந்து பேசுகின்றாள், எனினும் அவள் கிளி அல்லள்," என்று மறுப்புக் கூறிப் பழகிய உவமைகளை விலக்கி அவள் உயர்வை நிலைநாட்டுகின்றாள். இதில் வியப்புச் சுவை மிகுதி யாக உள்ளது. இதனை மருட்கை உவமை என்றும் கூறலாம்.

நில்என நிறுத்தான் நிறுத்தே வந்து
நுதலும் முகனும் தோளும் கண்ணும்
இயலும் சொல்லும் நோக்குபு நினைஇ
ஐதேய்ந் தன்று பிறையும் அன்று;
மை தீர்ந்தன்று மதியுமன்று;
வேயமர்ந் தன்று மலையும் அன்று;
பூவமர்ந் தன்று சுனையும் அன்று;
மெல்ல இயனும் மயிலும் அன்று;
சொல்லத் தளரும் கிளியும் அன்று. - கலி. 55/6-14

12.7.2. பாரியை உயர்த்தி உலகம் புகழ்கிறது. எனினும் மாரியும் உண்டு இவ் உலகைப் புரக்க என்னும் கருத்தும் புறநானூற்றில் வருகிறது. இதனை நிந்தை உவமை என்று கூறலாம். தண்டியலங்காரம் இப்பாடலை விலக்கணிக்கு எடுத்துக் காட்டாகத் தருகிறது என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.[1]

பாரிபாரி என்று பல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்
மாரியும் உண்டூஈங்கு உலகுபுரப் பதுவே. -புறம். 107-4

## 12.8 ஐய உவமை அல்லது மருட்கை உவமை

ஒன்றுக்கு மேற்பட்ட **உவமைகளைக்** கூறி இவற்றுள் **எது** பொருந்தும் என்ற ஐய**த்தை எழுப்பு**வதும், உவமையையும்

1. தண்டி. சூ. 43

பொருளையும் கூறி இவற்றுள் எது பொருள் எது உவமை என்று கூறாமல் விடுவதும் என இரண்டு வகை அமைப்பு களைச் சங்க இலக்கியத்தில் காண முடிகிறது. இவற்றை ஐய உவமை எனக் கூறலாம்.

முதல்வகை : ஐங்குறுநூற்றுப் பாடல் ஒன்று எது உவமை எது பொருள் என்று ஐயுறும் நிலையில் ஓர் வினாவை எழுப்பு கிறது. தலைவனின் குணத்தினை வண்டு ஏற்றுக் கொண்டதா வண்டின் குணத்தைத் தலைவன் ஏற்றுக் கொண்டானா என்ற ஐயத்தை எழுப்புகிறது.

மகிழ்நன் மாண் குணம் வண்டு கொண்டன கொல்
வண்டின் மாண்குணம் மகிழ்நன் கொண்டனன்கொல்
- ஐங். 90/1/2

அகநானூற்றில் கீழ்வரும் ஐய உவமை காணப்படுகிறது. இதில் பொருளுக்கும் உவமைக்கும் ஐயம் உண்டாக்கப் படுகிறது. ''கற்பு சான்ற தலைவியும் உருவால் அவள் பெண் என்று சொல்வதற்கில்லை; அவள் ஆய்நாட்டு மலைச்சாரலில் உறையும் தெய்வமகளோ என்று என் நெஞ்சு கருதுகிறது'' என்று தலைமகன் கூறுகின்றான்.

ஆன்ற கற்பின் சான்ற பெரிய
அம்மா அரிவையோ அல்லள்
ஆஅய் நன்னாட்டு அணங்குடைச் சிலம்பில்
கவிரம் பெரிய உருகெழு கவாஅன்
நேர்மலர் சுனை உறையும்
சூர்மகள் மாதோ என்னும் என் நெஞ்சு.
- அகம். 198/12-7

இரண்டாம் வகை : கலித்தொகையில் வரும் பாடல் ஒன்றில் தலைவன் தலைவியின் அழகைப் பாராட்டுகின்றான். ''இங்கே வருபவள் இவள் யாரோ தெரியவில்லை; வல்லவன் அமைத்த பாவையோ அழகிய மகளிரின் நலம் எல்லாம் திரண்டு அமைத்த உருவமோ! வெறுப்பினால் கூற்றுவன் அமைத்துத் தந்த வடிவமோ என்று மூன்று உவமைகளை அடுக்கிக் கூறி ஐய வினாக்களை எழுப்புகின்றான். உவமைகளுள் ஐயம் எழுப்பிய நிலை இதில் காணப்படுகிறது.

ஈங்கே வருவாள் இவள் யார்கொல் ஆங்கேஓர்
வல்லவன் தைஇய பாவைகொல் நல்லார்
உறுப்பெலாம் கொண்டியற்றியாள் கொல்
வெறுப்பினால்
வேண்டுருவம் கொண்டதோர் கூற்றங்கொல்.

- கலி. 56/6-9

நற்றிணையில் வரும் பாடல் ஒன்றில் உவமைகள் இரண்டனை வைத்து அவற்றுள் ஐயத்தை எழுப்புகின்றது. "உன்னை வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்; பார்க்கின்றவர் பார்வை தப்பாத கவர்ச்சியைப் பெற்றுக் குறையா நலத்துடன் நிற்கின்றாய். அலைகள் வீசும் கடற்பரப்பில் அமர்ந்து வாழும் தெய்வமோ உப்பங்கழியின் பின்பக்கத்தில் நிலை பெற்று வாழ்கின்றாயோ

மடந்தையே நீ யார்? இனிச் சொல்லுவாயாக" என்று கேட்கிறான்.

யாரையே நின்தொழுதனன் வினவுதும்
கண்டோர் தண்டா நலத்தைத் தெண்டிரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்துறை அணங்கோ
இருங்கழி மருங்கின் நிலைபெற் றனையோ
சொல்லினி மடந்தை. - நற்.155/4.

தலைவியின் மேனியில் படர்ந்த பசலை நீல மணியோடு மாறுபட்ட பசும்பொன்னோ மாமரத்தின் தளிரின்மேல் படர்ந்த மகரந்தப் பசுந் துகளோ என்ற ஐயம் எழுப்பப்படுகின்றது. இதுவும் உவமைகளுள் எழுப்பப்படும் ஐயம் எனலாம். இப்பகுதி கலித்தொகையில் வருகிறது.

மணிபொரு பசும்பொன்கொல் மாவீன்ற தளிரின்மேல்
கணிகாரம் கொட்டும்கொல் என்றாங்கு அணிசெல
மேனி மறைந்த பசலையவள்

- கலி 143/1

ஐய உவமைகள் பொதுவாக வியப்புணர்ச்சியால் வருவது என்று கூறலாம். மருட்கை ஆகிய மெய்ப்பாடு இதில் உடன் இயைகிறது. இவ் உவமைகளில் மருட்கை உணர்வு வெளிப்படை எனலாம். எனவே இவ் ஐய உவமையை மருட்கை உவமம் என்று கூறுதலும் பொருந்தும்.

## 12.9. தடுமாறு உவமை

ஒரே இடத்தில் பொருளுக்கு உவமை தரப்பட்டு மீண்டும் அவ்வுவமை பொருளாகவும் தோன்ற அமைக்கும் புதிய அழகைச் சில புலவர்கள் தோற்றுவித்துள்ளனர். இதனைத் தடுமாறு உவமம் என்று கூறல் பொருந்தும்.[1] இஃது ஐய உவமையோடு நெருங்கிய தொடர்பு பெற்றுள்ளது. இதனைத் தொல்காப்பியர் தடுமாறு உவமம் என்றும், தண்டி ஆசிரியர் இதரவிதர உவமை என்றும் கூறுவர்.[2]

*12.9.1.* நற்றிணையில் இத்தடுமாறு உவமம் நகைச் சுவையோடு இயங்கி வருகிறது. தும்பியாகிய வண்டு ஒன்று நாவற்பழத்தைத் தன் இனமாகக் கருதி அதனை மொய்க்கிறது. அந்தத் தும்பியை நாவற்பழத்திற்கும் நாவற்பழம் தும்பிக்கும் உவமைப்படுத்தும் தடுமாற்ற அழகு இடம் பெற்றுள்ளது.

புன்கால் நாவல் பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்டு ஊர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல் - நற்.35/2-5

*12.9.2.* யாழும் வண்டும் குழலும் தும்பியும் முழவும் அருவியும் தம்முள் மாறி மாறி ஒலித்தன என்றும், விறலியர் கொடியைப் போலவும் கொடி விறலியரைப் போலவும் விளங்கினர் என்றும், மயில் பாடினியைப் போலவும் பாடினி மயிலைப் போலவும் ஆடினர் என்றும் பரிபாடலில் சிறப்பிக்கப்படுகிறது. இவ்வாறு தடுமாறும் நிலையில் பரிபாடல் இரண்டு இடங்களைப் பெற்றுள்ளது.

கலைக்கும் இயற்கைக்கும் தடுமாற்றம் ஏற்படுத்தி வைக்கின்றது.

ஒருதிறம் பாணர் யாழில் தீங்குரல் எழ
ஒருதிறம் யாணர் வண்டின் இமிரிசை எழ
ஒருதிறம் கண்ணார் குழலின் கரைபு எழ
ஒருதிறம் பண்ணார் தும்பி பரந்துஇசை ஊத

1. 'தடுமாறு உவமம் கடிவரை யின்றே' - தொல். 310.
2. இதரவிதர உவமை என்பது பொருள் ஒருகால் உவமையாகவும் உவமை ஒருகால் பொருளாகவும் ஒரு தொடர்ச்சிக் கண்ணே வருவது. - தண்டி.உரை. 44

ஒருதிறம் மண்ணார் முழவின் இசைஎழ
ஒருதிறம் அண்ணல் நெடுவரை அருவிநீர் ததும்ப
ஒருதிறம் பாடல்நல் விறலியர் ஒல்குபு நுடங்க
ஒருதிறம் வாடை உளர்வயின் பூங்கொடி நுடங்க
ஒருதிறம் பாடினி முரலும் பாலையங் குரலின்

நீடுகிளர் கிழமை நிறைகுறை தோன்ற
ஒருதிறம் ஆடுசீர் மஞ்ஞை அரிக்குரல் தோன்ற
மாறுமாறு உற்றனபோல் மாறுஎதிர் கோடல்
மாறு அட்டான் குன்றம் உடைத்து

- பரி. 17/9-21

இதே போன்ற கருத்தும் அணிவகையும் பரிபாடலில் மற்றோர் இடத்தில் வந்துள்ளது.[1]

*12.9.3.* கலித்தொகையில் வரும் தொடரில் இத் நடுமாற்றம் மிகத் தெளிவாகப் பொருந்தி உள்ளது. முகம் மதிக்கும், மதி முகத்திற்கும் உவமிக்கப்பட்டுள்ளன.

அணிமுகம் மதி ஏய்ப்ப அம்மதியை நனிஏய்க்கும்
அணிமுகம். -கலி. 64/1-2

## 12.10. தற்குறிப்பேற்ற உவமை

இல்லாத ஒரு பொருளைப் படைத்து அதனை உவமை யாகத் தரும் அழகு இல்பொருள் உவமையில் காணப்படுகிறது. உள்ள பொருளையே கூறித் தன் கற்பனையாற்றலைப் புகுத்தும் திறன் ஒருசில உவமைகளில் காணப்படுகிறது. இதனைத் தற்குறிப்பேற்ற அணி என்பர். இயல்பாக நடைபெறும் நிகழ்ச்சிக்குப் புலவன் தான் ஒரு காரணம் கற்பித்துக் கூறும் அழகு இத் தற்குறிப்பேற்ற அணியில் காணப்படுகிறது.

*12.10.1.* புறநானூற்றுப் பாடல் ஒன்று தற்குறிப்பேற்ற அணிநயம்பட ஒரு நிகழ்ச்சியைச் சித்திரிக்கின்றது. ஆய் அண்டிரன் என்பானை வானவர்கள் போற்றி வரவேற்றனர் என்று ஆசிரியர் கூற விரும்புகின்றார். இந்திரனின் கோயிலில் முரசம் பெருகி ஒலித்தது. அஃது ஆய் அண்டிரன் வருகின்றான் என்பதற்காக எழுப்பப்பட்ட ஒலி முரசு என்று சித்திரிக்கின்றார்.

1. பரி. 22/36-44.

"திண்ணிய தேர்களை இரவலர்க்கு அளித்த ஆய் அண்டிரன் வருகின்றான் என்பதற்காக வச்சிரத்தடக்கையோன் ஆகிய இந்திரனின் இருப்பிடத்தில் முரசும் கறங்க விசும்பில் ஆரவாரம் எழுந்தது என்று கூறப்படுகின்றது".

திண்தேர் இரவலர்க்கு ஈத்த தண்தார்
அண்டிரன் வரூஉம் என்ன ஒண்தொடி
வச்சிரத் தடக்கை நெடியோன் கோயிலுள்
போர்ப்புறு முரசங் கறங்க
ஆர்ப்பு எழுந் தன்றால் விசும்பி னானே. -புறம். 244/15

*12.10.2.* இனிய தலைவியைப் பிரிந்த தலைவனைத் தேடித் தருவது போல இருக்கிறது மழை எழுப்பும் பேர் ஒலி என நற்றிணைப் பாடல் ஒன்று கூறுகிறது. மழையின் பேர் ஒலி இயல்பான நிகழ்ச்சி. அதனோடு தலைவனைத் தேடித்தரும் செய்தி பிணைக்கப்படுதல் புலவனின் கற்பனையாகும்.

இன்துணைப் பிரிந்தோர் நாடித்
தருவது போலும் இப் பெருமழைக் குரலே
-நற். 208/11-12

*12.10.3.* ஊடியிருந்தவரைக் கூடி மகிழுமாறு கூவி யழைப்பது போலக் குயில் கூவுவது இருந்தது என மற்றொரு நற்றிணைப்பாடல் கூறுகின்றது.

பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்
கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கைவிட்டு
அகறல் ஓம்புமின் அறிவுடையீரெனக்
கையறத் துறப்போர்க் கழறுவபோல்
மெய்யுற இருந்து மேவர நுவல. -நற். 343/4-8

ஏனைய நூல்களிலும் இவ்வணி பயின்று வந்துள்ளது.[1]

## *12.11* திரிபு உவமை அல்லது விகார உவமை

உவமையைத் திரித்துப் பொருளுக்கு ஏற்றவாறு அமைக்கும் உவமையும் காணப்படுகிறது. இதனைத் திரிபு உவமை எனலாம். தண்டியலங்காரம் இதனை விகார உவமை என்று கூறும்.[2]

1. பிற்குறிப்பு 4-இல் காண்க.
2. விகார உவமை என்பது ஓர் உவமையை விகாரப்படுத்தி உவமிப்பது
- தண்டி. பக்கம் 48

*12.11.1.* மின்னல் வளைவு உடையது. அது நிமிர்ந்து நில்லாது. எனினும் வேல் ஆகிய பொருள் வளைவு அற்ற ஒன்று; அதற்காக உவமையைக் கூறும் பொழுது நிமிர்ந்த மின்னலை உவமைப் படுத்திக் கூறியுள்ளனர். நிமிர்ந்த மின்னல் என்பது திரிபு உவமை எனலாம்.

மின்னு நிமிர்ந்தனைய வேல்.[1] நற்.51/6

*12.11.2.* வளைந்த யானையின் கொம்பு தாழை மலருக்கு உவமைப்படுத்தும் பொழுது அது நீட்டித்த நிலையில் வைத்துக் கூறப்படுகிறது.

கோடு வார்ந்தன்ன வெண்பூத் தாழை -நற். 203/4

*12.11.3.* இரலை மானின் முறுக்குண்ட நீண்ட கொம்புகள் திரிந்த இரும்புக்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளன.

இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்
பரல் அவல் அடைய இரலை தெறிப்ப -அகம். 4/3-4

*12.11.4.* யானையின் கொம்பு நீண்ட வடிவினது. அது முட்டைக்கு உவமைப்படுத்தும் பொழுது அது திரிந்து வட்டமாக அமைந்த நிலை கூறப்படுகிறது.

கோட்டுவட்டு உருவின் புலவுநாறு முட்டை.
-அகம். 160/6

*12.11.5.* காட்டு வாழும் கானவரின் உரம்பெற்ற கைகள் வடித்த இரும்புக்கு உவமைப்படுத்தப்பட்டுள்ளது.

இரும்புவடித் தன்ன கருங்கைக் கானவன். -அகம். 172/6

*12.11.6.* இதே உவமை மற்றோர் இடத்தில் கருமகன் கைக்கு ஒப்புமையாக வந்துள்ளது.

இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்
கருங்கை வினைஞர். -பத். 4/223

*12.11.7.* இரும்பு திரித்தன்ன என்னும் உவமை மற்றோர் இடத்திலும் வந்துள்ளது.

இரும்பியன் றன்ன கருங்கோட் டெருமை.
-அகம். 56/3

1. 'மின்னு நிமிர்ந்தனையர்' -பத். 6/679

## 12.12. நிந்தை உவமை

உவமையையேனும் பொருளையேனும் இகழ்வுபடக் கூறலை நிந்தை உவமை எனலாம். இஃது எள்ளல் சுவை தோன்ற அமைகிறது. பின்னர் விளக்கப்படும் வேற்றுமை அணியிலும் இவ் எள்ளல் சுவை அமைந்துள்ளது எனினும் இதில் இச்சுவை மிகுதி பெற்று வருவதால் இதனை வேறாகப் பிரித்து நிந்தை உவமை எனக் கூறுவது பொருந்தும்.

இந்நிந்தை உவமை பொருளை நிந்தித்தலும், உவமையை நிந்தித்தலும் என இருவகைப்படும். இவற்றையே பழிப்பது போலப் புகழ்தல் அணி என்று கூறி வருகின்றனர்.

*12.12.1.* பொருளை நிந்தித்தல் கீழ்வரும் உவமையில் காணப்படுகிறது. ''பாரி பாரி என்று பலவாறாகச் சிறப்பித்து ஒருவனையே புலவர் புகழ்ந்து வருகின்றனர். பாரி ஒருவன் மட்டும் அல்லன்; மழையும் இந்த உலகத்தைக் காத்து வருகின்றது'' என்று இகழ்வது போலப் பாரியின் கொடைத் திறத்தை மழைக்கு உவமைப்படுத்துகின்றது புறநானூற்றுப் பாடல்.[1]

இதனை விலக்குவமைக்கு எடுத்துக்காட்டாகக் காட்டுவர் தண்டி உரையாசிரியர்.

*12.12.2.* உவமையை இழித்தும் பொருளை உயர்த்தியும் சொல்லுதல் உண்டு. தலைவியின் மாசு மறுவற்ற அழகிய முகத்தைக் கண்டு இவ்வழகும் பொலிவும் தனக்கு இல்லையே என்று திங்கள் ஏங்குவதாகக் கூறுகின்றது சிறுபாணாற்றுப் படை.

மதிஏக் கறூஉம் மாசறு திருமுகம். -பத். 3/157

## 12.13. நிரல் நிறை உவமை

உவமைகள் ஒன்றன்பின் ஒன்று அடுக்கிக் கூறப்படுகின்றன. அவற்றை அடுத்து அதே முறை வைப்பில் பொருள்களும் அடுக்கிக் கூறப்படுகின்றன. இதனை நிரல் நிறை உவமை என்று தொல்காப்பியம் கூறும்.

நிரல் நிறுத் தமைத்தல் நிரல் நிறை -தொல். சூ.309

ஒழுங்காக முறை பிறழாமல் அமையும் உவமை அடுக்கினை

---

1. புறம். 107/1-4

முறை நிரல் நிறை எனவும், மாறி மயங்கி வருவனவற்றை மயக்க நிரல் நிறை எனவும் கூறுவர்.[1] சங்க இலக்கியத்தில் முன்னதே வந்துள்ளது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

*12.13.1.* பொன்னும் மணியும் முறையே மகளிரின் மேனிக்கும் கூந்தலுக்கும் உவமையாக வருதல் பயின்று வரும் செய்தியாக அமைந்துள்ளது.

பொன்னும் மணியும் போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும். -நற். *16-/1-2*

*12.13.2.* மலரும் மூங்கிலும் போல மகளிர் கண்களும் தோள்களும் விளங்கின எனக் கூறப்படுகிறது.

போதும் பணையும் போலும் யாழ நின்
மாதர் உண்கணும் வனப்பின் தோளும். -நற்.*166/3-4*

*12.13.3.* நெருப்பும் காற்றும் விசும்பில் தோன்றுவதைப் போலத் துன்பமும் இன்பமும் ஒரே இடத்தில் அமைகின்றன என்று கூறப்படுகிறது.

தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்று மாதோ. -நற். *294/1-2*

*12.13.4.* நிரல் நிறை உவமை மிகுதியாகவும் சொல் நயம்படவும் கலித்தொகையில் வந்துள்ளது குறிப்பிடத் தக்க தாகும்.

தலைவன் தலைவியைக் கண்ணுறுகின்றான். நில் என நிறுத்தி அவள் நெற்றியையும், முகத்தையும், தோள்களையும், கண்களையும், இயலையும், சொல்லையும் நோக்கி நினைவு படுத்திக் கீழ்வரும் உவமைகளை அமைக்கின்றான். பிறைத் திங்கள், நிறைமதி, மூங்கில், நீர்ப்பூ, மயில், கிளி ஆகிய இவற்றை மேற்குறிப்பிட்ட பொருள்களுக்கு ஒப்புமைப்படுத்து கின்றான். இவ் எடுத்துக்காட்டு முன்னர் விலக்கு உவமையாகிய எதிர்மறுப்பு உவமைக்குக் காட்டப்பட்டுள்ளது.[2]

**12.14. பல்பொருள் உவமை**

ஒருபொருளுக்கு ஓர் உவமையைக் கூறுவது பொது மரபாகும். ஒன்றுக்கு மேற்பட்ட பல பொருள்களையும்

1. யாப்பருங்கலக் காரிகை. - பக். *181*
2. இந்நூல் பக்கம் *28*.

உவமையாகக் கூறும் பொழுது அவை அக் கவிஞனின் **வியப்** புணர்ச்சியையும், உவமைகளை மிருதிப்படுத்திக் **காட்டும்** திறனையும் காட்டுகின்றன. இதனைப் பல்பொருள் **உவமை** அணி என்று கூறலாம்.

ஒரே தன்மைக்குப் பல பொருள்கள் உவமையாதல் உண்டு; ஒரு பொருளின் பல்வேறு தன்மைகளுக்குப் பல்வேறு உவமைகள் அமைதலும் உண்டு.

*12.14.1.* முல்லையும் முத்தும் மகளிரின் பற்களுக்கு உவமையாகத் தரப்படுகின்றன. வெண்ணிறமும் வடிவும் ஒளியும் இவற்றின் பொது இயல்புகள் எனலாம்.

முகை முல்லைவென்று எழில்முத்து ஏய்க்கும் வெண்டல்
-பத் *8/76*

*12.14.2.* கண்களின் மலர்ச்சிக்குப் பூவும், அவை செய்யும் நோய்க்கு அம்பும் உவமைகளாக அமைந்தன.

பூஒத்து அலமரும் தகைய; ஏ ஒத்து
எல்லாரும் அறிய நோய்செய் தனவே -குறு. *72/1-2*

*12.14.3.* அன்னமும், மயிலும், புறாவும் மகளிரின் எழில் நலத்திற்கு உவமை தரப்பட்டுள்ளன. எழில் நலம் என்பதற்குக் கலித்தொகையின் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர் விளக்கம் தரும்பொழுது அன்னத்தை நடைக்கும், புறாவினை எழிலுக்கும், மயிலினைச் சாயலுக்கும் உவமைப்படுத்தி யுள்ளனர்.

ஆய்தூவி அனமென அணிமயில் பெடைஎனத்
தூதுணம் புறவுஎனத் துறைந்தநின் எழில்நலம்
-கலி. *56/15-16*

*12.14.4.* ஒரு பொருளுக்கு ஐந்து உவமைகளும் தரப் படுகின்றன. இதுவே மிக்க எல்லையாக வந்துள்ளது. இவ் உவமை பரிபாடலில் இடம் பெற்றுள்ளது. மழை, பூவைமலர், கடல், இருள், நீலமணி ஆகிய இவ் ஐந்து பொருள்கள் திருமாலின் கரிய மேனியின் நிறத்திற்கு உவமையாக வந்துள்ளன.

கார்மலர் பூவை கடல் இருள்மணி
அவைஐந்தும் உறழும் அணிகிளர் மேனியை.
-பரி. **13/42-43**

12.14.5. கலித்தொகையில் ஒரு பொருளுக்கு மூன்று உவமைகள் அடுக்கி வருதல் மரபாகி விட்டது கலிப்பாவில் ஒரு பொருள் மேல் மூன்று தாழிசைகள் அடுக்கி வருதல் பாவியலின் அமைப்பாக இருத்தலின் அதனை ஒட்டி உவமைகளும் மூன்றாக அமைகின்றன எனக் கூறலாம்.

இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் சான்றைக் காட்டலாம். தலைவனுடன் உடன் சென்ற தன் மகளைத்தேடும் செவிலித்தாய் வழியில் அந்தணர் வருவாரை அவர்களைப் பற்றி விசாரிக்கின்றாள். அதற்கு அவர்கள் தரும் அறிவுரையில் மூன்று செய்திகள் கூறுகின்றனர். அம்மூன்றும் உவமைகளாக அமைந் துள்ளன.

'நறுமணம் தரும் சந்தனம் மலையில் தோன்றினாலும் அம்மலைக்கு அச்சந்தனம் மணம் உண்டாக்குவதில்லை; அதைப் பூசிக் கொள்பவர்களுக்கு அது மணத்தைத் தருகின்றது'.

"கடலில் தோன்றும் முத்து அக்கடலுக்கு அழகு தருவது இல்லை. அதனை அணிபவர்க்கே பயன்படுகிறது."

"யாழில் தோன்றும் இசை அவ் யாழிற்கு இன்பம் உண்டாக்குவதில்லை. அதனை உண்டாக்கும் இசைக் கலை ஞனுக்கே இன்பம் தருகிறது."

இவ்வாறே அவள் மகள் பிறந்த இடத்திற்குப் பயன்படாள். கொண்ட கொழுநனுக்கே துணையாவாள் என்ற செய்தியைக் கூறுகின்றனர்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க் கல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம்
என் செய்யும்
நினையுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க் கல்லதை
நீருளே பிறப்பினும் நீர்க்கவைதாம் என்செய்யும்
தேருங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க் கல்லது
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்
சூழுங்கால் நும்மகள் நுமக்கும் ஆங்கு அனையளே.
-கலி. 9/12-20

12.14.6. இவ்வாறு ஒரு செய்திக்கே மூன்று உவமைகள் அமைப்பதோடு ஒரே செய்தியை மூன்று முறை கூறுதலும் ஒரு சில இடங்களில் காணப்படுகிறது.

மணிபோலத் தோன்றும் மணிபோலத் தோன்றும்
மணிபோலத் தோன்றும் என் மேனியைக்
துன்னான் துறந்தான் மலை -கலி 41/32-34

*12.14.7.* மூன்று உறவுடைய பொருள்களுக்கு மூன்று தனித்தனி உவமைகளை அடுக்கிக் கூறி அவற்றை ஒரு முழு வருணனையாக அமைத்து முடித்தலும் இக் கலத்தொகையில் காணப்படும் மற்றொரு சிறப்பியல்பாகும்.

முதல் தாழிசையில் பல்லை முல்லைக்கும், அடுத்த தாழிசையில் கூந்தலை நீலமணிக்கும், அதன் அடுத்த தாழிசை யில் கொங்கையைத் தாமரை முகைக்கும் உவமைப்படுத்திக் கூறியுள்ளனர்.

நறுமுல்லை நேர்முகை ஒப்ப நிரைத்த
செறிமுறை பாராட்டினாய் மற்றெம்பல். -கலி. 22/9-10

நெய்யிடை நீவி மணியொளி விட்டன்ன
ஐவகை பாராட்டினாய் மற்றெங் கூந்தல். -கலி. 22/12-13

குளனணி தாமரைப் பாசரும்பு ஏய்க்கும்
இளமுலை பாராட்டினாய். -கலி. 22/15-16

இவ்வாறு வருதல் அருகிய வழக்கு எனினும் ஒரு பொருளுக்கு மூன்று பொருள்கள் உவமைகளாக அமைதல் பெருகியவழக்கு என்று கூறலாம்.

## *12.15.* பிறிது மொழிதல் அணி

பொருளைக் கூறாமல் வெறும் உவமையை மட்டும் கூறி விடுதல் ஒரு தனி அமைப்பாக உள்ளது. இவை பழமொழி களைப் போல அமைந்து எந்தச் சூழ்நிலைக்கும் பொருந்து கின்றன. சூழ்நிலையே அதன் கருத்தை வெளிப்படுத்துகிறது. இவற்றை ஒட்டு அணி என்றும், பிறிது மொழிதல் அணி என்றும், நுவலா நுவற்சி அணி என்றும், உவமைப் போலி என்றும் கூறுவர்.[1]

கருதிய பொருள் தொகுத்து அது புலப்படுத்தற்கு
ஒத்தது ஒன்று உரைப்பின் அஃது ஒட்டு என மொழிப
-தண்டி. சூ 52

1. தண்டி. சூ. 52 - உரைப் பகுதி.

*12.15.1.* கலித்தொகையில் வரும் ஒரு பாடல் பிறிது மொழிதல் அணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. மாந்தர் நீரை விரும்பிப் பருகுவது அது நீருக்கு இனிமை தரும் என்பதால் அன்று; அவரவர் வேட்கையைத் தணிவிக்கும் என்பதால்தான்; ஓர் இளைஞன் தான் விரும்பும் ஒருத்தியைத் தழுவிக் கொள்வதில் தவறு இல்லை என்று சுட்டிக் காட்டவே இவ் எடுத்துக்காட்டைத் தருகின்றான்.

வேட்டார்க்கு இனிதாயின் அல்லது நீர்க்கு இனிது என்று
உண்பவோ நீருண்பவர். -கலி. *62/10-11*

*12.15.2.* மரம் சாகும் அளவிற்கு அதனை வெட்டி மருந்தாக மக்கள் கொள்ள மாட்டார்கள். உடல் உரம் அழியும் அளவிற்குத் தவத்தை மேற்கொள்ள மாட்டார்கள். மக்கள் வளம் கெடும் அளவிற்கு மன்னர் பொருளைப் பெற முனையார் என்ற செய்திகள் பிறிது மொழிதலாக நற்றிணையில் அமைகின்றன.

மரஞ்சாம் மருந்தும் கொள்ளார் மாந்தர்
உரஞ்சாச் செய்யார் உயர்தவம் வளங்கெடப்
பொன்னும் கொள்ளார் மன்னர். -நற். *226/1-3*

*12.15.3.* நீர் வேட்கை உடையவர் தெளிந்த நீர்ப் பரப்பினை உடைய கடல் நீரைப் பருகச் செல்லார்; ஆவும் பிற விலங்கும் சென்று உண்ணா. அதனால் கலங்கிய சேறொடு பட்ட சிறுமையை உடையதாயினும் உண்ணீரின் கரைகளில் பலர் சென்று வருவர். அதனால் அங்கு வழிகள் பல ஏற்படும் என்னும் பிறிது மொழிதல் செய்தி கூறப்படுகிறது.

தெண்ணீர்ப் பரப்பின் இழிழ்திரைப் பெருங்கடல்
உண்ணார் ஆகுப நீர்வேட் டோரே
ஆவும் மாவும் சென்றுணக் கலங்கிச்
சேறொடு பட்ட சிறுமைத் தாயினும்
உண்ணீர் மருங்கில் அதர்பல ஆகும் -புறம். *204/5-9*

இதில் ஈவோர் சிறப்பும் ஈயார் தாழ்வும் உணர்த்தப் படுகின்றன.

*12.15.4.* புலி தான் இரையாகக் கருதி யானை மீது பாய்ந்து அது தப்புமானால் மனம் சோர்ந்து எலியாவது கிடைத் தால் போதும் என்று மன நிறைவு கொள்ளாது. இப் பிறிது மொழிதல் அணி உயர்ந்த குறிக்கோளைக் கொண்டவர்கள் தாழ்ந்து போவது இல்லை என்ற செய்தியை உணர்த்துகிறது.

புலிபார்த்து ஒற்றிய களிற்றிறை பிழைப்பின்
எலிபார்த்து ஒற்றா தாகும். -புறம். 257/16-17

அதனால் சிறந்த வள்ளல்களையே நாடிப் பரிசில் பெறத் தாம் விரும்புவதாகப் புலவர் கூறுகின்றனர்.

12.15.5. நற்றிணை உரையாசிரியர் கீழ்வரும் பகுதியைப் பிறிது மொழிதல் எனக் குறிப்பிடுகிறார். மருத நிலத்து வாழ் உப்பு வணிகர் தம் நாட்டில் விளைந்த வெண்ணெல்லைக் கொண்டு அயல்நாட்டில் நெய்தல் நிலங்களில் உப்புக்கு மாறுகொண்டு அதனை ஊர்கள் தோறும் சென்று விலைபேசி விற்பர். அவர்கள் தம் வண்டிகளோடு மணல் நெறிகளில் செல்லும் பொழுது அவர்களோடு பழகிய ஊரவர்க்குப் பிரிவு உணர்ச்சியைத் தரும் என்ற கருத்துப் பிறிது மொழிதலாகக் கூறப்படுகிறது. அது போலத் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதல் இன்னாமையைத் தரும் என்று கூறப் படுகிறது.

தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
நெடுநெறி ஒழுகை நிலவுமணல் நீந்தி
அவணுறை முனிந்த ஒக்கலொடு புலம்பெயர்ந்து
உமணர் போகலும் இன்னா தாகும்.

- நற் 183/1-5

12.15.6. இவ் உவமைகள் சூழ் நிலைகளால் பொருள் உணர்த்தும் சிறப்பு உடையன. உள்ளுறை இறைச்சிகளைப் போலக் குறிப்புப் பொருளும் நுட்ப அழகும் பெற்று விளங்குகின்றன. இவை உருவகத்தைப் போன்ற செறிவும் நிறைவும் கொண்டு இலங்குகின்றன.

## 12.16. பொது நீங்கு உவமை

ஒரு குறிப்பிட்ட பொருளுக்கு நிகராக அதற்குத் தக்க உவமையைப் பொருத்திக் காட்ட முடியாது என்றும், தனக்குத்தானே உவமை யென்றும் கூறும் தனி அழகினைப் பொது நீங்கு உவமை என்பர். பொதுவாக இறைவன் ஒருவனுக்குத்தான் இவ்வாறு சிறப்பித்துக் கூற இயலும். திருமுருகாற்றுப்படையில் முருகன் பொது நீங்கு உவமையால் சிறப்பித்துப் பாடப் பெறுகிறான்.

நின் அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமையோய் -பத். 1/279-280

புறத்திணை இலக்கியங்களில் சங்க காலப் புலவர்கள் அரசர் களைப் பாராட்டுமிடத்து இவ் உத்தியைக் கையாளுகின்றனர்.

பிறர்க்கு நீவாயின் அல்லது நினக்குப்
பிறர் உவமம் ஆகா ஒரு பெரு தேந்தே. -பதிற. 73/2-3

புறநானூற்றில் இதே போன்ற கருத்தமைந்த பாடலில் அரசன் சிறப்பிக்கப்படுகின்றான்.

பிறர்க்கு உவமம் தானல்லது
தனக்குவமம் அல்ல பிறர்சிலர். -புறம். 377/10-11

## 12.17.1. பொருள் உவமை அல்லது விபரீத உவமை

உவமையும் பொருளும் இடம் மாற்றுவதால் ஒரு புதுமையை உண்டாக்க முடிகிறது. மொழித் தொடரில் எழுவாய் பயனிலைகளை இடம் மாற்றுவதால் ஒரு புதுமையை உண்டாக்கி நடையழகினைக் காண முடிகின்றது. அம்மாற்றம் ஒரு சில இடங்களில் வருவதால் நடையில் மாற்றமும் புதுமையும் விளைவித்துத் தனி நடையைத் தோற்றுவிக்க இயல்கிறது. அதேபோல உவமை அணியில் இப் புதுமையை உண்டாக்கி அணியழகைத் தோற்றுவிக்க இயல்கிறது. இதனை வடநூலார் 'விபரீத அணி' என்று பாராட்டுவர். அதற்கு நிகராகத் தமிழில் பொருள் உவமை அணி' எனப் பெயர் கொடுக்கலாம். இவ்வாறு கொள்வதற்குத் தொல்காப்பியம் இடம் தருகின்றது.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமமாகும்.
-தொல்.சூ 284

என்ற பாவியலில் பொருள் உவமையினைக் கூறுகின்றார்.[1] இச் சூத்திரத்தால் பொருளையே உவமையாகக் **கொள்ளப்படும்** உருவகத்தை உணர்த்தினர் என்றும் கூறுவர்.[2] **இவ்விபரீத** உவமையை இச் சூத்திரத்தால் உணர்த்தினார் **என்று** கொள்ள வும் கிடக்கிறது.

1. **தொல் பேராசிரியர்** உரை.
2. **தொல், இளம்பூரணர்** உரை.

**12.17.2.** மனித வடிவங்களுக்கு இயற்கைப் பொருள் களை உவமையாக அமைப்பது கவி மரபாக விளங்கியது. அம் முறையை மாற்றி இயற்கைப் பொருள்களுக்குப் பொதுவாக மனித வடிவங்களையும் சிறப்பாக மகளிர் நலன்களையும் வடிவ அமைப்புகளையும் உவமையாகக் கூறுவர். இவ்வாறு பொருள்களுக்கு மகளிர் வடிவத்தை உவமையாகக் கூறுவதால் அப்பொருள்களுக்குத் தக்க ஓவிய வடிவத்தைத்தர கற் பனைக்குக் கொண்டு வர இயல்கிறது. அதனால் இக்கூற்றுகள் கற்பனை வளமும் செறிவும் பெறுகின்றன. இயற்கைப் பொருள்களுக்கு உயிர் ஊட்டி இயக்க வைக்க முடிகிறது. பொதுவாக மகளிரின் விழிகள், கூந்தல், கரங்கள், பல் முதலியவை உவமைகளாகக் கொண்டு வந்து நிறுத்தப் படுகின்றன.

**12.17.3.** சில இடங்களில் புதுமை நிலையை உண்டாக்குவதற்காக அல்லாமல் தாமாகவே இடம் மாறிவருதல் உண்டு. இதனை வெறும் 'இடமாற்றம்' என்று கூறலாமே ஒழிய 'விபரீத உவமை' என்று கூறுவதற்கில்லை. எடுத்துக்காட்டாகக் கிணைப்பறைக்கு ஆமையின் வயிறு உவமிக்கப்படுகிறது.[1] ஆமையின் வயிற்றுக்குக் கிணைப்பறை உவமையாகிறது.[2] இவ்வாறு வரும் இடமாற்றத்தில் எது அடிப்படை நியதி, எது மாற்றம் என்று கூறுவதற்கில்லை. இவை இயல்பாக அமைவன வாகும்.

எந்தத் தனியழகையும் உண்டாக்கக் கவிஞன் கருதுவதாகக் கூறமுடியாது. அதனால் மனித உருவினை இயற்கைப் பொருள்களுக்கு உவமையாக அமைத்தல் விரும்பி அமைப்பது எனக் கூறலாம்.

**12.17.4.** மனித வடிவத்திற்கு இயற்கை உவமையாக அமைதல் பொது நியதி எனக் கூறலாம். இப்பொது நியதி மாறி இயற்கைக்கு மனித உருவம் உவமையாக அமைதல் சிறப்பு நியதி எனக் கூறலாம். இவ்வாறு அமைதல் அருகிய வழக்காகும். இவை மட்டுமே விபரீத அணி எனக் கொள்ளல் தகும். எடுத்துக்காட்டாக 'நெய்தல் மலர்' கண்களுக்கு உவமை யாகிறது. இது பொது நியதி. நெய்தல் மலர் கண்களைப் போல

1. புறம். 387/1-4.
2. அகம். 356/2-4.

மலர்கிறது என்று கூறுவது சிறப்பு நியதி எனலாம். இதே போலக் காந்தள் மலருக்கு மகளிர் கரங்கள் உவமையாகின்றன.

'பொது நியதி:'
'நெய்தல் உண்கண்' - அகம். 10/5

'மாற்று நியதி:'
'கண்போல் நெய்தல்' - ஐங். 113

'கண்ணன்ன மலர் பூக்குந்து' - புறம். 396/2

'கைபோல் காந்தள்' - நற். 355/2

12.17.5. இவ் விடமாற்ற அழகினை மிக அழகாக ஐங்குறு நூறு பயன்படுத்தித் தான் உணர்த்த வந்த கருத்தை உணரும் படியும் அழகுபடவும் ஆற்றலோடும் உணர்த்துகிறது. தலைவியின் வடிவம் மயிலுக்கும். அவள் கூந்தலில் எழும் மணம் முல்லை நறுமணத்துக்கும். அவள் மருண்டவிழிகள் மானின் நோக்கிற்கும் தொகுத்து உவமை செய்யப்படுகின்றன. மயிலும், முல்லைமலரும், மான்விழியும் தலைவனின் நெஞ்சில் பல நினைவுகளை எழுப்புகின்றன. அவள் அழகிய வடிவம் அவன் கண்முன் வந்து நின்று காதல் நினைவாகக் கிளம்பி, அவனை வேதனை யுறச் செய்கிறது. அதனால் இல்லம் நோக்கி அவன் திரும்பி வருவதாகக் கூறுகிறான். சங்கப் புலவர்கள் அமைத்துக் கொடுத்த இப்புதிய அணி மரபினை இவ் ஐங்குறு நூற்றுப்பாடல் அழகாகப் பயன்படுத்திக் கொண்டது.

நின்னே போலும் மஞ்ஞை யால நின்
நன்னுதல் நாறு முல்லை மலர
நின்னே போலு மாமருண்டு நோக்க
நின்னே உள்ளி வந்தனென்
நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே -ஐங். 492/1-5

12.17.6. இப்பொருள் உவமைகள் மகளிர் வரு ணனைக்கே மிகுதியாக வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மகளிர் பொதுவாகக் கொடிக்கும் அவர்கள் சாயல் மயிலுக்கும், மேனி தளிருக்கும், கூந்தல் மயில்தோகை, மேகம், அறல் முதலியவற்றிற்கும், நுதல் பிறை, பீர், முல்லை மணம், புறவு நாற்றம் முதலியவற்றிற்கும், கண்கள் பல்வகை மலர்கள், கயல் ஆகிய இவற்றிற்கும், முகம் மலர்கள், மதி ஆகியவற்றிற்கும், பல்முல்லை, முகை, மூத்து ஆகிய

வற்றிற்கும், கொங்கை தாமரை, வாழை, நுங்கு முதலிய வற்றிற்கும், கை காந்தள், ஞாழல் முதலியவற்றிக்கும். உகிர முருக்கிதழுக்கும், மகளிர் நாணம் ஏனல் கதிர் வளைவுக்கும் உவமைகளாக வந்துள்ளன.

### *12.18.* மாலை உவமை

இது முற்கூறப்பட்ட அந்தாதி உவமையோடு நெருங்கிய தொடர்பு உள்ளது. கொண்டுவந்த கருத்துகளும் சொற்களும் மீண்டும் மீண்டும் வருதல் இவ்விரண்டு அணிகளுக்கும் உள்ள ஒற்றுமை நயமாகும். மாலையணி கைப் பொருத்தவரையில் இதற்கு மற்றோர் தனிச்சிறப்பு உள்ளது. ஈண்டு கருத்தும் சொற்களும் தொடர்தல் என்பது உவமைப் பகுதிகளோடு மட்டும் பொருந்துவதாகும். உறவும் தொடர்பும் உள்ள பொருள்கள் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்டு ஒரு மாலை போல் இணைக்கப்படுகின்றது.

*12.18.1.* பரிபாடலில் மாலை உவமை அணி அமைய ஓர் அழகிய தொடர் வந்துள்ளது. திருமாலின் கொப்பூழில் தோன்றிய தாமரைப் பூவினைப் போன்றது சீறூர். அப் பூவின் இதழ் அனையன தெருக்கள்; இதழ் கத்து அரிய முகையைப் போன்றது அரசன் கோயில்; அப் பொகுட்டில் உள்ள தாதுகளைப் போன்றது தண் தமிழ்க் குடிமக்கள்; அத்தாதினை உண்ணவரும் பறவை யனையவர் பரிசிலர் என்று கூறப் படுகின்றன. இதில் உவமைச் செய்திகள் மட்டும் அந்தாதித் தொடையாக ஒன்றனோடு ஒன்று தொடர்பு பெற்று மாலைபோல் காட்சி அளிக்கிறது.

மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும் சீறூர்; பூவின்
இதழகத்து அனைய தெருவம்; இதழகத்து
அரும்பொகுட்டு அனைத்தே அண்ணல் கோயில்,
தாதின் அனையர் தண்டமிழ்க் குடிகள்;
தாதுண் பறவையனையர் பரிசில் வினைஞர்

- பரி. இணை. *7/1-6*

*12.18.2.* மதிபோன்றது முகம் எனவும், அரவு சேர் மதிபோல அம்முகம் பசப்பு நிறம் பெற்றது எனவும், உவமைகளை அந்தாதித் தொடையாக அமைத்து மாலையணி அமையக் கலித்தொகை செய்திகளைத் தந்துள்ளது.

தீங்கதிர் மதியேய்க்குந் திருமுகம் அம்முகம்
பாம்புசேர் மதிபோலப் பசப்பூர்ந்து
தொலைந்தக்கால் - கலி. *15/16-17*

*12.18.3.* புறநானூற்றில் உவமைப் பொருள்களைத் தொகைப்படுத்திக் கூறும் பொழும் மாலை உவமை எடுத்தாளப் படுகிறது.

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரும் வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்.
- புறம். *2/1-8*

இதில் நிரல் நிறை உவமமும் அமைந்துள்ளது.

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமும் என்றிவை
சென்றளந் தறிந்தோர் போல என்றும்
இனைத்து என்போரும் உளரே. - புறம். *30/1-2*

ஞாயிறு, பரிப்பு என்ற சொற்கள் மீணடும் மீண்டும் அந்தாதித் தொடையாக வந்துள்ளன. இவற்றைத் தொடை கருதி அந்தாதித் தொடை எனவும், உவமைகளுள் உள்ள தொடர்பு கருதி மாலை உவமை எனவும் கூறலாம். ஈண்டுத் தொடர்ச்சி உவமைகள் பற்றியதாம்.

## *12.19.* முரண் உவமை அல்லது விரோத அணி

முரண்பாடு கொண்ட பொருள்களும் செய்திகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு உவமைகள் ஆக்கப்படுகின்றன. இவ்வாறு அமைப்பதால் முரண் அழகு தோன்றுகிறது. இதனை யாப்பு நூலார் முரண்தொடை என்று கூறுவர்[1]. உவமை

1. சொற்பொருள் முரணத் தொடுப்பது விரோதம் - மாறன் *181*.

களுள்ளும் இவ் வழகினைத் தோற்றுவிப்பதில் ஓர் சிறப்பினைக் காண்பர். இதனை முரண் உவமை என்று கூறலாம்.

12.9.1. ஒரு தலைவனின் இனிய பேச்சு அன்பு நிறைந்ததாக இருந்தது எனவும், அவன் பிரிவுச் சொறகள் கொடுமை விளைவித்தன எனவும், ஓர் தலைவி கூறுகின்றாள். அவ்வினிமைக்குத் தாயையும், கொடுமைக்குக் கள்வரையும் இணைத்து உவமைப்படுத்துகின்றாள். இக்கூற்றில் பொருளி லும் உவமையிலும் முரண்தொடை அமைந்துள்ளது எனலாம்.

அன்னை போல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ - நற். 28/3-4

12.19.2. இத்தகைய முரண்தொடை உவமைகள் சங்க இலக்கியத்தில் பல்கிப் பரவியுள்ளன. அது ஒரு தனியழைகைத் தருகின்றது. நிறங்கள் இவற்றில் மோதி வண்ண அழகைத் தருகின்றது. மாறுபட்ட உலோகங்கள் முரண் உவமைகளாக அமைகின்றது. புன்னை மரத்தின் கரிய கிளைகள் இரும்புக்கும், அதன் பசிய இலைகள் நீலத்திற்கும், அவ் இலைகளின் நடுப் பகுதியில் விளங்கும் கோடுகள் வெள்ளிக்கும், அதன் நறுந் தாதுக்கள் பொன்னுக்கும் உவமை கூறப்படுகின்றன. இவ் உவமைகளில் இரும்பு, நீலம் வெள்ளி, பொன் எனப் பல உலோகங்கள் முரண் நயம் தோன்ற உவமைகளாக அமைந்துள்ளன.

இரும்பின் அன்ன கருங்கோட்டுப் புன்னை
நீலத்து அன்ன பாசிலை அகந்தோறும்
வெள்ளி அன்ன விளங்கிணர் நாப்பண்
பொன்னின் அன்ன நறுந்தாது உதிர. - நற் 249/1-4

12.19.3. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பொருள்களையும் இவ்வாறே அமைத்து முரண் அழகு காண் கின்றனர். விசும்பில் தீயும் பிறக்கின்றது காற்றும் உண்டாகிறது. அதே போலத் தலைவன் இன்பமும் துன்பமும் உண்டாக்கு வதற்குக் காரணம் ஆகின்றான் என்று கூறப்படுகிறது.

தீயும் வளியும் விசும்பு பயந்தாங்கு
நோயும் இன்பமும் ஆகின்றுமாதோ. - நற். 294/1-2

12.19.4. பெரும்பாலும் இணைப்புத் துணை உவமை களில் காட்டப்படுவன முரண் நயம் மிக்கவையாகவே உள்ளன

எனக் கூறலாம். பசுமையான செடிகளில் ஒளி பொருந்திய மலர்கள் உதிர்தல் முரண்பட்ட உவமைகளால் காட்டப் படுகிறது.

நீலத் தன்ன பைம்பயிர் மிசைதொறும்
வெள்ளி யன்ன ஒள்வீ உதிர்ந்து. -பத் 6/279-280

இப்பகுதியில் நீலமும் வெள்ளியும் இணைப்பு உவமைகள் ஆதலே யன்றி முரண் உவமைகளும் ஆகின்றன. இவ் வாறே திங்களும் ஞாயிறும் உவமைகளாக முரண் நயம் அமையப் பல இடங்களில் வந்துள்ளன.[1]

## 12.20. முற்று உவமை

ஒரு பொருளை வருணிக்குமிடத்து அதன் முழு வடிவத்தைத் தரும் பொழுது அதன் ஒவ்வோர் உறுப்புக்கும் தனித்தனி உவமைகளைப் பொருத்திக் கூறி ஒரு முழு வடிவத்தைத் தீட்டித் தருகின்றனர். இவ்வாறு அமைக்கும் முழுமைபெற்ற உவமையணியை 'முற்று உவமை அணி' எனலாம்.

பொதுவாக மகளிரை வருணிக்கும் இடத்துச் சங்க இலக்கியத்தில் முழு வருணனையைத் தருவதில்லை. முகத்தையோ கூந்தலையோ தோளினையோ முறுவல். விழி முதலியவற்றையோ கூறிக் கோடிட்டுக் காட்டுவது போல வரையும் சொற் சித்திரங்களே சங்க இலக்கிய வருணனை அழகாம். எனினும் ஒரு சில இடங்களில் மகளிர் முழுவடிவமும் தீட்டப்படுகின்றன. மகளிரைப் போலவே இயற்கைக் காட்சி களுக்குத் துணையாக விளங்கும் மரம் செடிகளையும், பாணன் பாடினியர் கையகத்து உள்ளயாழ் வகைகளையும், மக்கள் வாழும் இல்லங்களையும், தோகை விரித்தாடும் மயிலினத்தை யும், போர்க்களக் காட்சிகளையும் முழு வருணனையாக அமைத்து அதற்குத் துணையாக முற்றுவமைகளைத் தந்துள் ளனர்.[2]

**12.20.1.** பிற்கால இலக்கியங்களில் மகளிரையும் தெய்வங்களையும் அரசர்களையும் முடி தொடங்கி அடிவரை யிலும், அடி தொடங்கி முடி வரையிலம் வருணிக்கும் ஓர்

1. பிற்குறிப்பு 6ல் காண்க
2. பிற்குறிப்பு 7-ல் காண்க

ஒழுங்கு முறையைப் பின்பற்றி வந்தனர். இதனை முறையே 'கேசாதிபாத வருணனை' என்றும் 'பாதாதி கேசவருணனை' என்றும் சுட்டிக் காட்டுவர். இதற்கு முன் மாதிரியாகப் பத்துப் பாட்டு என்னும் நூலில் பொருநராற்றுப்படையும் பட்டினப் பாலையும் அமைந்துள்ளன. 'முடிதொடங்கி அடிவரை' பொருநர் ஆற்றுப்படையிலும் 'அடிதொடங்கி முடிவரை' பட்டினப் பாலையிலும் காணப்படுகின்றன. 'அறல் போல் கூந்தல்' எனத் தொடங்கி 'வருந்து நாய் நாவின் பெருந்தகு சீறடி' எனப் பொருநர் ஆற்றுப்படை முடிகின்றது.[1]

சேவடி செறிகுறங்கின்
பாசிழை பகட்டு அல்குல்
தூசுடைத் துகிர்மேனி
மயிலியல் மாண்நோக்கின்
கிளிமழலை மென்சாயலோர் - பத். 9/146-150

எனக் காலடி தொடங்கித் தலைமுடி வரை கொண்டு செல்லும் அழகைக் காணமுடிகிறது. இவற்றுள் பொருநர் ஆற்றுப்படைப் பாடல் வருணனை ஒவ்வோர் உறுப்புக்கும் தனி உவமையைத் தந்து முற்றுவமைக்குச் சான்றாக முழுமை பெற்று விளங்கு கிறது.

## 12.21. வேற்றுமை அணி

பொருளுக்கும் உவமைக்கும் வேறுபாடு காட்டி இவையிரண்டும் ஒவ்வா எனக்கூறிப் பொருளைச் சிறப்பித்தல் வேற்றுமை அணி எனக் கொள்ளல் தகும். இந்நிகழ்ச்சிகளில் எல்லாம் உவமையைவிடப் பொருளே சிறந்தது என்னும் நயம் தோற்றுவித்தல் இதன் தனிச்சிறப்பாகும்.

12.21.1. புறத்தில் வேற்றுமையணிக்குச் சிறந்த எடுத்துக் காட்டு அமைந்துள்ளது. சேரமன்னன் கதிரவனுக்கு உவமைப் படுத்தபடுகிறான். இவ் உவமையில் கதிரவன் சேரனோடு மாறுபடும் சிறப்புகளைச் சுட்டிக்காட்டி வேறுபாடு அமைக்கப் படுகிறது. கதிரவன் காவலனின் முன்னால் எதிர் நிற்க முடியாது என்பதனைக் கூறி ஒரு புதிரை அமைக்கின்றார். கீழ்வரும் வேறுபாடுகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. கதிரவன் குறிப் பிட்ட காலங்களில் வெளிப்படுகின்றான். அவன் இடம்விட்டு

1. பத். 2/25-42

இடம் ஓடுகின்றான். தன் நிலை மாறுகின்றான் மலையில் மறைந்த ஒளிகின்றான். பகலில் மட்டும் அகல் ஞாலத்துக்கு ஒளி தருகின்றான். அரசனோ எனின் வீரமும் ஒடுங்கா உள்ளமும், ஓம்பா ஈகையும் கொண்டு விளங்குகின்றான். அவனுக்குக் குறிப்பிட்ட நேரம் காலம் என்கின்ற வரையறை இல்லை; எந்தக் காலத்திலும் இரவலர்க்கு அருள் செய்வான். மற்றவரிடத்தி லிருந்து அவன் தன்னை மறைத்துக்கொள்வதில்லை. தனக்கு என எதையும் ஒதுக்கி வைத்துக் கொள்வதில்லை. இவ்வோறு பாடுகளைச் சுட்டிக்காட்டி அதனால் கதிரவன் சேர மன்னனுக்கு நிகராகான் என்பதைக் குறிப்பாகக் காட்டுகின்றார். இக்கருத்து அமைந்த பாடல் பின்வருமாறு.

ஒடுங்கா உள்ளத்து ஓம்பா ஈகைக்
கடந்தடு தானைச் சேர லாதனை
யாங்ஙனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
மாறி வருதி மலைமறைந்து ஒளித்தி
அகலிரு விசும்பினானும்
பகல் விளங்குதியால் பல்கதிர் விரித்தே. - புறம் .8/4-01

இப்பாடலைத் தொல்காப்பிய உவமை இயலில் ‘வேறுபட வந்த உவமைத் தோற்றம்’ என்ற சூத்திரத்துக்கு உரையாசிரியாராகிய பேராசிரியர் எடுத்துக்காட்டாகக் காட்டுவர். இவ்வணியைப் பிற்காலத்தார் வேற்றுமை யணி என்று தனிப் பெயர் கொடுத்துச் சிறப்பிப்பர். இவ்வணி மற்றும் பல இடங்களில் வந்துள்ளது.[1]

*12.21.2.* முரண் உவமைகள் ஒரு சிலவற்றுள் வேற்றுமை அணியும் குறிப்பாக அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். கரிய மெய்யின் நிறத்தோடு திருமாலின் ஆடை மாறுபட்டிருக்கிறது என்னும் கூற்றில் முரண் நயமும் வேற்றுமை நயமும், அமைந்துள்ளன.

மாமெய் யோடு முரணிய உடுக்கை. -பரி. 4/8

*12.21.3.* மற்றும் பொன்னோடும் மாறுபடும் மணியை இணைத்து முரணும் வேற்றுமை தோன்ற அமைத்துள்ள பகுதி சிறப்பாகப் பதிற்றுப்பத்தில் அமைந்துள்ளது.

1. பிற்குறிப்பு 8ல் காண்க

திருமணி பொருத திகழ்விடு பசும் பொன்
வயங்கு கதிர் வயிரமொடு உறழ்ந்து பூண்சுடர்வர.

- பர. 16/15-16

ஈண்டுப் பொன்னும் மணியும் உறழ்வதோடு வயிரமும் அவற்றோடு மாறுபடுகிறது.

13. இவ்வாறு பல்வேறு உவமை வகைகள் சங்க இலக்கியப் பாடல்களில் நுட்ப வேறுபாடுகளோடு அமைந்துள்ளன என்பது தெரிகிறது. ஒரு சில அணிகளை வேறு வகையாகவும் பொருள்கொள்ள இடம் தருகின்றது. அதனால் இவ் அணிகளை உறுதி செய்வதில் கருத்து வேறுபாடு அமைதலும் இயற்கை. ஒரு சில அணிகளுள் வேறு அணி வகைகளும் கலந்து இருந்தாலும் அவற்றின் மிகுதி பற்றி ஒன்றற்கு உரிமைப்படுத்துவது இயல்பாகிறது. அதனை ஒட்டி ஈண்டு உவமை வகைகளும் அவற்றின் எடுத்துக்காட்டுகளும் பொருத்திக் காட்டப்பட்டுள்ளன.

## பிற்குறிப்பு

1. நற்28/5-6; 221/1-4; 242/3-4; 304/6-7; ஐங். 189; 1-2; 201/3; 4-0/1-3 பரி. 4/57-59; 13/3; கலி. 117/1-2; 143/4-6; அகம். 14/2-3; 156/17; 172; -16/18; 232/7-8; 242 1-4; 272/16-19; 290/12-15; 304/13-15; புறம். 1371/10-11; பத். 1/306 316; 2/201; 3/147-148; 4/14-15; 6/168-70; 81; 8/13, 59-90; 9/187.

2. (இரட்டைக் கிளவி) நற். 1/6-7; 25/1-4; 39/57; 73/9-10; 75/7-8; 116/6-9; 118/2; 186/1-2; 188/1-5; 213/2-3; 231/1-4; 296/1-5; 299/1-2; 300/1-4; 304/ 6-7; 306/6-8; 355/1-5; 371/1-2: 375/3-10; 377/6-8.

குறு. 18/4-5; 105/1-4; 129-3-6; 134/5-7; 160/1-2; 192/35; 239/2-5; 243/1-2; 274/-2; 284/1-3; 315/1-4

ஐங்: 43/1-2; 189/1-2; 209/3-5; 213/1-3; 263/ 1-2; 264/1-2; 294/1-2; 295/3-5; 297/1-2; 338/2-3; 353/1-2; 356/1-2; 400/1-2; 401/1-2; 416/4-5.

ஐங் இணைப்பு : 1/23; 2/2-3; 3/2-3; 4/2-2

பரி: 41/23-24; 1/910; 15/11-14; 16/27; 16/43-46

கலி: 41/23-24; 41/37-38; 42/21-23; 42/30-32; 43/8-9; 48/19; 48/19; 94/23-24; 103/11-12; 103/47-49; 104/27-28; 108/40-41; 143/4-6; 145/64-66; 146/52-55

அகம்: 4/12-15; 12/11-12; 14/4; 25/911; 25/16; 27/15-15-17; 41/13-16; 72/36; 73/3-5; 77/1-3; 99/13-14; 101/12-13; 106/1-2; 108/2-5; 108/15-17; 111/3-8; 125/3-6; 125/8-9; 128/10-11; 133/8-9; 138/17-19/ 155/11-16; 169/12; 178/1-2; 206/4-6; 242/1-4; 297; 12-16; 301/16-17; 304/12-15; 307/4; 308/5-6; 313/4; 317/8-13; 327/1-3; 333/1-2; 336/18-19; 349/10-14; 358/12-13; 360/5-8; 361/1-3; 362/11-15; 363/17-19; 368/6-7; 368/10-11; 374/11-14.

புறம்: 13/5-8; 19/8-9; 22/5-6; 22/10-2; 60/1-2; 70/23; 109/9; 109/8-9.

பத்: 1/89-90; 3/183-185; 3/217-220; 3/22-222; 3/242-244; 4/23-25; 4/49-50; 4/269-270; 6/84-85; 6/448-452; 6/768-77; 772; 8/59-60; 9/34-38; 9/47-50; 9/67-69; 9/77; 9/82-87; 9/95-97; 10/15-16; 10/111/113 10/129-131; 10/456-458.

மூன்று கிளவிகள் : பரி 15/30-33; அகம் 197/11-14.

3. (எடுத்துக்காட்டுவமை அணி) நற் : 226/1-3; ஐங். 71/3-5; 416/4-5.

கலி: 89/10-11; அகம் 356/6-12; 396/1-9.

புறம்: 51/1-4; 60/1-14; 90/10-13; 203/1-6; 214/4-13 232/15-8; 335/2-8; 11-12; பத். 8/13-18.

4. (தற்குறிப் பேற்றம்) நற். 208/11-12; 243/4-8; குறு. 310/2-4;

ஐங். 280/1-3; 287/1-3; பரி. 14/7-9; 16/14-16;

கலி. 28/1-3; 33/1-2; 33/1-6; 67/1-3; 75/5-9 92/61-64; 121/5-6; 129/8-11; 129/12-15; 131/19-21; 134/5-6; 134/7-8.

5. பொருள் உவமை மகளிர் கொடி: ஐங் 400/1-2; மகளிர்-மயில்: குறு. 26/1-3; ஐங். 294/1-2; 299/2-5. 413/2; 492/1;

ஐங் இணை 3/2-3; பரி 17/17-19; அகம் 344/6-8.

மேனி-தளிர் : ஐங். 365/3-5; கலி. 40/20

கூந்தல்-தோகை : ஐங் 300/1-2; பத். 3/14-15; 3/263-364.

கூந்தல்-புயல் : நற். 195/5-12; பத். அகம் 323/13.

கூந்தல்-அறல்: கலி 27/5-6; 28/6; 29/6; 32/1-2; 98/14; பத். 3/6; 3/72.

நுதல்-பிறை: கலி 55/6-14 நுதல்-பீர்; கலி 31/4

நுதல்-முல்லை மணம்: ஐங். 492/2

நுதல்-புறவு நாற்றம்: ஐங். 413/1

கண்-மலர்: கலி 55/6-14; 102/5; 119/5 அகம் 150/8; புறம் 137/8; 396/2; 397/3.

கண்-கருவிளை: நற். 262/1; ஐங். 464/1; அகம். 294/5.

கண்-குவளை: குறு. 291/5-8; ஐங். 299/2-5; அகம். 228/3-4; 358/4-5.

கண்-கொன்றை: ஐங். 458/1-4

கண்-சுனைமலர்: பத். 1/75

கண்-நெய்தல்: நற் 8/8; 27/10; 283/2; குறு 9/4-6 21/1-4; ஐங் 151/3; பதி 51/11; அகம். 150/8; 170/4-5.

கண்-நீலம்: நற். 161/2; 273/8; 357/8.

கண்-கயல்: கலி 98/15.

முகம்-மலர்: கலி 31/5; 92/30-31; அகம் 176/6

முகம்-குவளை: கலி. 64/15-17.

முகம்-குவளை: கலி 64/15-17.

முகம்-தாமரை: கலி. 31/5; 71/48; 72/3-8; 73/1-5; 77/1-7; பத். 3/73.

முகம்-மதி; கலி 55/6-14.

பல்-முல்லை முகை: குறு. 162/3-5; 186/2-3; கலி. 32/16; பத். 3/28-30.

முறுவல்-முகை: கலி. 27/4; 119/7

முறுவல்-முத்து: பத் 3/56-58

முலை-கோங்கு: குறு. 254/2; அகம். 99/4-5

முலை-தாமரை: பத். 3/72; கலி. 77/1-7

முலை-வாழை: நற். 355/2

முலை-நுங்கு: பத். 3/26-27

முலை-குன்று: பரி 6/54/55

கை-காந்தள் நற். 188/1-5; 355/1-5; கலி. 40/11-12; 43/8-9; பரி. 19-76; 20/98; பத். 2/11-12; 3/167; 5/95.

கை-ஞாழல்: நற் 267;3-6

உகிர்-முருக்கிதழ்: அகம் 317/2-5

மகளிர் நாணம்-ஏனல்: கலி. 40/2-3

6. (ஞாயிறும் திங்களும்) புறம் 6/27-29; 56/23-25; பத். 6/768-70, 81.

7. (முற்றுவமை)

மகளிர்: நற் 301/1-6; கலி. 58/1-5; பத். 2/25-46; 3/13-31; 46-150

யாழ்: பத். 2/4-22; 4/4-16; 10/24-37

இல் (வீடு) பத். 7/108-114

மரம்: நற். 19/1-5; 249/7-7; அகம். 335/12-24.

இயற்கை: பரி 11/9-21; 21/32-37; 22/36-44; அகம். 82/1-10.

ஏர்க்கள உருவகம்: புறம் 369, 370, 373 பாடல்கள்

8. (வேற்றுமை அணி) பதி: 16/15-16; பரி. 4/6-9; பரி இணை: 7/7-11 அகம் 16/15-16ட 167/1-2; புறம் 127/6-10; 189/1-18

# 2. உவம உருபுகள்

1. உவமையையும் பொருளையும் இணைக்கும் சொற்கள் உவம உருபுகள் எனப்பட்டன. அவை முழுச் சொற்களாகவும், தனி உருபுகளாகவும் விளங்கின. இவை உவமையையும் பொருளையும் இணைத்து நின்றன. சில தொடர்களில் இவ்உருபுகள் இல்லாமலேயே அவை இணைந்து நின்றன. அவற்றை உவமைத் தொகைகள் என்பர். எனவே உவம உருபு தொக்கும் தொகாமலும் உவமையும் பொருளும் இயைந்து நின்றன எனலாம். தொக்கு நிற்பனவற்றைத் தொகை உவமை என்றும் விரிந்து நிற்பனவற்றை விரி உவமை என்றும் கூறுவர்.

2. பிறை நுதல் (நற். 66/11) என்பது தொகை உவமமாகும். பிறை என்பது உவமை; நுதல் என்பது பொருள். பிறை என்பது நுதலுக்கு அடையாக நின்று அதன் வடிவச் சிறப்பைக் காட்டுகின்றது. பிறை போலும் வளைந்த நுதல் என்ப பொருளாம்.

3. 'பூப்போல் உண்கண்' (நற்.20/6). இதில் பூ என்பது உவமையாகும்; கண் என்பது பொருள்; போல் என்பது இவ்விரண்டையும் இணைக்கும் சொல்லுருபாகும். போல, ஒரு காலத்தில் முழுச் சொல்லாக இருந்திருக்கும். அது வழக்கிடை பயின்று உருபு நிலையை அடைந்துவிட்டது. போல் என்பது வினை விகுதியோ இடைநிலைகளோ சேராத வெறும் அடிச் சொல்லாகும். இது உவம உருபு என்றும், இடைச் சொல் என்றும் கொள்ளும் நிலையைப் பெற்றுள்ளது.

4. 'கார் மழை முழக்கிசை கடுக்கும்' (அகம். 14/20) கார் காலத்து மழை முழவின் இசையை நிகர்க்கும் என்பது இத் தொடரின் கருத்தாகும். கடுக்கும் என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று எனக் கொள்ளல் தகும். 'செய்யும்' என்னும் அமைப்பை உடைய இம்முழு வினைச்சொல் உவம உருபாக நின்றுள்ளது. எனவே முற்று வினையே உவம உருபாக நின்றது என்று கொள்ளலாம்.

5. 'மலர் ஏர் கண்' (நற்.120/7). மலர் போன்ற கண் என்புது இத் தொடரின் பொருளாகும். ஏர் என்பதற்கு அழகு என்னும் பொருள் உள்ளது. அழகு என்னும் பொருள் தரும் ஏர் என்பதனைப் பெயர்ச்சொல் என்று கூறலாம். எனவே ஈண்டுப் பெயர் வடிவில் விளங்கும் முழுச் சொல் உவம உருபாக வந்துள்ளது.

6. இவ்வாறு பெயரும் வினையும் ஏனைய இடைச் சொற்களும் உவம உருபுகளாக வந்துள்ளமை சங்க உவமை களின் உருபு நிலைகளாம். எனவே உவம உருபுகள் என்பவை முழுச் சொற்களும் இடைச் சொற்களும் எனக் கொள்ளக் கிடக்கின்றன.

7. தொல்காப்பிய உவம இயலின் உரையாசிரியரான பேராசிரியர் வினையும் இடைச் சொல்லும் உருபாக வரு தலையும், உருபு இல்லாமல் தொக்கு வருதலையும் மட்டும் குறிப்பிடுவர். பெயர்ச் சொற்களும் உருபு ஆதலை அவர் காட்டாமல் விடுத்தார் என்பது குறிப்பிடத் தக்கதாம் "அவை இடைச் சொல்லாகத் தொக்கு வருவனவும் தொகாதே நிற்பனவும் வினைச் சொல்லாகி வேறுபட நிற்பனவும் எனப்பலவாம் என்றாவாறு" என்பர் பேராசிரியர்.[1]

8. உவம உருபுகள் பெயர் வினை இடைச் சொற்கள் ஆகிய அனைத்துமாக வருகின்றன; உருவகத்திற்கும் இவ்வாறே பல்வகை வடிவங்கள் உருபுகளாக வருகின்றன. ஆக, ஆகிய, என்னும், எனப்படும் என்பவை உருவக உருபுகளாக வந்துள்ளன.

9. அவ் உருபுகளே அன்றி வெளிப்படை விளக்கங்களும் நேரிடையாக அமைந்து உவமையையும் பொருளையும் தொடர்பு படுத்துகின்றன. உவமையின் வடிவு, பண்பு, நிறம் முதலியவற்றை இக் கூற்றுகள் தாங்கியுள்ளன. இக்கூற்றுகள் வெளிப்படையாகக் கிளக்கும் உவமங்களாகும். இவற்றில் இக் கூற்றுகளே நின்று உவம உருபுகளின் செயலை மேற் கொள்கின்றன எனலாம்.

9.1. 'கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை (அகம். 160/6). இத் தொடரில் 'உருவின்' என்ற விளக்கச் சொல்லே உவமையாக அமைந்துள்ளது.

1. தொல்.சூ. 286-பேராசிரியர் உரை.

9.2. 'துரப்பு அமை ஆணி எண்ணாள் நிங்கள் வடிவிற்று ஆகி' (நற். 2/0-11) வடிவிற்று என்னும் விளக்கச் சொல் உவமை உருபின் பணியைச் செய்கின்றது.

9.3. 'நெய்த்தோர் நிற அரக்கு' (பரி. 10/12) நிறம் என்ற விளக்கச் சொல் உவம விளக்கமாக வந்துள்ளது.

மேற்காட்டியவை அனைத்தும் வெளிப்படை உவமங்கள் எனக் கூறலாம். உவம உருபு கொடுத்தும்

கொடுக்காமலும் விளக்கச் சொற்கள் அமைந்தும் உவமைகள் பொருள்களோடு தொடர்பு பெறுகின்றன.

10. குறிப்பாக உவமைகளை அமைத்தலும் காணப் படுகின்றது. நேராக இன்ன பொருள் இன்ன பொருளை நிகர்க்கும் என்று கூறாமல் வேறு விதமாக நயம்படக் கூறி அவ்விளைவினை உண்டாக்குதலும் ஆங்காங்குக் காணப் படுகிறது. அத்தகைய இடங்களில் நேரிடைக் கூற்று அமையாத காரணத்தால் உவம உருபுகள் இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருப்பதில்லை. இவற்றைக் குறிப்பு உவமைகள் எனக் கூறலாம்.

10.1. 'யானைகள் வேங்கை மரத்தைப் புலி என நினைத்துப் பாய்கின்றன'[1] என்று கூறும் நயம் மிக்க கூற்று நேரிடையாக உவமையை அமைக்கவில்லை என்றாலும் வேங்கை மரம் புலி போலக் காட்சி அளித்தது என்பது குறிப்பாக உணர்த்தும் உவமையாகும் இவ்வாறு குறிப்பாகக் கிளைத்தல் சங்க இலக்கிய உவம மரபுகளில் ஒன்றாகும்.

11. உவமைத் தொடர்களையும் அவற்றின் பொருள் அமைப்பையும் ஆராயும் பொழுது கீழ்க்காணும் சிறப் பியல்புகளைக் காண முடிகின்றது.

11.1. பொருளும் உவமையும் ஒன்றை ஒன்று நிகர்க் கின்றது என்று கூறும் கூற்றுப் பெரும்பகுதியாக வருகின்றது. இவற்றைச் சமநிலைக் கூற்று எனக் கூறலாம். உவம உருபுகள் இச் சமநிலைக் கூற்றாக நின்று உவமையையும் பொருளையும் இணைக்கின்றன எனக் கூறலாம். அன்ன, போல, புரைய, நேர், மான, ஒப்ப முதலியன நிகர்க் கூற்றைத் தெரிவிப்பனவாகும்.

1. கலி. 49/1-9; அகம். 12-11; 228/10.12

11.2. பொருள் மற்றொரு உவமையோடு ஒப்பிட்டு அதனை விட உயர்ந்தது என்னும் உறழ்வுக் கூற்றை இரண்டாவது வகை எனலாம். இவற்றை உறழ்வு நிலைக் கூற்று எனக் கூறலாம். 'இன்' 'இனும்' என்பவை உறழ்வு உவம உருபுகள் எனலாம்.

11.3. பொருள் உவமையோடு முரண்கொள்ளுதலாகக் கூறலும் ஒரு தனிவகை எனக் கூறலாம். 'மருள்' 'உறழ்' முதலியவை முரண்பாட்டைத் தெரிவிப்பன எனலாம்.

11.4. உவமையோடு மாறுபட்டுப் பொருள் வெல்லு வதாகக் கூறுலும் ஒரு தனி வகை உவமம் எனக் கூறக் கிடக்கிறது. வென்ற, பொருத, ஏசும், ஏய்ப்ப, கடுப்ப முதலியன வெல்லுதல் நிலையில் அமைந்த உவம உருபுகள் எனலாம்.

11.5. இன்னும் பல்வகைப் பொருள்களில் அமைந்த உவம உருபுகள் பல உள்ளன. என, என்னும், ஏர், செத்து, சால, மயங்கு அமர், அவிர், ஆங்கு ஆகியர் முதலியன இப் பகுப்பில் அடக்கலாம். எனவே பல்வகைப் பொருள்களையும் கருத்து களையும் உணர்த்தி வந்த பல்வேறு சொற்கள் உவமையையும் பொருளையும் இணைத்து நின்றன என்றும், முதலில் அவை உவமைக்கும் பொருளுக்கும் உள்ள உறவை மட்டும் விளக்கி நின்றன என்றும், அவை நாளடைவில் பழைய பொருளை இழந்து வெறும் உருபுகளாக நின்றுவிட்டன என்றும் கொள்ளக் கிடக்கின்றன.

11.6. மேற்கூறப்பட்ட உருபுகள் யாவும் சொல்நிலை அமைப்பிற்கும், தொடர்நிலை அமைப்பிற்கும் ஏற்ப, வினை, பெயராக நிற்பதோடு பலவகை எச்ச வாய்பாடுகளையும் பெறுகின்றன. அவற்றின் அமைப்பும் வடிவும் தொடர் நிலைக்கு ஏற்ப மாறுகின்றன. ஒரே உவம உருபு பல்வேறு வடிவங்களில் திகழ்வதற்கு இதுவே காரணமாகின்றது. 'போல்' என்ற அடிச் சொல்லிலிருந்து போலும் போல, போன்ற; போன்றது எனப் பல்வேறு வடிவங்கள் அமைந்துள்ளன. ஒரே உவம உருபு தொடர்நிலையின் சூழ்நிலையால் பல்வகை வடிவங்கள் பெறுகின்றன.

11.7. இவ் உவம உருபுகள் பெரும்பாலும் வினை வடிவங்களாகவே இயங்குகின்றன. இவ் வடிவங்களைத் தொல்காப்பியர் காட்டும் இலக்கண நெறியின் வழியிலே நின்று

கீழ்வருமாறு அமைத்துக் காட்டலாம். அவற்றைச் செய். செய, செய்யும் செய்த, செய்பு முதலிய வாய்பாடுகளில் பொருத்திக் காட்டலாம். ஒரே உவம உருபு எல்லா வினைவாய் பாடுகளிலும் வருவது இல்லை. செத்து என்னும் உவம உருபு செய்து என்னும் வடிவினது என்று கூறலாம். இதன் ஏனைய வினையெச்ச வடிவங்கள் உவம உருபுகளாக அமையவில்லை எனக் கூறலாம். இதன் முழு வினைமுற்று வடிவம் அக நானூற்றில் மட்டும் ஒரே ஓர் இடத்தில் வருகின்றது. 'செத்தனள்' (அகம். *16/8*) என்ற வடிவம் முற்று எச்சமாக வருகிறது 'செத்து' என்பதற்கு இதைத் தவிர வேறு எந்த வடிவமும் எங்கும் வரவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். மான என்பதற்கு 'மான மானும்' (செய, செய்யும்) வடிவங்கள் மட்டும் வந்துள்ளன.

*11.8.* இத்தகைய மாறுபாடுகளும் வேறுபட்ட வடிவங் களும் கீழ்வரும் வாய்பாடுகளில் அடக்கிக் காட்டலாம். செய், செய, செய்து செய்பு, செய்யும், செய்த என்னும் வாய்பாடு களின் கீழ் அவற்றைக் காட்ட முடியும். செய்யும் என்பது பெயருக்கு முன்னால் வரும்பொழுது பெயரெச்சமாகவும், பயனிலையாக அமையும் பொழுது வினைமுற்றாகவும் வரும் இயல்பினது. இவ்வாய்பாட்டில் வரும் உவம உருபும் இவ்விரு நிலைகளில் வருகின்றன என்பதைக் காணமுடிகிறது. கடுக்கும் போலும் என்னும் அமைப்புள்ள உவம உருபுகளும் இவ்வாறு எச்சமாகவும் முற்றாகவும் செயல்படுகின்றன. பெயர் வடி வங்கள், குறிப்பு வினைகள், பால் ஈறுகள் பெற்ற வினை வடிவங்கள் தவிர்த்து ஏனைய எல்லா வினை வடிவங்களையும் இவ்வாய்பாடுகளில் அமைத்துக் காட்ட முடியும்.

*11.9.* செய் என்பதை அடிப்படை வடிவமாகக் கொள்ளலாம். அதனை அடிச்சொல் அல்லது பகுதி எனக் கொள்ளலாம். அது ஏவல் முன்னிலை வினையின் இயல்பைப் பெற்றுள்ளது. செய என்பது செய் என்பதன் கூட்டு அமைப் பாகும். சில சமயங்களில் அஃது ஏனைய காலங்களையும் உணர்த்த வருகின்றது. செய்து என்பது இறந்த காலம் உணர்த்தும் வினையெச்சமாகும். செய்பு என்பது செய்து என்பதன் மாற்றுவடிவமாக இயங்குகிறது. செய்யும் என்பது இறப்பு அல்லாத ஏனைய காலங்களை மட்டும் உணர்த்தும். செய்த என்பது இறந்த காலத்தை உணர்த்தும் வடிவமாகும்.

செய்யும் என்பது சில இடங்களில் முக்காலத்தையும் உணர்த்த வருகின்றது என்று கூறலாம். அது முற்றாக வரும்பொழுது பால் வேறுபாடு அற்று இயங்குகின்றது. அதில் பால் ஈறுகள் சேர்ந்து அமைவதில்லை. இவ்வாய்பாடுகளில் வரும் உவமை உருபுகள் கீழே தரப்பட்டுள்ளன.

### *11.9.1.* செய் என்னும் வாய்பாட்டு உவம உருபுகள்

அமர், அவிர், இயல், உறழ், எதிர், ஏய், ஓங்கு, கொள், சேர், தேர், தோய், நவில், நாறு, நேர், புரை, பொரு, போல், மயங்கு, மருள், மலி, மாய், வீழ் என்பன செய் என்னும் வாய்பாட்டைச் சார்ந்தன ஆகும்.

### *11.9.2.* செய என்னும் வாய்பாட்டு உவம உருபுகள்

ஆக, இகலிய, உறழ, என, என்ன, ஏய்ப்ப, ஒப்ப, கடுப்ப, நாண, நிகர்ப்ப, புரைய, பொற்ப, போல, மான என்பன செய என்னும் வாய்பாட்டு உவம உருபுகளாம்.

### *11.9.3.* செய்து என்னும் வாய்பாட்டு உவம உருபுகள்

உறழ்ந்து, எள்ளி, என்று, ஒத்து, செத்து, புரைஇ, பொருது, போன்று, வென்று என்பன செய்து என்னும் வாய்பாட்டு உவம உருபுகளாம்.

### *11.9.4.* செய்யும் என்னும் வாய்பாட்டு உவம உருபுகள்

உறழும், உறைக்கும், எள்ளும், என்னும், ஏக்குறூஉம், ஏசும், ஏய்க்கும், ஒக்கும், ஓர்க்கும், கடுக்கும், நிகர்க்கும் புரையும், போலும், போன்ம், மருளும், மாய்க்கும், மானும், வவ்வும் என்பன செய்யும் என்னும் வாய்பாட்டு உவம உருபுகளாகும். இவை முற்றாகவும் எச்சமாகவும் வந்துள்ளன.

### *11.9.5.* செய்த என்னும் வாய்பாட்டு உவம உருபு

ஆகிய, இகலிய, ஒத்த, ஓங்கிய, கொண்ட, சினைஇய, புரிந்த, பொருத, முரணிய, வாய்த்த, வென்ற என்பன செய்த என்னும் வாய்பாட்டு உவம உருபுகளாம்.

*11.10.* சால என்பது வினைக்கு அடையாக வரும் உரிச்சொல்லாகும். இச் சால ஒரே ஒரு இடத்தில் உவம உருபாக வந்துள்ளது. வேறு எங்கும் வராத தனிச்சிறப்பை இது பெற்றுள்ளது.

*11.11.* ஏர் என்பது பெயர்ச்சொல் அமைப்போடு விளங்குவதாகும். ஏர் என்பது அழகு என்னும் பொருளினது. ஏர் எனினும் அழகு எனினும் ஒக்கும். அது வழக்காற்றில் உவம உருபாக விளங்குகிறது. ஏர் உவம உருபு என்பதைத் தொல்காப்பிய உவம இயல் உரையாசிரியராகிய பேராசிரியரும் ஒப்புக் கொள்கிறார். தொல்காப்பியச் சூத்திரம் 29க்கு எழுதிய உரையின் கண் இப்பாடல் அடிகளை எடுத்துக்காட்டுவர்.

மழையேர் ஐம்பால் - அகம். *8/15*

மணியேர் ஐம்பால் என்பதும் பாடமாக உள்ளது. சில தொடர்கள் ஏர் என்றும், நேர் என்றும் பிரிக்கத்தக்க வகையில் அமைந்துள்ளன.

மணியேர் மாணலம் சிதையப் பொன்னேர் பசலை.
-அகம். *172/17-18*

இத்தொடரின்கண் மணியேர் என்பதில் ஏர் என்று தெளிவாகப் பிரிக்கலாம். பொன்னேர் என்பதைப் பொன் ஏர் என்றும், பொன் நேர் என்றும் பிரிக்கலாம். எனவே ஏர் என்றும், நேர் என்றும் பிரிக்கத்தக்க வகையில் சில தொடர்கள் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## *11.12.* முற்று வினை வடிவங்கள்

இவ் எச்ச வடிவங்களும் பெயர் வடிவங்களும் அன்றி முற்று வடிவங்களும் உவம உருபுகளாக வந்தன. அவை உறழ்ந்தோள், ஒத்தனை, போந்தது, போன்ற, போல்க முதலியன ஆகும். இவை முழுமையான முற்று வடிவங்களாகும்; பால் ஈறுகளும் கால இடைநிலைகளும் தெளிவாகப் பெற்றுள்ளன.

## *11.13.* குறிப்பு வினை வடிவங்கள்

அற்று, அன்னது, அனையர், அன்னோர், அனையது, அனைய, அனையவை, இற்று, இனையள் ஆகிய இவை குறிப்புவினை வடிவங்களாம்.

## **11.14. பெயர் வடிவங்கள்**

**ஏர், ஒப்பின், உருவின், புரையுநள் முதலியவை பெயர் வடிவங்களாகும்.**

## 11.15. தொகை வடிவங்கள்

சில கூட்டுருபுகளும் உவம உருபுகளாக வந்துள்ளன. இன்மான, எனக்கடுக்கும், ஏர்அன்ன, நேர் ஒப்பின் இன்மானும் முதலியன கூட்டுருபுகளாம்.

*11.16.* ஆங்கு என்பது எப்பொழுதும் ஒரு வினை வடிவத்தோடேயே இயைந்து வரும். அது தனித்து வருவதே இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கலுழ்ந்தாங்கு கலங்கினேன் -புறம். 200/4.5

தைவந்தாங்கு விருந்தே காமம் -குறு. 204/1.3

தெய்வம்கட் கண்டாங்கு அலமரல் வருத்தம் தீர
-நற். 9/2.3

கலுழ்ந்து, வந்து, கண்டு முதலியன செய்து என்னும் வாய்பாட்டு எச்ச வடிவங்களாகவே இருத்தலும் குறிப்பிடத் தக்கதாகும். வேறு எத்தகைய வடிவங்களோடும் ஆங்கு என்பது சேர்வதே இல்லை. இக் கூட்டுத்தொடரை அடுத்து வாக்கியத்தின் பயனிலை எப்பொழுதும் அமையும். தமிழைப் பொருத்தவரை பயனிலை என்பது பெயராகவும் இருக்கலாம் வினையாகவும் இருக்கலாம்.

கலுழ்ந்தாங்கு கலங்கினேன் -புறம். 220/4-5

கலங்கினேன் வினைப்பயனிலை
தைவந்தாங்கு விருந்தே காமம் -குறு. 204/4-5

விருந்து என்னும் பெயர்ச்சொல் இத்தொடரின் பயனிலை யாகும். ஆங்கு என்பது வினைப்பயனிலையும் பெயர்ப்பய னிலையும் கொண்டு இக் கூட்டுத் தொடர்களாக வந்துள்ளது.

## 11.17. ஒவ் என்பதன் மாற்று வடிவங்கள்

ஒவ் என்னும் அடிச்சொல்லோடு ஆக்க விகுதிகளும் தகர இடைநிலையும் சேர்ந்து ஒப்ப, ஒக்க, ஒத்த முதலிய வடிவங் களும் அமைந்துள்ளன என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஒவ்வாதி -கலி. 86/22

என்பதில் 'ஒவ்' என்னும் அடிச்சொல் தெளிவாகக் காணப் படுகிறது.

ஒவ் பு - ஒப்பு
ஒவ் தல் - ஒத்தல்
ஒவ் கும் - ஒக்கும்

### 11.18. தொடர்நிலை உருபுகள்

தனிச்சொற்களேயன்றித் தொடர்நிலைச் சொற்களும் ஒன்றாக இணைந்து உவம உருபுகளாக அமைகின்றன. உறழ்கொள, உறழ்நிலை கொண்ட, எதிர்காலும், எதிர்படு, எழில் இழந்த, எனக்கடுக்கும், எனக் கருதிய, எனக்கொள்ளும், எனமருளும், ஏர் அன்ன, கவின் கொண்ட, நலமிழந்த, நேர் ஒப்பின், நேர்நிரந்து, புறங்கொடுத்த, போன்மென, மலைத்து அமர்ந்த; மலைத்து அன்ன, மாறுகொள்ளும், மாறுகொள்வது போலும், மாறுமலைக்கும், முரண்கொள்ளும், வடிவிற்று, வனப்பிழந்த, வனப்புற்ற, வனப்பேந்திய முதலியவை தொடர் நிலைச் சொற்களாம். இவை இணைக்கும் உருபுகளாகச் செயல்படுகின்றன.

### 12. உருபுகளின் எண்ணிக்கை விவரம்

உவமை உருபுகள் பலவாயினும் அவை அனைத்தும் ஒரே அளவில் வருகின்றன என்று கூறுவதற்கு இல்லை. ஒருசில உருபுகளே மிகுதியாக இடம்பெறுகின்றன. ஒரு சில மிக அருகிலே வழங்குகின்றன. போல என்பதும், அதன் மாற்று வடிவங்களும், அன்ன என்பதும், அதன் மாற்று வடிவங்களும் மிகுதியாக வழங்குகின்றன. ஏனைய கடுக்கும், மான, புரைய, ஒப்ப, உறழ, ஏய்ப்ப முதலியன அருகிய வழக்காகும். சங்க நூல்கள் அனைத்தும் ஒரே காலத்தன அல்ல என்பதாலும் அவை தமக்குள்ளேயே கால இடைவெளி ஒருசிலவற்றிற்கு இருப்ப தாலும் இவ் உருபுகளின் பயிற்சி வேறுபடுகின்றன.

### 13. தொல்காப்பியம் தரும் உவம உருபு

சங்க காலத்து உவம உருபுகளில் ஏற்பட்ட மாறுதல்களை அறிய இவற்றைத் தொல்காப்பியர் காட்டும் உவம உருபு களோடு ஒப்பிட்டு ஆராய்வது இன்றியமையாதது ஆகும். தொல்காப்பியர் காலத்து வழங்கிய உவம உருபுகளோடு சங்க காலத்து வழங்கிய உவமஉருபுகள் பெரிதும் ஒத்து இயங்கு கின்றன. எனினும் ஒரு சில வேறுபாடுகளும் காணப் படுகின்றன. இவ் ஒப்புமை ஆய்வு கீழ்த்தரப்படும் செய்திகளை உணர்த்துகின்றது.

*13.1.* தொல்காப்பியர் கூறும் உவம உருப்புகளில் ஒரு சில சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை.

*13.2.* தொல்காப்பியர் உவம உருபுகளை வினை, பயன், மெய், உரு என நான்கு வகைப்படுத்திக் காட்டுவதோடு இன்ன இன்ன உவம உருபுகள் இந்த இந்த வகையைச் சாரும் என்று அறுதியிட்டுக் கூறுவர். அத்தகைய வரையறை சங்க காலத்தில் இல்லை என்பது தெரிகிறது. அவை நெகிழ்விக்கப் பெற்று மாறியும் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*13.3.* தொல்காப்பியர் கீழ்வரும் உவம உருபுகளைத் தருகின்றார். சூத்திரம் *286*-இல் *36* உவம உருபுகளும், *287*-இல் ஒன்றும். *291*-இல் ஒன்றும் ஆக *38* உருபுகளைத் தருகின்றார். அவற்றை 'செய' என்னும் வாய்ப்பாட்டில் கூறுவது குறிப்பிடத் தக்க செய்தியாகும். அகர ஈற்று வாய்பாட்டில் எல்லா உருபுகளையும் கூறுகின்றார். அவை அனைத்தும் அகா ஈற்று வாய்பாட்டில் வழங்கி இருக்க முடியும் என்று கூறுவதற்கு இல்லை. ஓர் ஒழுங்கு நியதி முறையைப் பின்பற்றி அவ் வாய்ப்பாடுகளை அகர ஈற்றில் வைக்கின்றார். அவற்றைக் கொண்டு அவற்றின் தொடர்பு பெற்ற ஏனைய அமைப்பு களையும் உள்ளடக்கிக் கூறுகின்றார் எனக் கொள்ளுதலே ஏற்படைத்து ஆகும். போல என்று அவர் கூறினாலும் அதன் மாற்று வடிவங்களாகிய போல், போன்ற, போலும் முதலிய அனைத்தையும் அவர் உள்ளடக்கிக் கூறுகின்றார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. நேர, ஆங்க என்ற வாய்பாடுகள் வழங்கியிருக்க வேண்டும். அவர் காட்டும் வாய்பாட்டைப் பின்பற்றி அவர் தரும் உருபுகள் வருமாறு. அவை ஈண்டு அகர வரிசையில் தரப்படுகின்றன.

*1.* அன்ன, *2.* ஆங்க, *3.* இறப்ப, *4.* உறழ, *5.* என்ன, *6.* எள்ள, *7.* ஏய்ப்ப, *8.* ஒன்ற, *9.* ஒடுங்க, *10.* ஒப்ப, *11.* ஒட்ட, *12.* ஓட, *13.* கடுப்ப, *14.* கள்ள, *15.* காய்ப்ப, *16.* தகைய, *17.* நடுங்க, *18.* நந்த, *19.* நளிய, *20.* நாட, *21.* நிகர்ப்ப, *22.* நேர, *23.* நோக்க, *24.* புல்ல, *25.* புரைய, *26.* பொருவ, *27.* பொற்ப, *28.* போல, *29.* மதிப்ப, *30.* மருள, *31.* மறுப்ப, *32.* மான, *33.* மாற்ற, *34.* வியப்ப, *35.* விளைய, *36.* வீழ, *37.* வெல்ல, *38.* வென்ற

*13.4.* வெல்ல என்பதன் திரிந்த வடிவமாகிய வென்ற என்பதையும் தருவது குறிப்பிடத்தக்கதாகும். இரண்டும் அகர

ஈற்றுச் சொற்கள் ஆதலின் ஒரே பொருளில் வழங்கும் இரண்டு வடிவங்களைத் தருகின்றார் எனக் கொள்ளலாம்.

*13.5.* இவற்றுள் சூத்திரம் 257-இல் நோக்க என்பதும் சூத்திரம் 291-இல் நேர என்பதும் கூறப்படுகின்றன. ஏனைய முப்பத்தாறு உருபுகளும் 286-ஆம் சூத்திரத்தில் தொகைப் படுத்திக் கூறுகின்றார். இவற்றையே அடுத்து ஒரு சில சூத்திரங்களில் அவற்றை வினை, பயன், மெய், உரு ஆகிய வற்றிற்கு வரையறைப்படுத்திக் காட்டுவர்.

*14.* மேற் கூறப்பட்ட தொல்காப்பிய உவம உருபு களோடு சங்க இலக்கியத்தில் வழங்கும் உருபுகளை ஒப்பிட்டு ஆராய்வதால் இவற்றுள் ஒருசில சங்க காலத்தில் வழக்கு இழந்துவிட்டன என்பது அறியவருகிறது. அவை பின் வருமாறு.

1. இறப்ப, 2. ஒன்ற, 3. ஒடுங்க, 4. ஓட, 5. ஒட்ட, 6. கள்ள, 7. நடுங்க, 8. நந்த, 9. நளிய, 10. நாட, 11. புல்ல, 12. மதிப்ப, 13. மறுப்ப, 14. வியப்ப

*14.1* ஏனைய இருபத்து நான்கு உருபுகளும் அவற்றின் வடிவங்களும் திரிந்து சங்க நூல்களில் பயின்று வழங்குகின்றன. உரையாசிரியராகிய பேராசிரியரும் நந்த நளிய என்பவற்றிற்கு எடுத்துக்காட்டுகளை அவர் காலத்தில் தர இயலவில்லை என்பதை ஒப்புக் கொள்கின்றார்.

*14.2.* தொல்காப்பியர் கூறாத உருபுகளும் சங்க நூல்களில் காணப்படுகின்றன. இவை சங்க இலக்கியத்தில் காணப்படும் சிறப்பு உருபுகள் எனக் கூறலாம். தொடர்ந்த வழக்கால் இவை சங்க காலத்தில் வழங்கிய உவம உருபுகளாக நின்று விட்டன. அவை பின்வருமாறு.

1. அமர், 2. அவிர், 3. ஆக, 4. இகலிய, 5. இயல், 6. ஈர், 7. உறைக்கும், 8. ஏக்குறும், 9. ஏதம், 10. ஏர், 11. ஒடு, 12. ஓங்கு, 13. ஓர்க்கும், 14. சால, 15. சினைஇய, 16. சேர், 17. செத்து, 18. தேர், 19. தோய், 20. நவில், 21. நாண, 22. நாறு, 23. மலி, 24. மயங்கு, 25. மாய், 26. முரணிய, 27. வாய்ந்த, 28. வவ்வும் இவையே அன்றி இவற்றின் திரிந்த வடிவங்களும் வந்துள்ளன.

*14.3.* சங்க இலக்கிய உவமைகளுள் இது முக்கியமாள மாறுதலாகும். தொல்காப்பியத்தினின்று மாறுபடும் வகையில்

இப்புதிய உருபுகள் இடம் பெற்றுள்ளன. மற்றும் தொல்காப்பியர் காலத்தில் வினை, பயன், மெய், உரு என்று வகைப்படுத்தி அவற்றிற்கு என வரையறை செய்யப்பட்ட உருபுகள் அவ்வரையறையைக் கடந்து ஏனையவற்றிற்கும் வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஒன்றற்கு என்று வரையறை செய்யப்பட்ட உவம உருபு ஏனைய தன்மைக்கும் வந்துள்ளது.

14.4. ஒருசில எடுத்துக்காட்டுகள் இக் கொள்கையை வலியுறுத்தும். இதை உரையாசிரியராகிய பேராசிரியரே எடுத்துக்காட்டியுள்ளார்.

14.4.1. 'ஏய்க்கும்' என்பது மெய் உவம உருபு என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார்.

''ஊறுநீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய்''

-கலி. 20/11

ஏய்க்கும் ஈண்டுப் பயன் உவம உருபாக வந்துள்ளது. வாயில் ஊறும் நீர் அமிழ்தினை ஒத்து இருக்கும் என்பதில் பயன் ஆகிய தன்மையே வற்புறுத்தப்பட்டுள்ளது. ஈண்டு வடிவு சிறப்பிக்கப் பெறவில்லை.

14.4.2. 'கடுக்கும்' என்பது மெய் உவமை என்பது தொல்காப்பியனார் கருத்தாகும்.

கார்மழை முழக்கிசை கடுக்கும் -அகம் 14/20

ஈண்டுக் கடுக்கும் என்பது செயலையே வற்புறுத்துகின்றது. கார் காலத்து மழை முழவின் இசையை நிகர்க்கும் என்பது இத் தொடர் உணர்த்தும் கருத்தாகும். முழவு ஒலி இசைப்பது போல மழை ஒலி இசைத்தது என்பதாம்.

14.4.3. 'போல' என்பது உருவினை உணர்த்தும் உவம உருபு என்பது ஆசிரியர் தொல்காப்பியனார் கருத்தாகும்.

ஒளித்தியங்கு மரபின் மறப்புலி போல

-அகம். 22/15

தலைமகனின் செயல் புலியின் செயலுக்கு ஒப்புமைப் படுத்தப் பட்டுள்ளது. ஈண்டுச் செயலே வற்புறுத்தப்பட்டுள்ளது.

1. தொல்.சூ. 291 பேராசிரியர் உரை. பக். 79.

*14.5.* தொல்காப்பிய உரையாசிரியரான பேராசிரியர் இவற்றைப் புதிய மாறுதல் என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கின்றார் என்பது தெரிகிறது. இவை மயங்கி வருதல் பொதுச் சூத்திரத்தில் அமையும் என்பது அவர் கருத்தாகும்.

*14.6.* உரையாசிரியர் கூறும் இக் கருத்து ஒப்புக் கொள்ளத் தக்கதாக இல்லை. தொல்காப்பியர் இப்பொதுச் சூத்திரத்தால் உருபுகள் மயங்கி வரும் என்னும் கருத்து உடையவராக இருந்தால் 'அன்ன' என்னும் உருபுக்கு மட்டும் அது பிற வற்றோடு மயங்குதல் கூறத்தேவை இல்லை எனலாம்.

அன்னவென் கிளவி பிறவொடும் சிவணும்

-தொல் சூ. *288*

இச் சூத்திரம் அவர் கூறுவதால் அப் பொதுச் சூத்திரத்தில் மயக்கமும் கூறியதாகக் கொள்ளத் தேவை இல்லை எனலாம்.

*14.7.* எனவே இவ்வாறு தொல்காப்பியர் ஏற்படுத்திய வரையறை நெகிழ்வு பெற்று ஏனைய இடத்தும் சங்க காலத்தில் பயின்றன என்ற கொள்வதே பொருத்தமாகும். இம்மாறுதல் சங்க இலக்கிய உவமைகளின் தனிச்சிறப்பும் உவம இயலின் சிறப்பு வரலாறும் ஆகும் எனலாம்.

## *15.* உவம உருபும் அவை வரும் இடமும்

உவம உருபுகளின் அமைப்பைப் பற்றியும் அவற்றின் சிறப்பியல்புகள் பற்றியும் தொல்காப்பியத்தோடு சங்க இலக்கிய உவம உருபுகள் எவ்வாறு மாறுபடுகின்றன என்பது பற்றியும் இத் தலைப்பில் மேலே ஆராய்ந்து காட்டப்பட்டன. அவற்றிற்கு ஆதாரமாக அவற்றின் விரிவும் விவரமும் ஈண்டுத் தொடர்ந்து தரப்படுகின்றன.

*15.1.* சங்க இலக்கியத்தில் பயின்று வழங்கிய உவம உருபுகள் இவை என்பது சங்க நூல்களில் எங்கெங்கே வருகின்றன என்பதும் அகர வரிசையில் ஈண்டுத் தரப்படுகின்றன.

*15.2.* சங்க இலக்கியத்தில் வழங்கிய உவமை வடிவங்கள்: *185.* அவற்றுள் தனி உருப்புகள்: *151* கூட்டு உருபுகள் : *34* மொத்தம் வழங்கப்பட்ட உருபுகள் *3622* எனக் கணக்கிடப் பட்டுள்ளன. இவற்றுள் 'அன்ன' என்பதும் அதன் பல்வேறு திரிந்த வடிவங்களும் சேர்ந்து *1070;* போல், போல முதலியன

884; இன் இனம் 627. ஆங்கு 164; என என்று முதலியன 155; புனர முதலியன 116; கடுக்கும், கடுப்ப முதலியன 104; மருள், மருள முதலிய 69; ஏர், நேர், 65; உறழ முதலியன 61; ஏய், ஏய்க்கும் முதலியன 51, ஒவ் என்பதன் இனம் 46; செத்து இனம் 29; ஆக ஆகிய முதலியன 23; மான 14, இவையே பயின்று வந்துள்ளன. இவற்றுள்ளும் அன்ன, போல, இன்-இவையே மிகுதிப்பட்ட வழக்கு உடையன என்று அறியப்படுகிறது.

15.3. கீழே கொடுக்கப்பட்டுள்ள தனி உருபுகளை இனம் வாரியாகச் சுருக்கிவிட்டால் சங்க கால உவம உருபுகள் இவை என்று காட்ட முடியும். அவற்றின் அகர வாய்பாட்டு வடிவம் மட்டும் ஈண்டுத் தந்தால் அவற்றைச் சுருக்கிக் காட்ட இயலும். தொல்காப்பியனார் அகர ஈற்று வாய்பாட்டிலேயே உவம உருபுகளை அடுக்கிக் கூறுகின்றார் என்பது குறிப்பிடத் தக்கதாகும். அகரத்தில் அமையாத ஏனைய உருபுகள் அவ்வவ்வீற்றிலேயே ஈண்டுத் தரப்படுகின்றன. 1. அமர், 2. அவிர், 3. அன்ன, 4. ஆக, 5. ஆங்கு, 6. இகலிய, 7. இயல், 8. இற்று, 9. இன், 10. உருவின, 11. உறழ, 12. உறைக்கும், 13. எதிர், 14. எள்ள, 15. என, 16. ஏக்குறும், 17. ஏசும், 18. ஏய், 19. ஏர், (நேர்), 20. ஒப்ப, 21. ஓங்கு, 22. ஓர்க்கும், 23. கடுப்ப, 24. கொள், 25. சால, 26. சினைஇய, 27. செத்து, 28. சேர், 29. தேர், 30. தோய், 31. நவில், 32. நாண, 33. நாறு, 34. நிகர்ப்ப, 35. நிறம், 36. நேர், 37. புரிந்த, 38. புரைய, 39. பொருத, 40. பொற்ப, 41. போல, 42. மயங்கு, 43. மருள, 44. மலி, 45. மாய், 46. மான, 47. முரணிய, 48. வண்ணத்து, 49. வாய்த்த, 50. வீழ், 51. வென்ற ஆகியவற்றைக் காட்டலாம். ஏனைய கூட்டு உருபுகள் இத்தனி உருபுகளோடு சேர்ந்த இணைச் சொற் களாகும். மற்றும் நிறம், வடிவு முதலியவற்றை உணர்த்தும் சொற்களும், ஒப்புமைச் சொற்களும், உறழ் நிலை உணர்த்தும் சொற்களும், மாறு நிலை உணர்த்தும் சொற்களும் துணை வினைகளோடு இயைந்து கூட்டு உருபுகளாக இயங்கியுள்ளன.

15.4. சங்க இலக்கிய உவம உருபுகளின் அமைப்பையும் வடிவங்களையும் ஆராய்வதற்கு அவற்றைத் தொகுத்துக் காண்பது இன்றியமையாதது ஆகும். எனவே அவற்றின் எண்ணிக்கையும் வரும் இடங்களும் இந்நூலின் இறுதியில் பின்னிணைப்பாகத் தனியே தரப்பட்டுள்ளன.

# 3. சங்க இலக்கியத்தில் உருவகங்கள்

1. தொல்காப்பியர் உவம இயலில் உருவகத்தைப் பற்றி யாதும் குறிப்பிடவில்லை என்பது தெரிகிறது; எனினும்,

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும்
-தொல்.சூ. 284

என்னும் சூத்திரத்திற்கு இரண்டு வகையாகப் பொருள் கொள்ளப்படுகின்றன. பொருளே மாறி உவமையாக நின்றாலும் அஃது உவமையாகும் என்னும் கருத்தும்.[1] பொருளே உவமமாகின்ற நிலையாகிய உருவகமும் உவமமாகும் என்னும் கருத்தும்[2] உளதாக உரையாசிரியர்கள் காட்டுவர். இவை தவிர உருவகத்தைப் பற்றிய செய்திகளோ அவற்றின் தனி உருபுகளோ தொல்காப்பியத்தில் யாண்டும் கிளக்கப்படவில்லை.

2. சங்க இலக்கியங்களைப் பொறுத்தவரை உவமைகளைப் பற்றிக் கிடைக்கும் செய்திகளைப் போல உருவகத்தைப் பற்றி அதிகம் கிடைக்கவில்லை. எனினும் ஒரு சில எடுத்துக்காட்டுகள் சிதறி ஆங்காங்குக் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு அவற்றின் அமைப்புகளையும் சிறப்பியல்புகளையும் காணமுடிகிறது.

3. உவமை என்பது உவமையும் பொருளுமாகத் தனித்து இயங்குவது. உருவகம் என்பது பொருள் உவமையோடு ஒன்றிவிடுவது என்று கூறலாம். 'உவமையும் பொருளும் வேறுபாடு ஒழிவித்து ஒன்று என அமைத்தால் அஃது உருவகம் ஆகும்' என்பது தண்டியாசிரியர் உணர்த்தும் கருத்தாகும்.[3]

4. பொருள் இல்லாமலேயே உவமச் செய்திகள் உருவகங்கள் ஆகிவிடுதல் உண்டு. பயின்றுவரும் மரபால்

1. தொல். பேராசிரியர் உரை-பக். 69.
2. தொல். இளம்பூரணர் உரை-பக். 401.
3. தண்டி. சூ. 36

வெறும் உவமைகளே உருவகங்களாக நின்றுவிடுகின்றன. உவமைகளைவிட உருவகங்களே ஆற்றல் மிக்கவை எனலாம்.

5. ஈண்டும் தொகை உருவகம், விரி உருவகம் என இருவகைப் படுத்த முடியும். இரண்டையும் இணைக்கும் உறவுச் சொற்கள் இல்லாமல் தொகைப்படுத்திக் கூறும் பொழுது அவை தொகை உருவகம் ஆகின்றன. ஆக ஆகிய, என்னும், எனப்படும் என்கின்ற உருபுகள் விரிந்து நிற்கும் பொழுது அவை விரி உருவகம் ஆகின்றன. உவமையைப் போல ஈண்டு அதன் பொதுத் தன்மை விரித்துக் கூற இயலும். வினை, பண்பு, மெய், உரு ஆகிய தன்மைகள் விரித்துக் கூறுவதற்கு வாய்ப்பு அமைகின்றது.

6. ஆக, ஆகிய, என்னும், எனப்படும் இந் நான்கு உருபுகளே உருவக உருபுகளாக வந்துள்ளன. இவ் உருபுகளே ஒன்று மற்றொன்றாகியது என்னும் செய்தியைப் புலப்படுத்து கின்றது. எனவே பொருள் உவமையாகவே மாறும் பொழுது அஃது உருவகமாகி விடுகிறது.

6.1. மழைக்கண் (நற் *3/9*) என்பது உவமத் தொடர். சினத்தீ (பக்/*6/31*) என்பது உருவகத் தொடர்.

மழைபோலும் குளிர்ந்த கண் என விரிக்க முதல் எடுத்துக்காட்டு இடங்கொடுக்கிறது. அது போல இரண்டாம் எடுத்துக்காட்டில் கண் சினமாகிய கொடிய தீ என்று விரிவதற்கு இடம் தருகிறது.

6.2. தொகை உருவகத்திலும் விரி உருவகத்திலும் பொதுத் தன்மைகள் விரித்துக் கூறப்படுவதற்கு வாய்ப்பு அமைகின்றது. ஒரு சிலவற்றுள் அப்பொதுத் தன்மை வற் புறுத்தப்படுகின்றன.

கூந்தல் மெல்லணைத் துஞ்சி. - அகம். *308/13*

இத்தொகை உவமத்தில் மென்மைத் தன்மை விரித்துக் கூறப்பட்டுள்ளது.

கல்வி என்னும் வல்லாண் சிறா அன், -புறம். *346/3*

இவ்விரி உவமத்தில் வன்மை என்னும் பொதுத்தன்மை விரிக்கப்பட்டுள்ளது.

7. உருவகங்களின் வகைகளைப் பலவகையாகத் தண்டி யலங்காரம், மாறனலங்காரம் ஆகியவை விரித்துத் கூறும்.

எனினும் அவற்றைக் கொண்டு சங்க இலக்கிய உருவகங் களைப் பொருத்திக் காண வாய்ப்புக் கிடைக்கவில்லை அவ்வளவு விரிவான முறையில் பல்வகை மாறுபாடுகளோடு அவ் உருவகங்கள் அமைந்திருப்பதாகத் தெரியவில்லை. உள்ளே கிடைக்கும் உருவக அமைப்புகளைக் கொண்டு நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1. ஒரே ஒரு பொருளுக்கு ஒரே ஒரு உருவகம் அமைத்தல். இதனைத் தனிநிலை உருவகம் (Simple metophor) எனக் கூறலாம். 2. உருவகங்களுள் தொடர்ச்சி கண்டு அவற்றை இணைத்து ஒரு முழுமைக் காட்சியாக அமைக்கலாம். இதனை முற்று உருவகம் (Complete metaphor) என்று கூறலாம். 3. உருவகங்களை மட்டும் கூறிப் பொருள்களைக் கூறாமல் விடுதல் என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. இவற்றை ஒரு சார் உருவகம் (Partial metaphor) என்று கூறலாம். 4. உருவகங்கள் தேய்ந்து பயில்வுச் சொற்களாக வழங்குதல் காணப்படுகிறது. இதனைத் தேய்ந்த உருவகம் (Faded metaphor) என்று கூறலாம். இந் நால்வகை அமைப்புகளில் உருவகங் களை ஆராய்ந்து காட்டலாம்.

## 7.1. தனிநிலை உருவகங்கள்

இவை ஒரு சிலவே சங்க இலக்கியத்தில கிடைக்கின்றன. உவமைகளை விட இவை ஆற்றல் பெற்றவைகளாக இயங்கு கின்றன. உணர்வும் சித்திர அழகும் நிறைந்த சொல்லோ வியங்களாக இவை வழங்குகின்றன.

7.1.1. அருவி நீர் ஒழுகுதல் கண்ணீருக்கு உவமிக்கப் பட்டுள்ளது. அதனையே உருவகமாகக் கூறும் பொழுது அருவி நீரைக் கண்ணீராகவே கூறி உருவகம் அமைத்துள்ளார். உவமையை விட உருவகம் ஆற்றல் பெற்று விளங்குகிறது என்பது கீழ்வரும் சான்று காட்டும் இயல்பினது.

கண்ணீர் அருவியாக அழுமே தோழி. -நற். 88/8

7.1.2. இதே போன்ற கருத்தும் உணர்வும் மிக்க உருவகம் கலித்தொகையில் அமைந்துள்ளது. கண்ணீர் அலைகடலாக உருவகிக்கப்பட்டுள்ளது.

கண்ணீர்க் கடலால் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து. -கலி. 145/21-22

7.1.3. கார் காலத்தில் முல்லை மலர்தலை முகையை எயிறாகக் கொண்டு நகுவதாகக் கூறப்படுகிறது. ஈண்டு முல்லை முகை பொருள் ஆகிறது; எயிறு உருவகம் ஆகிறது.

தொகுமுகை இலங்கு எயிறாக
நகுமே தோழி நறுந்தண் காரே. - குறு 126/4-5

7.1.4. கல்வியை ஆற்றல் மிக்க சிறுவனாக உருவகப் படுத்தி உள்ளனர். நுட்பமான கருத்துகள் பருமையான வடிவம் பெறுவதற்கு இத்தகைய உருவகங்கள் பயன்படுகின்றன.

கல்வி என்னும் வல்லாண் சிறா அன் -புறம். 346/3

7.1.5. பருப்பொருள் உருவகங்கள் ஆகி நுண் பொருட்கு அமையும் தனி நிலை உருவகங்கள் வேறு சிலவும் வந்துள்ளன.

பருவரல் வெள்ளம். -நற். 33/4
கங்குல் வெள்ளம். -குறு. 387/5
சினத்தீ. -பத். 6/31
நீத்தது அவல மறுசுழி. -புறம். 238/17-18
பகைக் கூழ் அள்ளல். -புறம். 185/3

7.1.6. பருப்பொருள்களே பருப்பொருள்களுக்கு உரு வகங்கள் ஆகி உள்ளன. அவை சூழ்நிலை ஒட்டி உருவகக் காட்சிகளாக அமைக்கப்படுகின்றன. கூந்தலை மெல்லணை யாக உருவகப் படுத்தியுள்ளது சூழ்நிலை பற்றி அமைந்த உருவகமாகும். கூறு பவனின் உணர்வுப் பெருக்கு இதற்குத் துணை செய்கிறது.

கூந்தல் மெல் லணைத் துஞ்சி. -அகம். 308/13

7.1.7. உருவகமாகக் கூற வேண்டிய சூழ்நிலை இல்லாமல் இயல்பாக அமைந்த உருவகமும் உளது. சிறுவர்கள் வாய்வைத்து உரிஞ்சும் பனை நுங்கு விரும்புகின்ற முலையாக உருவகப் படுத்தப்பட்டுள்ளது.

மனையமுது ஒழிந்த புன்தலைச் சிறா அர்
துனையதின் முயன்ற தீங்கண் நுங்கின்
பணைகொள் வெம்முலை பாடுபெற்று உவக்கும்.
-நற். 392/3-6

சுவைப்பதற்குரிய கொங்கை போறலின் நுங்காகிய முலை என்றார் என்பர் உரையாசிரியர்.

## 7.2. முற்று உருவகங்கள்

தனிநிலைக் காட்சிகளை விடத் தொகுநிலைக்காட்சிகள் ஒரு முழுமையான சொல்லோவியமாகக் காட்சி அளிக்கிறது. இவற்றை முழுமையாகக் காட்டுவதில் கவிஞன் வெற்றி காண வேண்டும் என்னும் விழைவு அதனுடன் கலந்து இயைகிறது. ஒரே பொருளுக்கு ஒரே ஒரு உருவகம் அமைப்பது எளிது. அவற்றோடு தொடர்புடைய உருவகங்ளை அமைப்பது அவன் கற்பனை ஆற்றலை வெளிப்படுத்துகிறது. அவன் ஒரு முழு ஓவியமாகக் காட்டுவதில் வெற்றி காண்கின்றான். இம் முழுக்காட்சிகளில் இயற்கையை ஆடற்பாடற் கலைகளுக்கு உருவகப்படுத்தலும், போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகப் படுத்தலும் பொருள் மரபுகளாக அமைந்துள்ளன. பின்னதை 'ஏர்க்கள உருவகம்' என்னும் மரபுச் சொல்லால் குறிப்பதும் வழக்கமாகி விட்டது.

### 7.2.1. இயற்கையைக் கலை நிகழ்ச்சியாக உருவகித்தல்

இயற்கைக் காட்சிகளையும் நிகழ்ச்சிகளையும் ஆடல் பாடலும் நிரம்பிய ஓர் கலைக்காட்சிக்கு உருவகப்படுத்தி யுள்ளனர். இஃது ஒரு முழுமைக் காட்சியாக நின்று முற்றுருவகத் திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

'மூங்கிலில் அமைந்த துளையில் கோடைக் காற்றுப் புகுந்து குழலிசையாகவும், இனிய அருவியிசை முழவின் குரலாகவும், கணக்கலையை அழைக்கும் குரல் தூம்பாகவும், சாரல் வண்டு யாழாகவும், இனிய பல இசைகளைக் கேட்டு மகிழும் மந்திகள் பார்வையாளராகவும், மேகம் தவழும் மலைப் பகுதிகளில் ஆடும் மயில்கள் விறலியராகவும் காட்சியளித்தன' என்று கூறப்படுகிறது.

ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கில்
கோடை யவ்வளி குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசைத்
தோடமை முழவின் துதைகுரலாகக்
கணக்கலை இகுக்கும் கடுக்குரல் தூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் இமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத் தியலியாடும் மயில்
நவைப்புகு விறலியின் தோன்றும். -அகம். 82/1-10.

## 7.2.2. ஏர்க்கள உருவகம்

போர்க்களத்தை ஏர்க்களமாக உருவகித்தல் புறநானூற்றில் பயின்றுவரும் துறையாக அமைந்துள்ளது. முழுமையும் உருவகப்படுத்தும் பொழுது இடையில் சில உவமைகள் மிக்கு முழுநிலைக் காட்சியைத் தருகிறது. இதனை ஏர்க்கள உருவகம் என்று கூறியுள்ளனர்.

யானை மேகங்களாகவும், வீரரின் வாள் மின்னலாகவும், முரசு முழக்காகவும், குதிரைகள் வீசும் காற்றாகவும், அம்புகள் மழையாகவும், போர்க்களம் வயற்களமாகவும், தேர்கள் ஏர்க் களமாகவும், வேலும் கணையமும் விதைகளாகவும், தலைகள் சாய்ந்த பிணங்கள் பசுமையான பயிராகவும், பேய்கள் பற்றிய பிணக்குவியல் நெற்போர்வையாகவும், நரிக்கூட்டமும் கழுகு களும் அப்பிணக்குவியலைக் களத்திலே போட்டு மிதிக்க, பூதங்கள் காவல் செய்ய, இப்பல்வகைக் காட்சிகளோடு அப் போர்க்களம் ஏர்க்களமாக உருவகிக்கப் பட்டுள்ளது. (புறம் 369/1-70)

இதைப் போன்ற உருவகக் காட்சிகள் வேறு சில புறநானூற்றுப் பாடல்களிலும் மரபாக வழங்குகின்றன.[1]

## 7.3. ஒருசார் உருவகங்கள்

இவ் ஒருசார் உருவகங்களில் உவமை மட்டும் கூறப் படுகிறது. பொருளைப் பற்றிய வருணனை அமைவது இல்லை. சூழ்நிலை பொருளினை உணர்த்த அமைகிறது. உவமை வாக்கியங்களில் பொருள் இருக்க வேண்டிய இடத்தில் நிலை பெறுகின்றது. உருவகமே பொருளாக இருந்து செயல் படுகின்றது. முத்தம் புன்னை மரத்தில் அரும்புவதாக அக நானூற்றுப் பாடல் கூறுகின்றது. இது ஒருசார் உருவகத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

முத்தம் அரும்பிய புன்னை. -அகம். 30/13

முத்து புன்னையின் அரும்புக்கு உவமை ஆகியதைப் போலக் கண்ணீருக்கும் உவமை ஆகியுள்ளது. அதனை உருவகமாகக் கூறும் காட்சி மற்றோரிடத்தில் அமைந்துள்ளது.

முத்தம் ஒழுக்கிய வனமுலை. -அகம். 247/1

7.3.1. இவ்வாறே ஐங்குறுநூற்றில் ஒருசார் உருவகம் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

1. புறம். 370/12-9; 371/13-16; 373/1-4.

கண் பொன் போர்த்தனவே. -ஐங். 16/4

ஈண்டுக் கண்களின் பொலிவற்ற தன்மை பொன்னின் நிறுத்துக்குக் குறிப்பாக உவமப் படுத்தப்பட்டுள்ளது.

7.3.2. இத்தகைய அமைப்புகள் பத்துப்பாட்டில் ஒரு தனி அமைப்பாக இடம் பெற்றுள்ளது. அதனை ஒரு சொல்லியல் மரபாகப் போற்றி வந்தனர் என்பது தெரிகிறது. இவ் எடுத்துக்காட்டுகள் சிறுபாணாற்றுப் படையிலும் முல்லைப் பாட்டிலும் அமைந்துள்ளன. அன்னம் போலத் தாழை பூத்தது என்றும், பொன் போலச் செருந்தி விளங்கியது என்றும், மணி போல முண்டகம் ஒளிவிட்டது என்றும், முத்துப் போலப் புன்னை முகைத்தது என்றும் கூறாமல் உருவகங்களை மட்டும் வைத்துக் கூறிப் பொருளைக் குறிப்பிடாமலேயே விடுகின்றது சிறுபாணாற்றுப்படை.

அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாள் செருந்தி தமனியம் மருட்டவும்
கொடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழலவும்
நெடுங்கால் புன்னை நித்திலம் வைப்பவும்.
-பத். 3/146-149

7.3.3. இதே போன்று இந்நூலில் மற்றோர் சான்றும் கிடைக்கிறது. அவரை பவழத்தைக் கோத்தும் காயா கணமயில் அவிழ்த்தும், முசுண்டை கொட்டம் கொண்டும், காந்தள் கைவிரல் பூத்தும் விளங்கின என்று கூறப்படுகின்றது.

பைந்நனை அவரை பவழம் கோப்பவும்
கருநனை காயா கணமயில் அவிழவும்
கொழுங்கொடி முசுண்டை கொட்டம் கொள்ளவும்
செழுங்குலைக் காந்தள் கைவிரல் பூப்பவும்.
-பத். 3/164-167

7.3.4. முல்லைப் பாட்டிலும் இத்தகைய வருணனை ஒன்று இடம் பெறுகிறது. காயா அஞ்சனம் மலர்ந்தும் கொன்றை பொன்னை வெளிப்படுத்தியும், காந்தள் கையாக அவிழ்ந்தும், தோன்றி குருதியாகப் பூத்தும், முல்லை நில வழிக்காட்சி அமைந்துள்ளது என்று கூறப்படுகிறது.

செறியிலைக் காயா அஞ்சனம் மலர
முறிஇணர்க் கொன்றை நன்பொன் காலக்
கோடல் குவிமுகை அங்கை அவிழத்
தோடார் தோன்றி குருதி பூப்பக்
கானம் நந்திய செந்நிலப் பெருவழி -பக். 5/93-97

## 7.4. தேய்த்த உருவகங்கள்

சில உருவகங்கள் தமக்குரிய பொருளை இழந்து பயின்ற வழக்கால் அது உணர்த்தும் தன்மையை மட்டும் குறிக்கத் தொடங்குகின்றன. இவற்றைத் தேய்ந்த உருவகங்கள் என்று கூறலாம். இவையும் பெருகிய வழக்காக உள்ளன.

7.4.1. குழவி என்னும் சொல் இளமைப் பருவத்தை உணர்த்தும் சொல்லாகும். மக்கட் குழந்தைகளையே குழவி என்னும் சொல்லால் குறிப்பிடுவர். தொடக்கம் என்னும் பொருளில் குழவி என்னும் சொல் பயின்ற வழக்கால் வழங்கப் பட்டுள்ளது. பிறைச்சந்திரனைக் குழவித் திங்கள் என்றும், திங்கட் குழவி என்றும் குறிப்பிட்டுள்ளனர். அதே போலத் தொடக்கப் பருவமாகிய வேனிற் பருவத்தைக் குழவி வேனில் என்று குறிப்பிட்டு உள்ளனர்.[2]

7.4.2. முகைப் பருவத்தினின்று மலரும் நிலையில் உள்ள பூக்களைக் குமரி ஞாழல்[2] குமரி வாகை[4] என்று குறிப்பிட்டுள்ளனர். தோல்வியைக் காணாத புதிய போர்ப் படையைக் குமரிப்படை[1] என்றும், அதே போல எடுக்க எளிதில் குறையாத நெற்களஞ்சியத்தைக் குமரி மூத்த கூடு' என்றும் வழங்கியுள்ளனர். இளம் விடியற் காலைப் பொழுது கன்னி விடியல்' என்னும் தொடரால் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.4.3. நிலத்தை மடந்தையாக அதன் தாய்மை உணர்வு தோன்ற உருவகித்தல் வழக்கமாக உள்ளது; நிலமகள்,[4] மாநில மடந்தை4 என்ற வழக்குகள் உள்ளன.

7.4.4. பூக்கள் 'மலர்ந்தன' என்று வெளிப்படையாகக் கூற வேண்டிய செய்தியைத் 'கண் விழித்தன' என்னும் உருவகத் தொடரால் குறிப்பிட்டு உள்ளனர். கண் விழித்தல் என்பது இதழ்கள் விரிதலுக்கு உவமையாகி வந்துள்ளது.

7.4.5. பூத்தல் என்னும் சொல் ஒளிவிடுதல், நிறைதல், வளம் பெருகல், அழகோடு விளங்குதல் என்னும் பொருள் களில் வழங்கியுள்ளது.

| | |
|---|---|
| பொன் பூப்ப(ஒளிவிடுதல்) | -புறம். 38/5 |
| பூத்த சுற்றம் (மகிழ்வு நிறைதல்) | -பதிற். 90/81 |
| பூத்த என் கடும்பு (மகிழ்வு நிறைதல்) | -புறம். 380/18 |

1. கலி. 103/15; பக். 4/384; கலி. 80/18 2. கலி. 36/9.
3. நற். 54/9-10. 4. குறு. 347/2-3
5. பத். 4/247. 6. பத். 4/247.
7. ஐங். 68/1-2 8. புறம். 365/10.

பூத்த நாடு (வளம் நிறைதல்) -பதி. 13/26
பூத்த புகை (நிறைதல்) பரி. 16/53
அந்தி பூப்ப (விளக்கம்) -அகம். 71/1
பூத்தன்றுவையை வரவு (நிறைதல்) -பரி. 16/19
மீன் பூத்தல் (ஒளிவிடுதல்) -பதி. 90/31; பரி. 16/36; 38
புறம். 20/4; 199/7; 399/31; பத். 1/169; 4/477.
பூங்கண் வேங்கை (அழகு நிறைதல்) -அகம். 182/1
பூத்தனள் நங்கை (நிறைவு பெறுதல்) -பரி. 16/30
பூத்தனள் நீங்கு (நிறைவு பெறுதல்) -16/30

7.4.6. இதே போல மலர்தல் என்னும் உருவகச் சொல்லும் விளக்கமுறுதல் என்னும் பொருளில் வழங்குகிறது.

மலர் மார்பன் -பதி. 20/2
மலர்ந்த நோக்கு -பதி. 60/7
மலர்தலை உலகம் -பதி. 88/3

7.4.7. இமைத்தல் என்னும் உருவகச் சொல் ஒளி விடுதல் என்னும் பொருளில் வழங்குகிறது.

அழல் இமைக்கும் -பதி. 3/94

7.4.8. ஏறு என்னும் உருவகச் சொல் முதற்கண் வலிவுள்ள விலங்கின் ஆண் இனத்தினைக் குறித்து வந்தது. அது மாந்தருள் வலிமை மிக்கவரையும், உயர்ந்தோரையும், அழிக்கும் ஆற்றலுடைய மழை, இடி ஆகிய இயற்கைப் பொருள்களையும் பின்னர் உணர்த்தத் தொடங்கியது.

மள்ளர் ஏறு (மன்னர்களுள் உயர்ந்தோன்) -பதி. 38/10
குட்டுவர் ஏறு (மன்னர்களுள் தலைவன்) -பதி. 90/26
புலவர் ஏறு (புலவர்களுள் சிறந்தோன்) -1/2; 6/8
பரதவர் போர் ஏறு (பரதவர்களுள் உயர்ந்தோன்) -6/44
புயல் ஏறு (ஆற்றல் மிக்க மழை) -பத். 51/28
உறு மின்ஏறு (ஆற்றல் மிக்க இடி) -பத். 601-63

7.4.9. நீந்து என்னும் சொல் நீரைக் கடத்தல் என்னும் பொருளில் வழங்கிய ஒன்று ஏனைய அரிதிற் கடத்தல் எல்லாவற்றிற்கும் வழங்குகின்றது.

வரை நீந்தி -பத். 6/57
குன்றம் நீந்தி -நற். 2/2-6
மணல் நீந்தி -நற். 183/3

சுரம் நீந்தி -அகம். 103/10
பனியிருள் கங்குலும் தமியள் நீந்தி -அகம். 103/10
விழுமம் நீந்துமோ -அகம். 170/13-14

7.4.10. அமுதம் என்னும் சொல் உணவு என்னும் பொருளில் பயின்று வழங்குகிறது. கடலில் விளையும் உப்பைக் கடல் விளை அமுதம் என்பர்.

(நற். 88/4; அகம். 169/6)

7.4.11. உழவுத் தொழில் என்பது நிலத்தில் உழுது உண்டு வாழும் தொழிலுக்கு வழங்கும் சொல்லாகும். இதனை ஏனைய தொழில்களுக்கும் சிறப்பு அடை கொடுத்து வழங்கியுள்ளனர்.

வில்லேர் உழவர் (அரசர்) -நற் 3/5, புறம் 371/13
புலன் நா உழவர் (புலவர்) -கலி. 68/4
வாளேர் உழவன் (வீரன்) -புறம். 368/13
படையேர் உழவன் (வீரன்) -பதி. 14/17
வானம் வேண்டா உழவு (உப்புத் தொழில்)
நற்.-254/11; 331/1
வானம் வேண்டா உழவு (வழிப்பறி) -அகம். 193/2;
-பதி. 15/12

7.4.12. வித்துதல் என்னும் சொல் உழுதொழிலோடு தொடர்புடையதாகும். விதை விதைத்தல் என்னும் பொருளை யுடைய இச் சொல் புலவர்களின் அறிவுரை கூறப்படுதலுக்கும் வழங்குகிறது.

வள்ளியோர் செவி முதல் வித்தி -புறம். 206/2

8. ஆக, சங்க இலக்கிய உருவகங்கள் இந் நால் வகை நிலையில் ஆராய இடந் தருகின்றன. இவை தற் சார்பால் அமைந்த பிரிவுகளாகும். வேறு வகையாகவும் இவற்றின் அடிப்படைகள் ஆராய இடந் தரலாம். எனினும் பிற்காலத்துப் பிரிவுகளைக் கொண்டு ஆராயும் பொழுது சங்க இலக்கிய உருவகங்கள் பெரிதும் வாய்ப்பு அளிக்கவில்லை. இவ் உரு வகங்கள் இயல்பாக அமைந்தனவே அன்றிச் செயற்கையாகக் கற்பனை ஆற்றலால் படைக்கப்பட்டவை அல்ல என்பது தெரிகிறது. வலிந்து உருவகிக்கும் இயல்பு யாண்டும் காணப்பட வில்லை என்பதும், மரபு வழியாகப் போற்றப்பட்ட உருவகங் களே இடம் பெற்றன என்பதும் தெளிவாகின்றன.

# 4. உவமையின் சொல்லியல் மரபுகள்

*1.* சங்க கால உவமைகளில் ஒரு சில சொல்லியல் மரபுகள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:

1. பிறழ்வுபட உணர்தலாகக் கூறல்
2. துணைப்புணர் உத்தி
3. வாழ்த்தியல் மரபுகள்
4. எண்ணியல் மரபுகள்
5. சொற்பொருள் மாறல்
6. மிகைபடக் கூறல்
7. இயல்படக் கூறல்
8. சார்த்திக் கூறல்
9. சொற்றொடர் பயில்வு

இவை சங்க இலக்கிய உவமைகளுள் காணப்படும் சிறப்பியல்புகளாகும். உவமைகளைக் கூறுமிடத்து எடுத்தாளப் பெற்ற உத்திகளாக இவற்றைக் கருதலாம்.

## *1.1.* பிறழ்வுபட உணர்தலாகக் கூறுதல்

ஒரு குறிப்பிட்ட பொருள் பிறழ உணரப்படுவதாகக் கூறப்படுகிறது. பூத்த வேங்கை புலியைப் போல் காட்சி அளிக்கிறது என்று நேரிடையாகக் கூறாமல் யானை வேங்கை மரத்தைப் புலி எனப் பிறழ உணர்ந்து அதனைத் தாக்குகிறது என்று கூறப்படுகிறது.[1] இங்குப் பிறழ உணர்தல் என்னும் உத்தி கையாளப்படுகிறது. இவ் உத்தி மற்றும் பல இடங்களில் பல்வேறு வகையான காட்சிகளில் அமைக்கப்படுகிறது. இவ் உத்தியை இருவகையாகப் பிரித்துக் காட்டலாம். ஓசையில் பிறழ உணர்தல்; வடிவில் பிறழ உணர்தல்.

*1.1.1.* பெண்ணின் குரலைக் கிளியாகவும்[2] வண்டின் ஒலியை யாழிசையாகவும்,[3] யாழிசையை வண்டின் முரல்

1. கலி. 49/1-9; அகம் 12/11-12; 228/10-12.
2. நற். 14?/5; 209/5-6; குறு. 291/1-4; ஐங். 289/1.
3. நற் 244/3-4; அகம். 88/9-12.

வாகவும்[1], பறவைகளின் ஆர்ப்புத் தேரின் மணியோசை யாகவும்[2], பாடகரின் இசைக்கருவி ஓசை கோடைக் காற்றின் இரைச்சல், இடியோசை, தயிர், மத்துக் கடைதல் ஆகிய இவை தனித்தனியே புலியின் உறுமலாகவும்[3], முரசு ஒலி மழையும் இடியுமாகவும்[4] கோடைப் பெருங்காற்று மந்தியின் குரலாக வும்[5], புலியின் உறுமல் மழையொலியாகவும்[6] பிறழ உணரப் படுகின்றன. இவ் எடுத்துக்காட்டுகள் அனைத்தும் ஓசை பற்றி அமையும் பிறழ உணர்தலின் பாற்படும்.

1.1.2. உருவமும் நிறமும் ஆகிய வடிவுபற்றிப் பிறழ உணர்தல் ஒரு சில கூறப்படுகின்றன. நாவல் பழத்தை வண்டாகவும்[7]. வண்டை நாவற் பழமாகவும்[8], பெண்ணின் பசலை நிறம் பீர்க்கம் பூவாகவும்[9], பெண்ணின் கண்கள் பூக்களாகவும்[10], வரிவண்டுகள் புலியாகவும்[11], மலைப்பாறைக் கற்கள் யானையாகவும்[12], யானைகள் பாறைக் கற்களாகவும்[13], உதிரும் மரா அம் பூவும் கானல் நீரும் மழையாகவும்[14], முழவு பலாப்பழமாகவும்[15], சங்கின் தோற்றம் அன்னமாகவும்[16], வான்மதி தேன் இறாலாகவும்[17], ஊறாதுகை விடப்பட்ட கிணறு யானை படுகுழியாகவும்[18], கயிறு பாம்பாகவும்[19], நீர்நிலையில் விழுந்த பொன்நகை சிரால் என்னும் பறவை விரும்பித் தேடும் இரையாகவும்[20], தேன் குடிநீராகவும்[21], ஆமையின் முதுகு கல்லாகவும்[22], ஓமை நொச்சி இவற்றின் வெட்டுப்பட்ட இடங் களும் காந்தள் முகையும் குருதி படிந்த ஊனாகவும்[23] கருதப்

1. பத். 4/181-183. 2. நற். 177/4ட 287/9-11; கலி. 126/6-7.
3. கருவி ஓசை-பதி 41/5-10; வலி-அகம் 249/14-18; இடி-அகம்இ 232/1-5; மத்து-பத். 4/156.
4. பதி. 90/41-42. 5. அகம். 121/13-15.
6. நற். 344/9-12. 7. நற். 35/2-6.
8. நற். 277/2-6. 9. நற். 277/6-8.
10. கலி. 92/30-31ட அகம். 371/11-14. 11. நற். 249-1-7.
12. ஐங். 239/1-2. 13. குறு. 36/1-2.
14. மராம்பூ-அகம். 199/3. கானல்-அகம் 241/9-11.
15. புறம். 128/1-5. 16. ஐங். 106/2-3.
17. கலி. 39/8-10. 18. அகம். 21/22-26.
19. அகம். 68/5-7. 20. பத். 4/311-315.
21. பத். 8/189-191. 22. புறம். 379 3-5
23. ஓமை-அகம் 397/10-13ட நொச்சி-புறம் 271/5-8. காந்தள்-பத். 147.

பட்டன. இவை அனைத்தும் வடிவு பற்றிப் பிறழ உணர்ந்த செய்திகளாகும்.

மேலே காட்டிய சான்றுகள் அனைத்தும் பிறழ்வு பட உணர்தலாகக் கூறல் என்னும் உத்தியின் அடிப்படையைக் கொண்டு விளங்குகின்றன. இத்தகைய சான்றுகள் மிகுதியாகப் பயில்வதால் பிறழ உணர்தலாகக் கூறுவது உவமைகளைப் புணர்த்துவதில் ஓர் உத்தியாகச் சங்க இலக்கியத்தில் கையாளப்பட்டது என்று முடிவு செய்யலாம்.

## 1.2. துணைப்புணர் உத்தி

மேற்காட்டிய உத்தியே அன்றி மற்றோர் உத்தியும் இவ் உவமைக்குள் காணப்படுகிறது. நேராக உவமையையும் பொருளையும் உவமைப்படுத்திக் கூறாமல் அடுத்தடுத்து வைத்துக் குறிப்பாக உவமையும் பொருளுமாக இயைக்கின்ற நிலையை உண்டாக்க முடிகிறது. இதனைத் துணைப்புணர் உத்தி என்று கூறலாம். இது முன்னையதைப் போன்று பயில்வு பெறும் உத்தி என்று கூறுவதற்கில்லை. பரிபாடலில் மட்டும் இவ் உத்தி கையாளப்படுகிறது.

**1.2.1.** இயற்கையையும் கலை நிகழ்ச்சிகளையும் அடுத்தடுத்து வைத்து ஒன்று மற்றொன்றுக்கு உவமை யாகின்றது என்று கூறாமல் ஒன்று மற்றொன்றனோடு மாறு கொண்டு போட்டி இடுவதாகப் பரிபாடல் கூறுகின்றது. அவை ஒன்று மற்றொன்றுக்கு உவமையாகின்றது என்பது ஆசிரியர் தரும் குறிப்பாகும். யாழ் வண்டின் ஒலியோடும், குரல் வண்டின் மற்றோர் இனத்தோடும், முழக்கிசை நீர் வீழ்ச்சியின் ஓசை யோடும், விறலியின் அசைவு பூங்கொடியின் அசைவோடும், பாடினியின் பாடல் மயிலின் அகவல் ஓசையோடும் இணைக்கப்படுகின்றன. இவை ஒன்றோடு ஒன்று மாறு கொண்டு இசைப்பதாக வருணிக்கப் படுகிறது.[1] இதே போன்ற கருத்தும் அமைப்பும் மற்றோர் இடத்திலும் இடம் பெறு கின்றது.[2]

## 1.3. வாழ்த்தியல் மரபுகள்

புலவர்கள் அரசர்களை வாழ்த்திய போது ஒரு சில சொல்லியல் மரபுகளை மேற்கொண்டு வந்தனர். அவர்கள்

1. பரி. 17/9-21.  2. பரி. 22/36-44

நீண்ட புகழ்மிக்க வாழ்வைப் பெற வேண்டும் என்பது அவர்கள் வாழ்த்துரையாகும். அப்புகழ்மிக்க நீண்ட வாழ்க்கைக்கு ஒரு சில வழக்கமான பொருள்கள் உவமைப்படுத்தப் பட்டன. உயர்ந்த மலைகளாகிய இமயமும், பொதிகையும், சேர நாட்டைச் சேர்ந்த அயிரையும் அவர்கள் நீண்ட வாழ்க்கைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளன.

*1.3.1.* அரசர்களின் புகழ் பெற்ற நிலைபேறான வாழ்க்கைக்கு ஞாயிறும் திங்களும் உடன் இயைத்தும்[1] தனித்தும்[2] உவமையாகக் கூறப்பட்டன.

*1.3.2.* அவர்கள் முந்தையோர்களைப் போலவே சிறந்து புகழ் பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்ற மரபும் எடுத்து ஆளப்பட்டுள்ளது.[3] ஒரே ஓர் இடத்தில் மட்டும் அரசன் ஒருவன் சிவபெருமானைப் போல நிலைத்த வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று வாழ்த்தப்படுகின்றான்.[4]

*1.3.3.* அரசர்கள் எல்லையற்ற நாள்கள் பெற்று நீண்ட ஆயுள் உடையவர்களாக வாழ வேண்டும் என்று வாழ்த்தப் பட்டனர். அந்த நீண்ட வாழ்க்கையைக் குறிக்க ஒரு சில எண்ணிக்கை மரபுகள் மேற்கொள்ளப்பட்டன. அவர்கள் மழைத் துளிகளைப் போலவும்,[5] மணல் பெருக்கைப் போலவும்,[6] நெல் குவியலைப் போலவும்[7] விண்மீன்களைப் போலவும்[8] வாழ வேண்டும் என்று வாழ்த்தினர். கபிலர் என்னும் புலவர் பரிசிலாகப் பெற்ற ஊர்களும் எண்ணிக்கைப் பொருளாக வாழ்த்தியல் மரபில் குறிக்கப்பட்டுள்ளது.[9]

*1.3.4.* இவ் எண்ணிக்கை உவமைச் சொற்கள் இடத் தோடும், குறிப்பிட்ட சூழ்நிலையோடும் தொடர்பு படுத்தப்

1. புறம். *2/24-25; 166/32-34; 2/24-25;* பதி. *6/20-26; 9/18-19*
2. புறம். *6/27-29; 56/23-5;* பத்-*6/768-70, 81.*
3. ஞாயிறு-பதி *88/38-39;* திங்கள்-பதி. *90/17-18;* புறம். *396/26-29*
4. பதி. *14/20-22; 85/10-13*
5. புறம். *91/5-7.*
6. பதி. *55/12-16; 21,* புறம். *198/18-23; 367/16-18 385/10-12.*
7. புறம். *198/18-23.*
8. புறம். *387/28-36.*
9. புறம். *37/24-25; 367/116-18.*
10. பதி. *86/10-13.*

பட்டன. இஃது அக்காலப் பொது மரபாகிய சார்த்திக் கூறல் என்னும் தன்மையோடு ஒத்து அமைவதாகும். உவமச் செய்திகள் இடத்தோடும் பொருளோடும் தொடர்புபடுத்திக் கூறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*1.3.4.1.* சில குறிப்பிட்ட ஆறுகளின் மணலும் கடல் துறை மணலும் வாழ்த்தியல் மரபுக்கு உவமையாகக் கூறப் பட்டன. காஞ்சிப் பெருந்துறை[1], பஃறுளி ஆறு[2], காவிரி[3], பொருநை[4] முதலிய ஆறுகளும் செந்தில் கடற்கரைத் துறை[5] துறையூர் முன் துறை[6] ஆகிய துறைகளும் குறிக்கப்படுகின்றன. பொருநை ஆற்றுக் கரையோரத்தில் உள்ள நிலங்களில் விளை யும் நெற்கதிர்களும்[7], வேங்கடம்[8], இமயம்[9] ஆகிய இடங்களில் பெய்யும் மழையும் உவமைகளாக இடம் பெறுகின்றன.

## *1.4.* எண்ணியல் மரபுகள்

அரசர்களை வாழ்த்துவதற்காக மேற் கூறப்பட்ட பொருள் கள் உவமைகளாகக் கூறப்பட்டன என்பது அக்காலச் சொல்லியல் மரபாக விளங்கியது. மற்றும் இவ் எண்ணிக்கை மரபு இவ் உவமைகளுக்கு மட்டுமின்றி ஏனைய பிற துறைகளுக்கும் பயன்பட்டன என்பது தெரிகின்றது. இதே எண்ணிக்கை அளவால் மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்ட தேர்களும்[10] யானைகளும்,[11] குதிரை களும்[12] குறிக்கப்பட்டன. இவ்வுலகத்தில் பிறந்து வாழ்ந்தோரின் எண்ணிக்கை கடல் மணலினும் விண்மீனிலும் மிக்கது[13] என்று கூறுப்படுகிறது, எதிரிகளை வென்று கொண்டு வந்த வேல்களும் புலவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைப் பொருளாகிய யானைகளுக்கு உவமையாயின.[14] பெண்ணின் கண்ணீர் வெதிர மலையின் மழைத்துளிகளுக்கு உவமைப் படுத்தப்பட்டது.[15] நட்பு நீண்ட காலம் நிலைபெறுக என்னும் வாழ்த்துச் சேர நாட்டுப்

---

*1.* பதி. *48/17-18.*
*2.* புறம். *9/8-13.*
*3.* புறம். *43/21-23.*
*4.* புறம். *387/38 33-36.*
*5.* புறம். *55/17-2.*
*6.* புறம். *136/25-27.*
*7.* புறம். *387/28, 33-36.*
*8.* புறம். *385/10-12.*
*9.* புறம். *37/20-23.*
*10.* புறம். *123/5-6.*
*11.* புறம். *129/5-9.*
*12.* புறம் *42/14-15; 22-23.*
*13.* புறம். *363/2-5;* பத். *6/235-237; 10/553-556;* குறு. *44/3-4.*
*14.* புறம். *130/5-7.*
*15.* புறம். *277/5-6.*

பெருந்துறை என்ற கரையோர மணலுக்கு உவமிக்கப் பட்டுள்ளது. தலைமகள் தன்னைப் பல்காலம் முயங்க வேண்டும் என்று கூறும் தலைவனும் அவள் முயக்கத்திற்குப் பொருநை நதியின் மணலை உவமைப் படுத்துகின்றான்.[1] பகைவரின் போர்க்களத்தில் கொல்லப்பட்ட யானைகள் விண் மீன்களிலும் மழைத்துளியிலும் மிகுதியாகும் என்று கூறி யுள்ளார்.[2] சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களும் அடுக்கி உவமைகளாகக் கூறப்படுகின்றன. கடலின் நீர்த் துளிகளும், கடற்கரை மணலும், மழைத்துளியும் ஒன்றாகக் கூட்டி எண்ணிக்கை அளவாகக் கூறப்படுகின்றது.[3] வானத்து விண்மீன்களும் மழைத்துளிகளும் ஒன்றாகக் கூட்டி உரைத்து அவற்றை எண்ணிக்கை அளவாகவும் கூறியுள்ளனர்.[4]

*1.4.1.* வரையறைக்கு உட்படாத மிக்க அளவுகள் மேற்கூறப்பட்ட பொருள்களின் தொகுதியால் கூறப்பட்டன என்பது அக்காலச் சொல்லியல் மரபாகக் கொள்ளக் கிடக் கின்றது. அவை உவமைகளாக நின்று எண்ணிக்கையை உணர்த்தத் தொடங்கின. இப்பொருள் ஒரு சில இடத்தோடும் மன்னர்களோடும் தொடர்புபடுத்திச் சுட்டப்பட்டன என்பது மேலே காட்டிய சான்றுகளால் தெரிய வருகிறது.

## 1.5. சொற்பொருள் மாறல்

ஒரு பொருளை இயல்பாக உணர்த்தும் சொல் அப் பொருளை உணர்த்தாமல் அதனோடு தொடர்புடைய மற்றொரு பொருளை உணர்த்துவது ஆகு பெயரின் இலக் கணம் என்பர். அவற்றுள் உவமை ஆகு பெயரும் ஒன்றாகும், இதனை உவமைச் சொல்லியல் மரபினையொட்டிச் சொற் பொருள் மாறல் என்னும் உத்தியாகக் கூறலாம்.

*1.5.1.* காளை என்பது எருதை உணர்த்தும் சொல்லாகும். அஃது அஞ்சாமல் எதிர்த்துப் போரிடும் தறுகண்மையை உடைய வீரனை உணர்த்துகிறது. புறப் பொருள் பாடலில் வீரனையும், அகப்பொருள் பாடலில் பாட்டுடைத் தலை வனையும் உணர்த்தும் சொல்லாக வழங்குகிறது.[5] இச்சொல் சங்க இலக்கியத்தில் பயின்று வருகிறது.

1. அகம். 93/16-23
2. புறம். 302/9-11
3. புறம். 198/18-23
4. புறம். 367/16-18.
5. நற். 184/2; 271/4; 293/9; பரி. 8/86; 11/46; அகம். 221/6; புறம். 303/3; 308/2; 334/11; பத். 7/182

## 1.6. மிகைபடக் கூறல்

உள்ளதை உள்ளவாறு கூறி அழகுபடக் கூறுவதைத் தன்மையணி என்பர். உவமைகளும் மிகப் பொருத்தமாக மிகுதிப்படுத்தாமல் கூறுவதைத் தன்மை உவமை அணி என்று கூறலாம். பொதுவாகச் சங்க இலக்கியத்தில் உயர்வு நவிற்சி மிகுதியாக இல்லை என்னும் கருத்து உள்ளது. எனினும் ஒரு சில உயர்வு நவிற்சிகளும் இல்லாமல் இல்லை. இவ் உயர்வு நவிற்சிக்கு வியப்பு, அவலம், கற்பனை காரணம் ஆகின்றன. மிகுதிப்படுத்திக் காண்பதில் ஒரு தனி அழகைக் காண்கின்றனர். உவமை எப்பொழுதும் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு உயர்ந்த தாக உடைய பொருளைக் கூறும் பொழுது சிறிது மிகைப் படுத்தியும் கூறுவது இயல்பாகி விடுகிறது. யானையை மலைக்கும், போர்ப் படையைக் கடலுக்கும், உயர் கட்டடங்களை வானத்துக்கும், மனிதர்களின் பண்புகளை ஐம்பெரும் பூதங்களாகிய வான், மண், நீர், தீ, காற்று முதலிய வற்றிற்கும் உவமைப்படுத்துவதில் மிகைபடக் கூறல் இயல்பாக அமைகிறது. இவை தவிர்க்க முடியாத உயர்வு நவிற்சிக் கூற்று களாகும். இவை மிகுதியாக இவ்உவமை வழக்குகளில் பயின்று வருவதால் அவை உயர்வு நவுற்சியாகக் காணப்படுவது இல்லை. அவை இயல்பு வழக்குகளாக அமைந்துவிட்டன.

*1.6.1.* இவையே அன்றி ஒரு சில கூற்றுகள் உயர்வு நவிற்சி நன்கு வெளிப்படும் வகையில் மிகைப்பட்ட உவமை களைத் தாங்கியுள்ளன. அவை அவர்கள் கற்பனைத் திறனைக் காட்டுகின்றன. சோறு வடிக்கப்பட்ட கொழுங்கஞ்சி ஆறு போலப் பரந்து ஒழுகியது என்று மிகைப்படக் கூறல் உயர்வு நவிற்சிக் கூற்றாகும்.

சோறு வாக்கிய கொழுங்கஞ்சி
ஆறு போலப் பரந்தொழுகி. - பத். 9/4-15

இவை வியப்பின் காரணமாகவும், பாராட்டும் உள்ளத்தின் காரணமாகவும் மிகுதிபடக் கூறப்பட்ட ஒன்று ஆகும்.

*1.6.2.* மிகுதிபடக் கூறுதலுக்குக் கற்பனையும் வியப்பும் காரணமாதலோடு உணர்வு மிகுதியும் காரணம் எனலாம். பொதுவாகத் துன்பத்தை மிகுதிப் படுத்திச் சொல்லுதல் மனிதன் இயல்பு ஆகும். கண்களில் பெருகிய நீர் குளம் போலப் பரந்து

ஒழுகியது என்று கூறப்படுகிறது. இக்கூற்று நம் உள்ளத்தைத் தொட்டு அவல உணர்வில் ஆழ்த்துகிறது.

ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
பெருங்குளம் ஆயிற்று என் இடைமுலை நிறைந்தே.
-குறு. *325/4-5*

*1.6.3.* "எனக்குப் பற்றுக் கோடாகிய என் தலைவன் எங்கே இருக்கிறான்? அவனுடைய நினைவு என்னைக் கண்களில் நீர் பெருகச் செய்கின்றது. கண்ணீர் பெருங்குளம் போல் அமைந்துவிட்டது" என்று கூறப்படுகின்றது. இக் கருத்து அகநானூற்றில் வருகின்றது.

அறுகுளம் நிறைக்குந போல அல்கலும்
அழுதல் மேவல ஆகி. -*11/13-14*

*1.6.4.* கண்களில் துன்பத்தால் பெருக்கும் கண்ணீர் வெம்மையை உடையது. வெமமையை ஆற்றுவதற்கே கண்ணீர் பெருகுவது இயற்கை. கண்களில் பெருகும் நீர் கண்ணைத் தீய்த்து விடுவது போன்ற சூட்டைத் தாங்கியுள்ளது என்று கூறப்படுகிறது. மேலே மூடித்திறக்கும் மெல்லிய இமைகள் தீய்ந்து விடுவதைப் போலக் கண்ணீர் வெம்மை பெற்று விளங்குகிறது என்றும் கூறப்படுகிறது.

இமை தீய்ப்பன்ன கண்ணீர். -குறு. *4/2*

*1.6.5.* தலைமகள் ஒருத்தியின் கண்கள் நீரில் நீந்திச் செல்வதாகக் குறிப்பிடுவது அழகிய சொல்லோவியமாக அமை கின்றது.

நீர் நீந்து கண்ணாள். -கலி. *121/9*

*1.6.6.* கற்பனையும் உணர்வும் மிக்க கூற்று ஒன்று சிறந்த உருவகத்தைத் தாங்கியுள்ளது. கடல் போன்ற பெருக்கை யுடையது கண்ணீர் என்று கூற வேண்டிய உவமையைக் 'கண்ணீர்க்கடல்' என்று கூறுகின்றார். இக்கண்ணீர்க் கடலுள் முழுகி நீர்த் துளியைத் தாங்கித் தலைமகன் முன்னால் மழைத் துளியாக மேகமே நீ வீசக் கூடாதா என்று கூறும் தலைவியின் கூற்று உருவக அழகும், கற்பனை நயமும், உணர்ச்சிப் பெருக்கும், உயர்வு நவிற்சியும் மிக்கதாக விளங்குகின்றது எனக் கூறல் மிகையாகாது.

கண்ணீர்க் கடலால் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து. -கலி. 145/21-22

இவை பிரிவின் காரணமாக ஏற்பட்ட துன்பத்தை உயர்வு நவிற்சிபடத் தீட்டும் சிறந்த சொல்லோவியங்களாகும்.

## 1.7. இயல்புபடக் கூறல்

மேல் காட்டியவாறு உணர்வின் பெருக்கால் உள்ளத்தை வியப்பில் ஆழ்த்தத் தக்க உயர்வு நவிற்சிகள் ஆங்காங்கு ஒருசிலவே அமைந்துள்ளன. உள்ளதை உள்ளவாறு சித்திரிக்கும் தன்மை நவிற்சி அணிகளே மிகுதியாக வழங்கியுள்ளன. உயர்வு நவிற்சிகள் உணர்வுப் பெருக்கால் உயர்வு பெறுகின்றன என்று கொண்டால் தன்மை அணிகள் அவற்றின் இயல்புபடக் கூறும் நுட்ப அழகால் சிறப்புப் பெறுகின்றன. ஒன்றைப் போல ஒன்று நிகர்க்கும் பொருத்தத்தைக் கண்டு உவமை கூறும்பொழுது அப்பொருத்தமே ஒரு தனிச்சிறப்பு ஆக அமைகிறது. இன்ன பொருள் இன்ன பொருளை நிகர்க்கும் என்று கண்டு அறிந்து கூறும் பொழுது அதுவே ஒரு புதிய கண்டுபிடிப்பாக அமைகிறது. விஞ்ஞானிகள் காணும் விஞ்ஞான உண்மையைப் போல அக் கலைஞர்களின் காட்சி விளங்குகிறது. வருணிக்கப்படும் பொருள்களைக் கவிஞன் எவ்வாறு சுவைக்கின்றான் என்பது இத்தன்மை நவிற்சி வருணனையில் காணப்படுகிறது.

*1.7.1.* இவற்றுள் சில மரபுவழி பின்பற்றப்படுவதாகும் ஒரு சில அப்புலவர்களின் தனிக் காட்சிகளாக அமைகின்றன. இங்கே சிறப்பாகப் பறவைகளும் விலங்குகளும் செடிகொடி வகைகளும் உவமைப் படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒருசில எடுத்துக்காட்டுகள் கீழே தரப்படுகின்றன.

*1.7.1.1.* கயல்மீன் கண்ணுக்கும்,[1] கெண்டை மீன் கண்ணுக்கும்[2] அரவுப்பல் குராலின் முகைக்கும்[3] முதலை மேந்தோல் ஓமைக்கும்[4] நண்டின் பார்ப்புத் தினையரிசிக்கும்[5] மீன் சினை வெண்மணலுக்கும்,[6] மீன் முள்ளிச் செடிக்கும்,[7] இறவுச்சினை

1. நற். 220/9; 316/3; குறு. 250/5; 398/3; ஐங். 36/4; பரி. 21/48; 22/29; கலி. 53/10-11; 1.7/8; 145/5; அகம். 129/19; 140/10; 169/12; 313/4.
2. பரி. 16/40.
3. அகம். 237/3.
4. அகம். 3/1-2.
5. பத். 4/167-168.
6. அகம். 286/3.
7. அகம். 26/1-2.

உடகாய்க் கனிக்கும்,[1] சுறாமீன் தாழைக்கும்,[2] மான் செவிமூங்கில் முளைக்கும்,[3] அணில்வரி வெள்ளரிக் காய்க்கும்,[4] வேப்பம் முகை நண்டின் கண்ணுக்கும்,[5] நொச்சி அரும்பு நண்டின் கண்ணுக்கும்,[6] நெய்தல் இலை யானைக் கன்றின் செவிக்கும்,[7] தாமரை இலை யானைச் செவிக்கும்,[8] தாமரை இதழ் முயற் செவிக்கும்,[9] தினை அடி நாரையின் காலுக்கும்,[10] முள்ளை யுடைய தாழை சுறவுக்கும்,[11] மஞ்சள்புறம் இறாலுக்கும்,[12] நெல்லிக்காய் முயற்கண்ணுக்கும்,[13] ஆம்பல்பூ குருவிச் சிறகிற்கும்,[14] பூளைப்பூ வெருகு மயிர்க்கும்,[15] இருப்பைப் பூ இறாலுக்கும்[16], பனைச்செதில் முள்ளம் பன்றிக்கும்[17], குன்றி மணி எலிக்கண்ணுக்கும்[18], நாய்நா பெண்ணின் அடிக்கும்[19], யானை வாய் நாஞ்சிலுக்கும்[20] யானை அடி புலியின் அடிக்கும்[21] பசித்த யானையின் கண் வற்றிய சுனைக்கும்[22], பாசிவேர் கூந்தல் துணிக்கும்[23], காந்தள் முகை மெல்லிய விரலுக்கும்[24], பனைநுங்கு சுனைக்கும்[25], நெருப்பு பன்றியின் கண்ணுக்கும்[26], முறம் யானையின் செவிக்கும்[27], உரல் யானை யின் அடிக்கும்[28], துடி யானைக் கன்றின் அடிக்கும்[29], முழவு பலாப்பழத்திற்கும்[30], மாரி மொக்குள் முயற் கண்ணுக்கும்[31], துடுப்பு மகளிர் கைக்கும்[32], நீர்ச்சுழி மகளிரின் கொப்பூழ்க்கும்[33], பருந்தின் சிறகு கிழிந்த ஆடைக்கும், கிளியின் வாய் மகளிர்

---

1. குறு. 274/1-2.
2. நற். 19/2; 131/4-5.
3. கலி. 43/16.
4. புறம். 246/4.
5. ஐங். 30/1; அகம். 176/8.
6. நற். 267/1-2.
7. நற். 47/3-4.
8. குறு. 246/2; அகம். 176/4; 186/3-6.
9. பத். 4/114-115
10. குறு. 25/3.
11. நற். 19/2; 131/4-5.
12. நற். 10/1-2.
13. அகம். 284/1-2.
14. குறு. 46/1/2.
15. அகம். 297/12-16
16. நற். 111/1-2. 83 அகம். 277/7-8.
17. அகம். 133/1.
18. நற். 252/10-11; பத். 2/42; 3/17-18.
19. பத். 4/199.
20. அகம் 155/11-16.
21. அகம். 321/1-2.
21. பத். 2/1-4; 4/468-469.
22. நற். 355/2.
23. கலி. 108/40-41.
24. அகம். 84/6.
25. நற். 376/1
26. பதி. 43/3; கலி. 13/6
27. பத். 2/128.
28. புறம். 236/1.
29. புறம். 333/1-3.
30. கலி. 59/4.
31. பத். 2/37.
32. பதி. 12/19-20; புறம். 150/1-
33. பத. 2/34

உகிருக்கும்[1], மயிலடி நொச்சி இலைக்கும்[2], சிரல் பறவையின் வாய் தளவுக்கும்[3], கொக்கு ஆம்பல முகைக்கும்[4], கொக்கு ஆம்பல் மலருக்கும்[5], கொக்கின் உகிர் நிமிரல் என்னும் அரிசிக்கும்[6], கொக்கின் சிறகு ஆம்பல் இதழ்க்கும்[7], குயிலின் கண் உகாய்க் காய்க்கும்[8], புறாவின் புறப்பகுதி உகாயின் மென்காய்க்கும்[9], புலியினது கண் புதிய தட்டில் இடப்பட்ட வெப்பமான உணவுக்கும்[10], புலியின் புறவடி வாழைக் குலைக்கும்[11], முயலின் செவி ஆம்பல் இலைக்கும்[13], அணிற் பல் முண்டகத்திற்கும்[12], வெருகுப் பூனையின் விழி முலை யிடை தவழும் முத்துக்கும்[14], மான்குளம்பு அடும்புக்கும்[15], யானைச்செவி தாமரை இலைக்கும்[16] உவமப்படுத்தப் பட்டுள்ளன.

*1.7.2.* இவ் எடுத்துக்காட்டுகள் பலவும் அவர்கள் உள்ளதை உள்ளவாறு எடுத்துக்காட்டும் தன்மை உவமை யணியின் சிறப்பினைக் காட்டுவதற்காகத் தரப்பட்டுள்ளன. இவை பெருகிய வழக்கு ஆகும். இவ்வாறு நுணுகி எதனையும் கண்டு அதனை நினைவில் வைத்துக் கொண்டு தாம் சொல்ல விரும்பும் பொருள்களோடு தொடர்புபடுத்தி அமைத்தல் சங்க இலக்கிய உவமைகளின் சிறப்பியல்பாகும்.

### 1.8. சார்த்திக் கூறல்

வருணிக்கும் பொருள்களும் இயல்புகளும் காலத்தோடும் இடத்தோடும் இயைத்துக் கூறுவது சங்க இலக்கியத் தன்மைகளுள் ஒன்றாகும். அதைப்போல உவமைகளில் கூறப்படும் செய்திகளும் பொருள்களும் காலத்தோடும் இடத்தோடும் தொடர்புபடுத்தல் சங்க இலக்கிய உவமைகளின் சிறப்பியல்புகளுள் ஒன்று ஆகும். சில பொருள்கள் சில ஊர்களோடும் காலத்தோடும் சேரும் பொழுதே அவை உயர்வு பெறுகின்றன. கொற்கை முத்தும், கொல்லிப் பாவையும்,

1. நற். 115/5; 305/2; குறு. 138/3.
2. நற். 61/8.
3. நற். 230/2-3; 280/1-2. குறு. 122/-2
4. குறு. 117/1; 122/-2.
5. நற். 258/6; புறம். 395/36; புறம். 398/25.
6. குறு. 122/1-2
7. அகம். 293/4-9.
8. குறு. 274/1-2.
9. புறம். 269/4.
10. கலி 43/24-25.
11. நற் 230/1.
12. குறு 49/1.
13. அகம். 73/3-5.
14. குறு. 243/1-2.
15. அகம். 176/4.

பறம்பு மலையின் பனிச்சுனையும், இமயத்து மழையும், தைத்திங்களில் நிறையும் நீர்நிலைகளும், விடியலில் மலரும் பூக்களும் பயின்ற உவமைகளாக வருகின்றன. முத்து அதனைச் சார்ந்த கொற்கையாலும், பாவை கொல்லி என்னும் ஊராலும், பனிச்சுனை பாரியின் பறம்பாலும், மழை இமயத்தாலும், நீர்நிலைகள் தை மாதத் தொடர்பாலும், மலரும் பூக்கள் விடியற் பொழுதாலும் சிறப்புப் பெறுகின்றன.

### 1.8.1. காலத் தொடர்பு பெற்ற உவமைகள்

விண்ணின் மீனும், வானத்து மதியும், விடியல் வானமும், நெய்தல் மலர்ச்சியும் வைகறையோடு தொடர்பு பெறுகின்றன.

#### 1.8.1.1. வைகறை மீன்

1. கோங்கின் மெல்லிதழ்க் குடைப்பூ
வைகுறுமீனின் நினையத் தோன்றி. -குறு. 48/3-4

2. நெய்யுமிழ் சுடரில் கால்பொரச் சில்கி
வைகுறு மீனில் தோன்றும்
மைபடு மாமலை விளங்கிய சுரனே. -அகம். 17/20-22

3. ஓதிம விளக்கின் உயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனின் பைபயத் தோன்றும்
நீர்ப் பெயற்று. -பத். 4/317-9

#### 1.8.1.2. வைகறை மதியம்

வைகுநிலை மதியம் போலப் பையென்
புலம்புகொள் அவலமொடு புதுக்கவின் இழந்த
-அகம். 299/11-12

#### 1.8.1.3. விடியல் வானம்

விடியல் வியல்வானம் போலப் பொலியும்
நெடியாய். -பரி. 19/83-84

#### 1.8.1.4. நெய்தல் வைகறையில் மலர்தல்

கொற்கைப் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரி துடைய காதலி கண்ணே. -ஐங். 188/3-4.

இதில் காலம் மட்டுமே அல்லாமல் இடச் சார்பும் அமைந் துள்ளது.

1.8.2. இவ்வாறே பெரும் பொழுதுகளாகிய வேனில், மாரிப்பருவம், தைத்திங்கள், கூதிர்க்காலம், கொண்டல் பொழுது, கோடைப்பருவம் முதலியன தொடர்பு பெறு கின்றன.

1.8.2.1. வேனில் பருவத்தோடு தொடர்பு பெற்ற உவமைகள் பின்வருமாறு:

1. வேனில் முருக்கு :
வேனில் முருக்கின் விளைதுணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேய். -நற். 73/1-2

2. வேனில் ஓதி
வேனில் ஓதிப் பாடுநடை வழலை
வரிமரல் நுகும்பின் வாடி. -நற். 92/2-3

3. வேனில் பாதிரி மலர்:
வேனில் பாதிரிக் கூன்மலர் அன்ன
மயிர் ஏர்பு ஒழுகிய அம்கலுழ் மாமை. -குறு. 141/1-2

4. வேனில் புனல்:
வேனில் புனலன்ன நுந்தையை நோவார் யார் -84/8

5. வேனில் ஆனேறு:
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்ப நும்மாண் நலம் நயந்தே. -குறு. 74/4-5

6. வேனில் காலத்து அணிலின் வால்:
வேனல் வரியணில் வாலத்து அன்ன
கானயூகின் கழன்றுகு முதுவீ: -அகம். 307/4-15

7. வேனில் காலத்தும் கோங்கம் பூவின் பொகுட்டு:
வேனிற் கோங்கின் பூம்பொகுட் டன்ன
குடந்தையஞ் செவிய கோட்டெலி. -புறம். 321/4-5

8. வேனில் பருவத்துக் குயில்:
அலரே
குரவ நீள்சினை உறையும்
பருவ மாக்குயில் கௌவையிற் பெரிதே. -ஐங். 369/3-5

1.8.2.2. மாரிக் காலத்தோடு தொடர்பு பெற்ற உவமைகள் பின்வருமாறு:

1. மாரிக் கொக்கு:
மாரிக் கொக்கின் கூரலகு அன்ன
குண்டுநீர் ஆம்பல். -நற். 100/2-3.

2. மாரிக் குருகு:
அகல்வயல்
கிளைவிரி கரும்பின் கணைக்கால் வான்பூ
மாரியங் குருகின் ஈரிய. -அகம். 235/11-13

3. மாரிக் குன்றம்:
மாரிக் குன்றத்துக் காப்பாளன்னன்
தண்பனி வைகிய வரிக் கச்சினனே. -ஐங். 206/2-3

4. மாரி யானை:
ஆரம் நாறும் மார்பினன்
மாரி யானையின் வந்துநின் றனனே. -குறு. 161/4-5

5. மாரிக்காலத்து மலர்கள் : மழைக்காலத்திலேயே மலர்கள் மலர்ச்சி பெறுகின்றன. மேலும் நீர் ஒழுகும் மலர்கள் ஒரு சில உவமப்படுத்தப் படுகின்றன. மாரிக்காலத்து மலர்கள் பொது வகையாகவும் சிறப்பு வகையாகவும் உவமைகளாக அமைகின்றன.

அ. பொது: மலர்கள் பொதுவாக மகளிர் கண்களுக்கு உவமையாக வருகின்றன. மாரியால் நனையப் பெற்ற மலர், நீர் பனித்து ஒழுகும் கண்களுக்கு உவமையாக வந்துள்ளது.

மாரி மலரின் கண்பனி வருமே. -ஐங். 19/5

மகளிர் கூந்தல் நாறுகின்ற சிறப்பைக் கொல்லி மலையில் கார்காலத்து மலர்கள் தரும் மணத்துக்கு உவமைப்படுத்தி யுள்ளனர். ஈண்டுக் காலமே யன்றி இடமும் சார்பு பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்க செய்தி ஆகும்.

பல்பழப் பலவின் பயங்கெழு கொல்லிக்
கார்மலர் கடுப்ப நாறும்
ஏர்நுண் ஓதி -அகம். 208/22-24

## ஆ. சிறப்பு

பொதுப்படையாக மழை நீரால் நனைந்த மலர்களும் மாரிக் காலத்து மலர்களும் உவமையாக அமைகின்றன. ஒரு சில சிறப்பு மலர்களும் அவற்றின் தனித்தன்மை கருதி உவமைகளாக அமைக்கப்படுகின்றன. அவை மாரிக் காலத்திலேயே மலரும் மலர்கள் என்று கருத வேண்டியுள்ளது.

### மாரிப் பித்திகம்

நீர் கலுழும் மகளிரின் கண்கள் மாரிக் காலத்தில் மலரும் பித்திகைப்பூவின் ஈரம் படிந்த இதழ்களுக்கு உவமிக்கப் பட்டுள்ளன.

மாரிப் பித்திகத்து ஈரிதழ் புரையும்
அங்கலுழ் கொண்ட செங்கடை மழைக்கண்.
-அகம். *295/17-18.*

இப்பித்திகை முகை மாரிக் காலத்தோடு நெருங்கிய தொடர்புடையது என்பது மற்றொரு சான்றாலும் புலப் படுகிறது.

மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை -குறு. *168/1*

இதே தொடர் அமைந்த செய்தி குளிர்ச்சி பொருந்திய மகளிரின் கண்களுக்கு உவ்மையாக மற்றோர் இடத்தில் வந்துள்ளது.

கார்ப் பித்திகத்து நீர்வார் கொழுமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்.
-அகம். *22/5-7*

### மாரிப் பீரம்

பீர்க்கம் பூவும் மழைக்காலத்தில் பூக்கும் பூ எனத் தெரிகிறது. மாரிக்காலத்தில் பீர்க்கம் பூவைக் கொண்டு தன் பசலை நிறத்தைத் தலைவனிடம் உணர்த்தலாம் என்று அறிவிக்கின்றாள். பசலை நிறத்திற்கு இம்மாரிப் பீர்க்கம் உவமிக்கப்பட்டுள்ளது.

இன்னள் ஆயினள் நன்னுதல் என்றவர்த்
துன்னச் சென்று செப்புநர்ப் பெறினே
நன்றுமன் வாழி தோழி நம்படப்பை
நீர்வார் பைம்புதற் கலித்த
மாரிப் பீரத்து அவர்சில கொண்டே. -குறு. *98/1-5*

**மாரி ஆம்பல்**

மாரிக்காலத்து ஆம்பல் மலரைப் போன்று கொக்கு இருந்ததாகக் கூறுப்படுகின்றது. கொக்கு மாரிக்காலத்தில் நீரால் நனைந்து காணப்படும் வடிவம் இதில் சிறப்பிக்கப்படுகிறது.

மாரி ஆம்பல் அன்ன கொக்கு. -குறு. 117/1

இக்கருத்து முழுமையும் மாற்றிக் கூறும் இயல்பு மற்றோர் இடத்தில் அமைந்து உள்ளது. மாரிக்காலத்துக் கொக்கின் கூரலகு ஆம்பல் மலருக்கு உவமப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் உவமையும் பொருளும் மாரிக்காலத்துச் சார்பு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மாரிக் கொக்கின் கூரலகு அன்ன
குண்டுநீர் ஆம்பல். -நற். 100/2-3

**மாரி ஈங்கைத் தளிரும் யாத்துத் தளிரும்**

தளிர்களுள் ஈங்கையும் யாவும் உவமைகளாக மாரியோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டுள்ளன. மாரி ஈங்கையின் கரிய தளிர் போன்ற அழகிய மாமை நிறத்தை உடையதாக மகளிர்மேனி கூறப்பட்டுள்ளது. மாரிக்காலத்து யாத்துத் தளிரும் இதே பொருளுக்கு உவமையாக வந்துள்ளது.

மாரி ஈங்கை மாத்தளிர் அன்ன
அம்மா மேனி ஆயிழை மகளிர். -அகம். 337/1-2

சாரல் யாஅத்து உயர்சினை குழைந்த
மாரி ஈர்ந்தளிர் அன்ன மேனி. -அகம். 337/1-2

*1.8.2.3.* தை மாதத்துத் தண்கயமும் பனிச்சுனையும்: தை மாதத்துத் தண்கயமும் பனிச்சுனையும் மிகக் குளிர்ந்த பொருள்களாகக் கருதப்பட்டன. தை மாதத்துத் தண்கயத்தில் மகளிர் படிந்து முழுகுதலை இன்பப் பேறாகக் கருதி வந்தனர் என்பது தெரிகிறது.

தை இத்திங்கள் தண்கயம் படியும் -நற். 80/7-9

என்ற தொடர் இக்கருத்தை வற்புறுத்துகிறது.

நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந்து உண்ணிநின பரந்த மார்பே. -ஐங். 84/3-5

என்பது உவமையாகும்.

*1.8.2.4.* கூதிர்காலத்துப் பருந்தின் சிறகு கூதிர்க் காலத்தில் பருந்தின் சிறகுகள் ஈரம் படிந்தும் விரிந்தும் கிடக்கும். அதைப் போலக் கிழிந்த கந்தல் ஆடை இருந்தது என்று கூறப்படுகிறது.

கூதிர்ப் பருத்தின் இருஞ்சிறகு அன்ன
பாறிய சிறுநோன் சிதா அர். -புறம் *150/1-2*

இதே கருத்துப் பதிற்றுப்பத்திலும் அமைந்து கிடக்கிறது. கூதிர்க் காலத்தோடு தொடர்பு படுத்தவில்லையாயினும் அக்கருத்து அதில் பொதிந்து கிடக்கிறது என்பது தெரிகிறது.

நீர்ப்படு பருத்தின் இருஞ்சிறகு அன்ன
நிலம்தின் சிதா அர் களைந்த பின்றை -பதி. *12/19-70*

## *1.8.2.5.* கொண்டல் பருவத்து அவரை

கொண்டல் என்பது கிழக்குப் பருவக்காற்று வீசும் மழைப்பருவம் ஆகும். அக்கொண்டல் மழை பெய்யும் பருவத்தில் பூக்கும் அவரைப் பூவைப் போல் வெண்மையான மேகங்கள் குன்றினைச் சூழ்வதாகக் குறிப்பிடப் படுகிறது. வெண்மேகங்கள் அவரைப் பூவிற்கு உவமைப்படுத்தப் படுகின்றன.

கொண்டல் அவரைப் பூவின் அன்ன
வெண்டலை மாமழை சூடித்
தோன்றலா னாதவர் மணிநெடுங் குன்றே.
-ஐங். *209/3-5*

*1.8.2.6.* கோடைப்பருத்தி: பருத்தி கோடையில் மிகுதியாக விளையும் என்பதும், அப்பருத்தி மூடைகளைக் கோடைக்காலத்தில் போட்டு அடைப்பர் என்பதும் தெரிகிறது கோடைப் பருத்தியின் மூடைகள் இடம் நிறைத்துக் கொள்வது உவமையாக வந்துள்ளது.

கோடைப் பருத்தி வீடுநிறை பெய்த
மூடைப் பண்டம் இடம்நிறைத் தன்ன.
-புறம். *393/11-13*

மேலே காட்டிய பொருள்கள் காலத்தால் சிறப்புப் பெற்றுள்ளன. தை மாதத்துக் குளம் குளிப்பதற்குத் தண்மையும் இனிமையும் தந்திருக்கின்றது. மாரிக் காலத்து மலர்கள் ஈரம் படிந்து விளங்கின. கிழிந்த கந்தல் ஆடைக்குக் கூதிர்க்காலத்துப்

பருந்தின் சிறகுகள் தக்க உவமையாகும். கான யூகம் என்னும் புல், வேனில் காலத்து அணிலின் நிமிர்ந்த வாலுக்கு உவமை யாகும். மாரிக்காலத்து ஆம்பல் முகை, கொக்கின் அலகுக்கு உவமையாதலும் பொருந்திய செய்தியாகும். இவ்வாறே ஏனைய உவமப்பொருள்களும் காலத்தோடு தொடர்புபடும் பொழுது அவை தனித்தன்மைகள் பெறுகின்றன. அவையே உவமையாதலுக்குப் பொருந்துவனவும் ஆகும். எனவே, காலத்தோடு சார்த்திக் கூறும்பொழுது உவமைகள் பொருத்தம் பெறுதலோடு தனிச்சிறப்பும் பெறுகின்றன.

### *1.8.3.0.* இடத்தோடு சார்த்திக் கூறல்

புலவர்கள் தாம் நேரிற் கண்ட காட்சிகளை உவமையாக அமைத்தாலும், இடத்தோடு நெருங்கிய தொடர்பும் அப் பொருள்களுக்கு இயல்பாக அமைந்திருந்தாலும், அப்பொருள் களின் சிறப்பு இடத்தோடு சார்த்திக் கூறுப்படுவதாலும் இம்மரபு அக்காலத்தில் ஏற்பட்டது. அப்பொருள்களுள் ஒரு சில இருக்கும் இடம், அவர்கள் போற்றும் வள்ளல்கள் வாழும் இடமாகவும் இருந்துள்ளன மற்றும் புலவர்கள் நெருங்கிப் பழகும் இடங்களாக இருந்தாலும் அவை பொருளோடு சார்பு பெற்றுள்ளன.

### *1.8.3.1.* கொற்கை முத்து

கொற்கையில கிடைக்கும் முத்து மிக உயர்ந்த முத்தாகக் கருதப்பட்டது. ஏனைய சாதாரண முத்துகளை விடக் கொற்கை முத்தே அவர்கள் காலத்தில் போற்றப்பட்டது என்று தெரிகிறது. அக்கொற்கை பலரும் போற்றிய ஊராகத் தெரிகிறது.

மகளிரின் பற்கள் முத்துகளுக்கு உவமைப் படுத்தப் படுகின்றன. கொற்கை முத்துகள் மிக உயர்ந்தனவாகக் கருதப் பட்டன. ஆதலின் அம்முத்துகள் கொற்கைத் துறையோடு இடச்சார்பு பெற்றன.

அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்துறை
இலங்கு முத்து உறைக்கும் எயிறுகெழுதுவர்வாய்.
-ஐங். *185/1-2*

கொற்கையம் பெருந்துறை முத்தின் அன்ன
நகைப்பொலிந்து இலங்கும் எயி றுகெழு துவர்வாய்.
-அகம். *27/7-8*

*1.8.3.2.* கொற்கையில் நெய்தல் மலர்: கொற்கைப் பெருந்துறையில் வைகறையில் மலரும் நெய்தல் போலத் தலைவியின் கண்கள் அழகுமிக்க உடையன என்று பேசப் படுகிறது.

கொற்கையம் பெருந்துறை
வைகறை மலரும் நெய்தல் போலத்
தகைபெரிது உடைய காதலி கண்ணே. -ஐங். *188/3-4*

இதில் வைகறை மலரும் நெய்தல் என உடன் கூறப் படுகிறது. இடச்சார்பே அன்றிக் காலச்சார்பும் பெற்ற உவமையாக இது விளங்குகிறது.

இதே உவமை கொற்கை முன்துறையோடு சார்பு பெற்று மற்றும் இரண்டிடங்களில் வந்துள்ளது.

முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறைச்
சிறுபா சடைய செப்பூர் நெய்தல்
தெண்ணீர் மலரின் தொலைத்த கண்ணே. -நற். *23/6-8*

நற்றேர் வழுதி கொற்கை முன்துறை
வண்டுவாய் திறந்த வாங்குகழி நெய்தல்
போது புறங்கொடுத்த உண்கண். அகம். *130/11-13*

கொற்கை அதனை ஆண்ட வழுதியாலும் சிறப்புப் பொற் றுள்ளமை 'நற்றேர் வழுதி என்னும் தொடர் அறிவுறுத்து கின்றது.

### *1.8.3.3.* கொல்லி மூங்கில்

சேரநாட்டுக் கொல்லி மலை மூங்கிலுக்கும், மயிலுக்கும், அழகிய பாவைக்கும் சிறப்பு வாய்ந்ததாக விளங்கியது என்பது தெரிகிறது.

மகளிர் தோள்கள் கொல்லிமலை மூங்கிலுக்கு உவமைப் படுத்தப்பட்டுள்ளன.

வெல்போர் வானவன் கொல்லி மீமிசை
நுணங்கமை புரையும் வணங்கிறைப் பணைத்தோள்
வெல்போர் வானவன் கொல்லி
வேயொழுக் கன்ன சாயிறைப் பணைத்தோள்
-அகம். *213/15-16*

### 1.8.3.4. கொல்லி மயில்

ஓரி என்னும் குறுநில மன்னன் ஆண்டதால் கொல்லி மலை புகழ் வாய்ந்ததாக விளங்கியது அவன் சிறந்த கொடை வள்ளலாக விளங்கினான் என்பது தெரிகிறது. பொதுவாக மகளிரின் சாயலை மயிலுக்கு உவமைப் படுத்துவர். ஈண்டுச் சிறப்பாகக் கொல்லி மலையில் இருக்கும் மயில் மகளிரின் கூந்தலுக்கு உவமைப் படுத்தப்பட்டுள்ளன.

மாரி வண்மகிழ் ஓரி கொல்லிக்
கலிமயிற் கலாவத்து அன்ன இவள்
ஒலிமென் கூந்தல். -நற். 265/7-9

### 1.8.3.5. கொல்லிப் பாவை

பொதுவாக மகளிரின் நலத்தையும் அழகையும் பாவைக்கு உவமைப்படுத்துதல் அக்கால மரபாக விளங்கியது. அப்பாவை அநேகமாகக் கொல்லிமலைப் பாவையை உணர்த்தியது என்றும் கூறலாம். கொல்லிப் பாவை உவமை யாக வருதல் பயின்ற வழக்காக இருந்தது என்பது கீழ்வரும் சான்றுகளால் தெரிகின்றது.

பாவை யன்ன வனப்பினள் -நற். 302/6

பாவை அன்ன நல்லோள் கணவன் -பதி. 61/4

இவை இரண்டும் கொல்லிச்சார்பு பெறாமல் அமைந்த உவமைகளாம். இவ்வாறு வருதல் பெருவழக்கு. பொதுவாக இப் பாவைகள் பொது மன்றங்களில் வைக்கப்பட்டிருந்தன என்பது தெரிகிறது[1] இத்தகைய மன்றங்களுள் ஒன்றாகக் கொல்லி மலைப் பாவை வைக்கப்பட்ட இடம் ஆக இருந்திருக்க வேண்டும். இது அழகிய நிறம் தீட்டப்பட்ட சிறிய வடிவத்தால் இயன்றது என்றும் தெய்வம் வந்து எழுதி அமைத்தது என்றும் கருத்து நிலவுகிறது. 'கடவுள் எழுதிய பாவை[2] என்னும் தொடரால் இது சிறப்பிக்கப்படுகிறது. மற்றும் இது 'ஓரி யாண்ட கொல்லி மலை' எனப்படுவதால் தனிச் சிறப்புப் பெறுகிறது.[3]

---

1. நற், 30/16; 301/7; 319/7-8; குறு. 195/6-7; ஐங். 221/2; 307/4; 375/1-2ட பதி. 61/4; 88/28-29; கலி. 56/7.
2. அகம். 158/11-14.
3. அகம். 62/13.

இக்கருத்துப் பல்கிய வழக்காக உள்ளது[1] பாவை என்று கூறும்பொழுது கொல்லிமலை இடச்சார்பு பெறுவது இயல்பாகி விட்டது.[2]

பெரும்பூண் பொறையன் பேஎம்முதிர் கொல்லிக்
கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்லியம் பாவை அன்ன இம்
மெல்லியல் குறுமகள். -குறு. *89/4-7*

## *1.9.* சொற்றொடர் பயின்று வரல்

சங்க இலக்கிய உவமைகளுள் உவமைப் பொருளே அன்றி அவற்றை உணர்த்தும் சொற்றொடர்களும் பயின்று வருகின்றன. இவை அக்காலத்தில் புலவர்கள் பயின்று வந்த உவமைகள் என்பதைக் காட்டுகின்றன. மொழியில் சொ[illegible]ளும் தொடர்நிலைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்து வ[illegible]ம் மக்களுக்கும் புலவர்களுக்கும் பொதுமையாக அமைதல் போ[illegible]ல இவ் உவமைகளும் பொதுமை நிலைபெற்று வழங்குகின்றன. பழமொழிகளைப் போல இவ் உவமைகளும், பயின்றுவரும் சொற்றொடர்களைக் கொண்டு இயங்கி வந்தன என்றும் தெரிகிறது. அக்காலத்திற்கே உரிய பொது உவமைகள் பல உள்ளன என்பது அறியப்படுகிறது. சங்க இலக்கியம் என எட்டுத் தொகையையும் பத்துப்பாட்டையும் ஒன்று சேர்த்துக் கூறுவதற்கு அவற்றிற்குக் காரணமாக மொழி நடையையும், கருத்து ஒற்றுமையையும் காட்டுவர். அவற்றோடு உவமச் சொற்பொருள் ஒற்றுமையையும் ஒரு காரணமாகச் சேர்த்துக் கூறலாம்.

பல தொடர்களுள் ஒற்றுமை காணப்படுகின்றது. சொல்லும் பொருளேயன்றித் தொடர்களும் பல ஒற்றுமைபட்டு விளங்குவதால் கீழ்வரும் இவ் உவமைகளைப் பலரும் எடுத்தாளும் பொது உவமைகள் எனக் கொள்ள வேண்டி உள்ளது.

பயின்றுவரும் தொடர்கள் பின்வருமாறு

1. அமிழ்துபொதி துவர்வாய்: பதி. *16/19;51/21.*
2. அமைத்தோள்: அக. *390/10;* நற் *352/10-11; 390/10.*

---

*1.* குறு. *100/5-6.*

*2.* குறு. *89/4-7; 100/5-6;* அகம். *62/12-41; 209/10-17;*
நற். *185/6-11; 192/8-12.*

3. அரவு நூங்கு மதி: குறு. 395/1-5; அக. 114/1-6.

4. அரிமதர் மழைக்கண்: அகம். 296/3; 312/6, 343/16-19.

5. ஆய்மலர் உண்கண்: அகம். 52/14; 242/4; 423/4.

6. ஆயிதழ் மழைக்கண்: அகம். 162/11; 357/16; 306/12.

7. இரும்பு வடித்தன்ன கருங்கை: அகம். 172/; பத் 4/221-223.

8. எழு உறழ் திண்தோள்: அகம் 209/4; 39/11; 61/16.

9. ஏந்தெழில் மழைக்கண்: அகம் 350/7; பதி. 54/4.

10. ஓவத்தன்ன வினைபுனை நல்லில்: பதி. 61/3; அகம். 98/10.

11. கடல்போல் தானை: பதி. 69/3; அகம். 204/2.

12. கயலேர் உண்கண்: நற். 220/0; 316/3; குறு. 398/3.

13. களங்கனியன்ன கருங்கோட்டுச் சீறியாழ்; புறம் 127/1; 145/5.

14. கால்நவில் புரவி: அகம். 314/8; 334/11.

15. குவளை உண்கண்: நற். 77/2, 205/6; 71/8; குறு. 167/3; 339/5-6; ஐங். 72/3; அகம். 129/16; 138/2; 156/8; 183/1; 285/13.

16. கொக்கு உகிர் நிமிரல்: நற். 258/16: புறம். 395/36; 398/25.

17. சிறுகாரோடன் பயினொடு சேர்த்திய கல்: அகம் 1/5-6; 356/9-10.

18. செந்தீ ஒண்பூம் பிண்டி: பத். 6/700; 8/118-119.

19. சுடர்நுதல்: பத். 16/3; 51/19; 70/15-16

20. தளிர் ஏர் மேனி: நற். 251/7; அகம். 42/4.

21. துவர் வாய்: நற். 190/9; அகம். 29/13; 39/3; 75/10; 162/13.

22. தேமொழி: நற் 161/12; 220/8; 262/7; 374/9; ஐங். 466/5.

23. தைஇத் திங்கள் தண்கயம்: நற். 80/7-9, ஐங். 84/4; புறம். 70/6.

24. நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை: அகம் 931/13; புறம் 50/6-7.

25. நெய்தல் உண்கண்: நற். 113/7; ஐங் 181/1; அகம். 10/5.

26. பருகுவன்ன காதல்: அகம். 305/6; 399/4.

27. பல்லிதழ் உண்கண்: நற். 241/11; குறு. 5/5; ஐங். 170/4; 471/2; அகம். 161/4; 190/4; 334/5; 351/4.

28. பல்லிதழ் மழைக்கண்: அகம். 51/9; 244/9; குறு. 259/4.

29. பல்லிதழ் மென்மலர் உண்கண்: நற். 241/11; குறு. 5/5; அகம். 109/1.

30. பிறைநுதல்: நற். 120/7; ஐங். 371/5; அகம். 136/21; 207/13.

31. பூ எழில் உண்கண்: கலி 84/37; 35/27.

32. முல்லை முகையும் முருந்தும் நிரைத்தன்ன பல்: கலி. 103/6-7; 108/15-16.

33. மின்னேர் ஓதி: நற். 339/9; அகம் 234/18.

34. முள்ளெயிற்றுத் துவர்வாய்: குறு. 26/6; அகம். 212/4-5; 39/3; 179/11; 385/16.

35. முழவுத்தோள்: பதி. 31/20; அகம். 396/6; புறம். 50/12; 88/6; பத். 6/99.

36. பூப்போல் உண்கண்: நற். 20/6; 325/7; குறு. 101/4; ஐங். 16/4; 101/4.

37. பேரமர் மலர்க்கண்: ஐங். 282/2; 427/1.

38. பொறித்த போலும் புள்ளி எருத்தின் பின்புறம்: பதி. 36/8-9; 39/10-11.

39. பொன்வார்ந்தன்ன புரியடங்கு நரம்பு: பத். 3/34. 4/15; புறம். 135/5; 308/1.

40. மயிலடி இலைய மாக்குரல் நொச்சி; நற். 115/5. குறு. 138/3.

41. மலர்க்கண்: நற். 308/2; 377/1; அகம், 176/16; 320/6.

42. மலர் ஏர் கண்: நற். 33/12; 66/11; அகம். 320/6.

43. மலர் ஏர் உண்கண்: நற். 308/2; 3 7/1; அகம்; 176/6; 320/6.

44. மலர் பிணைத்தன்ன மாயிதழ் மழைக்கண் : நற். 252/9-11; 301/2-3.

45. மாரி வீழ் இருங்கூந்தல் : கலி. 14/4, 60/2; 132/21.

46. மெய்புகுவன்ன கைகவர் முயக்கம் : அகம் 11/10; 305/7; 370/15.

47. யாறுகிடந்தன்ன அகல் நெடுந்தெரு : நற். 200/3; பத். 6/359; 7/30.

48. வரை மார்பு : புறம். 208/18; 308/1.

49. வேப்பு நனையன்ன நெடுங்கண் கள்வன் : ஐங். 301/. வேப்பு நனையன்ன நெடுங்கண் நீர் ஞெண்டு : அகம். 176/8-9.

50. வேய்மருள் பணைத்தோள் : நற். 85/2; 188/9; ஐங். 318/2; அகம் 1/8.

51. வேய்புரை பணைத்தோள் : அகம் 2/11; 47/18.

# 5. உவமை நயங்களும் தனிச் சிறப்புகளும்

*1.* மேலே சொல்லியல் மரபுகள் சுட்டிக் காட்டப்பட்டன. இவையேயன்றி உவமை நயங்களும் தனிச்சிறப்புகள் சிலவும் காணப்படுகின்றன. இவற்றை உவமைச் சொல்லியல் மரபு களிலும், பொருளியல் மரபுகளிலும் காட்டுவதைவிடத்தனி இயலாகக் காட்டுவதே பொருந்தும். உவமை நயங்கள் என்றால் ஒவ்வோர் உவமைக்கும் நயமும் சிறப்பும் காட்ட முடியும். எனினும் அவற்றுள்ளும் ஒரு சில ஒற்றுமைப் பண்புகள் இருப்பதால் தொகுத்துத் தர இயல்கின்றது.

அவற்றைக் கீழ்வரும் தலைப்புகளில் காட்ட முடிகின்றது.

1. சூழ்நிலை பற்றிய உவமங்கள்
2. அரிய காட்சிகளை உவமையாக அமைத்தல்
3. நடைபெறாத நிகழ்ச்சிகளை உவமையாக்குதல்
4. சேய்மைக் காட்சிகளை உவமையாக்குதல்
5. இடச்சார்போடு பொருந்திய உவமைகள்
6. கதைகளை உவமையில் அமைத்தல்
7. பழமொழிகளை உவமையாக அமைத்தல்
8. உவமைகளில் நகைச்சுவை அமைத்தல்
9. தனித்தன்மை வாய்ந்த உவமைகள்
10. மனநிலையைச் சித்திரிக்கும் உவமைகள்

## 1. 1. சூழ்நிலை பற்றிய உவமைகள்

உவமைகள் எப்பொழுதும் பொருந்துவன சில; சூழ் நிலையை ஒட்டி அமைவன சில. கூறுவோரின் மனநிலையை ஒட்டி அமையும் உவமைகள் எல்லாச் சூழ்நிலைக்கும், எக் காலத்துக்கும், இடத்துக்கும் பொருந்தா. கூறுவோரின் கூற்றை

ஒட்டிப் பொருள்களும் உவமகளும் அமைகின்றன. அவற்றைச் சூழ்நிலை பற்றிய உவமைகள் எனலாம்.

*1.1.1.* தாயைவிட இனிமையானவர்கள் இல்லை என்பது உலகியல். 'அன்னை போல இனிய கூறியும்' என்ற வழக்கு உள்ளது, அதே தாய் ஒரு தலைவிக்கு நரகமாகக் காட்சி அளிக்கிறாள். அவள் நெஞ்சம் நிரயம் (நாகம்) போன்றது என்று கூறுகிறாள். அவள் காதலுக்கு அவள் அன்னை தடையாக இருத்தல்பற்றி இவ்வாறு கூறுகின்றாள்.

*1,1.2.* தலைவனால் வெறுக்கப்பட்ட தலைவி தன்னைப் பேய்க்கு உவமைப்படுத்திக் கொள்கின்றாள். அவள் இளமையும் கவர்ச்சியும் குறைந்து அதனால்தான் தன் கணவனைக் கவர இயலவில்லை என்று தெரிவிக்கின்றாள். தான் குழந்தை பெற்று விட்டதால் அவன் தன்னை வெறுப்பதாகக் கருதுகின்றாள்.

பேய் அனையம் யாம் சேய் பயந்தனமே. - ஐங். *705*

*1.1.3.* தலைவி தன் காதலன் மாட்டுக் கொண்டுள்ள அன்பால் அவன் நாட்டு வறண்டகுழிகளில் மான் உண்டு எஞ்சிய கலங்கல் நீர் தேன் கலந்த பாலினும் இனியது என்று கூறுகின்றாள்.

தேன் மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலைக் கூவன் கீழ
மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே - ஐங். *203/24*

*1.1.4.* ஒரு தலைவியின் கூற்றில் தலைவனின் அன்பை விளக்கக் கீழ்வரும் நிகழ்ச்சியை நினைவுபடுத்துகின்றாள், தலைவி தனக்கு வேம்பின் பசுங்காயைத் தந்தாலும் அஃது இனிய கட்டியாக உள்ளது என்றும், ஏனையோர் பாரியின் பறம்பு மலையில் உள்ள தை மாதத்துக் குளிர்ந்த தண்ணீரைத் தந்தாலும் உவர்க்கும் என்றும், தலைவன் கூறியதாகவும் இம்மாற்றங்களுக்குக் காரணம் அன்பின் அடிப்படையே என்றும் தோழி தெரிவிக்கின்றாள்.

வேம்பின் பைங்காய் என்தோழி தரினே
தேம்பூங் கட்டி என்றனிர் இனியே
பாரி பறம்பில் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்
வெய்ய உவர்க்கும் என்றனிர்
ஐய அற்றால் அன்பின் பாலே. -குறு. *196/1-6*

1. *நற். 28/3.*

1.1.5. காதல் விருப்பால் தலைவியின் வாயிதழ்களும் பற்களும் அமுதத்தைப் போன்று தலைவனுக்கு இனிப்பதாகக் கூறப்படுகின்றது.

ஊறுநீர் அமிழ்து ஏய்க்கும் எயிற்றாய் -கலி.201/1

இக்கருத்துப் பெருவழக்காகச் சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ளது[1]

1.1.6. காதல் வேட்கையால் துன்புறும் தலைவனுக்கு அவளே அது தீர்க்கும் மருந்தும் ஆகின்றாள்.

அருந்துயர் உழந்த காலை
மருந்துஎனப் படூஉம் மடவாள். நற். 384/10-11

மேற்காட்டிய இச்சான்றுகள் அனைத்தும் சூழ்நிலைக் கேற்ப உவமைகள் அமைந்துள்ளன என்பதைக் காட்டுகின்றன. இவை சொல்லும் பாததிரத்தின் மனநிலையை ஒட்டி அமைவன வாகும்.

## 1.2. அரியகாட்சிகளை உவமையாக அமைத்தல்

எங்கோ எப்பொழுதோ கண்டு அல்லது கேட்டு மனத்தில் நிறுத்திய காட்சிகளை வாய்ப்பு வரும்பொழுது உவமைகளாக அமைத்தல் தனிச்சிறப்பைத் தருகின்றது. அவற்றுள் சில பின் வருமாறு :

1.2.1. குப்பை மேட்டில் கோழிகள் இரண்டு விலக்குவார் இல்லாமல் செய்யும் தனிப்போரும், இரண்டு களிறுகள் எதிர்ப் புறத்து நின்று மாறி இழுக்கும் தேய்புரிப் பழங்கயிறும், அளவுமிக்க வாடைக்காற்று வீசும் இருள்மிக்க இரவுப் பொழுதில் தனியே உச்சியில் சிறியகயிற்றால் கட்டப்பட்ட கன்றைப் பிரிந்த பசு இடம் மாற்றிக்கொள்ளாமல் ஈரத்திலே உழலும் நிலையும், போரால் அலைப்புண்டு வாழ்வோர் நீங்கிய பேரூரின் பாழ்பட்ட நிலையைக் காத்திருந்த தனிமகனின் மனநிலையும்,[2] நோன்பிகள் தைமாதத்தில் அவலை மூங்கித் தின்னுதலும்,[3] நீக்குந்தொறும் நீங்கிப் பின்னர் மீண்டும் நெருங்கும் பாசியின் நிலையும்,[4] வழிபறிக்கள்வர் அம்பின் கூரிய முனையைச் செப்பம் செய்தற் பொருட்டுத் தன்

1. குறு. 141-2; பதி. 16/12; 51/21; கலி. 4/13-14 அகம். 335/23-25.
2. குறு. 305/6. 3. நற். 284/9-11 4. நற். 109/5-10

நகநுனியால் புரட்டும் ஓசையும்[1] சுழலும் சக்கரத்தின் ஆரையின் பல்லி பொருந்தி நின்று அதனோடு சுழலலும்,[2] செருப்பினிடையே சிறுபரல் உள்ளிருந்தே அரித்துக் கொண்டிருக்கும் நிலையும்,[3] எப்பொழுதோ எங்கோ கண்ட அரிய நிகழ்ச்சிகளும் காட்சிகளும் ஆகும். அவற்றை நினைவில் வைத்துக்கொண்டு உவமைகளாக அமைப்பது நயமும் சிறப்பும் கொண்டவை எனலாம்.

*1.2.2.* மற்றும் வாழ்க்கையில் அன்றாடம் காணும் காட்சிகளிலும் ஒரு சில நினைவில் வைத்துக் கொண்டு அவற்றில் இருந்து வாழ்க்கைத் தத்துவங்களைக் காணக் கூடிய அரிய காட்சிகளும் உள்ளன. அவற்றையும் அரிய காட்சிகள் என்ற தலைப்பில் காட்டலாம்.

கன்றும் உண்ணாமலும் கலத்திற் படாமலும் நல்லான் தீம்பால் நிலத்து உகுதலும்,[4] வானத்து மழை நீர் மண்ணில் கலந்து செம்புலப் பெயல்நீர் ஆக மாறுதலும்[5] தச்சன் செய்த சிறு கைவண்டியை ஊர்ந்து இன்புறாது ஈர்த்து இன்புறும் குழந்தைகளின் செயலும்[6] நாளொன்றுக்கு எட்டுத் தேர்களைச் செய்யும் தச்சன் ஒரு திங்களெல்லாம் பாடுபட்டு அமைத்த தேர்க்காலும்[7] ஊரில் விழாக் கொள்ளும்பொழுது பல்வேறு வேலைகளுக்கு இடையே விறுவிறுப்பாகக் கட்டிலைப் பின்னும் கட்டில் தொழிலாளியின் கைஊசியின் விரைவும்[8], சிறுபாம்பு பெரிய யானையைத் தீண்டி வருத்தும் செய்கையும்[9] நினைவில் வைத்துப் போற்றக்கூடிய அரிய காட்சிகளாம்.

## *1.3.* நடைபெறாத நிகழ்ச்சிகளை உவமையாக்குதல்

வாழ்க்கையில் என்றுமே நடைபெற இயலாத நிகழ்ச்சிகளும் உவமையாகின்றன. அவற்றை இல்பொருள் உவமை அணி என்பர். அவை நடக்கவே இயலாத நிகழ்ச்சிகளாகும். நீருள் குவளை வெந்து போதலும்[10], ஞாயிறும் திங்களும் ஒன்றாக இணைந்து மண்ணுக்கு வருதலும்[11] நடைபெறாத

1. நற் . 153/8-10.
2. நற். 22/1-7.
3. குறு. 399/1-4.
4. குறு. 16/1-5.
5. புற. 256/1-5.
6. புறம். 257/1.
7. குறு. 27/1-5.
8. குறு. 40/4-5.
9. குறு. 61/1-6
10. புறம். 87/2-4
11. புறம். 82/1-6

நிகழ்ச்சிகளாம். அவை அந்த வகையில் உவமைநயச் சிறப்பு வாய்ந்தவையாகும்.

இவை போலல்லாமல் நடக்க இயலும் செய்திகள் உள. அவை சாதாரணமாக நிகழ்வதில்லை. அத்தகைய உவமைகள் கற்பனையாற்றல் மிக்கவையாகும். அவை ஒரு சில சங்க இலக்கியத்தில் வந்துள்ளமை காணப்படுகின்றன.

*1.3.1.* பரிசில் கொடுத்து வந்த வள்ளல் மறைந்த நிலையில் அதனால் ஏற்பட்ட துன்பமும், அத்துன்பத்தை வாய்விட்டுக் கூறமுடியாது த்விக்கும் நிலையும் நடைபெறாத நிகழ்ச்சியை உவமையாகப் பெற்றுள்ளன. 'மாரிக் காலத்து இரவுப் பொழுதில் கலங் கவிழ்ந்துவிடுகிறது. மிக்க துன்பத்தில் ஆழ்ந்த நெஞ்சத்தோடு ஓர் ஊமன் அதில் அகப்பட்டுக் கொள்கிறான். அவனோ வாய்விட்டுப் பேசிக் கத்தித் தெரிவிக்கும் ஆற்றல் அற்றவன்; பேச்சு ஆற்றலோடு கண் பார்வையும் அவன் இழந்து நிற்கின்றான். பார்வை இழந்த ஊமன் கடலில் பட்டுத் தவிக்கின்றான், மழையும், இருளும் காற்றும் கலந்த அத்தகைய சூழ்நிலையில் அவன் துன்பத்தை மற்றவர்கள் அறிய முடியாது. தானும் தெரிவிக்க இயலாது. இச்செய்தியும் இச்செய்தியைச் சுற்றிப் பின்னப்பட்டுள்ள சூழ்நிலைகளும் அன்றாடம் நடை பெறக் கூடும் நிகழ்ச்சிகள் என்று கூற இயலாது, நடவாமலும் இருக்கும் என்றும் முடிவு கூறமுடியாது. அத்தகைய கற்பனை ஆற்றல் மிக்க செய்தி உவமையாக வந்துள்ளது.

மாரி இரவின் மரங்கவிழ் பொழுதில்
ஆரஞர் உற்ற நெஞ்சமொடு ஓராங்குக்
கண்ணில் ஊமன் கடற்பட் டாஅங்கு

-புறம். *238/14-16*

*1.3.2.* ஞாயிறு காயும் வெம்மையான பாறையின் பக்கத்தில் கையில்லாத ஊமன் கண்களாலேயே காக்கும் வெண்ணெய் உணங்கல் போலத் தலைவன் பிரிவுத் துன்பம் பரவியுள்ளது என்று கூறப்படுகிறது. கையில்லாத ஊமன் கண்களாலேயே பார்க்க முடியுமே தவிரப் பாறையில் தாமாக உருகும் வெண்ணெயைத் தானும் தடுக்க இயலாது; பிறரிடம் சொல்லியும் உதவி தேட முடியாது என்ற கருத்து அழகிய இவ் உவமை கொண்டு உணர்த்தப்படுகிறது.

---

*1. நற். 75/3-4* *2. கலி. 4/30-31* *3. புறம். 25/3-6*

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் காக்கும்
பரந்தன்று இந்நோய் -குறு. 58/3-6

*1.3.3.* இரவுப்பொழுது பாழும் கிணற்றில் விழுந்த பசுவின் கன்றைக் கண்ட உயர்திணை ஊமன் அத்துன்பச் செய்தியைப் பலருக்கும் சொல்ல முடியாமல் வேதனைப்படும் நிலை உவமையாக அமைக்கப்படுகிறது.

...கூவற்
குரால் ஆன்படுதுயர் இரவில் கண்ட
உயர்திணை ஊமன் போலத்
துயர்பொறுக் கல்லேன் தோழி நோய்க்கே
-குறு. 224/3-6

*1.3.4.* குருடன் ஒருவன் தூங்குகின்ற புலியின் மீது தெரியாமல் இடறி விழுந்தால் அவன் நிலைமை அழிவுக்குக் காரணமாக அமைதல், பகை அரசனின் வீரம் தெரிந்து கொள்ளாமல் பகைமையை மேற்கொள்ளுதலுக்கு உவமை கூறப்படுகிறது.

உள்ளம் எள்ளிய மடவோன் தெள்ளிதின்
துஞ்சுபுலி இடறிய சிதடன் போல
உய்ந்தனன் பெயர்தலோ அரிதே. -புறம்.73/-68

'தூங்குகின்ற புலியைத் தட்டி எழுப்புதல் போல' என்ற பழமொழி இக்காலத்தில் வழங்குகின்றது. இப்பழமொழியோடு இப் புறப்பாடல் ஒத்து விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

*1.3.5.* 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவது போல்' என்ற பழமொழியும் இக்காலத்தில் வழங்குகிறது. இதற்குக் கீழ்வரும் குறந்தொகைப்பாட்டு அமைத்துத் தரும் உவமையும் காரணமாக இருக்கலாமோ என்று ஐயுறத் தக்க அளவில் உவமை அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சியும் நடை பெறும் சாதாரண பொது நிகழ்ச்சி அன்று; நடவாது என்றும் கூற இயலாது.

பெரிய மலையில் பெருந்தேனைக் காணும் முடவனோ இரண்டு கால்களும் இழந்தவனாய் இருக்கின்றான். அவன் தன் உள்ளங்கையில் இருந்த சிறு குடையால் எட்டிப்பிடித்து

அதனைக் கலைத்துக் கீழே இருந்து நக்கியதைப் போலக் காதலர் தமக்கு அருள் செய்திலர் எனினும் தான் அவரைப் பல முறையும் காணுதலும் உள்ளத்துக்கு இனிமை தருகிறது என்று ஒரு தலைவி கூறுவதாகப் பாடப்படுகிறது.

குறுந்தாட் கூதலி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கி யாங்குக் காதலர்
நல்கார் நயவார் ஆயினும்
பல்கால் காண்டலும் உள்ளத்துக்கு இனிதே.

-குறு. *60/1-6*

## 1.4. செய்மைக் காட்சிகளை உவமைகளாக அமைத்தல்

பொதுவாக உவமைகளும் பொருளும் பெரும்பாலும் அண்மைக் காட்சிகளாகவே அமைவனவாகும். வேப்பம் முகைக்கும் நொச்சியின் முகைக்கும் நண்டின் கண் உவமைப் படுத்தலும், யானையின் கால்கள் உரலுக்கு உவமைப் படுத்தலும் வெறும் அண்மைக் காட்சிகளே எனலாம். தன்மை உவமை அணி என்னும் தலைப்பில் காட்டப்பட்டவை அனைத்தும் அண்மைக் காட்சி உவமைகள் என்றே கூறலாம். ஒரு சில காட்சிகள் சேய்மையிலிருந்து கண்டு அவற்றிற்கேற்ற உவமை களைக் கூறியுள்ளனர்.

1.4.1 கல்லை அலைத்து ஒழுகும் வேகமான அருவி அழகிய காட்சியாகும். இஃது சேய்மையில் இருந்து காணும் காட்சியாகும். இதற்கு நிலத்தில் ஊர்ந்து செல்லும் பாம்பு உவமை தரப்படுகிறது. நிலத்தில் ஊர்ந்து செல்லும் பாம்பும் சேய்மையில் இருந்து காணப்பட்ட காட்சியாகும்.

கல்பொருது இரங்கும் கதழ்வீழ் அருவி
நிலம்கொள் பாம்பின் இழிதரும்
விலங்குமலை நாடன். -குறு. *134/5-7*

1.4.2. மலைவீழ் அருவி பாம்பின் தோலுக்கு உவமைப் படுத்தப்பட்டுள்ளது. ஈண்டும் சேய்மைக் காட்சிப் பொருள் களாகவே இரண்டும் அமைந்திருக்கலாம் என்று தோன்றுகிறது.

செவ்வரைக் கொழிநீர் கடுப்ப அரவின்
செவ்வரி உரிவை. -அகம்.*327/12-13*

1.4.3 வேனில் காலத்தில் பாயும் ஆறும் ஊர்ந்து செல்லும் அரவுக்கே உவமைப்படுத்தப்பட்டுள்ளது. நீரின் நெளிவும், அதன் ஓட்டமும், ஒளிவிடும் தன்மையும், நீண்டு செல்லும் காட்சியும் சேய்மையில் இருந்து காண்போர்க்கு அரவு செல்வது போலக் காட்சி அளித்தது என்பதாம்.

பெரும்பெயல் பொழிந்த வழிநாள் அமையத்துப்
பல்பொறி அரவின் செல்புறங் கடுப்ப
யாற்றறல் நுணங்கிய நாட்பத வேனில் -நற். 157/2-4

பாம்புஎன முடுகுநீர் ஓட. -அகம். 339/3

இவற்றில் உவமையும் பொருளும் சேய்மைக் காட்சி களாகவே இருக்கலாம். எனத் தோன்றுகிறது.

1.4.4. யானையின் இருமருங்கும் இடப்படும் கயிற்றின் வடிவைப்போல் மலைக்கற்களின் இடையே அமைந்த பாதை அமைந்துள்ளது எனக் கூறப்படுகிறது இவையும் சேய்மைக் காட்சிகளாகும்.

...யானைக்
கயிற்றுப் புறத்தன்ன கன்மிசைச் சிறுநெறி.
-அகம்.128/10-11

## 1.5. இடச்சார்பொடு பொருந்திய உவமைகள்

ஒரு நிலத்தில் காணப்படும் பொருள் மற்றொரு நிலத்துக்கு உவமையாதல் இல்லை என்பது கிடையாது. காட்டில் வேட்டையாடும் தொழில் கடலில் மீன் பிடித்தலுக்கு உவமிக்கப் படுகிறது.

மரன்மேற் கொண்டுமான் கணம் தகைமார்
வெந்திறல் இளையவர் வேட்டெழுந் தாங்குத்
திமில்மேற் கொண்டு வரைச்சுரம் நீந்தி. -நற். 111/4-6

எனத் திணை மாறி வந்துள்ளது. பாலை நில மக்களின் வேட்டுவ வாழ்வு. கடற்கரை வாழ்வாரோடு உவமிக்கப்பட்டுள்ளது. பொதுவாக எல்லா உவமைகளும் திணை வரையறையன்றியே அமைக்கப்பட்டுள்ளன எனலாம். எனினும் ஒரு சில உவமை கள் அவ்வந்நிலத்துச் சூழ்நிலையோடு இயைத்துப் பேசப்

படுகின்றன. அவை அவ்உவமைகளுக்கு ஒரு தனி அழகைத் தருகின்றன. வேண்டுமென்றே இவ்வாறே இத்தகைய உவமை களை அமைத்து அவற்றிற்கும் உவமைக்கும் உள்ள உறவையும் நெருக்கத்தையும் காட்டுகின்றனர். கீழ் வருவன இவ்வாறு அமையும் இடச்சார்பு பெற்ற உவமைகள் எனலாம்.

**1.5.1.** கருங்கைக் கொல்லன் ஆகிய இரும்பு வடிக்கும் தொழிலைச் செய்பவனின் உடம்பின் தோல், வடித்த இரும்பைப் போன்று இருந்தது என்று கூறப்படுகிறது.

இரும்பு வடித்தன்ன மடியா மென்தோல்
கருங்கை வினைஞர் காதலம் சிறாஅர்.

-பத். 4/222-223

ஈண்டுக் கொல்னின் கைகள் இரும்புத் தகட்டுக்கு உவமைப் படுத்தப்பட்டுள்ளன. அவன் பயிலும் தொழில் பற்றிய உவமையே அவன் மேனியின் நிறத்திற்கும் மடிப்பு இல்லாத தோலுக்கும் உவமையாக அமைந்துள்ளது. இதே கருத்து அகநானூற்றுப் பாடலிலும் வருகிறது.

இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்.

-அகம். 172/6

**1.5.2.** கலித்தொகை நில உவமைகளை அமைத்தலை ஒரு தனிக் கலையாகவே போற்றியுள்ளது. முல்லை நிலமக்களாக்கிய ஆயர்களின் வாழ்வைச் சுற்றிப் பின்னப்பட்ட கலித்தொகைப் பாட்டு ஒன்றில் முல்லைநலச் சார்புபெற்ற பொருள்களும் தொழில்களும் உவமைகளாக வந்துள்ளன. இடைக்குல மக்களின் வாழ்வும் அவர்கள் தொழிலாகிய தயிர், நெய் முதலியன பெறுதல், பசுவைக்கட்டும் கன்று, கன்றைச் சுற்றித் தழுவும் பசு முதலியவை உவமைகளாக அமைந்துள்ளன. இது நாடகப் பாங்கில் அமைந்த செய்யுட் பகுதியாகும்.

'எம்மைத் திளைப்பதற்கு எளிமையாகக் கொண்டாய்; தொடுவதற்கு எளிமையாக இருத்தலைக் கொண்டு திளைப் பதற்கும் எளியவன் என நீ நினைக்கின்றாய்' என்று முல்லை நிலத் தலைவி அந்நிலத் தலைவனை நோக்கிக் கூறுகின்றாள். இதில் அமைந்துள்ள உவமை முல்லை நில இடச்சார்பு உடையதாம்.

...எம்மைத்
திளைத்தற்கு எளியமாக் கண்டை அளைக்கு எளியாள்
வெண்ணெய்க்கும் அன்னள் எனக் கொண்டாய்.
-கலி.110/4-6

என்பது தலைவியின் உரையாடல் ஆகும்.

அதற்கு அவன் அவளைவிடாமல் தன் நெஞ்சு அவளையே சுற்றிச் சுழல்வதாகத் தெரிவிக்கின்றான் மத்தினைக் கட்டி இழுக்கும் கயிறுபோல் அவள் நலத்தையே அவன் நெஞ்சு சுற்றிச் சுழல்வதாகக் கூறுகின்றான்.

மத்தம் பிடித்த கயிறுபோல் நின்நலம்
சுற்றிச் சுழலும் எம் நெஞ்சு. -கலி. 110/10-11

மேலும் தான் அவள் மாட்டுக்கொண்டிருந்த அன்பையும் பற்றையும் வேறு ஒரு தக்க உவமை கொண்டு கூறுகின்றான். அதுவும் அவ் ஆயர் வாழ்க்கையைச் சுற்றியே அமைவதாக உள்ளது.

விடிந்தபொழுது மேய்வதற்கு இடம்விட்டுப் பெயராது தாய்ப்பசு தொழுவத்திலேயே கட்டப்பட்ட தன் கன்றினையே சுற்றிச் சூழ்ந்து நிற்பதுபோல் தன் நெஞ்சம் அவளைக் கண்டது முதல் அவளை விட்டுப் பிரிய முடியாமல் நடுங்குகின்ற துன்பத்தை அடைவதாகக் கூறுகின்றான். கன்றையே சுற்றிச் சுழலும் பசுவைப்போல அவளையே சுற்றிச் சுழல்கின்றது அவன் நெஞ்சு என்று தன் காதல் வேட்கையைப் புலப் படுத்துகின்றான்.

விடிந்த பொழுதும் இவ்வயின் போகாது
கொடுந்தொழுவிலும் பட்ட கன்றிற்குச் சூழும்
கடுஞ்சூல் ஆநாகு போல் நிற்கண்டு நாளும்
நடுங்கு ஆநாகும் போல் நிற்கண்டு நாளும்
-கலி.110/12-15

பாலைப் போல் அவள் நிலை இருப்பதாகத் தலைவன் கூறுகின்றான். அவளைத் தொடும் செயலைத் தவிர வேறு எத்தகைய பயனும் பெறாமல் தான் வருந்துவதாகக் கூறு கின்றான். நெய் எடுத்துவிட்ட பால் எவ்வகையிலும் பயன் படாதவாறு போல, அவள் தொடுவதற்குத் தவிர வேறு எவ் வகையிலும் தனக்குப் பயன்படவில்லை என்று உணர்த்து கின்றான்.

எவ்வம் மிகுதர எத்திறத்து எஞ்ஞான்றும்
நெய்கண்ட பாலின் பயன்யாதும் இன்றாகிக்
கைதோயல் மாத்திரை யல்லது செய்தி
அறியாது அளித்து என் உயிர் -கலி. *110/16-19*

நெய்யைக் கடையும் தொழிலைத் தவிர அதனை நுகரும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதனைப் போல அவள் மேனியைத் தொடும் செயலைத் தவிர அவளை நுகர வாய்ப்பே கிடைப்பதில்லை என்று கூறுகின்றான். இதுவும் முழுவதும் ஆயர் வாழ்வையே தொடர்ந்து அமைந்துள்ளது. இவ்வாறு இப்பாட்டில் அமைந்துள்ள செய்திகளும் உவமைகளும் அவர்கள் முல்லை நிலவாழ்வைச் சுற்றியே அமைந்துள்ளன.

*1.5.3.* முல்லை நிலத்துப் பெண் ஒருத்தி, தலைவனைக் கீழ் வருமாறு கூறி விலக்குகின்றாள். கன்றை அணுகுபவர் மீது அதனை ஈன்ற பசு சினம் கொண்டு தடுக்க நெருங்குவதைப் போலத் தாய் அவன் மீது சீறிச் சினப்பாள். அதனால் தன் தாய் வருதலைக் கருதி அவனை நீங்கிச் செல்லுமாறு கூறுகின்றாள்.

நீ நீங்கு; கன்று சேர்ந்தார்கண் கதவு ஈற்றாச்
சென்றாங்கு வன்கண்ணள்; ஆய்வரல் ஓம்பு.
கலி. *116/8-9*

*1.5.4.* நெய்தற் கலியிலும் இத்தகைய திணை உவமை வந்துள்ளது. உப்பங்கழியில் மோதும் அலைகளைப் போலத் தன் நெஞ்சு தடுமாறி உழல்வதாகத் தன்நெஞ்சினை விளித்துத் தலைவன் கூறுவதாக அமைகிறது.

இருங்கழி ஓதம்போல் தடுமாறி
வருந்தினை அளியை எம்மடங்கெழு நெஞ்சே
-கலி. *123/18-19*

கடற்கரையில் உப்பினால் செய்யப்படும் பாவை உறைந்து நெகிழ்ந்து விடுவதுபோலத் தன் உயிர் உகுந்துவிடும் என்று தலைவன் கூறுகிறான்.

உப்பியல் பாவை உறையுற்றது போல
உக்குவிடும் என் உயிர் -கலி.*138/16-17*

## *1.6.* கதைகளை உவமையில் அமைத்தல்

சிறுகதை இலக்கியம் இருபதாம் நூற்றாண்டின் தனி வளர்ச்சி எனக் கருதப்படுகிறது உவமைகளியேயே சிறு

கதையை அமைத்துக் காட்டும் சிறப்புச் சங்க இலக்கிய உவமைகளில் காணப்படுகிறது. மேலும் தற்காலத்தில் உருவகக் கதைகள் ஒரு சில எழுத்தாளர்களின் உயர் படைப் பாகச் சிறந்து விளங்குகின்றன. இவ் உருவகக் கதைகள் சங்க இலக்கியத்தில் உள்ளுறை உவமத்திலும் இறைச்சிப் பொருளி லும் அமைந்துள்ளன. அவை பின்னர்த் தனித் தலைப்புகளில் காட்டப் பெறும். ஈண்டு உவமையில் அமைந்துள்ள சிறுகதை வடிவினை மட்டும் சுட்டிக்காட்டி அவற்றின் நயச்சிறப்பு எடுத்துக்காட்டப்படுகிறது.

இவ் உவமைக் கதைகளில் வாழ்க்கைத் தத்துவமும் அரசியல் நெறிகளும் இன்பதுன்ப உணர்வுகளும் அமைந் துள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். இவ் உவமைகளை நேரிடையாகப் பொருள் செய்திகளோடு தொடர்புபடுத்தாமல் விட்டால் இவையும் தனி உருவகக் கதைகளாக ஆகின்ற சிறப்பினை உடையன. இவற்றுள் ஒரு சில பின்வருமாறு:

*1.6.1.* சேற்றிலே தோன்றி வளர்கின்ற தாமரைச் செடி, இலைகளும் தோன்ற இடம் தருகின்றது. அதில் பூக்களும் அலர்கின்றன. தாமரை இலைகள் தோன்றியும் அவை யாருடைய நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெறுவ தில்லை. அதன் மலர் தன் நிறத்தாலும் பொலிவாலும் அழகை யும் கவர்ச்சியையும் தந்து பலராலும் பாராட்டப்படுகின்றது. புலவர்கள் தாமரைப் பூவை வியந்து பாராட்டுகின்றனர். இஃது உலக இயற்கை.

சேற்றிலே பிறக்கும் தாமரை இலைகளும் பூவும் பிறப்பால் வேறுபாடு அற்று விளங்குவனவாயினும் சிறப்பால் தனித்தன்மை எய்துகின்றன. இவ் உவமைச் செய்தி ஒரு சிறந்த தத்துவத்தை உணர்த்துகிறது. உலகில் பிறப்பவர் அனைவரும் உரையும் பாட்டும் பெற்றுப் புகழால் உயர்வு அடைகின்றனர் என்று கூற இயலாது. பலர் இருந்த இடம்தெரியாமல் மறைந்து விடுகின்றனர். தாமரைப் பூவைப்போலப் புகழும் பீடும் பெற்று வாழ்வோர் ஒரு சிலரே; தாமரை இலையைப் போல மறைந்து மாய்வோர் பலராவர். 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்னும் அரிய தத்துவத்தை இவ் உவமை விளக்குகின்றது.

சேற்றுவளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிரைகண் டன்ன
வேற்றுமை இல்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந்தோரை எண்ணுங் காலை
உரையும் பாட்டும் உடையோர் சிலரே
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே. -புறம்.27/1-6

இஃது உலகில் அனைவரும் தெரிந்து தெளிய வேண்டிய உண்மையாகும். தாமரையினுடைய தோற்றமும் வளர்ச்சியும் விளக்கமும் அழிவும் வாழ்க்கையின் விளக்கமாகக் காட்டப் பட்டுள்ளன.

1.6.2. அரசியல்நெறி வாழ்வார் எவ்வாறு குடிமக்களை நடத்தவேண்டும் என்பதற்கு ஓர் நிகழ்ச்சி உவமையாகத் தரப் பட்டுள்ளது. காய்ந்து முற்றிய நெல்லை அறுத்துக் கவளம கவளமாக யானைக்கு உண்ணத்தந்தால் மா அளவுள்ள நிலத்தில் விளைவதும் பல நாளுக்கு உணவாக அமைந்து பயனைத் தரும். நூறு வயல் அளவுள்ள நிலமாயினும் யானை தானே சென்று புகுந்து ண்டால் பாழ்படுத்துவதே மிகுதியாகும். இஃது உவமையாக அமையும் தொடர் நிகழ்ச்சி. இஃது உவமைக் கதையாக நின்று நீதியை உணர்த்தும் நிகழ்ச்சிகளைத் தாங்கி யுள்ளது. அறிவுடைய வேந்தன் நெறியறிந்து மக்களிடம் பொருளைப் பெறுவானேயாகில் மிக்க பொருளைப் பெறு வதோடு நாடும் நன்கு செழிக்கும். கீழ்மக்களோடு சேர்ந்து அன்பும் பண்பும் கெட மக்களிடை வற்புறுத்திப் பொருள் கொண்டால், யானை புகுந்த புலத்தைப் போலத் தானும் பயன்பெறான்; உலகமும் கெட்டுவிடும் என்று கூறப்படுகிறது.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறைவு இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு வாயினும் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்;
மெல்லியல் கிழவனாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான் உலகமும் கெடுமே.

-புறம்.184/1-11

**1.6.3.** முழந்தாள் அளவு வளர்ந்த சிறு யானைக் கன்று குறமகளின் குடிசையின் புறம் வந்து புதல்வரோடு பொருந்தி விளையாடி இனிமை செய்தது; அதுவே பின் அவர்களுடைய தினைப்புனத்தையே மேயத் தொடங்கித் துன்பம் விளைவித்தது. இவ்வாறு தலைவனின் நகை விளையாட்டு முன் இன்பமும் பின் துன்பமும் செய்தது எனக் கூறப்படுகிறது.

முழந்தாள் இரும்பிடிக் கயந்தலைக் குழவி
நறவுமலி பாக்கத்துக் குறுமகள் ஈன்ற
குறியிறைப் புதல்வரோடு மறுவந்து ஒடி
முன்நாள் இனியது ஆகிப் பின்நாள்
அவர் தினைப் புனம்மேய்ந் தாங்கு
பகைஆகின்று அவர் நகைவிளை யாட்டே.

-குறு. *394/1-6*

இச் சான்றுகள் மூன்றும் உவமை வடிவில் அமைந்த சிறுகதை நிகழ்ச்சிகளாகும். சிறுகதை வடிவம் அமைந்த இவ் உவமைகள், பல அரிய தத்துவங்களையும் நீதிகளையும் வாழ்வியலையும் உணர்த்துகின்றன. கதைகளின் நோக்கமே வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்துவதாகும். அந்நிலையில் இவ் உவமைக் கதைகள் அமைந்திருப்பது உவமஇயலில் காணப்படும் தனிச் சிறப்பாகும்.

## 1.7. பழமொழிகளை உவமையாக அமைத்தல்

பலரும் போற்றும் வாழ்க்கை உண்மைகளும் அனுபவச் செய்திகளும் பழமொழிகளாக இயங்குகின்றன. அத்தகைய பழமொழிகள் ஒரு சில உவமச் செய்திகளுள் இடம் பெற்றுள்ளன.

**1.7.1.** வழிபடும் தெய்வத்தைக் கண்ணிலே கண்டது போல என்பது பழமொழியாகும். கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல என்னும் இக்காலப் பழமொழியோடு இஃது ஒத்து விளங்குகிறது.

வழிபடு தெய்வம் கட்கண்டா ஆங்கு. -நற். 9-2

**1.7.2.** ‘வெந்த புண்ணில் வேல் நுழைந்தது போல, என்னும் பழமொழி இப்பொழுதும் வழங்கும் ஒன்றாகும். இப் பழமொழி சங்க இலக்கிய உவமையில் வழங்கி வந்துள்ளது[1]

1. நற். 97/1-4; கலி. 83/30-31; 84/30; 120/18

அழுந்துபடு விழுப்புண் அழும்புவாய் புலரா
எவ்வ நெஞ்சத்து எஃகு எறிந்தாங்கு.

-நற். 97-1-2

1.7.3. 'குவளை பறிப்போர் நீர் வேட்கையுறுதல் போல, என்பது எளில் கிடைக்கும் என்னும் பொருளைத் தருவது. இக்கருத்துடைய பழமொழி உமவச் செய்தியில் இடம் பெற்றுள்ளது. இதே போல மற்றோர் தொடரும் வந்துள்ளது. 'ஆம்பல் குறுநர் நீர்வேட்டது போல' என்பது அது.

குவளை குறுநர் நீர்வேட் டாங்கு -நற் 332/2

ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கு -குறு.178/3

1.7.4. பால் நிலத்து உகுவதால் கறப்போருக்கும் பயன் இல்லை; கன்றுக்கும் பயன்படாது; வீணாகப்போகும். இக் கருத்தினைக் கீழ்வரும் தொடரில் காண முடிகிறது.

கன்றும் உண்ணாது கலத்தினும் படாது
நல்லான் தீம்பால் நிலத்துஉக் காஅங்கு

-குறு. 27/1-2

1.7.5. கையில்லாத ஊமன் கண்ணில் காக்கும் வெண்ணெய் உணங்கல் பாழாகிவிடும் என்னும் கருத்துக் கீழ்வரும் உவமையில் அமைந்துள்ளது.

ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போல. குறு. 27/1-2

1.7.6. கண்ணில்லாத ஊமன் கடலில் பட்டால் தானும் தப்பி வர இயலாது; பிறர் உதவியும் நாட இயலாது. இக்கருத்துக் கீழ்வரும் உவமையில் அமைந்துள்ளது.

கண்ணில் ஊமன் கடற்பட்டா அங்கு.

-புறம் 238/16

1.7.7. பெருந்தேனைக் கண்ட இருகாலுமற்ற முடவன் கையிலிருந்த சிறு குடையைக் கொண்டு எட்டிப் பிடித்து அதனைப் பறித்துச் சுவைப்பது உவமச் செய்தியில் இடம் பெற்றுள்ளது. இஃது இக்காலத்தில் வழங்கும் 'முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுதல் போல' என்னும் பழமொழி யோடு ஒத்து விளங்குகிறது.

குறுந்தாட் கூதலி ஆடிய நெடுவரைப்
பெருந்தேன் கண்ட இருங்கால் முடவன்
உட்கைச் சிறுகுடை கோலிக் கீழிருந்து
சுட்டுபு நக்கியாங்கு -குறு. 60/1-4

*1.7.8.* தச்சன் செய்து கொடுத்த சிறு தேரைச் சிறுவர்கள் ஊர்ந்து இன்புறார் ஆயினும் அதனைத் தள்ளி இன்பறுவர என்பது குழந்தைகள் மனநிலையைக் கொண்டு உணர்த்தும் பழமொழிச் செய்தியாகும்.

தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்து இன்புறா அர் ஆயினும் கையில்
ஈர்த்து இன்புறுஉம் இளையோர் போல -குறு. 61/1-3

*1.7.9.* 'புலி வலையில் நரி அகப்படுதல் போல' என்பது பழமொழிச் செய்தியாகும். பெரிய புலியைக் கொள்வதற்காக வைக்கப்பட்ட வலையில் வழியில் காரணமில்லாமல் செல்லும் குறுநரி அகப்பட்டதுபோல் என்னும் செய்தி உவமையில் அமைந்துள்ளது.

இரும்புலி கொள்மார் நிறுத்த வலையுள் ஓர்
ஏதில் குறுநரிபட்டற்றால் -கலி. 65/24-25

*1.7.10.* 'கொற்றிக்குப் பேய் நொடித்தல்' என்பது பழமொழியமைப்பைக் கொண்டதாகும். ஏற்கனவே எல்லாம் தெரிந்த காடுறை தெய்வமாகிய கொற்றவைக்குப் பேய் சொல்லிக் கொடுத்தல் என்பது மிகைபடக் கூறலாகும். இச் செய்தி உவமத்தில் இடம்பெற்றுள்ளது.

பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு
-கலி.86/8

துணங்கை அம்செவிக்கு அணங்குநொடித் தாங்கு
-பத். 4/459

*1.7.11.* இரு பக்கமும் பற்றி எரியும் நெருப்புக்கு இடையே வருந்தி ஒரு பக்கமும் செல்ல இயலாத எறும்பின் நிலை உவமச் செய்தியில் இடம் பெறுகிறது. 'இருதலைக் கொள்ளி எறும்பு போல' என்னும் பழமொழி நாட்டில் இப்பொழுதும் வழங்கி வருகிறது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி
ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்.

-அகம். 339/9-10

*1.7.12.* 'தூங்குகின்ற புலியைத் தட்டி எழுப்புவது போல' என்னும் பழமொழி நாட்டில் வழங்கி வருகிறது. அதனை ஒத்த பழமொழி உவமச் செய்தியில் அமைந்துள்ளது. தூங்கும் புலியை இடறிய குருடன் நிலை உவமையில் கூறப் பட்டுள்ளது.

துஞ்சுபுலி இடறிய சிதடன் போல. -புறம். 73/7

*1.7.13.* 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பது நாட்டில் வழங்கும் பழமொழி. அதை ஒட்டிய கருத்தாகப் புலி பார்த்து ஒற்றிய களிறு தவறுமேயானால் அஃது எலியைப் பார்த்து ஒற்றாது என உவமச் செய்தியாகக் கூறப்படுகிறது.

புலிபார்த்து ஒற்றிய களிறுஇரை பிழைப்பின்
எலிபார்த்து ஒற்றா தாகும். புறம். 257/16-17

### *1.8.* உவமைகளில் நகைச்சுவை அமைத்தல்

உவமைச் செய்தியில் நகைச் சுவையைக் காணும் மன இயல்பு அவர்கள் அமைக்கும் ஒருசில உவமைகளில் காணப் படுகிறது.

*1.8.1.* காற்றால் அலைப்புண்ணும் ஆம்பல் மலர் தாமரையில் படிதல் அரசி சினந்திருக்கும் பொழுது அவள் எதிரே உள்ள பணிப்பெண்கள் உடனே கை தொழுது வணங்குவதற்கு உவமைப்படுத்தப்படுகிறது.

சுடர்த்தொடிக் கோமகள் சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாங்கு
உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும். நற். 100/1-4.

*1.8.2.* பாணன் தலைவனுக்காகப் பிரிந்து தலைவியின் வீட்டுமுன் இறைப்பின் ஓலையைத் தொட்டுக் கொண்டு ஏங்கி நிற்கின்றான். இந்நகைச்சுவை நிகழ்ச்சி அது பெறும் **உவமைச்** செய்தியால் மேலும் சிறப்பு அடைகிறது. அவ் **உவமையில்** நுட்பமான நகைச்சுவை அமைந்துள்ளது. இல்லந்**தோறும்**

சென்று பிச்சை ஏற்கும் யானைக்கு அப்பாணனின் நிலை உவமிக்கப்படுகிறது.

பிச்சை சூழ் பெருங்களிறு போல எம்
அட்டில் ஓலை தொட்டனை நின்மே. -நற். 300/11-12.

1.8.3. வண்டு நாவற்பழத்தைத் தன் இனம் எனக் கருதி மொய்க்கின்றது. அவ்வண்டினை நாவற்பழம் என நண்டு ஒன்று கருதி அதனைக் கவ்வுகின்றது. வண்டு இடும் ஓலம் கேட்டு நாரை நண்டினைப் பிடிக்க அது பிடியைத் தளர்த்தி விடுகின்றது. இவ்வாறு ஒன்றை ஒன்று தவறாக உணரும் செய்திகளில் உவமையும் நகைச்சுவையும் ஒன்றை ஒன்று பின்னிக் கொண்டு செல்கின்றன.

புன்கால் நாரை பொதிப்புற இருங்கனி
கிளைசெத்து மொய்த்த தும்பி பழம்செத்துப்
பல்கால் அலவன் கொண்ட கோட்கூர்ந்து
கொள்ளா நரம்பின் இமிரும் பூசல்
இரைதேர் நாரை எய்திய விடுக்கும். -நற். 35/1-6.

1.8.4. அரசனிடமிருந்து பெற்று வந்த பரிசில் பொருள்களில் உயர்ந்த அணிகலன்களைப் புலவர் தம் சுற்றத்தனரிடம் தர அவர்கள் அவற்றை அணிந்துகொள்ளத் தெரியாமல் மாற்றி அணிந்துகொள்கின்றனர். இக்காட்சி இராமாயணத்தில் வரும் நகைச்சுவை பொருந்திய காட்சிக்கு உவமிக்கப்படுகிறது. சீதையின் அணிகலன்களை வழியில் கண்டெடுத்த குரங்குகள் அவற்றை அணிந்துகொள்ளத் தெரியாமல் மாற்றி அணிந்து கொண்டன. இந் நகைச்சுவை பொருந்திய காட்சி உவமையில் இடம்பெற்று அதற்கு ஏற்ற வகையில் மற்றொரு நகைச்சுவை நிகழ்ச்சியைப் பொருளாகப் பெற்றுள்ளது.

கடுந்தெறல் இராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை அரக்கன் வவ்விய ஞான்றை
நிலஞ்சேர் மதர் அணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை இழைப்பொலிந் தா அங்கு
-புறம். 378/18-21.

1.8.5. புலியோடு பொருத யானை அதே நினைவில் உறங்குகிறது. புலி தன்னைத் தாக்க வருவதுபோலக் கனவு காண்கின்றது உடனே விழித்தெழுந்து அருகிலிருக்கும்

வேங்கை மரத்தைப் புலி என நினைத்துத் தாக்கத் தொடங்கு கிறது. தன் சினம் தணிந்தபிறகு தன் தவற்றை உணர்ந்து நாணித் தலையைக் கவிழ்த்துக் கொள்கிறது. இது முழுவதும் நகைச் சுவை கலந்த நிகழ்ச்சியாகும்.

கொடுவரி தாக்கி வென்ற வருத்தமொடு
நெடுவரை மருங்கில் துஞ்சும் யானை
நனவில் தான்செய்தது மனத்தது ஆகலின்
கனவில் கண்டு கதும்என வெரீஇப்
புதுவதாக மலர்ந்த வேங்கையை
அதுஎன உணர்ந்து அதன் அணிநலம் முருக்கிப்
பேணா முன்பின் தன்சினம் தணிந்து அம்மரம்
காணும் பொழுதில் நோக்கல் செல்லாது
நாணிஇறைஞ்சும் நன்மலை நன்னாட. -கலி. 49/1-9.

1.8.6. கூனி ஒருத்தியும் குறளன் ஒருவனும் ஒருவரை ஒருவர் எள்ளி உரையாடும் உரையாடலில் அவர்கள் அமைக்கும் உவமைகளால் எள்ளல் சுவை மிகுகிறது. அவ் எள்ளல் சுவை நகைச்சுவைக்குக் காரணமாக அமைகிறது. நாடகப் பாங்கிப் அவர்கள் உரையாடல்கள் அமைந்துள்ளன. அவற்றில் அவர்கள் தோற்றமும் உருவமும் நகைச்சுவைப் பொருள்கள் ஆகின்றன. அவற்றை மிகுதிப்படுத்த உவமைகள் உதவுகின்றன. அவள் தோல் உரிக்கப்பட்ட கொக்குக்கு உவமைப்படுத்தப் படுகின்றாள். அதில் அவள் கூனிக் குறுகிய வடிவமும் முதுகுப்புறம் எழும்பிய நிலையும் சுட்டப் படுகின்றன.

உக்கத்து மேலும் நடுஉயர்ந்து வாள்வாய
கொக்கு உரித்தன்ன கொடுமடாய். -கலி. 94/17-18.

அக்குறளன் வல்லுப் பலகையை எடுத்து நிறுத்தி வைத்ததுபோல விளங்குவதாகக் கூறப்படுகிறது.

வல்லுப்பலகை எடுத்து நிறுத்தன்ன
கல்லாக் குறள. -கலி.94/13-14.

மற்றும் நகைச்சுவையின் உச்சநிலை அவன் யாமை எடுத்த நிறுத்தி வைத்ததுபோலத் தோள் இரண்டும் வீசி நடக்கும் செய்தியில் குறிப்பிடப்படுகிறது.

யாமை எடுத்து நிறுத்தற்றால் தோள் இரண்டும் வீசி
யாம் வேண்டேம் என்று விலக்கவும் எம்வீழும்
காமர் நடக்கும் நடைகாண். -கலி.94/31-33.

1.8.7. சிலேடை அமைப்பதாலும் நகைச்சுவையை அமைக்க முடிகிறது. சிலேடைப் பொருளே சொல்வழக்கில் நயம் விளைவிப்பதற்கும், அதன் வழி நுட்பமான நகைச் சுவையை உண்டாக்குவதற்கும் காரணம் எனக்கூறலாம். அத்தகைய நகைச்சுவை உவமச் செய்தியில் அமைந்துள்ளது: வேங்கைமரத்திற்கும் புலிக்கும் உள்ள உவமத் தொடர்பை ஒட்டிக் கீழே வரும் தொடர் அமைக்கப்படுகின்றது.

வேங்கையும் புலி ஈன்றன. -நற். 399/1.

வேங்கைமரமும் பூக்களை ஈன்றன (புலி-பூ) என்ற ஒரு பொருளும், வேங்கைமரமும் புலிக்குட்டியை ஈன்றது என்ற நுட்பப்பொருளும் இதில் அமைந்துள்ளன.

## 1.9. தனித்தன்மை வாய்ந்த உவமைகள்

மேற்காட்டப்பட்ட உவமைகள் பெரும்பாலும் அக் காலப் பொதுமரபினை உணர்த்துகின்றன. பல புலவர்கள் இம்மரபுகளைப் போற்றி எடுத்தாண்டுள்ளனர். ஒருசில உவமை கள் புலவர்களின் தனிப் படைப்பாகும். அவை அவர்களின் தனித்திறமையையும், உவமைகளின் சிறப்பையும் காட்டு கின்றன. அவை அவர்கள் சொல்லாற்றலையும் புலப்படுத்து கின்றன. அவ் உவமைகளைப் படைத்த புலவர்களைப் பிற்காலப் புலவர்கள் போற்றிப் பாராட்டினர். அதனால் அவ்வுவமைகளைப் படைத்த புலவர்களின் பெயர்களையே அவர்கள் தீட்டிய உவமைகளைக் கொண்டு உணர்த்தத் தொடங்கினர். அவை அவர்களுக்குக் காரணப் பெயர்களாக அமைந்துவிட்டன. அவர்களின் இயற்பெயர் மறைந்து அவையே நிலைத்துவிட்டன. அவர்கள் எடுத்தாண்டுள்ள உவமைகளை வேறு எவரும் எடுத்தாளவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். அப்பெயர்கள் ஈண்டு அகரவரிசையில் தரப்படுகின்றன.

1.9.1. அணிலாடு முன்றிலார்: 'அணிலாடு முன்றில் புலம்பில் போல' என்னும் உவமை தலைவியின் பிரிந்த நிலையில் அவள் வெறிச்சிட்ட உள்ளத்திற்கு உவமையாக

வந்துள்ளது. இதுவே இப்பெயர் அவர் பெறுவதற்குக் காரண மாகியது.

அத்தம் நண்ணிய அங்குடிச் சீறூர்
மக்கள் போகிய அணிலாடு முன்றில்
புலம்பில் போலப் புல்லென்று
அலப்பென் தோழி அவர் அகன்ற ஞான்றே.

-குறு. 41/3-6.

1.9.2. ஊட்டியார்; நிறம் ஊட்டியது போன்று அசோகத்தின் தளிர்களும் ஊன்புரள் அம்பும் இருந்தன என்பது அவர் காட்டும் சொல்வோவியமாகும். ஒரே உவமையை இரண்டு பொருள்களுக்கு அவர் அமைத்திருப்பது அவர் தனிச் சிறப்பு என்பது தெரிகிறது.

ஊட்டியன்ன ஒண்தளிர்ச் செயலை, -அகம். 68/5.

ஊட்டி யன்ன ஊன்புரள் அம்பு. -அகம் 388/24.

1.9.3. ஓர் ஏர் உழவனார்: ஈரம்பட்ட செம்மையான பசும்புலத்தில் உழ விரும்பும் உழவன் ஒரே ஏர் மட்டும் வைத் திருக்கின்றான். அவன் ஆர்வமோ பெரிது; அவன் முழுவதும் செயல்பட முடியாது; அதைப் போலத் தலைவியின் நிலை இருந்தது என்று கூறப்படுகிறது.

ஈரம் பட்ட செவ்வி பைம்புலத்து
ஓர் ஏர் உழவன் போல
பெருவிதுப்பு உற்றன்றால் நோகோ யானே.

-குறு.131/4-6.

1.9.4. கங்குல் வெள்ளத்தார் : இப்பெயர் உவமையால் மட்டும் அமையவில்லை; உவமிக்கப்படும் பொருளாலும் இப் பெயர் சிறப்புப் பெற்றுள்ளது.

கங்குல் வெள்ளம் கடலினும் பெரிதே -குறு. 387/5.

கங்குல் என்பது வெள்ளமாக உருவகிக்கப்பட்டிருப்பது இதன் தனிச் சிறப்பாகும்.

**1.9.5.** கயமனார்: நெய்தல் மலர் கயம் மூழ்கும் மகளிரின் கண்களைப் போல விளங்குகின்றது என்ற சொல்லோ வியத்தைப் படைத்தார். ஆதலால் இவ்வுவமை இவ்வகையில்

சிறப்புப் பெற்றுள்ளது. நெய்தல், குளத்தில் இருந்து காட்சி அளிக்கும் மலராகும். அதற்கு ஏற்பக் கயம் மூழ்கு மகளிரின் கண்கள் உவமிக்கப்பட்டுள்ளன. இதுவே இவ் உவமையின் தனிச் சிறப்பு எனலாம்.

கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம் மூழ்கு மகளிர் கண்ணின் மானும்.

-குறு. 9/4-6.

1.9.6. கல்பொரு சிறு நுரையார்: தலைவி தன் காதலனைக் காணாவிட்டால் மிக்க தனிமையால் வரும் துன்பத்தால் கல்பொறு சிறுநுரை போல மெல்ல மெல்ல இல்லாமல் மறைந்துவிட நேரிடும் என்று கூறுவதாக அமைந்த கூற்றில் இவ் உவமை அமைந்துள்ளது. இத்தனிக்காட்சி அப்புலவர்க்கே உரிய சிறப்பு ஆகும், எங்கோ எப்பொழுதோ பார்த்த கல்லில் மோதுகின்ற சிறுநுரை இல்லாமல் போகிய இக்காட்சி அவர் நினைவில் நின்று தலைவியின் உள்ளத்திற்கு உவமையாக நின்றது.

யாம்எம் காதலர்க் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய பெருநீர்க்
கல்பொரு சிறுநுறை போல
மெல்ல மெல்ல இல்லா குதும்மே. -குறு.209/3-6.

1.9.7. கவை மகனார்: தோழி ஒருத்தி தலைவனை நோக்கி அவன் நயம் உடைமையால் தலைவியிடம் வருகின்றான் என்றும், தலைவி தன் மடமை காரணமாக மகிழ்கின்றாள் என்றும், இவற்றிற்கு இடையில் தான் கவை மகவு நஞ்சு உண்டதைப்போல மனவேதனை பெறுவதாகவும் கூறு கின்றாள். தோழியின் மனவேதனைக்கு கவை மகவு நஞ் சுண்ணும் செய்தி உவமையாக அமைகின்றது. அச்செய்தி மிக அரிய செய்தியாக அமைந்துள்ளது.

...நீ நின்
நயனுடை மையின் வருதி இவள்தன்
மடனுடைமையின் உவக்கும்யான் அது
கவைமக நஞ்சுஉண் டாஅங்கு
அஞ்சுவல் பெருமஎன் நெஞ்சத் தானே.

- குறு.324/3-7.

*1.9.8.* கழைதின்யானையார்: முங்கிற் கழையைத்தின்னும் யானையின் காலில் அகப்பட்ட வலிமை பொருந்திய திண்ணிய முளையைப் போலப் பகைவரை அழிக்கும் ஆற்றல் தன் னிடத்து உள்ளதாகக் கூறும் வஞ்சினக் கூற்றில் கழையைத் தின்னும் யானையின் செயல் உவமையாக அமைக்கப் பெற்றுள்ளது.

கழைதின் யானைக் காலகப் பட்ட
வன்திண் நீண்முளை போலச் சென்று அவன்
வருந்தப் பொரேஎன் ஆயின். -புறம்.*73/9-11.*

*1.9.9.* கால்எறி கடிகையார்: கரும்பின் அடிப்பகுதியில் வெட்டிய துண்டத்தை உண்டாற்போன்று சுவையையுடைய வெள்ளிய பல்லினிடத்தே ஊறிய குற்றமற்ற இனிய நீர் எனத் தலைவியின் வாயிதழ்ச் சுவை பாராட்டப்படுகிறது இதில் 'கரும்பின் கால் எறிகடிகை' என்பது உவமையாக வந்துள்ளது. இதுவே அப்புலவரின் பெயர்க்குக் காரணமாகியது.

கரும்பின்
கால்உறி கடிகைக் கண் அயின் றன்ன
வாலெயிறு ஊறிய வசைஇல தீம்நீர்.
- குறு.*267/2-4.*

*1.9.10.* குப்பைக் கோழியார்: தலவைி தான் உற்ற நோயினின்று விடுதலை பெறுவதற்கு இல்லை என்றும், அந் நோயாலேயே தான் அழிய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூற விரும்புகின்றாள். இந்நிலைக்குக் குப்பை மேட்டில் விலக்குவார் இல்லாமல் பொருது தாமே அழியும் கோழிப் போரினை உவமையாகத் தருகின்றார். இக் காட்சி அரிய காட்சியாகும். இதைப் பொருத்திக் காட்டியது அதைவிடச் சிறப்பு மிக்கது எனக் கூறலாம்.

குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியின் அல்லது
களைவோர் இலையான் உற்ற நோயே. - குறு. *305/6-8.*

*1.9.11.* குறியிறையார்: தலைவனின் நகை விளையாட்டு முன் இன்பம் செய்து பின் துன்பம் செய்தமைக்கு, யானைக்கன்று முன் குறமகள் வதிந்த குறியிறை ஆகிய முற்றத்தின் கண் அவள் புதல்வரோடு பொருந்தி ஆடி அதுவே

பின் பெரிதாகி அவள் தினைப்புனம் மேய்ந்ததைப் போல இருந்தது என்று கூறப்படுகிறது. உவமையில் வரும் செய்தி யாகிய குறியிறை என்பது சிறப்புத் தொடராக அமைந்து விட்டது. இது கதைபொதி உவமைக்கு முன் எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டுள்ளது.[1]

*1.9.12.* கூவல் மைந்தன் : கூவலாகிய கிணற்று நீரில் பசுவின் கன்று நீந்திக் கரையேறாமல் தவிக்கும் நிலையைக் கண்டு ஊமை ஒருவன் வாய் விட்டுச் சொல்ல முடியாமல் தவிக்கும் நிலையைத் தான் பெற்றிருப்பதாக ஒரு தலைவி கூறுகின்றாள். பேசும் வாய்ப்பைப் பெற்றமனிதனும் ஊமையாக இருக்கும் நிலையைக் காட்ட உயர்திணை ஊமன் என்று கூறப்பட்டுள்ள தன்மை இவ் உவமையை மேலும் சிறப்புடையதாக ஆக்குகின்றது. கூவலருகில் நிற்கும் மைந் தனின் செய்தி உவமையாக வந்திருப்பது இவ் உவமையின் தனிச்சிறப்பு ஆகலின் அத்தொடராலேயே இப் புலவர் அழைக்கப்பெற்றுள்ளார். இது முன்னர் இத்தலைப்பில் நடைபெறா நிகழ்ச்சி உவமையாதலுக்கு எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது.[2]

*1.9.13.* செம்புலப் பெயல் நீரார்: தலைவனும் தலைவியும் உள்ளத்தால் ஒன்று ஆகினர். அவன் தம் நெஞ்சு ஒன்றாகக் கலந்த நிலையை வானத்தில் பெய்யும் மழைநீர் வையகத்தில் விளங்கும் செம்புலத்தில் இயைந்து கலக்கும் நிலைக்கு உவமப் படுத்துகின்றான். எங்கோ பிறக்கும் நீர் எங்கோ உள்ள நிலத்தில் வந்து இயைவது முன்பின் உறவு அறியாத இருவர் நெஞ்சு ஒன்றாகக் கலக்கும் உயர் நிலைக்கு உவமையாகி உள்ளது. அச்செம்புலப் பெயல் நீர் அழகிய சொல்லோவியமாக அமைந்துவிட்டது.

செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே. -குறு.40/4-5.

*1.9.14.* தனிமகனார்: தலைவனைப் பிரிந்த தலைவி தான் மட்டும் வீட்டிலிருந்து தனித்து உணவு உண்டு உடம்பை மட்டும் பேணும் தனிமை நிலையை வெறுத்துக் கூறும் பொழுது, வெஞ்சின வேந்தன் பகையால் கலக்கி அழித்த ஊரில்

---

1. இதே தலைப்பில் பகுதி *1.6.3.* (குறு. *394/6*)
2. இதே தலைப்பில் பகுதி *1.3.3.* (குறு. *224/3-*( ).

'வாழ்வோர் போன பிறகு அப்பாழ்பட்ட இடத்தைக் காத்திருந்த தனிமகனுக்கு உவமப் படுத்துகின்றாள். இத் தனிமகன் புலவரின் உவமைப் பொருளாக அமைந்தது தனிச் சிறப்பாகும்.

ஈண்டொழிந்து
உண்டல் அளித்தென் உடம்பே விறற்போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே. -நற். 135/1-10.

1.9.15. தேய்புரிப் பழங்கயிற்றனார்: கடமையுணர்வு ஒரு புறமும் காதல் நினைவு ஒரு புறமும் ஈர்க்க வீடு திரும்ப விழையும் தலைமகனின் மன நிலையை இவ்உவமை சித்திரிக்கப் பயன்படுகிறது. இரண்டு களிறுகள் இரண்டு பக்கம் எதிர் எதிராகப் பற்றி இழுக்க இடையில் தேய்ந்து விட்ட பழங்கயிறு அற்று விழும் நிலையை அடைவது. இவ்விரண்டு உணர்வுகளால் அலைமோதுண்டு அழியும் அவன் உடம்புக்கு உவமப்படுத்தப்படுகின்றது.

ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவதுகொல் என் வருந்திய உடம்பே
-நற். 284/9-11.

1.9.16. பதடி வைகலார்: தலைவியின் தோள்களிலே துயின்ற நாள்களே வாழ்ந்த நாள்கள் எனப் போற்றப்படும். ஏனையநாள் எல்லாம் வீணாகக் கழித்த நாள்களாகும். அவை உள்ளீடு இல்லாத கருக்காயைப் போன்ற நாள்கள் என உவமிக்கப்படுகின்றன.

எல்லாம் எவனோ பதடி வைகல்
....................
பசுமுகைத் தாது நாறு நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாள் இவண் வாழு நாளே -குறு.323/1,5-7.

1.9.17. மீனெறி தூண்டிலார்: காட்டுவாழ் யானை வளைந்து இழுத்துப் பின்னர்க் கைவிடும் பசிய மூங்கில் மீன் எறி தூண்டிலை நிகர்ப்பதாக ஓர் உவமை அமைக்கப்படுகிறது. மீனெறி தூண்டிலின் வளைவும் திடீரென்று அது மேல் ஓங்கி எழுதலும் ஒரு தனிக்காட்சியாகும். அக்காட்சி யானை கழையை

வளைத்து உடனே விடும் காட்சிக்கு உவமையாக வந்திருப்பது தனியழகாகும்.

கான யானை கைவிடு பசுங்கழை
மீன் எறி தூண்டிலின் நிவக்கும். -குறு. 54/3-4.

*1.9.18.* **விட்ட குதிரையார்:** மீனெறி தூண்டிலுக்கு உவமிக்கப்பட்ட மூங்கில் மேல் எழும் அதே காட்சி. தூண்டிவிட்ட குதிரை மேல்நோக்கி வேகமாகப் பாய்தலுக்கு உவமை செய்யப் பட்டுள்ளது.

விட்ட குதிரை விசைப்பின் அன்ன
விசும்பு தோய் பசுங்கழை -குறு. 74/1-2.

*1.9.19.* **வில்லக விறலினார்:** தலைவனோடு தான் இருந்தால் இரண்டு உடலைப் பெற்றிருப்பதாகவும். அவனோடு துயின்றால் வில்லை அகப்படுத்திய விரல்களைப் போலப் பொருந்திக் கவவுக்கை நெகிழாமல் வாழும் வாழ்வைப் பெற்றதாகவும் கூறுகின்றாள் தலைவி. அவன் தன் அகம்ற சேர்ந்தால் தனித்துப் பெறும் ஈர் உடம்போடு விளங்குவதாகவும் கூறுகின்றாள். ஈண்டு கவவுக்கை நெகிழாமல் இருத்தற்கு வில்லினைச் செறியப் பிடிக்கும் விரல்கள் உவமையாயின.

... தண்துறை ஊரனோடு
இருப்பின் இருமருங் கினமே; கிடப்பின்
வில்லக விரலின் பொருந்தி அவன்
நல்லகம் சேரின் ஒருமருங் கினமே. -குறு. 370/2-5.

*1.9.20.* **விழிக்கண் பேதையார்:** மருண்ட விழியோடு கூடிய இளமையான மான்கூட்டம் ஓட என்று கூறும் வருணணைப் பகுதியில் அதனைப் பேதை என்று கூறிய உருவகம் அழகிய சொல்லோவியமாக விளங்குகிறது. மடமான் விழிக்கண் பேதை என்னும் தொடர் கவர்ச்சி மிக்கதாக உள்ளது. இத்தொடரைப் படைத்த ஆசிரியரின் பெயர் விழிக்கண் பேதையார் என்று நிலைபெறலாயிற்று.

...மடமான்
விழிக்கண் பேதையொடு இனன் இரிந் தோட.
-நற். 242/8.

*1.9.21.* ஈண்டுத் தரப்பட்டுள்ள பெயர்களுள் கழைதின் யானையார் என்னும் பெயர் புறம் 73ல் வரும் தொடரை

அடிப்படையாகக் கொண்டு அமைந்த ஒன்றாகும். எனினும் அப்பெயர் கழைதின் யானையார் என்பவரால் பாடப்பட்டதாக அடிக்குறிப்புச் செய்திதரவில்லை; அப்பாடல் சோழன் நலங் கிள்ளி என்பவனால் பாடப் பெற்றது என்று அடிக்குறிப்புச் செய்தி கூறுகிறது. புறம் 204 கழைதின் யானையார் பாடியது என்று தரப்படுகிறது. இது குறித்து டாக்டர் மொ.அ.துரையரங்க சாமி அவர்கள் 'சங்ககாலச் சிறப்புப் பெயர்கள்' என்னும் ஆய்வு நுலில் இரண்டு கருத்துகளைத் தருகின்றார். இரண்டு பெயர் களும் ஒரே அரசனைக் குறிப்பதாகும் என்பது அவர் கருத்தாகும்.

இதே ஆசிரியர் கழைதின் யானை என்னும் தொடர் வர மற்றொரு பாடலும பாடியிருக்கலாம் என்றும் அது கிடைக் காமல் மறைந்து போயிருக்கலாம் என்றும் கூறுவர்.[1] எப்படி யோ பெயரும் பாடற் செய்தியும் முறை பிறழ்ந்து விட்டன என்பது மட்டும் குறுப் பிடத்தக்க செய்தியாகும்

## *1.10.* மனநிலையைச் சித்திரிக்கும் உவமைகள்

மாந்தரின் பல்வேறு மனநிலைகளைக் கூர்ந்து அறியும் திறன் ஒரு சில உவமைகளில் வெளிப்படுகின்றது. மன நிலையை உவமச் செய்திகளில் வெளிப்படுத்துவது மாந்தரை நன்கு அறிந்து காட்டுவதால் அது கவிஞரின் திறனை வெளிப் படுத்துகின்றது. அவை உவமை நயங்களாக அமைகின்றன.

*1.10.1.* கடன் பெற்றுத் துன்புறுவோர், மிகை படச் செலவு செய்து வருந்துபவர், கட்குடியர், சூதாடுவார், பொதுமக்கள் மனநிலை ஆகிய இவை கலித்தொகையில் அழகாகச் சித்திரிக்கப்படுகின்றன. கடன் பெறும்பொழுது மலர்ச்சியோடு பெறுதலும் அவன் திருப்பிக் கேட்கும் பொழுது மனம் சாம்புதலும்[2] செலவாளி செல்வரை அணுகும்பொழுது வாய்விட்டுக் கேட்டுப்பெற நாணுதலும்[3] அரசு ஆணையாளர் கள் மக்களிடம் கேட்கும் வினாக்களுக்குத் தலையசைத்து ஒப்புதல் தெரிவித்தலும், கள்ளரைக் காணாதவிடத்தும் அவர்களுக்காகத் தாம் கண்டதாக ஒப்புதல் தெரிவித்தலும்,[4] கடன் கொடுத்தவன் கடன் பெற்றவனைப் பார்க்கும்பொழுது

1. சங்ககாலச் சிறப்புப்செயர்கள். மொ.அ.துரை அரங்கசாமி, பக். 48-50.
2. கலி. 22/1-4.
3. கலி. 61/1-5.
4. கலி. 81/25-27.

அந்நினைவு தலைகொளப் பார்த்தலும், கட்குடியன் குடித்த மயக்கத்தில் தான் குடித்து விட்டதை வாய்விட்டுக் கூறலும்,[2] சூதாடுபவன் தான் நினைத்த ஆட்டம் வெற்றி பெறும் பொழுது மகிழ்தலும் இழக்கும்பொழுது வருந்துதலும்[3].

மனநிலையைச் சித்திரிக்கும் நுட்ப அழகுகள் வாய்ந்த உவமைகளாம். இம்மனநிலையைப் புலப்படுத்தும் உவமைகள் கலித்தொகையிலேயே மிகுதியாக வந்துள்ளன. ஆறு இடங்களில் வந்துள்ளன என்பது மேலே காட்டப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு சான்றுகள் புறத்திலும் பரிபாடலிலும் அமைந்துள்ளன.

*1.10.2.* ஒரு குறிப்பிட்ட இடச் சூழ்நிலையில் வாழ்பவர், அவர்கள் வாழும் சூழ்நிலையில் இருப்பதையும் நடப்பதையும் கவனிப்பதில்லை. பாரியின் பறம்பு மலையில் உள்ள பனிச் சுனைத் தண்ணீர் அங்கு வாழ்வோர் கவனித்துச் சிறப்பிப்பது இல்லை என்ற செய்தி புறநானூறு தரும் உவமையில் காணப்படுகிறது.[4]

*1.10.3.* காதலர் இருவர் ஒருவரையொருவர் தழுவி அணைத்துக் கொள்ளும் பொழுது தம் மன வலிவை இழந்து அவ் உணர்வுக்குத் தம்மை முழுவதும் அளித்து விடுகிறார்கள் என்ற நுட்பமான மனநிலை பரிபாடலில் உணர்த்தப்படுகிறது.[5]

மேற்காட்டிய சான்றுகள் மாந்தரின் செயல்களையும் மன நிலைகளையும் காட்டும் நயங்கள் பெற்றுச் சங்க இலக்கிய உவமைகளுக்குச் சிறப்புத் தருகின்றன.

2. சங்க இலக்கிய உவமைகள் சொல்லியலாலும் பொருள் அமைப்பாலும் தனி மரபுகள் பெற்று விளங்கின, அடுத்த தலைப்பில் பொருள் மரபுகள் காட்டப்படுகின்றன. உவமைகள் ஒவ்வொன்றும் தனித்தனி நயங்கள் கொண்டவை எனினும் அவற்றுள்ளும் ஒரு சில ஒற்றுமைப் பண்புகள் அமைந் துள்ளன. அவையே மேலே காட்டப்பட்டன. அதனால் ஏனைய உவமங்களில் நயங்கள் இல்லை என்பது கருத்து ஆகாது. கற்கின்றவர் காணும் மனநிலைக்கு ஏற்ப உவமை நயங்கள் விரிந்து அமையும் என்ற கருத்தை ஏற்றுக் கொண்டு அனைவரும் கொள்ளத்தக்க உவமை நயங்களாக மேலே சில காட்டப்பட்டன.

1. கலி. 108/22-23. 2. கலி. 115/1-3.
3. கலி. 136/5-16 4. புறம். 176/9-10 5. பரிபாடல். 6/20-22

# 6. சங்க இலக்கிய உவமைகளின் பொருள் மரபுகள்

*1.* சங்க இலக்கிய உவமைகள் ஒரு சில குறிப்பிட்ட பொருள் மரபுகளைக் கொண்டு விளங்குகின்றன. உவமச் செய்திகளில் அக்காலத்து மக்களின் எண்ண நினைவுகளும் புலவர்களின் மன நிலையும் புலனாகின்றன. இவ் உவமச் செய்திகளின் பொருள் மரபுகளின் சிறப்பியல்புகளைக் கீழ்வரும் தலைப்புகளில் அமைக்க இடம் தருகின்றது.

1. உவமையில் இயற்கை.
2. உவமையில் அகப்பொருள் புறப்பொருள் செய்திகள்
3. உவமையில் கலைச் செய்திகள்
4. உவமையில் அறவியல் செய்திகள்
5. உவமையில் கடவுளர் செய்திகள்

## *1.1.* உவமையில் இயற்கை

இயற்கையை இரண்டு வகைப்படுத்திக் காண்பர். நிலமும் பொழுதும் ஆகிய இவற்றை முதற்பொருள் என்பர். ஏனைய விலங்குகள், பறவைகள், செடிகொடி வகைகள் இவற்றைக் கருப்பொருள் என்பர். இது முதல் வகை. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன நிலப் பிரிவுகள். காலத்தைப் பெரும்பொழுதும் சிறுபொழுதும் என இருவகைப் படுத்துவர். மற்றும் நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய இவற்றை ஐம்பெரும் பூதங்கள் என்று கூறும் வழக்கும் உள்ளது. இவ்ஐந்துமே அன்றி விண்ணில் இயங்கும் ஞாயிறு, திங்கள், நாள்மீன், கோள்மீன், மழை, மின்னல் முதலியனவும் இயற்கைப் பொருள்கள் ஆகும். இடம் நிலைத்து நிற்பது. காலம் அதற்குத் துணை செய்வது. இவற்றை முதலாகக் கொண்டு உலகத்து உயிர்ப் பொருள்கள் தோற்றம் பெறுகின்றன. இவற்றைக் கருப்பொருள் என்பர். இதுவே கருப்பொருளுக்கும்

முதற்பொருளுக்கும் உள்ள தொடர்பாகும். எனவே பருப் பொருள்களாகிய நிலம், நீர், தீ, காற்று, விசும்பு, ஞாயிறு, திங்கள், விண்மீன், மின்னல், இடி, மழை, காடு, கடல், ஆறு, குளம், அருவி முதலியவற்றையும், செடி, கொடி, விலங்கு, பறவைகள் மற்றும் உயிர்ப் பொருள்கள் உயிர் அல் பொருள் கள் முதலியவற்றையும் இயற்கைப் பொருள்கள் என்று கூற வேண்டியுள்ளது.

*1.1.1.* மனிதனின் முயற்சியும் ஆக்கமும் இன்றி இயல்பாக அமைவனவற்றை இயற்கைப் பொருள்கள் என்று கூறலாம். இவற்றினின்று அமைவது வாழ்வியல். இதனை உரிப்பொருள் என்று தமிழறிஞர்கள் வரையறை செய்தனர். தொல்காப்பியர் பொருளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்று வகையாகப் பகுத்துக் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். இது தமிழ் இலக்கிய மரபின் அடிப்படையாகும். இவற்றுள் முதலும் கருவும் இயற்கைப் பொருள்களாம்.[1]

*1.1.2.* இயற்கையை நேரிடையாகக் கண்டு, அவற்றைச் சார்பாக அமைத்து, உரிப்பொருளாகிய அகப்புறப் பொருட் செய்திகளை அமைத்தல் சங்க இலக்கிய மரபாகும். இவையே யன்றி வாழ்வியல் செய்திகளுக்கும். இயற்கை வருணனைச் செய்திகளுக்கும் அவர்கள் துய்த்துக் கண்டு உணர்ந்த அனுபவப் பொருளாகிய இயற்கையை உவமையில் வைத்துள் ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். உவமையில் அமையும் இயற்கையைப் பற்றிய செய்திகள் சில குறிப்பிடத்தக்க மரபுகளைப் பற்றி இயங்குகின்றன. அவை பின்வருமாறு:

*1.1.2.1.* நிலம், நீர், தீ, காற்று, விசும்பு ஆகிய இவற்றை யும் இவற்றோடு பிறவற்றையும் சேர்த்தும் குறைத்தும் உவமச் செய்தியில் கூறல் அக்கால மரபாக விளங்கியது. மற்றும் பருப்பொருள் ஆகிய இவற்றை நுண்பொருள்கள் ஆகிய நட்பு, ஆற்றல், அறிவு, பொறுமை, சூழ்ச்சி, வலிமை, ஆக்கல், அழித்தல் முதலியவற்றிற்கு உவமப் படுத்தலும் அக்கால மரபாக விளங்கியது. இவை பெருகிய வழக்காகும்.[2]

1. தொல், அகத்திணையில் சூத்திரங்கள் *3* முதல் *18* வரை.
2. நற். *264/1-2;* குறு. *3/1-4; 95/3-5;* பதி. *1/9-10; 14/1-4; 24/15-16; 90/14-17;* புறம். *2/1-8; 20/1-5; 30/1-5; 41/16-17; 51/1-5*ட *55/13-15.*

மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும பூதத் தியற்கை போலப்
போற்றார்ப் பொறுத்தலும் சூழ்ச்சியது அகலமும்
வலியும் தெறலும் அளியும் உடையோய்.

-புறம். *1/1-8.*

என்னும் புறநானூற்றுப் பகுதி இதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

**1.1.2.2.** இவ்வாறே ஞாயிறும் திங்களும் இணைத்துக் கூறல் அக்காலத்தில் பயின்ற வழக்காக உள்ளது.[1] மற்றும் ஞாயிறும் திங்களும் போல நிலைத்து வாழ்க என்று கூறும் மரபும் இருந்துள்ளது என்பது தெரிகிறது.[2] வான்மழை, மணல் தொகுதி, விண்மீன் முதலியவற்றை எண்ணியல் மரபுகளாக உவமையில் ஆண்டுள்ளனர் என்பதற்குச் சான்றுகள் மிகுதி யாகக் கிடைக்கின்றன. இவற்றை ஊர்களோடும் குறிப்பிட்ட இடங்களோடும் சார்த்திக் கூறும் மரபும் இருந்துள்ளது.[3]

**1.1.2.3.** மழை, இடி, மின்னல் முதலியவற்றை மிகுதியாக உவமைப்படுத்தியுள்ளனர். மழை குளிர்ச்சிக்கும், இடி பேரோசைக்கும், மின்னல் தோன்றி மறையும் ஒளிக்கும் உவமையாயின. மழை கொடைக்கு உவமையாக விளங்கியது அக்காலச் சிருப்பு வழக்காகும். கொடையைப் பற்றிய பாடற் செய்திகள் அக்கால இலக்கிய வழக்கில் இடம் பெற்றமையால் அச்செய்திக்கு மழை மிகுதியாக உவமையாகியது எனலாம்.[4]

**1.1.2.4.** தீயிலே அழிவினைக் கண்டதோடு அதன் அழகிய ஒளி நிறத்தைக் கண்டு அதனை மலர்களுக்கு

1. பரி. *1-/8-11;* புறம். *6/27-28; 25/3-6; 55/13-15; 56/22-25; 59/6-12; 231/5-6; 396/26-27;* பத். *4/181; 6/768-770, 781.*
2. புறம். *9/27-29; 56/23-25;* பத். *6/768-770, 718;* பதி. *88/36-39;* பதி. *90/17-18;* புறம். *396/26-29.*
3. சொல்லியல் மரபுகள் என்னும் தலைப்பில் *1.3.3.* பிரிவில் காட்டப் பட்டுள்ளன.
4. மிகுதி பற்றிச் சில காட்டப்படுகின்றன: பதி. *43/14-30; 64/18;* கலி.

உவமப்படுத்தியது சிறப்பு வழக்காகும். அது பல்வகை மலர் களுக்குத் தனித்தனியே உவமையாகியது. அலரி,[1] இலவம்,[2] தாமரை,[3] தோன்றி,[4] எறும்பு,[5] செயலை,[6] வெட்சி,[7] வேங்கை,[8] மராஅம்,[9] கோங்கு,[10] வாகை,[11] பிண்டி,[12] கொன்றை,[13] முதலிய மலர்களுக்குச் சிறப்பாகவும், பெயர் குறிப்பிடாமல் மலர்களுக்குப் பொதுவாகவும் உவமையாகியது,[14] இருப்பைத் தளிர்,[15] செயலைத்தழை[16] முதலிய தளிர்களுக்கும் நெருப்பு, நிறம் பற்றி உவமையாகியது. எனவே தீயின் ஒளியில் மலர்களின் அழகைக் கண்ட கவிஞர்களின் காட்சி இவ் வுவமைகளில் புலனாகின்றது எனலாம். மிகுதி பற்றி ஒவ்வோர் குறிப்பு மட்டும் கீழே தரப்படுகிறது.

*1.1.2.5.* மலைவீழ் அருவி அவர்களுக்கு இனிய காட்சியாக விருந்தளித்தது எனலாம். மகளிரின் கண்ணீர்,[17] கொடிகள்,[18] திங்களின் கதிர்,[19] முத்து,[20] ஆரம்[21] முதலிய வற்றிற்கு உவமையாகியது. அதன் ஓசை தேரின் மணி யோசை[22] முழவொலி[23] அலர் முதலியவற்றிற்கு உவமையாகி யுள்ளது. எனவே அதன் அசையும் காட்சியும், நிறைவும், ஓசையும் அவர்கள் போற்றிக் கண்ட செய்திகள் எனலாம்.

*1.1.2.6.* அற்று அற்று ஒழுகும் ஆற்றின் கருமணல் மிகுதியை அறல் என்று கூறி வந்தனர். அதனை மகளிர் கூந்தலுக்கு உவமித்தது பெருவழக்காகும்.[24]

*1.1.2.7.* ஓடும் ஆறு அதன் பரப்பாலும் அகலத்தாலும் தெருக்களுக்கு உவமப்படுத்தப்பட்டது பெருவழக்காக விளங்கியது.

---

1. அகம். 191/2.
2. அகம். 245/14-15.
3. பத். 4/481.
4. அகம். 218/20
5. பத். 8/66.
6. பத். 13/59-60.
7. பரி. 13/59-60.
8. அகம். 398/17.
9. பத். 10/498.
10. அகம். 153/16-18.
11. 88/10
12. பதி. 6/700-701.
13. பத். 6/277.
14. பத். புறம். 249/3.
15. அகம். 351/7-8.
16. அகம். 188/12.
17. நற். 88/8-9.
18. பதி. 25/10-11.
19. அகம். 362/11-15.
20. பரி. 18/46.
21. புறம். 198/1-2
22. குறு. 78/1-3.
23. அகம். 184/17-24.
24. அகம். 303/3-7.

*1.1.2.8.* இடி முரசத்தின் ஓசைக்கு உவமையாகியது. முரசு,[1] இயம்[2] தண்ணுமை,[3] முழவு[4] எனப் பல்வகை முழவொலிகளுக்கு இடியோசை உவமையாகியது குறிப்பிடத் தக்க செய்தியாகும். வானத்தில் எழுந்த இடியோசை கேட்டு அதனைப் பலவகைப் பறைக் கருவிகளோடு தொடர்பு படுத்தியமை உவமச் செய்தியால் பெறப்படுகிறது.

*1.1.2.9.* மற்றும் இடியோசைக்குக் கடல் ஓசை உவமிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[5]

*1.1.2.10.* யானையின் பிளிறலும்[6] புலியின் உறுமலும்[7] இடிக்கு உவமிக்கப்பட்டன. புலி தொலைத்த யானையின் முழக்கம் இடிபோல அவர்களுக்குப்பட்டது[8]. யானை தொலைத்த புலியின் குரலும் இடிக்கு உவமிக்கப்பட்டுள்ளது.[9] எனவே, அவர்கள் யானையும் புலியும் பொருத போரினைக் கண்டும் கேட்டும் அவற்றை இடியோசை போல உணர்ந்தனர் என்பது தெரிகிறது.

*1.1.2.11.* நிலவும் இருளும் அவர்கள் போற்றிய உவமைச் செய்திகளாகும். நிலவு, ஆரம்,[10] கானல்,[11] பிடவின்பூ,[12] வெண் மணல்,[13] மருப்பு,[14] முல்லை அரும்பு,[15] வேல்,[16] முதலிய ஒளியுடைய பொருள்களுக்கும், இருள், நிழல்,[17] புகை,[18] கரிய நிறப்பொருள்கள்,[19] எண்கின் குருளை,[20] பன்றி,[21] கல்லளை,[22]

1. நற். 200/3; பத். 6/359; 7/30; 10/481.
12. பதி. 66/4; பரி. 4/19; அகம். 354/2; புறம். 17/39; பத். 1/121.
3. கலி. 105/24
4. பதி. 90/41-42.
5. பத். 10/13.
6. நற். 74/2; குறு. 351/4; பதி. 51/2; அகம். 310/16.
7. அகம். 145/9; புறம். 44/5; 81/1-2; பரி. 40/50.
8. அகம். 389/16-24.
9. நற். 353/9-11.
10. நற். 344/9-12.
11. புறம். 372/13.
12. பத். 6/114.
13. அகம். 344/2-3
14. கலி. 131/17; அகம். 200/1; பத். 2/213; நற். 140/6; 159/3; 183/3; குறு. 123/2; 320/3; அகம். 20/16; புறம். 17/11.
15. அகம். 295/4.
16. ஐங். 454/1-2.
17. பதி. 61/16; அகம். 123/8-10.
18. குறு. 123/1.
19. புறம். 228/2.
20. பரி. 15/27-28; 2/22.
21. அகம். 201/16-17.
22. பத். 10/247.

மகளிர் கூந்தல்,[1] முதலிய கரிய பொருள்களுக்கும் உவமை யாயின. அவற்றுள் இருள், மகளிர் கூந்தலுக்கு உவமையாகிய பெருகிய வழக்காகும். நிலவும், மணலுக்கு 'உவமையாகியது பெரு வழக்காகும். நிலவும் இருளும் இணைப்படுத்தி வலை உணங்கும் மணற்பரப்புக்கும்,[2] கடலும் சோலையும் சேர்ந்த காட்டுக்கும்,[3] உவமைப்படுத்தியிருப்பது தனி அழகைத் தருகிறது. மதி முன்னால் கெடும் இருள் தெவ்வர் ஆக்கத்திற்கு உவமை ஆகியது.[4]

*1.1.2.12.* கடல் பல்வகைப் பொருள்களுக்குப் பரப்பாலும் ஓசையாலும் உவமையாகியது குறிப்பிடத் தக்க செய்தியாகும். அவற்றுள் கடல் படைப் பரப்பிற்கும், அது மிகுதியாக எழுப்பிய கிளர்ச்சி மிக்க ஆரவார ஒலிக்கும் உவமிக்கப்பட்டது பல்கிய வழக்காகும். வான் மழையில் கொடையைக் கண்டது போலக் கடல் பரப்பிலும் ஒலியிலும் வீரர்களின் ஆரவாரத்தினைக் கண்டது அக்கால மக்கள் வாழ்வியலோடு கண்ட செய்தியாகும்.[5] மற்றும் காதல்,[6] காமம்,[7] நட்பு,[8] ஆகிய நுண் பொருட்கும் கடல் உவமையாகியது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*1.1.2.13.* கயத்தை வளம் மிக்க வீடுகளுக்கு உவமைப் படுத்தியது ஒரு மரபாக விளங்கியது. வளமிக்க வீட்டினை நகர் என்ற சொல்லால் குறிப்பிட்டனர்.[9]

*1.1.2.14.* மேகம் கொடையாகிய பண்புக்கு உவமிக்கப் பட்டது பெருகிய வழக்கு. அதே போல மகளிர் கூந்தலுக்கு வானில் விளங்கிய கரிய மேகங்கள் உவமை ஆயின.[10] கார் என்னும் சொல்லுக்கும் கருமை என்ற சொல்லுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது பற்றி மேகம் கார் எனவும் கூறப்பட்டது.

1. பத். 10/255
2. நற். 26/9; 270/3; 284/1; கலி. 49/8; 122/12; 140/33; பதி. 18/4; அகம். 92/13ட. 185/4.
3. பத். 9/82-83, 87.
4. குறு. 81/5-6.
5. பத். 6/195-196.
6. பதி. 69/3; 90/31; அகம். 138/6204/2;215/5; புறம். 37/36-37; 42/3;96/14; 197/3;322/9; 351/4; 377/29; பத். 1/103; 6/180.
7. நற். 166/10.
8. அகம். 128/3-4.
9. ஐங். 184/4.
10. அகம். 105/5-7; புறம். 70/6-7; பத். 6/484.

மழை பொழியும் காலத்தைக் கார்காலம் என்றும் கூறினர். அதே போல, மை என்பதும் மேகத்தை உணர்த்தியமை குறிப்பிடத் தக்கதாகும்.[1] பெயல் என்னும் சொல்லும் மழையைக் குறித்தது.[9]

*1.1.2-15.* காற்று, போர்ப்படைகளின் செலவுக்குப் பொதுவாகவும்,[2] குதிரை,[3] தேர்,[4] இவற்றின் வேகத்திற்குச் சிறப் பாகவும் உவமையாயின. யானையின் செலவுக்குக் காற்று ஒரே ஓர் இடத்தில் உவமை ஆகியுள்ளது.[5]

*1.1.2.16.* குன்று யானைக்கும்,[6] மணலின் குவி யலுக்கும்,[7] உவமையாகியது இது பெரு வழக்காகும். குன்று போல் குவிக்கப்பட்ட மணல் குவியலை எக்கர் எனக் குறிப் பிட்டனர்.[8] கடல், சேனையின் பரப்புக்கும், காற்று, குதிரை, தேர்ப்படைகளின் செலவுக்கும்; குன்றுகளும் மலைகளும்[9] யானைகளுக்கும் உவமையாகியமை ஒரு குறிப்பிட்ட பொருள் மரபை உணர்த்துகிறது.

*1.1.2.17.* ஞாயிறு ஒளியுடைய பொருள். அதனை மன்ன வர்களின் புகழுக்கு உவமித்தமை சிறப்பு வழக்காகும்.[10] ஞாயிறு கண்டு தாமரை மலர்தல் என்று கூறப்படுதல் சங்க இலக்கியத்தில் காணப்படவில்லை. அதற்கு மாறாக ஞாயிற்று ஒளியை நாடும் நெருஞ்சிப்பூ, மன்னரை நாடும் புலவருக்கு உவமிக்கப் பட்டுள்ளது சிறப்புச் செய்தியாகும்.[11]

---

1. ஐங். 304/4; பதி. 43/1; பரி. 12/15; 22/29; கலி. 55/1-3; 64/1-2; 147/19; 14/4; 60/2; 131/21; குறு. 199/2-5ட 209/7; அகம். 198/5; 225/15; பத். 6/417.
2. ஐங். 492/1-5.
3. குறு. 199/2-5; 209/7; பதி. 41/22-23; 52/5; பரி. 10/47; பத். 6/417.
4. அகம். 199/24; 298/9-10, புறம். 381/10; பத். 6/183.
5. பரி. 2/31.
6. குறு. 250;3-4; பதி. 80/13. புறம். 178/2; 229/21; அகம். 334/8; பத். 6/435-441.
7. குறு. 189/5; கலி. 33/31; அகம். 251/7; பத். 6/51-52; 6/388; 6/435-441.
8. பத். 1/82.
9. புறம். 125/9; 140/8-9; 308/2; 368/1-3; 387/22; பத். 4/351; -353.
10. நற். 207/5; 254/2; 260/4; குறு. 236/3; அகம். 310/10; கலி. 127/6.
11. கலி. 127/6

*1.1.2.18.* திங்களின் பல்வகை வடிவும் நிலைகளும் உவமையாயின. நிறைமதி,[1] தேய்மதி,[2] வளர்மதி,[3] பிறைமதி,[4] எட்டாம் நாள் திங்கள்,[5] மறுக்கொண்டமதி,[6] அரவுமாய் மதி,[7] வைகறை மதி,[8] பகல் மதி,[9] நிலவு,[10] மீன்சூழ்மதி,[11] எனப் பல்வகை நிலைகளில் திங்கள் உவமை ஆகியது. எனவே கவிஞர்களுக்கு நிலவு நெருங்கிய உறவுடையது என்பது மட்டுமின்றி அதன் பலவகை வடிவுகளில் நெருங்கிய ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினார்கள் என்பதும் அறிய முடிகிறது. இவற்றுள் பிறைமதி அவர்கள் நெஞ்சத்தை மிகுதியாகக் கவர்ந்துள்ளது. அதனைக் குழவித்திங்கள்[12] எனவும், திங்கள் குழவி[13] எனவும், மதி அரும்பு,[14] எனவும் அழைத்தமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். பிறைமதி மகளிர் நுதலுக்கு உவமை யாகியது பெரு வழக்காகும்.[15]

*1.1.2.19.* மழை மகளிர் கண்களுக்கு உவமை ஆகியது பெருவழக்காகும். மழைக்கண் என்பது பயின்று வந்த வழக்காகும்.[16]

*1.1.2.20.* மின்னல் ஒளிபெற்ற பொருள்களுக்கு உவமை ஆகியது. மகளிர் இடை,[17] அவர்கள் அணிந்த இழைகள்,[18]

---

1. நற். 77/1; பதி. 69/1; அகம். 177/15; புறம். 42/21; பத். 3/47-48.
2. புறம். 8/5-10; 59/5-9; 64/12-15; 228/8-9; 231/6; 30/1-5; பத். 10/84-85.
3. புறம். 155/5-9.
4. முதல் 89 வரை மிகுதி பற்றி ஒவ்வொரு சான்று மட்டும் தரப்படுகிறது.
5. பரி. 11/31-39.
6. கலி. 71/7-8.
7. குறு. 289/1-3.
8. கலி. 120/1-8.
9. பத். 2/10-11.
10. அகம். 299/11-13.
11. ஐங். 456/2.
12. புறம். 372/13.
13. புறம். 160/8-9.
14. கலி. 103/15; பத். 4/384. கலி. 80/18.
15. அகம். 192/1.
16. நற். 120/7; 167/1; 250/7; 263/1; குறு. 256/2-3; 371/5;ஐங்.443/2-3; பரி.இணை 2/30; கலி. 45/23; 53/14-15; 55/6-14; 61/19; 99/10; 124/8; 125/23; அகம். 115/13; 136/21; 207/13; பத். 2/25.
17. (மிகுதி பற்றிச் சில தரப்படுகின்றன) நற். 5/9; ஐங். 243/4; குறு. 22/56; பதி. 21/35; பரி. 18/16; கலி. 77/4; அகம். 33/9; புறம். 16/3; பத். 2/25; 4/386; 7/38.3. கலி. 57/4-5; அகம். 126;21.
18. பதி. 81/28; பரி. 12/11; 21/54-55; அகம். 158/3-5; பத். 1/84-85; 6/665-666; 6/678-679.

ஓதி,[1] வேற்படை,[2] எஃகம்,[3] படை,[4] வாள் முதலிய வற்றிற்கு உவமையாயின. மின்னல்[5] மகளிர் வடிவுக்கே உவமையும் ஆகியுள்ளது.[6]

*1.1.2.21.* விண்மீன்கள் தனித்தும் மதியோடு இணைந்தும் உவமையாயின. மீன்கள் எண்ணியல் மரபாக விளங்கியமை குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[7] கோங்கு,[8] புன்னை,[9] பசுவின் வெண்புள்ளிகள்,[10] மதில் புழைகள்[11] முதலியவற்றிற்கு இவை உவமையாயின. மீன் சூழ்ந்த மதி ஆயம் சூழ்ந்த மகளிர்க்கு உவமை ஆகியது.[12] மற்றும் இது சிறு கலன்கள் சூழ்ந்த பெரிய கலனுக்கும்,[13] குழை சேர் முகத்திற்கும்,[14] தாய்வழிப்படும் மறச் சிறுவர்களுக்கும்,[15] உவமை ஆகியது. எனவே மீன்கள் தனித்தும் மதியத்தோடு இணைத்தும் கூறப்பட்டமை பொருள் மரபில் காணப்படும் சிறப்பியல்பாகும்.

*1.1.2.22.* மணியும் பொன்னும் மிகுதியாக உவமிக்கப் பட்ட பொருள்களாகும். மணி என்பது நீல மணியைக் குறிப்ப தாகப் பொன்னுக்கு மாறுபட்டு விளங்கியது. மணி என்பது பவளம் என்ற பொருளில் மூன்றிடத்தில் வந்து, சிறுவரின் சிவந்த வாய்க்கு உவமையாகி உள்ளது. குறிப்பிடத் தக்க செய்தி யாகும்.[16] இவை பொதுவாக நிறங்களை உணர்த்தவே பயன் பட்டன என்று கூறலாம். மணியும் பொன்னும் இணைத்துக் கூறப்படுதல் சங்க இலக்கிய உவமைகளின் தனிச்சிறப்பாகும்.[17]

1. நற் 339/9; அகம் 234/18; 356/18-20; பரி. 13/27.
2. நற். 51/6; அகம். 203/10; 272/5; புறம். 42/4; 57/8.
3. பதி. 24/1-2.
4. அகம். 124/9.
5. அகம். 372/3.
6. கலி 139/5; 141/17-18; பத். 4/483-489; 6/665-666; 6/678-679.
7. சொல்லியல் மரபு தலைப்பில் 1.3.3; 1.4. பத்திகளில் காட்டப்பட்டது.
8. அகம். 153/14-16.
9. அகம். 10/2-3.
10. கலி. 103/9-10.
11. புறம். 21/4.
12. கலி. 104/27-28.
13. புறம் 160/8-9.
14. பத். 1/86-88, 90.
15. அகம். 297/15-16.
16. கலி. 79/8; அகம். 16/3; 66/14.
17. நற் 28/56; 221/14; 304/67; ஐங் 189/12; 201/3; 420/13; பரி 4/5759; 13/3; கலி. 117/12;143/4ண6; அகம் 14/2ண4; 156/17; 172/1618; 232/78; 242/14; 272/1619; அகம் 290/1215; 304/1315; புறம் 137/1011; பத் 1/306, 316; 2/201; 3/14748; 4/1415; 6/76870, 81, 8/13. 5960; 8/187.

**1.1.2.23.** மகளிரின் தோற்றமும் அழகும் இயற்கைக்கு மிகுதியாக உவமிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். அதில் ஒரு சில குறிப்பிட்ட பொருள் மரபுகள் காணப்படுகின்றன. இயற்கை மகளிரின் சாயலைப் படம் பிடித்துக் காட்டியது. மழை, மின்னல், திங்கள், ஆற்று அறல் முதலியன மகளிர்க்கு உவமையாகியதைப் போல, செடிகொடி, மலர், தழைகளும் உயிரினங்களும் மகளிர்க்கு உவமை ஆயின. இம்மரபே பெரும்பாலும் பிற்காலத்திலும் போற்றப்பட்டது எனலாம். அவை கீழ் வருமாறு:

**1.1.2.23.1.** மகளிர் நடைக்கும் மென்மைக்கும் பெண் யானை,[1] பெண்மான்,[2] புறா,[3] மயில்,[4] அன்னம்[5] முதலிய வற்றை உவமைப்படுத்தினர்.

**1.1.2.23.2.** மகளிர் வருந்திய நிலையில் அவர்கள் பொதுவாக வாடிய நெய்தல் மலர்களுக்கும்,[5] சிறப்பாக தேர்க் கால் மிதித்த் நெய்தலுக்கும்[6] உவமிக்கப்பட்டனர். தீயும்[7] நீரும்[8] காற்றும்[9] அலைத்த தளிர்களும் உவமையாயின. கலையைப் பிரிந்த மான்[10] அம்பு பட்டமான்[11] முதலியவற்றிற்கும் உவ மைப்படுத்தப்பட்டனர். அவர்கள் அழகிய தோற்றம் பூங் கொடீக்கும்[12], வாடிய நிலை பூஉதிர்ந்த கொடிக்கும்[13] உவ மிக்கப்பட்டது.

**1.1.2.23.3.** மகளிரின் அழகிய நிறம் மின்னல் ஒளிக்கும்[14], பொன் நிறத்திற்கும்[15] உவமிக்கப்பட்டது. அவர்கள் மேனியின்

---

1. ஐங் 416/45; பரி 10/47; அகம் 276/815; 369/11.
2. நற் 37/47; 204/911; 32/3; பத் 1/216.
3. கலி 55/1516.
4. ஐங் 258/2; பத் 6/608; குறு 2/3; கலி 57/2; பத் 9/149; (சாயல்) நற் 301/4; பரி 20/69; கலி 30/6; 56/1516; புறம் 318/2; 295/13; பத் 3/16; 6/706; அகம் 385/1.
5. பரி 10/44; 12/27; கலி 56/1516.
6. குறு 309/6; ஐங் 135/3.
7. குறு 336/46.
8. குறு 383/46.
9. பதி 52/21.
10. அகம் 162/5.
11. நற் 37/47.
12. நற் 61/23.
13. பரி 7/56; 12/89; 16/20; 29/95; 10/94; 21/50; 21/6163; 22/4344; கலி 62/5; 67/10; 88/1; 62/5154; பத் 6/446; 10/424.
14. கலி 132/1819; அகம் 1516; புறம் 224/1317.
15. கலி 139/5; 141/1718; காட 6/665666; 6/789.

நிறம் தக்க உவமைகளைப் பெற்றன; மகளிரின் பொன்னிறமும் மாநிறமும் சிறப்பிக்கப்பட்டன. மாநிறத்தை விளக்கப் பல் வகைத் தளிர்கள் உவமையாகக் கூறப்பட்டன.[1] மழைநீர் பட்ட தளிர்களைக் கூறி[2] அவர்கள் மேனியின் பொலிவையும் நிற அழகையும்[3] ஒளியையும் காட்டினர். மகளிரின் நிறநுட்பவேறு பாட்டைத் தளிர்களின் வேறுபாட்டால் காட்டினர் என்பது குறிப் பிடத்தக்க செய்தியாகும். மா[4], செயலை[5], ஈங்கை[6], யா[7], முதலியவற்றின் தளிர்களுக்கு உவமைப் படுத்தினா. பொன் னிறத்திற்கு மாறுபட்ட நீலநிறத்தை நீல மணிக்கு உவமித்தது பெருவழக்காகும்[8].

*1.1.2.23.4.* பிரிவால் அவர்கள் மேனியின் நிறம் அழகு குன்றியது. அதனால் அவர்கள் நிறம் மாறியது. பிரிவால் ஏற்பட்ட நிற மாறுதலைத் தக்க உவமைகள் கொண்டு கூறுவது அக்கால மரபாக இருந்தது. பொன்,[9] மின் உகு தளிர்[10] வேங்கை[11] ஞாழல்,[12] பீரக்கம்,[13] கொன்றை[14] ஆகிய பூக்கள் நார் உரித்த ஆம்பல்தண்டு[15] பாசி[16] முதலியன உவமையாகக் கூறப்பட்டன. ஆம்பல்,[17] கோங்கம்,[18] தாமரை,

1. புறதட 84/23; 95/10.
2. நற் 251/7; 309/2; குறு222/7; 356/8; ஐங் 38/3; பரி 52/2021; 8/38; பரி இணை 7/115; கலி 13/19; 15/12; 40/1910; 58/8; 108/52; அகம் 41/1316; 42/4; 95/2; 135/1; பத் 1/1434; 7/148.
3. குறு 222/7; கலி 13/19; 58/15; அகம் 337/12.
4. ஐங் 365 35; பரி 8 3839; கலி 57 13; பத் 1/1434; 3/176; 6/7078.
5. 244/911; கலி 15/12.
6. நற 206/911; அகம் 75/1718; 296/78.
7. அகம் 337/12.
8. பரி 15/50; பரி இணை 2/47; கலி 22 19 48 17; 143/46; நற் 8/3; 304/67; அகம் 156/17; 18; 278/13.
9. கலி 108/38.
10. நற 26/8; 47/11; 56/8; 304 67; கலி 22 19 48 17 143 46 அகம் 150
11. 156 17; 172 1718; ஐங் 41 34 அகம் 176 24 1922 219 13 279 4 புறம் 842.
12. கலி 48 19.
13. நற் 157 8ண10 ஐங் 761 324 4ண5 கலி 57 1617 64 2728 அகம் 174 10-12 319 89 புறம் 352 1213 பத் 32324.
14. ஐங் 149 12 கலி 131 19.
15. நற் 6 1-2 ஐங் 32 2-4
16. குறு 399/1-4
17. ஐங் 34/2-3
18. கலி. 143/4-6

முதலியவற்றின்[1] தாதுகள் கொய்யப்பட்ட தளிர்[2] முதலிய மங்கிய நிறத்திற்கு உவமை யாயின. மகளிரின் விளர்த்த நிறம் வெண்மையான சங்கிற்கும்[3] வெண்பாதிரி மலர்க்கும்[4] உவமப் படுத்தப்பட்டது.

1.1.2.23.5. மகளிரின் அழகிய நிறம் குறிஞ்சிப் பூவிற்கும்[5] பவழத்திற்கும் உவமிக்கப்பட்டது[6] அருகிய வழக்காகும்.

1.1.2.23.6. மார்பிலும் அல்குலிலும் படிந்த அழகுப் புள்ளிகளைத் தித்தி என்றும், திதவை என்றும் குறித்தனர். மார்பிற் படிந்த அழகுக் கோடுகளை ஈர்க்குக்கு உவமை செய்தனர்[7]. அழகுப் புள்ளிகள் பூந்தாதுக்கும்[8], பொன் துகள் களுக்கும் உவமிக்கப்பட்டன.[9]

1.1.2.23.7. மகளிர் கூந்தலின் பல்வகை அமைப்புகளை ஓதி, ஐம்பால், கதுப்பு, பின்னு, பின்னகம் எனப் பிரித்து அறிந்தனர். கரிய இருண்ட கூந்தல், நிறத்தால் மேகத்திற்கும்,[10] நீல மணிக்கும்,[11] கரிய வண்டுகளுக்கும்,[12] கரிய மைக்கும்,[13] இருளுக்கும்,[14] உவமிக்கப்பட்டது. கூந்தலில் சுருள்களும் மடிப்பு களும் ஆற்று அறலுக்கு உவமிக்கப்பட்டன,[15] அவர்கள்

1. குறு 300/34
2. ஐங் 216/56; கலி108/5253; அகம் 319/1213
3. ஐங் 106/34
4. குறு 147/12
5. நற் 301/12
6. பத் 9/148
7. பத் 6/707
8. கலி 29/19; அகம் 41/1316
9. பத் 1/145.
10. ஐங் 304/4; பதி 43/1; 12/15; 21/19; 22/29; கலி 55/13; 60/2; 14/4; 64/14; 131/21; 147/19; அகம் 126/1920; 198/5; 225/15.
11. நற 10/23; 135/5; 166/12; 214/5; 245/5; 337/7; 366/4; 174/6 பரி இணை 1/60; கலி 22/1712; 77/16; அகம் 8/15; புறம் 147/67; பத் 8/5960.
12. அகம் 223/1112
13. குறு 199/25; 209/7; பத் 6/417.
14. நற் 26/9; 270/3; 284/1; பதி 184; கலி 49/18; 122/17; 140/33; 147/19; அகம் 92/13; 185/4; பத் 3/14.
15. நற் 141/1012; குறு 286/23; பதி 74/3; கலி 28/6; 55/13; 98/1418; அகம் 35/1617; 117/1419; 142/18; 162/10; 191/1416; 213/23; 260/8; 299/18; புறம் 25/13; 25/24-25; பத் 2/25; 3/6; 10/304.

அடர்ந்த கூந்தல் மயிலின் தோகைக்கும்,[1] பொன் அணியால் வகிர்க்கப்பட்ட ஒதி மின்னல் பாயும் மேகத்திற்கும்,[2] உவமிக்கப் பட்டன.

*1.1.2.23.8.* மகளிர் முகம் முழுமதிக்கு வடிவாலும் ஒளி யாலும் உவமிக்கப்பட்டது.[3] அது தாமரை மலருக்கும் உவ மிக்கப்பட்டுள்ளது.[4] குவளை மலருக்கு ஒரே ஓர் இடத்தில் மட்டும் முகம் உவமை செய்யப்பட்டுள்ளது.[5]

**1.1.2.23.9.** மகளிரின் நெற்றி முழுமதிக்குப் பொதுவாக வும்.[6] பிறைமதிக்கு மிகுதியாகவும்[7] உவமிக்கப்பட்டுள்ளது. ஒரே ஓர் இடத்தில் மட்டும் எட்டாம் நாள் திங்களுக்கு உவ மிக்கப்பட்டுள்ளது[8] ஒளி சுடருக்குப் பொதுவாக உவமிக்கப் பட்டுள்ளது.[9] ஒளி இழந்த முகம் அரவு வாய்ப்பட்ட மதிக்கும்.[10] பகல் நிலவுக்கும்,[11] பீர்க்கம் பூவிற்கும்,[12] உவமிக்கப் பட்டுள்ளது. அவர்கள் நெற்றியின் நறுமணம் மலர்களுக்குப் பொதுவாகவும்,[13] காந்தள்[14] முல்லை[15] இவற்றிற்குச் சிறப்பாக வும் உவமிக்கப்பட்டுள்ளது.

**1.1.2.23.10.** கண்களை மலர்களாகவே பார்த்தனர் என்று கூறலாம். மகளிரின் கண்கள் நிறத்தாலும். வடிவாலும், குளிர்ச்சி

1. நற் 264/6; 265/7-9; குறு. 184/5; 225/6-7; ஐங் 300/1-2; புறம்.133/4-5; 146/8-9; பத் 3/263-64; 3/14-15; 10/44.
2. அகம். 9/22; 177/4-5; பத் 3/191-192.
3. நற் 339/9; அகம் 234/18; 356/18-20.
4. கலி 15/16;55/6-14;50/4-5;62/13-15;64/1-4;126/21;145/6;பத் 3/157.
5. கலி 315/;71/4-8;72/3-8;77/1-7;ஆகம் 361/1-3; பத் 6/710-712; 3/73.
6. கலி 64/15-17
7. நற். 62/2-7; 316/5-6; அகம் 57/11-12; 179/13; 253/24-25; 306/10;
8. நற் 120/7; 16711/; 250/7; 263/1; குறு 22/62-3; ஐங்371/5; 443/2-3; பரி இணை 2/30; கலி 45/23; 53/15; 55/6-14; 67/19; 99/10; 124/8; 125/23; அகம் 115/13; 136/21; 192/1; 207/13; பத் 2/25; 4/383-384.
9. குறு 129/3-6.
10. நற் 108/7-8; பதி16/13; 51/19; 70/15-16; கலி 58/3; 125/3.
11. நற். 128/2; 377/6-8; அகம் 313/7
12. அகம். 277/1-3
13. நற் 197/1-2; கலி 53/14-15; 124/8; அகம் 135/1-3
14. குறு 273/1-3; அகம் 43/10; 78/24-24; 93/9-10.
15. குறு 259/2-3; அகம் 238/14-18; 338/4-8
16. குறு. 323/3-5; ஐங் 492/1-5.

யாலும், மேன்மையாலும், அழகாலும், கவர்ச்சியாலும் பொலிவு பெற்று விளங்கின. அவற்றை மலர்களுக்கு உன்மைப் படுத்தியது பெருகிய வழக்காக இருந்தது.[1]

மலர்கள் நிறத்தாலும் மெல்லிய இதழ்களாலும் நறுமணத் தாலும் கண்களுக்கு உவமையாயின. அவற்றை ஆயிதழ்,[2] பல்லிதழ்[3] பயிலிதழ்,[4] நிரையிதழ்,[5] என்ற தொடர்களால் குறித் தனர். எனவே மலர்களின் இதழ்களே கண்களுக்கு உவமை யாயின எனக் கூறலாம். மற்றும் பூ,[6] மலர்,[7] போது என்ற தொடர்களே உவமைகளில் இடம் பெற்றன. முகையோ வாடிய பூவை உணர்த்தும் வீ என்னும் சொல்லோ கண்களுக்கு உவமையாகவில்லை. மலர்களைப் பொதுவாகக் குறித்ததோடு ஒரு சிலவற்றை விதந்தும் குறித்துள்ளனர். தாமரை,[8] குவளை[9]

1. அடிக்குறிப்புகள் 185, 186இல் தரப்படுகின்றன.
2. பரி 8/13; கலி. 112/24; அகம். 132/6; 162/10-11; 172/16; அகம். 306/12; 357/14-16.
3. நற். 155/10; 241/111; குறு 5/5; 259/4; ஐங் 190/4; 334/4-5; 351/4; 471/2;கலி. 100/10;112/9;அகம்.51/9; 109/1; 161/14; 229/12;244/9.
4. கலி 103/60; 18/3; அகம் 65/19.
5. நற். 20/6; 90/7;122/11; 325/7; 355/1; குறு 101/4; 142/2; 226/1 ஐங். 16/4; 101/4; 375/5; 376/4; 469/5; கலி. 28/28; 39/51; 48/22; 75/31; 85/27; 130/16; 131/4; 140/22; 142/11; புறம் 41/14; 96/4; பத். 5/23.
6. நற். 33/12; 37/5; 66/11; 85/1; 308/2; 326/67; 370/11; 39/910; 398/10; குறு. 327/67; 371/1; ஐங்18/3; 19/5; 170/4; 242/4; 243/4; 515/1; 423/4; 427/1; 477/1; 481/1; பரி. 7/52; 8/48; 8/53; 9/9; 9/59; 10/99; 18/16; பரி இணை. 1/61; கலி. 14/2; 25/1314; 27/27; 45/911; 49/10; 155/614; 58/2; 83/1213; 100/10; 103/60; அகம். 1112-14; 32/9; 52/14; 69-12; 109/1; 146/10-11; 162/10-11; 176/16; 197/1; 307/4; 320/6; 361/8; புறம். 137/8; பத். 8/247-48; 10/58.
7. நற். 144/3; 166/4; 284/1-2; கலி 33/9; 49/10; 122/2; 354/134.
8. பரி. 2/53; 4/60-61; கலி-39/2.
9. நற். 6/1-3; 77/12; 160/8-10; 205/6; 271/8; 317/9-10; குறு. 13/5; 167/4; 291/5-8; 339/5-6; ஐங் 72/3; 277/5; 500/3; அகம் 62/4-5; 129/16; 138/2; 156/8; 179/2; 183/1; 228/4; 285/13; 310/5; 358/4-5; 361/1-3; 381/19-21; 395/1-3.

நெய்தல்,[1] நீலம்,[2] கருவிளை,[3] செங்கழு நீர்,[4] முதலிய நீர்ப் பூக் களுக்குக் கண்களை உவமித்தனர். அம்மலர்களைச் சில இடத்தில் கயமலர்,[5] சுனைமலர்,[6] நீர்மலர்,[7] என்ற தொடர் களாலும் குறித்தனர். இந்நீரில் விளையும் நறுமலர்கள் பொலிவு பெற்று மகிழ்ச்சியால் அழகு பெற்ற கண்களுக்கு உவமை யாயின. பிரிவிடை அவர்கள் கண்கள் பொலிவும் நிறமும் அழகும் மாறி வாட்டமுற்றன. அந்த நிலையில் எந்த நீர்ப் பூவும் உவமிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.

கொடிப் பூவும் கிளைப்பூவும் ஆகிய நிலப்பூக்களே உவமையாயின. கொன்றை,[8] பித்திகம்,[9] நறவம்,[10] பீர்,[11] இப் பூக்களே உவமையாயின. பித்திகம் எப்பொழுதும் 'மாரிப்பித் திகம்' என மழையோடு தொடர்புபடுத்தியே கூறப்பட்டது.[12]

1. நற். 8/8; 23/4 9; 2 7/1; 113/7; 195/59; 283/2; குறு 9/4-6; 21/1-4; ஐங் 151/3;181/1 188/3-4;பதி 51/17 பரி 7/60-61;9/74; கலி 39/44; 142/23; அகம் 20/5; 83/12-14; 130/11-3; 150/8; 170/4-5; 230/1-1; 290/12-14; புறம் 144/4
2. நற். 161/2; 273/8; 357/8; 479/6-9; கலி. 14/2; 15/20; 33/28; 48/15; 57/8-9; 64/20-22; 96/5; 143/48-51; அகம். 38/10-11; 143/12-16; 149/17-19; புறம். 111/3.
3. நற் 262/1-2; ஐங். 464/1; அகம். 294/4-5.
4. அகம் 48/8; 269/22-25.
5. கலி 37/1-3; அகம். 395/1-3.
6. நற். 45/9-11;301/2-3;கலி 9/11; 55/6-14;அகம் 371/11-14; பத். 1/75
7. குறு 329/6-7; பத். 8/247-48.
8. ஐங். 458/1-4; 500/1.
9. குறு. 222/5-6; அகம் 42/1-3; 295/ 17-18.
10. பரி. 7/63-64; 8/75.
11. கலி 543/48-51.
12. குறு 222/5-6; அகம். 42/1-3; 295/17-18.
13. நற் 5/9; 6/3; 8/1; 13/4; 29/9; 44/2; 75/8; 85/1; 90/8; 252/9; 301/2-3; 391/9-10; குறு. 22/5-6; 72/5; 86/1;259/4; 286/4;329/6-7; ஐங். 243/4; 282/2; பதி. 21/35; 52/18; 54/5; பரி. 18/16; கலி. 77-4; 103/7; 108/46; அகம். 33/9; 42/3; 51/9; 62/4-5; 83/12-14; 114/141 120/6; 135/5; 149/17-19; 162/11; 190/5; 229/12; 244/9; 266/6; 278/11; 296/3; 299/14; 306டி12; 312/6; 326/337-3; 343/16-17; 351/11; 357/14-16; 361/3; 373/13; 381/3; 378/13; 381/19-21; 387/2; 395/3; 398. புறம். 116/3; 147/5; 164/6; 349/5; பத் 2/25; 4/386-738; 8/141; 8/248; 10/58.

அழகும் கவர்ச்சியும் பற்றி மலர்களுக்குக் கண்கள் உவமப்படுத்தப்பட்டன. குளிர்ச்சி பற்றி மழைக்கண்,[13] எனப் பயின்று வழங்கப்பட்டது. வடிவும் பிறழ்ச்சியும் மருட்சியும் பற்றிக் கயல்,[1] கெண்டை,[2] மான்,[3] முதலியவற்றிற்கு உவமிக்கப்பட்டன. நீலம்,[4] குவளை[5] ஆகிய இவற்றின் இணை மலர்களைச் சிறப்பாகவும் உவமித்தனர்.

மாவடு, கண்களின் வடிவுக்கு உவமையாகியது.[6] வகிர்ந்த மாவடு கருமை படர்ந்த வெண்மை பெற்று விளங்குவது கருமையும் வெண்மையும் கலந்த கரிய விழிகள் இவ்வுமையைப் பெறுவதற்குக் காரணம் ஆகியது. கண்ணிமைகள் குவளை இதழ்களுக்கு உவமிக்கப்பட்டன.[7]

*1.1.2.23.11.* வாயிதழ்கள் பவழம்,[8] ஆம்பல் மலர்[9] இலவு இதழ்,[10] கவிர் ஆதழ்,[11] முதலியவற்றறிற்கு நிறத் பற்றி உவமிக்கப்பட்டன. துவர்வாய் என்பது பயின்ற வழக்கு ஆகியது.[12]

*1.1.2.23.12.* மகளிரின் பற்கள் வடிவு பற்றியும் நிறம் பற்றியும் முகைகளுக்குப் பொதுவாகவும்,[13] முல்லை,[14] மவ்வல்,[15] நொச்சி,[16] குல்லை[17] முதலியவற்றிற்குச் சிறப்பாக

1. நற். 220/9; 316/3; குறு. 250/5; 398/3 பரி 21/48; 22/29; கலி. 98/14-18; 127/8; 185/8; அகம். 126/9; 140/10-11; 313/4.
2. பரி 16/40.
3. நற் 101/8-9 179/4; 199/8; கலி. 33/10; 56/17; 57/2; 69/3-7; 87/11; 109/46; அகம் 86/29-31; 91/18; 61/9 புறம் 351/14; 374/10; பத் 3/31; 8/25; 9/149.
4. கலி 96/5; அகம்149/17-19; புறம். 111/3.
5. அகம் 361/1-3; 381/19-21.
6. நற். 133/2-3; பலி 7/58; 8/38-39; கலி 68/20-22; 108/28; அகம் 29/7-8; 116/8.
7. அகம் 19/1-12.
8. நற் 190/9; குறு. 300/2; பதி. 16/13; 51/21; பரி இணை 2/47; அகம் 27/10; 29/13; 39/3; 66/2; பத். 2/27.
9. பரி. 8/116; 10/78.
10. பத். 2/27.
11. பரி. 22/29; அகம் 3/15.
12. மேல் அடிக்குறிப்பு 209.
13. நற் 108/7; குறு 126/4, 186/2-3; கலி. 31/21; 58/1-5; 64/15-17.
14. பரி. 8/76; கலி. 22/9-10; 32/16; 103/6-7; 108/15-16; 118/19-20.
15. கலி. 14-3.
16. அகம். 21/1-5.
17. பத். 3/28-29.

வும் உவமிக்கப்பட்டுள்ளன. முள்ளுக்கும்[1] முருந்துக்கும்[2] வேறு உவ மிக்கப்பட்டுள்ளன. முளை என்பது நாணல் முளையைக் குறிக்கிறது என்பது ஒரு குறிப்பிட்ட சான்றால் அறிய வருகிறது.[3] முருந்து என்பதும் உவமை ஆகியது,[4] முருந்து என்பது மயிலின் இறகு முனை என்பது உரையாசிரியரால் கொள்ளப் படுகின்றது.[5] ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் முருந்து என்பது நீரில் விளையும் சாய் என்னும் புல்லின் முனையாகக் கூறப்படுகிறது.[6]

பற்கள் முத்துக்குப் பொதுவாகவும்[7] கொற்கை முத் தக்குசி சிறப்பாகவும்[8] உவமிக்கப்பட்டன. கலித்தொகையிலும் பரி பாடலிலும் முத்துகளை மிகுதியாகப் பற்களுக்கு உவமித் துள்ளனர். இவ்விரண்டு இலக்கியங்களும் பாண்டி நாட்டைப் பற்றி மட்டும் கூறும் இலக்கியங்கள் ஆதலின் முத்து மிகுதியாகப் பற்களுக்கு உவமிக்கப்பட்டது.[9]

*1.1.2.23.13.* மூங்கில்கள் மகளிர் தோளுக்கு மிகுதியாக உவமையாயின. பணைத்தோள், வேய்த்தோள்,[10] அமைத்

1. நற் *62/5; 120/11-12; 134/8; 155/9; 290/5;* குறு. *262/4; 286/5;* ஐங். *47/1; 495/5;* கலி *4/13; 104/18; 112/20; 139/28; 142/7;* அகம். *7/1; 39/3; 361/13; 385/16;* புறம். *361;16.*
2. ஐங். *256/3; 369/2;* கலி. *15/25; 98/37-38.* 3. அகம். *212/4-5.*
4. நற் *179/10;*கலி.*103/6-7.* 5. கலி.*103/6-7* நச். உரை. 6. அகம் *62/1-2*
7. ஐங். *185/1-2; 380/2;* பரி. *8/76;* பலி இணை *2/46;* கலி *64/30; 93/11; 97/6; 97/15; 131/22;* அகம். *27/9-10.*
8. ஐங் *185/1-2;* அகம் *27/9-10;* பத். *2/28; 7/37.*
9. நற் *9/4; 93/7; 121/12; 166/3-4; 170/1; 188/9; 190/7; 193/6; 298/7; 301/5; 319/7-8; 333/8;* குறு. *131/1; 168/5; 185/2; 268/6; 276/1; 278/8; 315/4; 318/6; 338/6; 357/2; 364/5;384/1;*ஐங். *171/3;291/2; 318/2; 468/3; 481/1;* பதி. *21/37; 54/3; 65/8;* பரி. *8/38-39;* கலி. *1/9 30/9; 38/26; 40/8; 83/26; 108/16; 141/16;* அகம். *1/8; 2/11; 6/3; 21/4; 33/14-15; 47/15-18; 59/16; 2/3; 65/17; 89/22; 92/6; 110/10; 114/14; 129/15; 132/6; 171/14-15; 181/24; 185/2; 197/2; 210/7; 291/25; 343/1; 357/1; 366/2-13;* புறம் *32/3; 354/9.*
10. நற் *82/2; 85/2; 188/9; 390/10;* குறு *226/1-2;* ஐங் *318/2; 392/1;* பதி. *21/37; 65/8;* பரி *11/94 14/5-6;* கலி *20/15; 39/48; 55/6-14; 57/2; 81/20; 99/16; 104/24; 127/16; 138/18-19;* அகம். *1/8; 2/11; 15/18-19; 47/15-18; 137/12-15; 152/15-24; 199/16-18; 213/15-16;* புறம். *395/12;* பத். *8/242.*

தோள்,[1] முதலிய தொடர்கள் பெருகிய வழக்கு ஆயின. தோள் களின் மென்மைக்கும் திரட்சிக்கும் பருமைக்கும் இவை உவமை யாயின.

*1.1.2.23.14.* மகளிரின் மேல்லிய விரல்களுக்குக் காந்தள் முகையும்,[2] நறவத்தின் இதழ்களும்,[3] ஞாழல் மலர்களும்,[4] உவமையாயின. விரல்களின் நகங்கள் முருக்கிதழுக்கும்,[5] கிளியின் மூக்கிற்கும்,[6] உவமைப்படுத்தப்பட்டன.

*1.1.2.23.15.* மகளிரின் துடைகள் (குறங்கு) பிடியினது துதிக்கைக்கும்,[7] வாழை அடிமரத்திற்கும்,[8] உவமிக்கப்பட்டன. வடிவுபற்றி இவ்வுவமைகள் கூறப்பெற்றிருக்க வேண்டும்.

*1.1.2.23.16.* மகளிரின் சீறடிக்கு நாயின் நா உவமிக்கப் பட்டது. நீர் வேட்கையாலும் ஓடிக் களைத்த இளைப்பாலும் வெளியே நீட்டத் தொங்கவிட்டிருக்கும் நா அவர்கள் நினை விற்கு வந்தது போற்றத்தக்க சொல்லோவியமாகும். அழகிய ஓவியமாக அக்காட்சிஇலக்கியத்தில் நிலைத்த நிற்கிறது.[9] மலர்களின் ஒளிமிக்க இதழ்களுக்கும்[10] தாமரை மலர்க்கும்[11] உவமிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்க செய்தி ஆகும்.

*1.1.2.23.17.* மகளிரின் கொங்கைகளைப் பல்வகை மலர் களின் முகைகளுக்கு உவமித்துள்ளனர். பொதுவாக முகை களையும்[12] சிறப்பாக நீர்ப்பூ முகை (கயமுகை)[13] தாமரை,[14] கோங்கு[15] முகைகளையும் உவமைகளாக அமைத்துள்ளனர்.

மற்றும் யானையின் மருப்பும், மழைநீர்க் குமிழிகளும், குரும்பையும் இவற்றிற்கு உவமை ஆகி உள்ளன.[16]

1. நற். 352/11; குறு. 131/1; பதி.12/22; 54/3; கலி. 21/4; 39/16; 45/13-15; 56/19-20; அகம். 18/17-18; 33/14-15; 82/1-2; 87/16; 114/14; 343/1; 390/10; பத் 2/32; 10/57.
2. நற். 355/2; 379/9-13; குறு. 1/71; ஐங். 293/1-21; பரி. 19/76; 20/98; கலி. 40/11-12; 43/9-8; புறம் 144/9; பத். 2/33; 3/167; 9/152-154.
3. கலி. 84/22.
4. நற். 267/3-5.
5. அகம். 317/4-6.
6. பத். 2/34.
7. பத். 2/40; 3/19-20.
8. பத். 3/20-21.
9. நற். 25/26-12; பத். 2/42; 3/17-18; 10/42-43.
10. பதி.52/19.
11. கலி. 13/11.
12. கலி. 68/16; பத். 3/72.
13. பரி. 8/114.
14. கலி. 22/15-16.
15. கலி.56/23-24; 117/2-4; அகம். 240/11; புறம். 336/8-11; பத் 1/34-35; 3/23-26.
16. மருப்பு: அகம். 26/6-8; புறம். 337/21-22.

*1.1.2.23.18.* மகளிரின் கொப்பூழ் நீர்ச்சுழிக்கு உவமிக்கப் பட்டுள்ளது.[1]

*1.1.2.23.19.* மகளிரின் இடை பொதுவாகத் தவழும் கொடிகளுக்கும்,[2] மின்னலுக்கும்[3] உவமிக்கப்பட்டுள்ளது.

*1.1.2.23.20.* மகளிரின் அல்குல் பாம்பின் படத்திற்கு உவமிக்கப்பட்டுள்ளது அருகிய வழக்காகும்.[4]

*1.1.2.23.1.* மயில் மகளிரின் சாயலுக்கு உவமை ஆகியது பொது மரபாகும்.[5] மலர்களுக்கும் மகளிரின் சாயல் உவமிக்கப் பட்டுள்ளது.[6] சிறப்பாகக் குவளை மலருக்கும் மகளிரின் சாயல் உவமிக்கப்பட்டுள்ளது.

*1.1.2.23.22.* மகளிரின் சொல் கிளிக்கும்[7] தேனுக்கும்[9] உவமிக்கப்பட்டுள்ளது.

*1.1.2.23.23.* நடை, மயில்[10] அன்னம்[11] ஆகியவற்றிற்கு உவமிக்கப்பட்டுள்ளது.

*1.2.2.24.* செடி கொடிகளுள் மூங்கில், வேங்கை, தாமரை, நீலம், குவளை, நெய்தல் முதலியன மிகுதியாக உவமையாக வழங்கியுள்ளன.[12]

*1.1.2.25.* உயிரினங்களுள் பிடி, களிறு, பெண்மான், ஆண்மான் இவ்வேறுபாடுகள் நுட்பமாகப் போற்றப்பட்டன. மயில்களுள்ளும் பெண்மயிலே உவமை ஆகியது என்பது

---

1. பத் 2/37.
2. கலி 57/4-5, 58/1-5, புறம். 139/4, பத். 1/101.
3. கலி 57/4-5, அகம் 146/21.
4. குறு 294/5, பத். 8/102.
5. குறு 2/3, பரி.9/56, 20/69, புறம். 60/4-5, 318/2.
6. குறு 9/3.
7. குறு 30/4-6
8. நற் 301/4, குறு. 291/4, கலி. 13/16, 20/7, அகம் 126/17, பத். 9/150.
9. நற் 161/12, 220/8; 262/7; 374/9; ஐங். 466/5; கலி. 29/26, 55/4, 80/15; 185/8; 139/4; புறம். 209/16.
10. அகம் 63/15, 279/14-17; புறம். 3/8, 60/4-5, 137/4-5, 373/10-12; 395/13, பத். 1/205.
11. கலி 56/15-16; அகம்.279/14-17
12. இவை மேலே பல எடுத்துக்காட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

தெரிகிறது. ஒட்டகம் ஒரே ஓர் இடத்தில் மட்டும் உவமையாகக் கொடுக்கப்பட்டுள்ளது.[1] அசுணம் என்னும் விலங்கு யாழொலி கேட்டு மயங்கும் இயல்பினது என்றும், பறை ஒலி எழுப்பி அதனை வேட்டுவர் கொல்லுவர் என்றும் கூறப்படுகிறது.[2]

பறவைகளுள் மயில் மிகுதியான இடம் பெறுகிறது.[3] இதனை அந்த நாட்டு அடையாளப் பறவைக்கு உரிமை பெறுகிறது என்பதற்கு வேண்டிய தலைமையும் சிறப்பும் அளித்திருக்கிறார்கள் என்று கூறலாம்.

அன்றில் பறவையும்[4] மகன்றில் பறவையும்[5] உவமை களாக வந்துள்ளன. பிரிவுத் துன்பத்தை உணர்த்த அன்றில் பறவையும்,[6] புணர்வு இணைப்பை உணர்த்த மகன்றில் பறவையும்[7] உவமையாயின. அன்றில் என்பது பனைமரத்தில் வாழும் பறவை; மகன்றில் என்பது நீர் வாழும் பறவை; அன்றில், மகன்றில் ஆகிய இவையிரண்டும் இரு வேறு பறவைகள் என்பது தெரிகிறது. கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் அவற்றிற்கு விளக்கமாக அமைந்துள்ளன.

மன்றிரும் பெண்ணை மடல்சேர் அன்றில்
நன்று அறை கொன்றவர் அவர்எனக் கலங்கிய
என் துயர் அறிந்தனை நரறியோ எம்போல
இன்துணைப் பிரிந்தாரை உடையையோநீ

கலி. *128/8-11.*

---

1. பத். *3/154-155.*
2. நற். *304/8-10,* கலி. *143/10-15.*
3. நற். *22/1-7; 115/5; 222/3-6; 248/7-9; 262/1-2; 264/4-6; 265/7-9; 301/4; 305/2.*
   குறு.*2/3, 138/3, 184/5, 225/6-7, 244/4-6, 247/2-3;*
   ஐங். *258/2, 393/4.*
   பரி. *9/56, 9/64, 11/41, 19/6-7, 20/69.*
   கலி. *57/2, 30/6; 103/59; 103/38; 128/16; 137/6-7.*
   அகம். *63/15; 158/5; 198/6-8; 369/4-5; 385-1.*
   புறம். *120/6-9, 146/8-9, 252/4-5; 318/2; 373/10-12. 395/13.*
   பத் *1/205, 3/16, 3/165; 2/47; 6/418; 6/608, 6/706; 8/169; 9/149.*
4. நற் *124/1-2* குறு. *160/1-2,* கலி. *129/12-15.*
5. ஐங் *381/4-5,* குறு *57/1-3,* பரி. *8/43-44* அகம் *220/14-15.*
6. மேல் அடிக்குறிப்பு *260.*
7. மேல் அடிக்குறிப்பு *261.*

பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமோடு குறு. 57/1-3.

இருதலைப்புள் என்ற பறவையும் அன்பின் பிணைப் பிற்கு உவமையாகி வந்துள்ளது. ஈருடலும் ஒருயிருமாக உள்ளம் ஒன்றுபட்ட காதலர்களின் உள்ள நிலையை இப்பறவை விளக்குகிறது.

இருதலைப் புள்ளின் ஒருயி ரம்மே -கலி.12-5
ஒருயிர்ப் புள்ளின இருதலையுள் ஒன்று
போர் எதிர்ந்து அற்றாப் புலவல் நீ கூறின்எம்
ஆருயிர் நிற்குமாறு யாது. -கலி.89/4-6.

## 1.2. உவமையில் அகப்பொருள் புறப்பொருள் செய்திகள்.

உவமையில் இயற்கை இடம் பெற்றதைப் போல மக்கள் வாழவியலிலும் இடம் பெற்றுள்ளது. அக்காலத்து வாழ்வியல் என்பது அவர்கள் போற்றிவந்த அகவாழ்வும் புறவாழ்வும் எனலாம். அகப்பொருள் செய்திகளுக்குப் புறப்பொருள் செய்தி களும், புறப்பொருள் செய்திகளுக்குப் அகப்பொருள் செய்தி களும், உவமை ஆயின.

*1.2.1.* அகவாழ்வில் அலர் எழுதலுக்குப் புறச் செய்திகளாகிய போர் ஆரவாரமும், போர்ச் செய்திபரவும் விறுவிறுப்பும், நகரத் தெரக்களிர் குழுமி எழுப்பும் ஆரவாரமும் உவமிக்கப்பட்டன. அவ்வாறு கூறும்பொழுது அப்போர் நிகழ்ச்சிகள் ஊர்ப் பெயர்களோடும் அரசர்களோடும் சார்த்திக் கூறப்பட்டன. அவை வரலாற்றுச் செய்திகள் ஆயின.

*1.2.1.1.* செம்பியன் என்பான் அகப்பா என்னும் ஊரைத் தாக்கி நெருப்பில் இட்டு அழித்த போரில் எழுந்த ஆரவாரமும்[1] ஒரியைக் கொன்று வெற்றி கொண்டு ஆரவாரத்தோடு காரி என்பான் பகைவரின் நாட்டில் புகுந்த பொழுது எழுந்த ஆரவாரமும்,[2] விச்சியர் தலைவனாகிய விச்சியர்கோன் பெருநில வேந்தரோடு எதிர்த்துப் புறங்கண்ட குறும்பூர் என்னும் ஊரில்

1. நற் 14/3-6. 2. நற் 320/5-7.

எழுந்த ஆரவாரமும்,[1] ஆலங்கானம் என்னும் இடத்தில் ஏழு குறுநில மன்னர்கள் செழியனுக்குத் தோற்று ஓடிய ஞான்று எழுந்த ஆரவாரமும்,[2] குறுக்கைப் பறந்தலையில் அன்னி என்பான் திதியனை வென்று அவன் காவல் மரத்தை வெட்டிய ஞான்று எழுந்த ஆரவாரமும்[3] அஃதையின் தந்தை பருவூர் என்னும் போர்க்களத்தில் இருபெரு வேந்தரையும் வெற்றி கொண்ட செய்திபற்றி எழுந்த ஆரவாரமும்,[4] கூடற் பறந்தலையில் பாண்டியன் இருபெரு வேந்தரை வென்ற ஆரவாரச் செய்தியும்,[5] பாழி என்னும் இடத்தில் நன்னன் என்பான் மிஞிலியையும் அதிகனையும் வெற்றிகொண்ட ஆரவாரமும்,[6] வாகைப் பறந்தலையில் கொங்கா செய்த ஆரவாரமும்,[7] வெண்ணிப் பறந்தலையில் பெற்ற வெற்றி குறித்து அழுந்தூரில் மக்கள் பேசிய ஆரவாரச் செய்தியும்,[8] கொங்கரை வென்று நாடு பல பெற்ற பாண்டியனின் கூடல் மாநகரில் மகிழ்ச்சி கொண்டாடிய ஆரவாரமும்,[9] அலர் எழுதலுக்கு உவமையாயின என்பதைக் காட்டுகின்றன. இது பொருளியல் மரபுகளில் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*1.2.2.* மகளிரின் நலத்தையும் அழகையும் தமிழகத்தின் வளமான நகர்களுக்கும், துறைமுகங்களுக்கும் உவமைக் படுத்தினர். அவ்வூர்கள் அரசர்களின் பெயர்களோடு பெரும் பான்மையும் சார்த்திக் கூறப்பட்டன.

எனவே இவையும் புறப்பொருள் செய்திகள் ஆயின. மாந்தை,[10] பாரியின் குன்றம்,[11] கொல்லி மலை,[12] இருப்பை,[13] மருங்கை,[14] தொண்டி,[15] ஆர்க்காடு,[16] தேனூர்,[17] ஆமூர்,[18] கழா

---

1. குறு328/4-8.
2. அகம் 36/12-23.
3. அகம் 45 8-12.
4. அகம் 96/9-18
5. அகம் 116 12-19.
6. அகம் 142 8-15.
7. குறு 393 2-6.
8. அகம் 246 5-14.
9. அகம் 253 3-7, 296 10-14
10. நற். 35-7; 395 9-10; குறு. 34 6-7; அகம். 376; 14-18.
11. நற். 253; 7-9.
12. நற். 265; 4-9.
13. நற். 350 4-5; ஐங். 58;24.
14. நற். 358 10-11.
15. குறு. 238 3-4; ஐங். 174;1-4; அகம். 10; 12-13; ஐங். 175-4; 177-4; 180-4.
16. குறு. 258; 2-8.
17. ஐங். 54;1-3; 55; 2-3; 57 2-3.
18. ஐங். 56; 2-3; அகம்; 159 19-21.

அர்,[1] காவிரிப்படப்பை,[2] குடவாயில்,[3] விளங்கில்,[4] குட நாடு,[5] வேம்பி,[6] கழுமலம்,[7] பொதியில்,[8] அட்டவாயில்,[9] பவத்திரி[10] எவ்வி நீழல்,[11] வஞ்சி,[12] தழும்பன் ஊர்,[13] வாகை,[14] நன்னன் பறம்பு,[15] ஆகிய பல ஊர்கள் மகளிர் நலத்துக்கு உவமை யாயின.

1.2.3. இவ்வூர்கள் மகளிருக்கு மட்டுமல்லாமல் சிறந்த ஆடவர்க்கும் உவமையாகக் கூறப்பட்டன என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.[16] இஃது அருகிய வழக்காகும்.

1.2.4. காதல், கடமை என்னும் இருபெரு உணர்வு களுக்கும் இடையே உள்ள போராட்டம் அமைக்கும் சித்திரங் கள் பல தீட்டப்படுகின்றன. வளமிக்க ஊர்களும், அவ்வூர்களில் கிடைக்கும் நிதிகளும் கிடைத்தாலும் தலைவியின் அன்புக்கு அவை ஈடு ஆகா என்னும் கருத்து வற்புறுத்தப்படுகிறது. இவ்வாறு வற்புறுத்திக் கூறப்படுதல் அக்கால இலக்கிய மரபு என்பது தெரிகிறது. பட்டினப்பாலை என்னும் முழுப்பாட்டே இவ் விலக்கிய மரபினை அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது.

முட்டாச் சிறப்பில் பட்டினம் பெறினும்
வாரிருங் கூந்தல் வயங்கிழை ஒழிய
வாரேன் வாழிய நெஞ்சே. பத். 9/218-220

இது பட்டினப்பாலையில் மட்டும் அமைந்த தனிச் செய்தி யாகாது. ஏனைய இடங்களிலும் இக்கருத்து வற்புறுத்தப் பட்டுள்ளது என்பது ஆய்வால் வெளிப்படுகிறது. ஊர்களும் ஊரில் கிடைக்கும் நிதியமும் தலைவியை நோக்கத் தலை வனுக்குத் தாழ்ந்து விடுகின்றன. நிதிகளைப் பற்றிய கற்பனை கள் அக்காலத்தில் பல்கிப் பரவி இருந்தன. அத்தகைய நிதிகள் கிடைப்பதாக இருந்தாலும் தலைவியை விட்டுப் பிரிய

1. ஐங். 61; 3-4; அகம். 6; 20-21.
2. பதி. 90; 46-50
3. அகம் 44-18
4. அகம் 81; 13-14.
5. அகம் 91; 12-18; 115; 5-6.
6. அகம் 249; 8-10.
7. அகம் 270; 8-10.
8. அகம் 322; 14-15.
9. அகம் 326; 5-7.
10. அகம் 340; 6-8.
11. அகம் 366; 12-13.
12. அகம் 896; 16-19.
13. அகம் 348; 5-6.
14. அகம் 351; 5-7.
15. அகம் 356; 18-20.
16. ஐங் 178; 2-4.

இசையவில்லை என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது. குடநாடு,[1] மாந்தை,[2] ஆமூர்,[3] நார்முடிச் சேரலின் நாடு,[4] நந்தனின் நிதி,[5] காவிரிப் பூம்பட்டினம்,[6] பாழி என்னும் ஊரில் கிடைக்கும் நிதி,[7] நன்னனின் நாடு,[8] ஆகிய ஊர்கள் இவ்வகையில் உவமை களாகக் கூறப்படுகின்றன.

*1.2.5.* தலைவியின் பற்கள், தோள்கள், கண்கள், வடிவு, சாயல், நறுமணம் முதலியன ஊர்களோடு சார்த்தப்பட்ட பொருள்களுக்கு உவமைப் படுத்தப்பட்டன. அவ்வூர்ப் பெயர் கள் அரசர்களின் பெயர்களோடு சார்த்திக் கூறப்பட்டன. கொற்கை முத்து,[9] கொல்லி மூங்கில்,[11] குடந்தை நீலம்,[12] கொற்கை நெய்தல்,[13] கொல்லி மயில்,[14] கொல்லிப் பாவை,[15] மற்றும் பல ஊர்களின் கானத்தின் நறுமணம் முதலியன இவற்றிற்கு உவமையாயின. இவ்வகையிலும் புறச் செய்திகள் அகப்பொருள் செய்திகளுக்கு உவமையாயின.

*1.2.6.* மகளிரின் கண்களில் அழகையும், குளிர்ச்சியை யும், அன்பையும், காதலையும் கண்ட வீரர்கள் அவற்றின் கூரிய பார்வையின் ஆற்றலையும் உணர்ந்தனர். கண்களைக் காணும்பொழுது போர்க்களக் காட்சிகளும் கண் முன் நின்றன. போர்க் கருவிகளாகிய வேல்,[16] அம்பு,[17] யானை மருப்பு முதலியன உவமையாயின. இவையும் அகப்பொருள் செய்திகளுக்கும் புறப்பொருள் செய்திகள் உவமையாதலுக்குச் சான்றுகள் எனவும் கொள்ளலாம். காதலைக் கண்ட வீரர்கள் வீரத்தையும் அக்காதலில் கண்டனர் என்பது தெரிகிறது. வீர

---

1. அகம். *91; 12-18.*
2. அகம். *127; 3-12.*
3. பதி. *159; 14-21.*
4. அகம். *193; 20-24.*
5. *251; 5-6; 265; 1-6.*
6. பத். *9; 218-220.*
7. அகம். *298; 1-3.*
8. அகம். *199; 19-24.*
9. நற். *23 6-9;* ஐங் *185; 1-2;* அகம். *27; 7-10.*
10. அகம். *33; 14-15; 213; 15-16.*
11. நற். *379; 6-9.*
12. அகம். *130; 11-14.*
13. நற். *265; 4-9.*
14. குறு. *89; 4-7; 100 5-6;* அகம். *62; 12-14; 209; 10-17.*
15. நற். *6; 10-11;* குறு. *84 3-5; 199. 2-5;* அகம் *69; 17-20; 78; 12-24; 152; 15-18; 208; 4-24; 238; 13-18; 338; 48; 399-2.*
16. பரி. *12;69;* கலி. *124; 15-16;* அகம். *27 15-17; 77; 6-19; 336; 12-13;* புறம். *350-9;* பத். *3-158.*
17. நற். *13; 3-8; 75; 7-8;* குறு. *272; 5-7;* பரி. *20, 37, 21-24.*

வாழ்வு காதல் வாழ்வுக்கு உவமை ஆகியது. அவர்கள் வீரவாழ்வின் அனுபவம் உவமச் செய்தியாகியது.

**1.2.7.** மற்றும் சில அகவாழ்வு நிகழ்ச்சிகள் புறத்திணை நிகழ்ச்சிகளோடு உவமை வழித் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. இவை வரலாற்று நிகழ்ச்சிகளாக அமையாமல் இடமும் பெயரும் சார்பு படுத்தாமல் கூறப்படும் புறப்பொருள் நிகழ்ச்சி களாக அமைந்தவையாகும். தலைவியின் தனிமையும், துயி லற்ற நிலையும், அழிந்து பட்ட எழிலைக் காக்கும் தனிமகனின் தனிமைக்கும், கவலைக்கும் உவமிக்கப்பட்டுள்ளன.[1] துயி லின்றி இரவினைக் கழித்த தலைவியின் நிலை, போர்ப் பாடி களில் துயிலின்றிக் கண் விழித்த போர் வீரர்களின் நிலைக்கும்[2] தலைவன் வருகையால் தலைவியின் பசலை நீங்குதல், ஆற்றலும் செங்கோனமையும் வாய்ந்த அரசரின் வீரர்கள்முன் பகைவர்கள் நீங்குதலுக்கும்,[3] மகளை வீரனுக்கு மணமுடித்தல் பாண்டிய மன்னனுக்குத் திறை கொடுத்தலுக்கும்,[4] தலைவியின் பிரிவுத் துன்பம் பகை மன்னன் தங்கும் நாட்டின் மக்களின் துன்ப நிலைக்கும்,[5] தலைவன் தலைவிக்குப் பணிதல் சினவேந்தன் முன் மக்கள் அடிபணிதலுக்கும்,[6] தலைவனைச் சார்ந்து நிற்கும் தலைவியின் மனநிலை சேர மன்னனுக்கு அஞ்சி அவனைச் சார்ந்து அடிபணிந்து நிற்கும் மக்கள் மனநிலைக்கும்,[7] தலைவியின்பால் தலைவன் காணும் இனிமை வினை முடித்தது போன்ற மன நிறைவுக்கும்,[8] வளையல் நெகிழ்ந்து விழுதல் ஆரியர் படை அஞ்சி நீங்குதலுக்கும்,[9] தலைவியின் மன மகிழ்ச்சி வென்றி நாட்டைக் கைக்கொள்ளும் வேந்தனின் மனநிலைக்கும்,[10] தலைவன் தலைவியின் உறவைப் பெற வேண்டித் தோழியின்பால் இரந்து நிற்றல் போரில் புண்பட்ட வீரனைப் பேய் சுற்றி நின்று காத்தலுக்கும்[11] உவமிக்கப் பட்டுள்ளன. பேய் நின்று காக்கும் செய்கையைப் பேய்க்காஞ்சி என்னும் துறையாகக் குறிப்பிடுதல்தொல்காப்பியத்தில் காணப் படும் புறப்பொருள் மரபாகும்.

---

1. *நற். 153; 8-10.*
2. *குறு. 91; 5-8; 292; 6-8.*
3. *கலி. 130; 19-21.*
4. *கலி. 14; 24-25.*
5. *கலி. 149; 10-11.*
6. *கலி. 89; 10-11.*
7. *அகம். 309; 10-12.*
8. *அகம். நற். 38.*
9. *அகம். 336; 21-23*
10. *அகம். 346; 18-25.*
11. *நற். 349; 7-10.*

**1.2.8.** பெருநில மன்னர்களின் வரலாறும், குறுநில மன்னர்களின் வரலாறும் மக்கள் மனத்தில் இடம்பெற்று நாடறிந்த செய்தியாகப் பேசப் பட்டதைப் போலவே நாட்டுக் கதைகளாக ஒருசிலர் வாழ்வியலும் பேசப்பட்டன. அவற்றுள்ளும் துன்ப நிகழ்ச்சிகளும் அவலச் செய்திகளும் பலரும் பேசிப் பகிர்ந்து கொண்ட செய்திகளாகும். எனவே, நிலமாளும் மன்னர்களின் செய்திகளைப் போலவே குடிமக்களின் நிகழ்ச்சிகளும் நாடறிந்த செய்திகள் ஆயின. அவற்றையும் உவமைகளில் பொருத்திப் பேசியமை இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. அத்தகைய நிகழ்ச்சிகளில் கீழ்வருவன ஒரு சிலவாகும்.

ஆதிமந்தி ஆட்டனத்தி இவர்களின் காதல் வாழ்வும் ஆட்டனத்தியைப் பிரிந்த ஆதிமந்தியின் அவல நிலையும், தலைவனைப் பிரிந்து வருந்தி அழுது அரற்றிய வெள்ளி வீதியாரின் துன்ப வாழ்வும், தந்தையைக் கொன்ற கோசர்களைப் பழிவாங்கிய அன்னி மிஞலி என்பாளின் வீர வரலாறும், பெண் கொலை புரிந்த நன்னன் என்பானின் கொடுமையும், ஒரு பெண்ணின அணிகலன்களை வெளவி அறியேன் என்று கூறிய அறனிலாளனைப் பற்றி அவன்மீது சாம்பலைக் கொட்டி அவமானப்படுத்திய நிகழ்ச்சியும், ஒரு முலை குறைந்த நங்கை ஒருத்தி நறுவேங்கை நிழலில் ஏதிலாளன் செய்த கொடுமையால் அவலித்து நின்ற நிலையும் இன்ன பிறதனிச் செய்திகளும் இவ் உவமைகளில் இடம் பெற்றுள்ளன.

**1.2.9.** புறப்பொருட் செய்திகளுக்கும் அகப் பொருட் செய்திகள் ஒரு சிலவும் உவமையாயின. எனினும் இவை அருகிய வழக்கே ஆகும்.

**1.2.9.1.** தாம் விரும்பிய அழகிய மகளிர் ஊடலால் துளிர்த்த கண்ணீருக்கு அரசன் அஞ்சுவதை விடப் புலவர்களின் வறுமைக்கு அஞ்சினான் என்று கூறப்படுகிறது. ஈண்டுப்

1. தொல். புறத்திணையியல். 79.
2. அகம். 76/7-13; 222; 5-12; 376, 412; 396, 11-15; குறு. 31, 1-6; 45, 12-15; 135, 1-5; 236, 14-21.
3. அகம். 45, 12-15; 147, 8-10.
4. அகம். 196, 8-13, 262, 4-13.
5. குறு. 292, 1-6.

புறப்பொருள் செய்தியாகிய ஈகை பற்றிய அச்சம், மகளிர் ஊடல் பற்றிய அச்சத்திற்கு உவமைப் படுத்தப்பட்டது.

ஒண்ணுதல் மகளிர் துனித்த கண்ணினும்
இரவலர் புன்கண் அஞ்சும் புரவு -பதி. 57. 13-15

*1.2.9.2.* பெண்ணின் காதலை விட ஈகை மிகச் சிறந்தது என்று ஓரிடத்தில் பாராட்டப்படுகிறது.

இவளினும் சிறந்தன்று ஈதல் -அகம்.*131; 3-5.*

*1.2.9.3.* முல்லை நிலத்து ஆயர் மகன் ஏறு தழுவி அதனை அடக்கி வெற்றி கொள்ளும் செயல் ஆயர் மகளிரைக் காதல் வேட்கையால் புல்லுவதற்குக் குறிப்பாக உவமை செய்யப் பட்டுள்ளது. தாம் விரும்பும் மகளிரின் மார்பகத்து முலை யிடைத் தழுவுவதைப் போல விரும்பிக் கொல்லும் எருதின் கொம்புகளிடையே பாய்ந்து வெற்றி கொள்ளும் ஆண் மகனிடத்து வேறு எந்த விலையும் தம் இனத்தவர் விரும்ப மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

விலைவேண்டார் எம்மினத்து ஆயர் மகளிர்
கொலையேற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின்
-கலி. *103. 71-73.*

*1.2.10.* ஒரு சில புலவர்கள் தம்முடைய உவமைகளில் செய்திகளை இடத்தோடு சார்த்திக் கூறலை இயல்பாகக் கொண்டு விளங்குகின்றனர் அவர்கள் அவ்வூர்களில் வாழ்ந்தவர் களாக இருந்திருக்க வேண்டும் எனக்கருத இடம் தருகிறது. அவ்வூர்ப் பெயர்கள் அப் புலவர்களுக்குச் சார்த்தி அடைகளாக வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் எடுத்தாண்ட உவமைகளில் அவ்வப் பெயர்கள் பொருந்தியுள்ளன என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். உவமச் செய்திகளில் வரும் ஊர்ப் பெயர்களால் சிறப்புப் பெற்றவர்கள் குடந்தைக் கீரனார், அள்ளூர் நன் முல்லையார். மதுரைக் கணக்காயனார் ஆவர். அவர்கள் இப் பெயர்ச் சிறப்புப் பெறுவதற்குக் கீழ்வரும் உவமைகள் துணை யாயின எனக் கூறலாம்.

தண்குட வாயில் அன்னோள். -அகம். *44/18*
குடந்தைக் கீரனார்.

*1. அகம் 256; 13-21.* *2. நற். 216; 8-11.*

பிண்ட நெல்லின் அள்ளூ ரன்ன எம்
ஒண்டொடி -அகம். 64/12
அள்ளூர் நன்முல்லையார்

மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்
கொற்கை அம்பெருந்துறை முத்தின் அன்ன
நகைப்பொலிந்து இலங்கும் எயிறு கெழுதுவர்வாய்.
-அகம். 27; 7-10
மதுரைக் கணக்காயனார்.

பலர்புகழ் திருவில் பசும்பூண் பாண்டியன்
அணங்குடை உயர்நிலைப் பொருப்பின் கவா அன்
சினைஒண் காந்தள் நாறும் நறுநுதல்
துணையீர் ஓதி மா அயோள் -அகம். 338; 5-8
மதுரைக் கணக்காயனார்.

**1.2.11.** இவ் வரலாற்று நிகழ்ச்சிகளைக் கொண்ட உவமைகள் புறப்பாடல்களினும் அகப்பாடல்களிலேயே மிகுதியாக வந்துள்ளன. அவற்றுள்ளும் அகநானூற்றிலும் நற்றிணையிலுமே மிகுதியாக இடம் பெற்றுள்ளன. அகநூனூற்றில் 60, நற்றிணையில் 44, குறுந்தொகையில் 21, ஐங்குறுநூற்றில் 16, கலித்தொகையில் 8, பதிற்றுப்பத்தில் 7, பரிபாடலில் 16, புறநானூற்றில் 7, பத்துப்பாட்டில் 12 இடங்களில் வந்துள்ளன. புலவர்களுள் பரணரே மிகுதியாக வரலாற்று நிகழ்ச்சிகளை உவமையில் அமைத்துள்ளனர். மாமூலனார், அம்மூவனார் கபிலர் ஆகிய இம்மூவரும் அடுத்த நிலையில் குறிப்பிடத் தக்கவர்கள் ஆகின்றனர்; ஏனைய புலவர்கள் மிக அருகியே வரலாற்று உவமைகளைக் கையாண்டுள்ளனர். எனவே இவ் வரலாற்று உவமைகள் மிகக் குறைந்த அளவில் புறப்பொருளிலும் மிக்க அளவில் அகப்பொருள் செய்திகளிலும் இடம்பெற்றுள்ளன என்பதும், ஒருசில புலவர்களாகிய பரணர், மாமூலனார், அம்மூவனர், கபிலர் ஆகிய இவர்களே மிகுதியாக இவ் வரலாற்று உவமைகளை அமைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத் தக்க செய்தியாகும்.[1]

## 1.3. உவமையில் கலைச் செய்திகள்

ஒரு நாட்டின் நாகரிகம் அந்நாட்டு மக்கள் போற்றிய கலைகளால் விளங்கும் எனக் கூறலாம். தமிழகப் புலவர்கள்

1. இத் தலைப்பின் ஈற்றில் புலவர்கள் பெயரு ் அவர்கள் பாடிய

கலையுணர்ச்சியில் மிக்கவர்கள் என்பது அவர்கள் அமைத்த உவமைகளாலும் விளங்குகின்றது. ஓவியம், சிற்பம், யாழ், குழல், முழவு, முரசு, வயிர், வங்கியம் முதலிய இசைகளிலும், ஆடற்கலையிலும் நுட்ப உணர்வும் அறிவுத் திறனும் மிக்கவர்களாக விளங்கினார்கள் என்பது அவர்கள் அமைத்த உவமச் செய்திகளால் விளங்குகின்றது.

*1.3.1.* ஓவியம் என்பது அவர்கள் நுகர்ந்து துய்த்த எழில் மிக்க கலையாக விளங்கியது. இயற்கையை ஓவியத்திற்கு உவமப்படுத்தி மகிழ்ந்துள்ளனர். அழகிய வடிவங்களை ஓவியமாகவும், சிற்பமாகவும் கண்ட காட்சி அவர்கள் உவமைகளில் வெளிப்படுகின்றது.

*1.3.1.1.* இயற்கை எழில் ஓவிய எழிலைப் போல உள்ளது என்று கூறும் மரபு காணப்படுகிறது. இவ்வாறு கூறுவது பெருகிய வழக்காகும். இதனைக் கீழ்வரும் சான்றுகள் காட்டும்.

வனைபுனை எழில்முலை -பத். *10/57*

ஊட்டி யன்ன ஒண்தளிர்ச் செயலை -அகம். *68/5*

ஊட்டி யன்ன ஊன்புரள் அம்பு -அகம். *388/24*

பொதிர்த்த முலையிடைப் பூசிச் சந்தனம்
உதிர்த்துப் பின்னுற ஊட்டுவார் விருப்பும்
பல்லூழ் இவையிவை நினைப்பின் வல்லோன்
ஓவத்து எழுதுஎழில் போலும் -பரி. *21/25-28*

வல்லோன் எழுதி யன்ன காண்டகு
வனப்பின் ஐயள் மாயோள் -நற். *146/8-10*

எழுதி யன்ன திண்ணிலைக் கதவம் -அகம். *311/3*

முன்றில் எழுதி யன்ன கொடி -அகம். *296/13-14.*

*1.3.1.2.* ஓவியங்களுக்கே ஒரு சில பொருள்கள் நேரிடையாக உவமிக்கப்பட்டுள்ளன.

ஓவுக் கண்டன்ன இருபெரு நியமத்து -பத். *6/365*

ஓவத் தன்ன உண்துறை மருங்கு -பத். *3/70*

புனையா ஓவியம் கடுப்ப... நல் அடி -பத். *7/147-51*

ஓவு உறழ் நெடுஞ்சுவர் -பதிற். 68/17

ஓவத் தன்ன கோபச் செந்நிலம் -அகம். 54/4

ஓவியத்தை வீடுகளுக்கு உவமித்தல் பெருகிய வழக்காகும்.

ஓவத் தன்ன இடனுடை வரைப்பு -நற். 182/2

ஓவுக் கண்டன்ன இல்வரை -நற். 268/4

ஓவத் தன்ன வினைபுனை நல்லில் -அகம். 93/11; -பதி. 61/3

ஓவத் தன்ன உருகெழு நெடுநகர் -பதி. 88/28.

*1.3.1.3.* ஓவியம் உணர்த்தும் செய்தி ஒரே உணர்வும் ஒரே செய்தியும் கொண்டதாக விளங்கும் என்னும் நுட்பத்தை

'ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி' - அகம். 5/17 என்னும் தொடரால் குறிப்பிட்டுள்ளனர். இஃது அவர்கள் ஓவியச் செய்தியின் அமைப்பையும் சிறப்பையும் உணர்ந்த நுட்ப அறிவினைக் காட்டுகின்றது.

*1.3.1.4.* மேலே காட்டிய சான்றுகள் அவர்கள் ஓவியங்களில் கொண்ட ஈடுபாட்டையும், அழகிய பொருள்களை ஓவியத்திற்கு உவமைப்படுத்தும் மரபியலையும் உணர்த்துகின்றன. ஓவியத்தையும், சிற்பத்தையும் உடன் சேர்த்து இணைத்துக் கூறுதலும், அவற்றை முறையே வீட்டிற்கும் அதில் உறையும் மகளிர்க்கும் உவமைப்படுத்தலும் குறிப்பிடத் தக்க மரபாக விளங்கின. இது பின்வரும் சான்றுகளால் புலனாகின்றது.

ஓவத் தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன பலராய் மாண்கவின் -அகம். 98/10-11

ஓவத் தன்ன இடனுடை வரைப்பில்
பாவை அன்ன நப்புறம் காக்கும் -நற்; 182/2-4

ஓவத் தன்ன வினைபுனை நல்லில்
பாவை அன்ன நல்லோள் கணவன் -பதி. 61/3-5

ஓவத் தன்ன உருகெழு நெடுநகர்
பாவை அன்ன மகளிர் நாப்பண் -பதி. 88/2-29

*1.3.1.5.* பாவை என்பது பொதுப்படையாகக் கூறப்பட்ட போதும் அவர்கள் போற்றி மதித்த பாவை கொல்லிப் பாவை யாகும் என்பது தெரிகிறது. சேரநாட்டைச் சார்ந்த கொல்லி மலையில் எழிலும் கவர்ச்சியும் அழகிய வடிவும் பொருந்திய பாவைத் தெய்வமே வந்த தீட்டியது என்னும் கருத்து வற் புறுத்தப்படுகிறது. மற்றும் பாவை என்பது பொற்பாவையைக் குறிக்கும் என்பதும் தெரியவருகிறது.

*1.3.2.* உவமச் செய்தியில் அப்புலவர்களின் இசைத் திறனும், கூரிய உணர்வும் புலப்படுகின்றன. யாழும் குழலும் அவர்கள் போற்றிய இசைக் கருவிகளாகும். யாழ் மகளிரின் இனிய கிளவிக்கும், குழலோசை அவர்களின் அழுகுரலுக்கும் உவமையாயின என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

யாழ் மகளிரின் இனிய சொற்களுக்கு உவமையாதல் கீழ்வரும் சான்றுகள் காட்டும்.

யாணர் நரம்பின் இன்கிளவியளே -ஐங். *100/4*

நரம்பார்த் தன்ன தீங்கிளவியளே -ஐங். *185/4*

செவ்வழி யாழ்நரம் பன்ன கிளவியார் -கலி. *118/12*

..............நல்யாழ்
நரம்பிசைத் தன்ன இன்தீங் கிளவி -அகம். *109/1-2*

வடிப்புறு நரம்பின் தீவிய மொழிந்தே -அகம். *143/26*

மகளிர் அழுகுரலுக்குக் குழலிசை உவமையாதல்.

கீழ்வரும் சான்றுகளால் புலப்படுகின்றது.

.......ஆம்பலங் குழலின் ஏங்கிக்
கலங்கஞர் உறுவோள் புலம்புகொள் நோக்கே
-நற்.*113/1112*

1. நற் *185/6-11; 192/8-12; 201/7-12; 252/6-7; 308; 7-8; 319/7-8; 362/1-2;* குறு. *89/4-7; 100/5;* அகம். *62/13-14; 209/10-17.*
2. நற். *185/6-11; 192/8-12; 204/7-12;* குறு. *89/4-7;* அகம். *62/13-16; 209/10-11.*
3. அகம் *392/6-7;* பத் *6/410-412.*

குழலினும் இனைகுவள் பெரிது
பனிஇருள் சூழ்தரப் பைதலஞ் சிறுகுழல்
இனிவரின் உயருமன் பரிஎனக் கலங்கிய
எனதுயர் அறிந்தனை நரறியோ எம்போல
இன்துணைப் பிரிந்தாரை உடையை யோநீ

-கலி.*121/1619*

இம் மரபு சங்க இலக்கியத்தில் போற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

*1.3.3.* பறை வகைகள் பல சங்க இலக்கியத்தில் உவமை யாக வந்துள்ளன. அவற்றின் நுட்ப வேறுபாட்டை உணர்ந்து பல்வேறு பொருள்களுக்கும் ஓசைகளுக்கும் உவமப்படுத்தி யுள்ளனர். இயம், கிணை, குளிர், தடாரி, தண்ணுமை, துடி, முழவு, ஆகுளி, முரசு, பறை, பணை முதலிய பல்வகைப் பறைக் கருவிகளும் அவற்றின் ஓசையும் உவமையாக வந் துள்ளன. இப் பல்வகை ஓசை வேறுபாடுகளையும் வடிவ அமைப்புகளையும் நுட்பமாக உணர்ந்து ஒப்புமைப்படுத்தி யது அவர்கள் இப்பறை இசைகளில் கொண்டிருந்த ஈடு பாட்டைக் காட்டுகிறது.[1]

---

1. இயம் : அகம் *154/23; 359/811;* பத்*10/29496;* கத்*2/68.*
   கிணை : அகம் *356/24; 325/711;* புறம் *382/1822.*
   தடாரி : புறம் *249/4.*
   குளிர் : குறு *291/14.*
   தண்ணுமை : நற்*347/67; 310/912;* அகம் *106/1213.*
   துடி : அகம் *62/7; 196/23; 372/1012;* புறம் *300/26; 370/6;* பத் *2/210; 10/45758.*

முழவு: நற்*67/11; 100/912; 139/36; 176/9;378/3;* குறு *301/1; 365/34;* பதி *31/20; 18/19;* பரி *4/1; 6/5455; 17/1314; 21/3738; 22/3637;* கலி *36/4;* அகம் *23/2; 61/15; 172/1112; 318/56; 328/13; 236/1; 368/17;* பத் *1/215; 6/99; 6/114; 6/39697; 4/44; 10/14244; 10/511.*

முரசு: நற் *197/9; 395/46;* குறு *270/3; 328/23; 380/13;* ஐங் *455/12;* பதி *78/12; 84/13;* பரி *22/4;* அகம் *84/2; 175/1213; 188/13; 312/1014;* பத் *8/49;* அகம் *347/37.*

பறை: நற் *46/57; 58/24;* குறு *7/35; 193/23;* பதி *70/24;* அகம் *23/2; 45/12; 76/45; 151/810; 178/3; 211/2; 281/13; 188/13; 324/6; 364/24;* புறம் *126/8; 229/14.*

பணை: பதி*33/2;* புறம் *371/19;* பத் *7/115.*

*1.3.4.* வயிர், நெடுவங்கியம் என்னும் ஊது கருவிகளின் ஓசை வேறுபாட்டை உணர்ந்து அவற்றைத் தக்க வகையில் உவமச் செய்திகளாக அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்க செய்தி யாகும் வயிர் என்னும் ஊது கருவி அன்றிலின் அகவலுக்கும்,[1] மயிலின் அகவலுக்கும்,[2] நாரையின் விளிக் குரலுக்கும்,[3] கிளி யின் விளிக்கும்,[4] உவமைப்படுத்தியுள்ளனர். நெடுவங்கியம் என்னும் ஊது கருவியின் ஓசை யானையின் நெட்டுயிர்ப்புக்கு உவமையாகியுள்ளது.[5] விளிக்கு வயிரும், நெட்டுயிர்ப்புக்கு வங்கியமும் உவமையாகியுள்ளமை குறிப்பிடத்தக்க செய்தி யாகும்.

*1.3.5.* பண்ணின் திறங்களும் தாள வகைகளும் நன்கு உணர்ந்தவர்கள் என்பதும், அவற்றின் நுட்ப வேறுபாட்டை உணர்ந்து தக்க ஓசைகளுக்கு உவமைப் படுத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகளாகும்.

*1.3.5.1.* இளி என்னும் குரலோசை பருந்தின் விளிக்கு உவமையாகி உள்ளது.

வீளைப் பருந்தின் கோள்வல் சேவல்
வளைவாய்ப் பேடை வருதிறம் பயிரும்
இளிதேர் தீங்குரல் இசைக்கும் அத்தம். -அகம். *33/57.*

*1.3.5.2.* இவ்வாறே கொளை வாலை முதலிய இசை களின் வேறுபாட்டை உணர்த்தி அவற்றை முறையே வண் டுக்கும் சுரும்புக்கும் உவமைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத் தக்க செய்தியாகும். யாழில் எழுப்பும் கொளை இசைக்கு ஏற்பச் சுரும்பு பாலைப் பண்ணை இசைத்துப் பாடுவதாகவும், அவ் விசைக்கு ஏற்பத் தும்பியினம் சிறகு விரித்து ஆடுவதாகவும் அழகிய காட்சி தரப்பட்டுள்ளது.

பூவூது வண்டினம் யாழ்கொண்ட கொளைகேண்மின்
கொலைப்பாருள் தெரிதரக் கொளுத்தாமற் குரல்கொண்ட
கிளைக்குற்ற உழைச்சுரம்பின் கேழ்கெழுபாலை
இசையோர்மின்
பண்கண்டு திறனெய்தாப் பண்தாளம் பெறப்பாடிக்
கொண்டவின் னிசைத்தாளம் கொளைச்சீர்க்கும்
விரித்தாடும்
தண்டும்பி இனங்காண்மின் - பரி.*11/1513*

---

*1.* பத் *8/219.* *2.* அகம் *177/1011* பத் *7/9899.*
*3.* அகம் *40/1415.* *4.* நற் *304/34.* *5.* ஐங். *377/12.*

*1.3.5.3.* மற்றும் விளர் இசை வலம்புரிச் சங்குகளின் முழக்கத்திற்கும் தேரின் மணியோசைக்கும் உவமையாக அமைந்துள்ளது.

விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும்.

-நற். *172/7*

சிறுநா ஒண்மணி விளரி ஆர்ப்ப.

-குறு. *336/38*

*1.3.6.* ஆடற் கலையிலும் அதனை இயக்கிய விறலியரின் தோற்றத்திலும் அவர்களுக்கு மிக்க ஈடுபாடு இருந்தது என்பது அவர்கள் அமைத்த உவமச் செய்திகளில் புலனாகிறது. மலைச் சாரலில் ஆடும் மயில்களுக்கு விறலியின் ஆடல் உவமையாகி யுள்ளது.

கழைவளர் அடுக்கத் தியலியாடும் மயில்
நவைப்புகு விறலியின் தோன்றும்

-அகம். *82/910*

## 4.4. உவமையில் அறவியல் செய்திகள்

உவமையில் வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றதைப் போல அற நீதிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்க செய்தி யாகும். பிற்கால நீதி நூல்கள் உருவாகுவதற்கு இக் கருத்துகள் அடிப்படையாக விளங்கின. காவியங்களும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்களும் அறநீதிகளை வற்புறுத்த எழுந்தன எனக் கூறலாம். இவற்றின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இவ் அற நீதிக் கருத்துகள் முன்னோடியாக அமைந்தன எனக் கூறலாம். சங்க இலக்கியத்தில் மிகப் பிறகாலத்தது என்று கருதப்படும் கலித்தொகையிலேயே அற நீதிகளை உணர்த்தும் உவமைகள் மிகுதியாக அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்க செய்தி யாகும்.

*1.4.1.* நீதிகளும் தத்துவ உணர்வுகளும் வாழ்க்கையின் அனுபவத்தில் எழும் முதிர்வுச் செய்திகளாகும். பயின்று பழகித் தேர்ந்து தெளிந்து அறியப்படும உண்மைகளையே அற நீதிகள்

என்று கொள்வர். இவ் அற நீதிகள் பயின்ற வழக்காக அமைவதற்கு இலக்கியப்பாடல்கள் ஒருசிலவே கிடைத்துள எனினும், தமிழகத்தின் அவற்றிற்கு முன்பு இலக்கிய வளமும் இலக்கண அறிவும் மிக்க நூர்கள் இருந்திருந்தன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். எனவே, உவமைகளில் அறவியல் அமைந்தமை தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான செய்தி யாகும். அவற்றுள் குறிப்பிடத் தக்கன கீழ்வருமாறு.

*1.4.2.* அறத்திற்கு அடிப்படையாக நிலையாமை உணர்வு வற்புறுத்தப்படுவது அற நூல்களில் காணப்படும் பொது வியல்பாகும். உலக வாழ்க்கையை நாடகமாகக் காணும் காட்சி சங்க இலக்கியத்தில் உவமச் செய்தியில் இடம் பெறுகின்றது. திருவிழாக் காலங்களில் கூத்தாடுபவரின் தன்மையைப் போல, முறை முறையாக ஆடி மறைகின்றவர்களைக் கொண்டது இவ் உலகம் என்று பேசப்படுகிறது.

........விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியும் இவ்வுலகத்து.

- புறம். 29/2224

*1.4.3.* இத்தகைய நிலையாமைக் கருத்துகள் மற்றும் இரண்டிடங்களில் கூறப்படுகின்றன. புற்றீசல் வாழ்வு போன்று போரில் மடிவோர் வாழ்வு அமைகிறது என்றும்,[1] பறவை கூடுவிட்டுப் பெயர்ந்து வேறு ஓர் இடத்தை நாடிச் செல்லுதல் போல உயிர் உடம்பு விட்டுப் பெயரும் தன்மையது என்றும்[2] கூறப்படுகின்றன.

*1.4.4.* இவ்வாறு நிலையாமைக் கருத்தை உணர்த்த ஒருசில உவமைகளே எடுத்தாளப்பட்டுள்ளன. நேரிடையாக அறக் கொள்களையும் நீதிகளையும் உவமைகளில் மிகுதியாக வற்புறுத்தியுள்ளனர் என்பது பின்வரும் சான்றுகள் காட்டும்.

*1.4.4.1.* பொருளும் இன்பமும் அறத்து வழிப் படுதல் வேண்டும் என்னும் கருத்துப் புறநானூற்றுப் பாடலில் வற் புறுத்தப்படுகிறது. அறம் பொருள் இன்பம் என்னும் மூவகைப்

1. புறம் *51/911.*
2. அகம் *113/2427.*

பகுப்பின் இயல்பும் முறையும் இவ்உவமையில் காணப் படுகின்றன. பேரரசன் குடை மற்றும் இரண்டு அசரர்களின் குடைகள் பின்வரச் சிறந்து ஓங்கிக் காட்சி அளித்தது என்னும் பொருளைக் கூறுவதற்கு இவ்உவமை தரப்படுகிறது.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல
இருகுடை பின்பட ஓங்கிய ஒருகுடை
உருகெழு மதியின் நிவந்துசேண் விளங்க.

- புறம். *31/14*

*1.4.4.2.* நீதிக் கருத்துக்கள் அரசியல் பற்றியவை என்றும், தனி மனிதனின் அறம் பற்றியவை என்றும் வகுத்துக் கொள்ளத் தக்க வகையில் அமைந்துள்ளன. அரசியல் நீதிகள் ஒருசில பின்வருமாறு.

*1.4.4.2.1.* 'செய்ந்நன்றி மறவாமை' அரசர்க்கு உரிய சிறந்த நீதியாகப் போற்றப்பட்டது. தான் தாழ்வு உற்றபோது தனக்கு ஒருவர் செய்த உதவியினை அரசு கட்டில் ஏறிய பின்னர் மறந்து விடும் மன்னன் நன்றி மறந்தவன் என்ற கருத்து வற்புறுத்தப்படுகின்றது.

கெட்ட இடத்து உவந்த உதவிக் கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல
நன்றி மறந்து அமையாய் ஆயின்.

-குறு. *225/35*

*1.4.4.2.2.* நல்லாட்சி அமையாத நாடு கலக்க முறுதல் துன்பத்தைத் தருவதாகும் என்ற கருத்து வற்புறுத்தப்படுகிறது.

ஆள்பவர் கலக்குற அலைபெற்ற நாடுபோறு
பாழ்பட்டமுகத்தோடு பைதல்கொண்டு அடைவாளோ

- கலி. *5/1213*

இதே கருத்து மற்றும் ஒருசில இடங்களில் கூறப்படுகின்றது.[1]

*1.4.4.3.* அரசியல் நீதிகள் அல்லாமல் தனி மனிதனின் வாழ்விற்குரிய நிதிகள் ஒருசில கூறப்படுகின்றன.

---

1. கலி. *10/57; 34/65; 118/18*
2. கலி. *10/3; 27/12; 34/18; 98/1416; 38/20; 47/56; 120/16; 138/16; 149/3;* குறு *120/12.*

*1.4.4.3.1.* கல்லாதும் அறநெறியைப் பின்பற்றாதும் பெற்ற வாழ்வின் முதிர்ச்சி, இருளும் பயனின்மையும் கொண்டது என்று வற்புறுத்தப்படுகிறது.

கல்லாது முதிர்ந்தவன் கண்ணில்லா நெஞ்சம்போல்
புல்லிருள் பரத்தரூஉம் புலம்புகொள் மருள்மாலை

-கலி.*130/68*

அறஞ்சாரான் முப்பேபோல் அழிதக்காள்.

-கலி. *38/19*

*1.4.4.3.2.* அறக் கொள்கைகளை மிகுதியாகக் கலித் தொகையே வற்புறுத்துகின்றது. அவற்றைத் தொகுத்துக் காணுங்கால் வறுமை கொடிது என்பதும், கொடை புகழைத் தரம் என்பதும், அத்தகையோர் செல்வம் பெருகும் என்பதும் மிகுதியாக வற்புறுத்தப்படுகின்றன என்பது தெரிகிறது.

*1.4.5.* நற்றிணை ஈகையின் சிறப்பையும் அதுவே நிலைத்த புகழைத் தரும் என்ற செய்தியையும் வற்புறுத்த கின்றது.

இசைபட வாழ்வார் செல்வம் போலக்
காண்டொறும் பொலியும் கதழ்வாய் வேழம்.

- நற். *217/12.*

*1.4.6.* மேற்கூறப்பட்டவை அக்காலத்துப் புலவர்களின் உள்ள நிலையையும், அரசர்களின் உயர்ந்தவாழ்வையும், சமுதாய நிலையையும் காட்டுகின்றன. அரசர்களும் செல்வர் களும் ஈட்டியபொருள் பிறர்க்குப் பயன்படுவதே அறம் என்ற கொள்கை சங்க இலக்கியத்தின் உயில்நாடி என்று கூறலாம் இவையே அன்றிச் சமுதாய நல்லொழக்கங்கள் ஒரு சில ஆங்காங்குக் கூறப்படுவது மக்கள் ஒழுக்கத்திற்குக் கொடுத்து வந்த உயர் மதிப்பைக் காட்டுகின்றது. பொய்ச்சான்று பகர்தல்,[1] அடக்கமின்மை,[2] சான்றாண்மை,[3] நன்றி மறவாமை,[4] கல்வி

*1. கலி 34/10*

*2. கலி 32/8*

*3. குறு 265/26*

*4. குறு 225/35; கலி 34/17*

யின் உயர்வு,[1] புறங் கூறாமை,[2] எளியோரை இகழாமை,[3] உயிர்க்கொலை செய்யாமை,[4] கற்பின் உயர்வு,[5] பெண் கொலை செய்யாமை[6] முதலிய பொதுவறங்கள் வற்புறுத்தப் படுகின்றன.

*1.4.7.* நல்லறம் செய்வோர் நல்லுலகம் அடைவர் என்பதும், அல்லறம் செய்வோர் அருநரகு செல்வர் என்பதும் வற்புறுத்தப்படுகின்றன.

## *1.5.* உவமையில் கடவுளர் செய்திகள்

சங்க இலக்கிய உவமைகளுன் வரலாற்றுச் செய்திகள் பெற்றிருந்த இடத்திற்கு ஒப்ப ஓரளவு கடவுளர் செய்திகளும் ஒரு சில இடம் பெற்றிருந்தன என்பது தெரிகிறது. பிற்காலப் புராணக் கதைகளும், இராமாயண இதிகாசக் காப்பியங்களும் எழுவதற்கு வேண்டிய அடிப்படைகள் முதற்கண் இவ் உவமைகளில் தோன்றின என்று கூறலாம். புராணங்களும் தெய்வக் கதைகளும் தனி நூல்களாகப் பிற்காலத்தில் எழுந்ததைப் போலச் சங்க காலத்தில் அவற்றிற்குச் சிறப்பிடம் தரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். எனினும் உவமைகளுள் ஒரு சில இடங்களில் இச்செய்திகள் இடம் பெற்றமை நோக்க அக்காலத்த மக்களின் மன இயல்பை அவை புலப்படுத்துகின்றன எனக் கூறலாம்.

*1.5.1.* தெய்வங்களுள் சிவன், திருமால், முருகன், இந்திரன், திருமகள், வள்ளி, அருந்ததி ஆகியோர் உவமையில் இடம் பெற்றனர். அருந்ததியைக் கற்பிற்கு எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்டமை பெருகிய வழக்காகும்.

*1.5.2.* ஏனைய நூல்கள் வரலாற்றுச் செய்திகளுக்கும் அகப்புறப் பொருட் செய்திகளுக்கும் தலைமை இடம் தரக் கலித்தொகை எழுந்த காலத்து மக்களின் போக்கு, ஏனைய காலத்து மக்களின் மன நிலைக்கு மாறு பட்டது என்பதைக்

1. கலி 130/67
2. கலி 25/1316; 1920; 2324
3. கலி 120/516; 120/1819
4. நற். 304/810; கலி 120/1012; 143/1013
5. நற். 15/710
6. குறு 292/16
7. பரி. 19/1011; கலி. 118/2ண3
8. குறு 292/16
9. ஐங் 442/35; 161/1819; பதி 31/2728; 89/1920; கலி 2/21; புறம் 22/8; பத் 4/302303

காட்டுகிறது. கலித்தொகையில் எந்தக் குறிப்பிட்ட அரசரின் பெயரும் வரலாறும் இடம் பெறவில்லை என்பதும் இதே கருத்தை வற்புறுத்துகின்றது.

*1.5.3.* 'கூற்றுவன்' என்ற உருவகக் கடவுள் சங்க இலக்கியத்தில் மிகுதியாகப் பேசப்படுகிறது. கொடுமை தருவன எல்லாம் கூற்றுவனாக உருவகிக்கப்பட்டன.[1] இவற்றுள் ஒரே ஒரு இடத்தில் மட்டும் சிவபெருமான் 'கூற்று' என்ற சொல்லால் குறிப்பிடப்படுவது குறிப்பிடத் தக்க செய்தியாகும்.[2] கொல்லும் தொழிலில் ஆற்றல் மிக்கவர்கள் எல்லாம் கூற்றுவராக' உவ மிக்கப்பட்டனர். காலன்,[3] மறலி,[4] என்பன கூற்றினைக் குறிக் கும் வேறு சொற்களாகும்.

*1.5.5.* முருகனும் வள்ளியும், இன்பமும் அன்பும் நிறைந்த காதல் வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக உவமையாயினர்.[5] உமை யும் சிவனும் இவ்வாறு உயர்வு இடம் அளிக்கப்டுகின்றனர்.[6] உரோகிணியும் அவர் காதலன் ஆகிய சந்திரனும் இணைபிரியாக் காதலுக்கு எடுத்துக் காட்டாகக் காட்டப்பட்டனர் என்பது தெரி கிறது.[7]

*1.5.6.* பாரதக் கதைகளுள் வீமனுக்கே மிக்க இடம் கொடுக்கப்பட்டுள்ளது.[8] அருச்சுனன் ஒரே ஒரு இடத்தில் மட்டும் குறிப்பிடப்படுகின்றான்.[10] மற்றும் ஏனைய சிலபாரதக் கதைக் குறிப்புகளும்,[11] கண்ணனின் இளமையைக் குறிக்கும் பாகவதக் கதைக் குறிப்புகளும், ஒரு சில இடம் பெற்றுள்ளன.

*1.5.7.* 'அக்குரன்' என்பான் ஒருவன் வள்ளன்மையைக் குறிக்க உவமையாகக் குறிக்கப்படுகிறான். அவன் யார் என்பது தெளிவாகப் புலப்படவில்லை. அவன் கவுரவர்க்கு உதவி னான் என்பதும், கொடையாளி என்பதும் தெரிகிறது. அவன் பாண்டவர்களுள் மூத்தவனாகிய கன்னனாக இருத்தல் கூடும் என்று கருதப்படுகிறது.

---

1. குறு 197/45; 283/5; பதி 26/1314; 13/1112; 14/10; 51/3537; 84/7; பரி 2/50; 11/400; கலி 56/79; 105/3538; 120/9; புறம் 3/1213; 19/4;42/2324; 38/7; 294/3;362/7; பத் 1/81; 6/633; 10/206210.
2. புறம் 56/11.
3. 39/8; 23/17; ஐங் 116/34.
4. புறம் 13/4.
5. பதி 15/3940; புறம் 56/13; 57/2; 174/6.
6. கலி 104/810; 105/911; புறம் 56/36.
7. கலி 26/34.
8. நற் 82/35.
9. கலி 92/1819.
10. பத் 7/163.
11. கலி 25/111; 52/14; 101/1820.

**1.5.8.** இராமாயணக் கதைகளுள் குரங்குகள் சீதையின் நகைகளை மாறி அணிதலும், ஆலமரத்து நிழலில் இராமன் தன் நண்பர்களோடு இருந்து கலந்து ஆலோசித்தலும் உவமைகளாக இடம் பெறுகின்றன.[5]

**1.5.9.** அரவு வாய்ப்பட்ட மதி மிக்கு உவமையில் இடம் பெறுகிறது. அதனை மறுப்பட்ட திங்கள் என்று கூறுவர். இக்கருத்துச் சங்க இலக்கியத்தில் மிகுதியாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும்.[6]

**1.5.10.** துறக்கம் என்ற கற்பனை அவர்கள் உவமையில் இடம் பெற்றிருந்தது. துறக்கம்[7] நாகர் மண்டிலம்,[8] புத்தேள் உலகம், நிரையம் முதலிய செய்திகள் இடம் பெற்றன.

**1.5.11.** புராணக் கதைக் குறிப்புகள் பல உவமையில் இடம் பெற்றிருந்தன என்பதும், தெய்வங்களின் நிலையை மாந்தர் பெறவேண்டும் என்ற விருப்பு இருந்தது என்பதும் தெய்வச் செய்திகள் உவமைகளில் இடம் பெற்றிருந்த மிகுதியால் தெரியவருகின்றன. வீரமும் புகழும் மிக்க மன்னர்களின் வரலாறு உவமைகளில் இடம் பெற்றிருந்ததைப் போல அக்காலத்து மக்கள் செவி வழியாகக் கேட்டு வழி வழியாகப் போற்றி வந்த இதிகாசப் புராணக் கதைகள் உவமைகளில் சிறந்து விளங்கின.

சங்க இலக்கியப் பொருள் மரபுகளில் இயற்கை, கலை அகப்புற வாழ்வியல்,நீதிகள், தெய்வச் செய்திகள் என்று பிரித்து அறியத்தக்க வகையில் சிறப்புச் செய்திகள் அமைந்துள்ளன என்பது மேலே காட்டப்பட்டது. இவ் உவமைகள் குறிப்பிட்ட பொருள் மரபுகளைக் கொண்டிருந்தமையை நோக்க அவை அக்காலப் புலவர்கள், மக்கள் மன நிலையோடு ஒத்து இயங்கத் தம் கருத்துகளைப் புலப்படுத்தினர் என்பதைக் காட்டுகின்றன. எனவே, சங்க இலக்கிய ஒருமைப்பாட்டுக்கு இவ் உவமை மரபுகளின் ஒருமைப்பாடும் ஒரு காரணமாக விளங்குகிறது என்று முடிவு கொள்ளலாம்.

---

1. பத் 3/28240. 2. கலி 104/5759; 101/3032; பத் 4/415420.
3. கலி 134/14; அகம் 59/49;புறம் 174/110.1. பதி 14/7
4. அகம் 70/1314; புறம் 378/1112
5. நற் 377/68; குறு 43/46; பரி10/7376; கலி 105/4246; அகம் 116/16; 313/7.
6. பரி இணை 1/49; பத் 9/104111; 4/388339. 7. புறம் 367/1.

# வரலாற்று உவமைகளைப் பாடிய புலவர்களும் அவை அமைந்த பகுதிகளும்

1. அம்மூவனார்: நற் 35; ஐங் 171, 174,175, 176, 177, 178, 179, 180, 185: அகம் 10,35

2. அள்ளூர் நன்முல்லையார்: அகம் 465

3. ஆலங்குடி வங்கனார்: நற் 400, அகம்106

4. ஆலம்பேரி சாத்தனார்: அகம் 47, 81, 143,175.

5. ஆலத்தூர் கிழார்: புறம் 34.

6. ஆவூர் மூலங்கிழார்: புறம் 166.

7. இம்மென் கீரனார்: அகம் 398.

8. இளங்கீரனார்: நற் 113, குறு 116.

9. இடையன் சேந்தங்கொற்றனார்: அகம் 375.

10. இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்: பத், 3/122.

11. இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பொருங் கௌசிகனார் : பத் 10/397-403.

12. உலொச்சனார்: நற் 131; அகம் 100.

13. உறையூர் முதுகூத்தனார்: அகம் 137.

14. உமடடூர்கிழார் மகனார் பரங்கொற்றனார்: அகம் 69.

15. எருங்காட்டூர்த் தாயங்கொற்றங் கண்ணனார் அகம் 149.

16. ஐயூர் முடவனார்: அகம் 216.

17. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன்: அகம் 25

18. ஓரம்போகியார்: ஐங் 54/13; 55, 56, 57, 58, 61,78.

19. ஓதலாந்தையார்: ஐங் 375, 389.

20. ஔவையார்: நற் 295, 381: குறு 80,91,158 அகம் 147, 303.

21. கபிலர்: நற் 56, 253, 291, 320, குறு100; ஐங் 202, 221; அகம் 238: புறம் 337, 347.

22. கடியலூர் உரத்திரங்கண்ணனார்: பத் 9/298301

23. கடுவன் இளமள்ளனார்: நற் 150.

24. கணக்காயனார்: நற்23.

25. கணக்கானார் மகனார் நக்கீரனார்: அகம் 93.

26. கல்லாடனார்: குறு 293; அகம் 113, 199, 209.

27. கள்ளில் ஆத்திரையனார்: புறம் 389.

28. கயமனார்: 145 அகம்.

29. கருவூர்க் கண்ணம்பாளனார்: அகம் 623.

30. கவூர்க் கந்தப்பிள்ளைச் சாத்தனார்: அகம் 309

31. காட்டூர் கிழார் மகனார் கண்ணனார்: அகம் 85.

32. காரிக்கண்ணனார்: நற் 237.

33. காப்பியாற்றுக் காப்பியனார்: பதி31.

34. காவிரிப்பூம்பட்டினத்துக காரிக்கண்ணனார்: அகம் 123; புறம் 169.

35. காவிரிப்பூம்பட்டினத்துச் செங்கண்ணனார்: அகம் 123; புறம் 169.

36. குடவாயிற் கீரந்தனார்: நற் 379, அகம்44, 60, 315, 366, 385.

37. கோட்டம்பலத்துத் துஞ்சிய சேரமான்: அகம் 168.

38. குறுங்குடி மருதனார்: அகம் 4

39. குன்றூர் கிழார் மகனார்: புறம் 338.

40. குன்றியன்: குறு 238.

41. கொல்லிக் கண்ணன்: குறு 34.

42. சல்வியங்குமரனார்: நற் 141.

43. சாகலாசனார்: அகம் 270.

44. செயலூர் இளம்பொன் சாத்தன் கொற்றனார்: அகம் 57, 126,141,205,227,246,254, 290, 340, 358, 367.

45. தாயங்கண்ணனார்: அகம் 213.

46. தேவனார்: நற் 227.

47. நரிவெரு உம் தலையார்: குறு 5.

48. நக்கீரர்: அகம் 57, 126,141,205,227,249, 254, 290, 340, 358, 367இ

49. நல்லந்துவனார்: பரி 8.

50. நல்லச்சுதனார்: பரி 10.

51. நக்கண்ணையார்: பரி 87.

52. நெடும்பல்லியத்தனார்: குறு 178.

53. பரணர் நற் 6, 100, 201, 265, 270, 280, 300 350. குறு 73, 89, 128, 199, 258, 292, 298, 328, 393, அகம் 6, 62, 76, 116, 122, 125, 135, 142, 148, 152, 162, 181, 186, 196, 198,

208, 222, 226, 236, 246, 258, 262, 266, 276, 322, 236, 356, 386, 396; புறம் 343, 348, 352.

54. பாவைக்கொட்டிலார்: அகம் 336.

55. பாலத்தனார்: நற் 52.

56. புறத்திணை நன்னாகனார்: புறம் 176

57. பெருங்குன்றூர் கிழார்: பதி 81, 86.

58. பெருந்தலைச் சாத்தனார் அகம் 13.

59. பெரும்பதுமனார்: குறு 7

60. பொதும்பில் கிழார்மகனார் நற் 387.

61. மதுரைக் கணக்காயனார்: அகம் 27, 338.

62. மதுரை நக்கீரர் அகம் 36, 76.

63. மதுரை ஈழத்துப் பூதன் தேவனார்: அகம் 231.

64. மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்: அகம் 256.

65. மதுரை அளக்கர் ஞாழார் மகனார் மள்ளனார்: அகம் 256.

66. மதுரைத் தத்தங்கண்ணனார்: அகம் 335.

67. மதுரைப் பேராலவாயர்: அகம் 296.

68. மதுரைப் படைமங்க மன்னியார்: புறம் 351

69. மருதனிள நாகனார்: நற் 39,2/6; அகம் 77, 90269, 312, 365.

70. மருதம் பாடிய இளங்கடுங்கோ: அகம் 96.

71. மாமூலனார்: நற்14; அகம் 1, 15, 55, 61, 65, 91, 97, 115, 127, 211, 233, 251, 265, 325, 331, 347, 359.

72. மாற்றூர்கிழார் மகனார் கொற்றங்கொற்றனார்: அகம் 54.

73. முடத்தாமக்கண்ணியார்: பத் 2/5355, 129.

74. மிளைக்கண்ணன்: குறு 196.

75. மோசிகீரனார்: குறு 84; அகம் 392.

76. மாங்குடி மருதனார்: பத் 6/34345; 507510, 524, 26, 53638, 61821.

77. மையோடக் கோவனார்: பரி7.

78. வெண்கண்ணனார்: அகம் 130.

79. வெள்ளிவீதியார்: அகம் 45.

80. பெயர் தெரியாத புலவர்: அகம்117.

# 7. சங்க இலக்கியத்தில் உள்ளுறையும் இறைச்சியும்

1. உள்ளுறை இறைச்சி பற்றி ஆராயத் தொல்காப்பியச் சூத்திரங்கள் வழிகாட்டுகின்றன. தொல்காப்பியம் இவற்றைப் பற்றிய தெளிவான விளக்கங்களைத் தருகின்றது எனினும் அவற்றின் கருத்துகளை அறிவதற்கு உரையாசிரியர்களின் உரை தேவைப்படுகிறது. இவ் இரண்டையும் வைத்துக் கொண்டே உள்ளுறை இறைச்சி ஆகிய இவற்றின் அடிப் படையை உணர வேண்டியுள்ளது. தொல்காப்பியச் சூத்திரங் களுக்கு மாறுபட்ட உரைகளும் கருதுவது வேறு. அதனால் எது முடிந்த கருத்து என்றும் கூறுவது எளிதன்று. இவற்றை மரபு வழிச் செய்தியாகக் கொண்டு இவற்றின் வழி நின்று உள்ளுறையையும் இறைச்சியையும் பற்றி அறிய வேண்டி யுள்ளது.

2. மற்றும் பாடல் பகுதிகளில் எவை உள்ளுறைப் பகுதிகள், எவை இறைச்சிப் பகுதிகள் என்று கோடிட்டுப் பிரித்து அறிவது அரிய முயற்சியாகும். கொள்வோர் எந்தப் பகுதியை யும் இவற்றிற்கு நிலைக்களனாகக் கொள்ளலாம். எனினும் இவற்றைப் பற்றி மரபு வழிச் செய்திகளை அறியப் பழைய உரையாசிரியர்கள் காட்டும் பகுதிகள் அல்லாமல் ஏனைய பகுதிகளையும் உள்ளுறை இறைச்சிக்கு நிலைக்களனாகக் கொள்ளலாம். எனினும் இவ்வாறு உள்ளுறை இறைச்சியாகக் கொள்வதற்குச் சில அடிப்படைகள் காணப்படுகின்றன. அவற்றையே உரையாசிரியர்கள் நிலைக்களனாகக் கொண்டு உரைக் குறிப்புத் தந்துள்ளனர். இவ்வாய்வு அவர்கள் உரை வழி நின்று கொள்ளப்படும் செய்திகளையே தருகிறது. அவர்கள் குறிப்பிடும் பகுதிகளே ஈற்றில் பின்னிணைப்பாகத் தொகுத்துச் சேர்த்துத் தரப்பட்டுள்ளன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வில் ஒரு சில அரிய செய்திகள் தரப் படுகின்றன.

3.தொல்காப்பியச் சூத்திரங்களும் அவற்றிற்குத் தரப்படும் உரை விளக்கங்களும் கொண்டு கீழ்வரும் செய்திகளை அறிய முடிகின்றது.

*3.1.* வெளிப்படையாக உவமமும் பொருளும் இயைத்துக் கூறப்படும் உவமமேயன்றிப் பாட்டின் கருப் பொருளைத் துணையாகக் கொண்டு பெறப்படும் உள்ளுறை இறைச்சிகள் உவமையையும் குறிப்புப் பொருளையும் தரும் கருப்பொருள்களை மட்டும் பெற்று இயங்கும்.

அவறோடு இணைத்துப் பொருத்தப்பெறும் பொருட் செய்திகள் அப்பாட்டின்கண் இடம்பெறா.

*3.2.*உள்ளுறையும் இறைச்சியும் தொல்காப்பியர் காலத்தி லேயே போற்றப்பட்ட உவமைப் பொருள் நயஉத்திகளாகும். தொல்காப்பியர் காட்டி விளக்கும் இவ்உத்திகள் அகப்பொருள் இலக்கியத்திற்கே உரியனவாகப் போற்றபட்டன. சங்க இலக் கியங்களிலும் அகப்பொருள் பாடல்களிலேயே இவை இடம் பெறுகின்றன.

*3.3.* உள்ளுறை என்பது கருப்பொருளின் துணை கொண்டு பெறப்படும் குறிப்பு உவமையாகும். இஃது அகப் பொருளுக்கே உரியது என்ற அடிப்படையில் தொல்காப்பி யத்தில் அகத்திணையியலிலும் பொருளியலிலும் விளக்கப்படு கிறது. உவமை என்ற அடிப்படையில் இதன் இயல்பு உவமை யியலில் ஆராயப்படுகிறது.

*3.4.* தொல்காப்பியர் தரும் விளக்கத்தின்படி உள்ளுறை பற்றி அறியப்படுவன கீழ்வருமாறு:

*3.4.1.*திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமம் பெரிதும் துணை செய்யும் என்பர்.

உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்
தள்ளா தாகும் திணையுணர் வகையே.

-தொல். அகத். *46*

*3.4.2.* கருப்பொருள்கள் என்று கிளக்கப் பெறுபவற்றுள் தெய்வம் நீங்கலாக ஏனைய பொருள்களை ஓட்டியே உள்ளுறை பிறக்கும் என்பர்.

உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்
கொள்ளு மென்ப குறியறிந் தோரே.

-அகத் *47*(தொல்)

*3.4.3.* கருப்பொருளோடு ஒத்துப்பொருள் கொள்ளும் வகையில் இவ்உள்ளுறைச் செய்திகொள்ளப்படுகின்றது.

உள்ளுறுத் திதனோடு ஒத்துப்பொருள் முடிகென
உள்ளுறுத் திறுவதை உள்ளுறை உவமம்.

-தொல்.அகம்.48

3.4.4. உள்ளுறை உவமம் குறிப்பாகக் கொள்ளத்தக்கது என்றும், ஏனை உவமம் வெளிப்படையாக உணரத்தக்கது என்றும் விளக்கப்படுகிறது.

ஏனை உவமம் தான் உணர் வகைத்தே.

-தொல்.அகத் 49.

3.4.5. உள்ளுறை ஐவகை அமைப்புகளைக் கொண்டு விளங்குமென்பர். உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்னும் மரபுகளைப் பெற்று விளங்கும் என்பர்.

உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்புஎனக்
கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே.

-தொல்.பொருள்.242

உடனுறை என்பதற்கு இறைச்சி என ஆசிரியர் நச்சினார்க் கினியர் பொருள் கொள்வர்,எனவே,இதில் இறைச்சி ஆகிய குறிப்புப் பொருளும், உவமம் ஆகிய பொருள் கொள்ளத் தக்க அமைப்பும், சுட்டிக் கூறும் இயல்பும்,நகை உணர்வும், சிறப்புப் பொருளும் அமைதல் இதன் தனிஅமைப்பாகும். சிறப்பு என்பதற்கு ஏனை உவமம் உள்ளுறை உவமத்தைச் சிறப்பித்து அடையாக நின்று பொருள் உணர்த்தல் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் உரை விளக்கம் தருவர். இவ் ஐவகைப் பகுதிகளைக் கொண்டு விளங்குவது உள்ளுறை எனினும்,உவமும் குறிப்புப் பொருளும் இவற்றின் அடிப் படைகள் எனலாம்.

3.4.6. இவை நுட்பமாகவே உணரும் திறத்தன என்பதும் வற்புறுத்தப்படுகிறது. இப் பொருளைக் கொள்வதற்கு கூர்ந்த நுட்பமான உணர்வும் பொருளில் துணிவும் தேவை என்பதும் வற்புறுத்தப்படுகின்றது. எனவே, அனைவர்க்கும் இவை எளிதில் விளங்கும் திறத்தன என்று கூற இயலாது.

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி
முன்னை மரபிற் கூறுங் காலை
துணிவொடு வருஉந் துணிவினோர் கொளினே.

- தொல்.பொருள்.208

3.4.7. உவமை என்ற அடிப்படையில் உள்ளுறையை ஆராயுமிடத்து அது பொருளோடு இயைபுகொள்ளும் பொழுது ஐவகை தன்மைகள் சுடடப்படுகின்றன, பொதுவாக உவமைக் குரிய பொதுத் தன்மைகள் ஆகிய இவற்றோடு பிறப்பு என்பதும் சேர்த்துக் கூறப்படுகிறது.

தவலருஞ் சிறப்பீன் அத்தன்மை நாடின்
வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்
பிறப்பினும் வருஉந் திறத்தியல் என்ப

-தொல்.பொருள்.300

3.4.8. உள்ளுறை பாடல் மாந்தர்களின் கூற்றுகளில் அமைவதாகும். அப்பாடல்கள் அனைத்தும்கவிஞன் கூற்றாக அமையாமல் பாடல் மாந்தரின் கூற்றாக அமைவனவாகும். இது நாடக நூல்களில் அமையும் பெற்றியாகும். அகப்பாடல்கள் இவ்வகையில் நாடக இயல்பு கொண்ட தனிக் கூற்றுகள் எனப் பொதுவாகக் கூறலாம். கலித்தொகைப் பாடல்களும் ஒரு சில இருவர் உரையாடும் பகுதிகளையும் கொண்டு விளங்கு கின்றன. நாடகத்தில் இரட்டுற மொழிதல் என்னும் உத்திதோன்ற உரையாடல்கள் அமைவனவற்றை இரு பொருள் அமைப்பு என்று சிறப்பிப்பர். இதில் நாடகமாந்தர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசக் கேட்போருக்கு ஒரு பொருளும், நாடகத்தைப் பார்ப்போருக்கு மற்றொரு பொருளும் தோற்று வித்து உரையாடும் திறனைக் காட்டுவர். இதைப் போன்ற அமைப்பே இவ் உள்ளுறை உவமத்தில் காணப்படு கின்றது. வெளிப்படையாக உணர்த்தப்படும் கருப்பொருள் செய்தியே அன்றிக் குறிப்பாகப் புலப்படுத்தப்படும் உரிப்பொருள் செய்தி யும் தோற்றுவிக்கப்படுகிறது. இக் கூற்றினைக் கேட்பவர் நிறைவையும் குறையையும் எடுத்துக்காட்டும் வகையில் இக் குறிப்புப் பொருள் அமையும் என்பர். இந் நுட்பத்தினை ஆசிரியர் தொல்காப்பியனார் சுட்டிக் காட்டுவர்.

இனிதுறு கிளவியும் துனியுறு கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப

-தொல்.உவம.330

3.4.9. ஆசிரியர் தொல்காப்பியனார் உள்ளுறை உவமம் கிளக்கப்படும் இடங்களும், அவற்றைக் கூறும் பாடல் மாந் தரும், கிளக்குமாறும் சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத் தக்க

செய்தியாகும். இவை அவர் காலத்து இலக்கியங்களில் பயின்று வந்த மரபுகளாகும்.

3.4.10. குறிப்பிட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறு மிடத்து உள்ளுறை என்பது உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு ஆகிய அமைப்புகளை கொண்டு குறிப்பாகக் கொள்ளப் படும் உவமை வகை ஆகுமென்பதும், வினை, பயன், மெய் உரு, பிறப்பு ஆகிய இயல்புகளின் அடிப்படையில் உவமச் செய்திகள் பெறப்படும் என்பதும், இவற்றால் இனிதுறு கிளவியும் துனியும் கிளவியும் அமையும் என்பதும்,இவை ஒருசிலர் உரையாடலில் பயின்று வரும் மரபைப் பெற்றுள்ளன என்பதும் புலனாகின்றன.

3.5. இறைச்சிஎன்பது உள்ளுறையைப் போல அகப் பொருள் இலக்கியங்களுள் எடுத்தாளப்படும் பொருள் நய உத்தியாகும். இக் காரணம் பற்றியே தொல்காப்பியப் பொருளியல் கற்பியல்களில் இது விளக்கப்படுகிறது.இறைச்சி என்பதற்குக் கருப்பொருள் எனப் பொருள் கொள்ளப் படுதலைக் காண இயலுகின்றது. மற்றும் உடனுறை என்ற தொடருக்கு இறைச்சி என்ற பொருளை ஆசிரியர் நச்சினார்க் கினியர் தருவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். கருப்பொருள் செய்திகளில் உடனுறைகின்ற குறிப்புப் பொருளையே இறைச்சி எனக் கொண்டனர் இறை என்பது இறு என்பதன் திரிபாகக் கொண்டால் இறைச்சி என்பதற்குத் தங்குதல் என்னும் பொருள் கொள்ள இடம் தருகிறது.

3.5.1. இறைச்சி என்பது கருப்பொருளின் புறத்ததாகவே பெறப்படும் குறிப்புப் பொருள் என்பது பொதுவாக நிலவும் கருத்தாகும். இதற்கு துணை செய்வது; 'இறைச்சி தானே பொருள் புறத்துவே' என்னும் சூத்திரமாகும். எனினும் உள்ளுறை உவமங்கள் பல இறைச்சியாக உரையாசிரியர் களால் கொள்ளப்படுகின்றன. இவற்றை நோக்கும்பொழுது கருப்பொருளின் புறத்ததாகக் கொள்ளப்படும் இறைச்சி வேறு. உவமை வழியாக உள்ளுறையைப் போல அமைக்கும் இறைச்சி வேறு என்று கொள்ள வேண்டியுள்ளது. ஆசிரியர்

1. தொல்.பொருளதிகரம் 301,302,304.
2. தொல்.பொருள்.229,230,231;கற்புயல்148.
3. தொல்.பொருள்.231;கற்பியல் 148;நச் உரைகள் 3/12-13-19;3/16-1; நச்,உரை.குறு.3/4-5(மேற் கோளாட்சி தொல்;பொருள், 33 இள பூரணர் உரை)

நச்சினார்க்கினியர் இவ்வேறுபாட்டினை நுட்பமாக உணர்த்து கின்றார். இவ் இரண்டாம் வகைக்கு ஆதாரமாகக் கீழ்வரும் சூத்திரத்தைக் காட்டுவர்;

இறைச்சியில் பிறக்கும் பொருளு மாருளவே
திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே. -தொல்.230

இஃது உவமை வழி அமையும் இறைச்சி என்பது நச்சினார்க்கினியர் கருத்தாகும்.

3.5.2. உவமை வழியாக அமையும் இறைச்சிக்கும் உள்ளுறைக்கும் உள்ள வேறுபாடு மிக நுட்பமானதாகும். உள்ளுறையில் உவமமும் உண்டு;இறைச்சியும் (குறிப்புப் பொருளும்) உண்டு. இறைச்சியில் குறிப்புப் பொருளும் உண்டு; உவமும் உண்டு. இவை இரண்டிற்கு முள்ள ஒற்றுமைப் பண்புகளாம். இவற்றை உள்ளுறை என்றோ இறைச்சி என்றோ கொள்வது கொள்வோரின் மன நிலையைப் பற்றியதாகும். உவமைக்குத் தலைமையும் சிறப்பும் கொடுத் தால் அவை உள்ளுறை உவமம் எனக் கொள்ளபடுகின்றன. இவையே இவ் இரண்டிற்கு முள்ள அடிப்படை வேறுபாடுகள் எனலாம்.

4.0. சங்க இலக்கிய உள்ளுறை இறைச்சிப் பகுதிகளை ஆய்ந்து பார்க்கும் பொழுது ஒரு சில சிறப்புச் செய்திகள் பெறப்படுகின்றன. அவற்றின் விளக்கம் அவ்வந் நூல்களுக்குத் தரும் உரைக் குறிப்புகளாலேயே புலப்படுகின்றது.

4.1. உள்ளுறையும் இறைச்சியும் அமைய இடனாக நிற்கும் கருப்பொருள்கள் பொழுதும் இடமும் ஆகிய முதற் பொருள்களுக்கு அடையாக நின்று அவற்றைப் பெரும்பாலும் சிறப்பிக்கின்றன. நிலத்தைக் குறிக்கின்ற மலை, துறை, ஊர், சுரன், காடு முதலிய சொற்களும் சிறுபொழுது, பெரும்பொழுது ஆகிய இவற்றை உணர்த்தும் காலச் சொற்களும் முடிக்கும் சொற்களாக அமையக் கருப்பொருளும் முதற்பொருளும் இயைந்து நிற்கின்றன. இளம்பூரணர் உரையும் இக் கருத்து களையும் கொண்டே பாடல் திணைகளையும் வகுக்க இயல் கின்றது. குறுந்தொகைப் பாடல்களின் பதிப்பில் அவற்றின் திணைத் தலைப்புத் தரப்படவில்லை எனினும் இக் கருப் பொருள்கள் சாரும் முதற்பொருள்களைக் கொண்டு அவற்றின் திணைகளை நிறுவ இயலுகின்றது.

**4.2.** குறிஞ்சித் திணைப் பாடல்களுள் கருப்பொருள்களை அடையாகக் கொண்டு முடியும் முதற் பொருள் கானக நாடன், வெற்பன், சிலம்பன், மலைகிழவோன் என்பன பயின்று வருகின்றன; மருத நிலப் பாடல்களுள் ஊரன் என்பது மிகுந்து வழங்குகிறது; பாலை நிலப்பாடல்களுள் அத்தம், நெறி, அருஞ்சுரம் முதலியன பயின்று வழங்குகின்றன; முல்லை நிலப் பாடல்களில் புறவு, பாக்கம் என்பன பயின்று வருகின்றன; நெய்தல் நிலப் பாடல்களில் சேர்ப்பன், புலம்பன், துறைவன், கொண்கன், கானலன் முதலியன பயின்று வழங்குகின்றன. பொழுதுகளுள் நடுநாள், மாலை, காலை, அச்சிரம், கார், வாடை முதலியன பயின்று வழங்குகின்றன.

**4.3.** உள்ளுறை இறைச்சி ஆகியவற்றுள் உள்ளுறைப் பகுதிகளே உரையாசிரியர்களால் மிகுதியாகக் காட்டப் பட்டுள்ளன. அகநானூற்றில் இறைச்சி என்பது சுட்டப்படவே இல்லை, நற்றிணையிலும் கலித்தொகையிலுமே இறைச்சி ஆங்காங்கே சுட்டப்படுகின்றன. பத்துப்பாட்டுள் ஒன்றாகிய குறிஞ்சிப் பாட்டில் மட்டும் உள்ளுறை வருமிடங்கள் இரண்டு என்று தெரிகிறது. இறைச்சி சுட்டப்படவே இல்லை. ஐங்குறு நூற்றில் பெரும்பாலும் உள்ளுறைகவே காட்டப்படுகின்றன. இரண்டு இடங்களில் மட்டும் உள்ளுறை என்பதும் இறைச்சி என்பதும் வெளிப்படையாகக் கூறப்படுகின்றன. குறுந் தொகையில் உரைப் பகுதியில் உள்ளுறை என்றோ இறைச்சி என்றோ சுட்டாமல் பொதுவாகக் குறிப்புப் பொருள் என்று தரப்படுகின்றது.

**4.4.** உள்ளுறைக்கு விளக்கம் சங்கப் பாடல்களை எடுத்துக் காட்டாகத் தந்து உரையாசிரியர்கள் விளக்கி உள்ளனர். அவர்கள் வழியே நின்று உள்ளுறைப் பொருள் பெறப்படும் நிலையை எடுத்துக்காட்ட இயலும்.

**4.4.1.** வினையுவமப் போலிக்குக் கீழ்வரும் பகுதி சான்றாகக் காட்டப்பட்டுள்ளது:

> கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
> சுரும்புபசி களையும் பெரும்புன லூர. - ஐங்.65/12

இதற்குத் தரும் விளக்கம்: ''இது வினையுவமப் போலி என்பர்; என்னை? தாமரையினை விளைப்பதற்கன்றிக் கரும்பு நடுதற்குச் செய்த பாத்தியுள் தானே விளைந்த தாமரை சுரும்பின் பசி தீர்க்கு முரன் என்றாள். இதன் கருத்து: அது காதற் பரத்தையர்க்கும் இற்பரத்தையர்க்கும் என்று அமைக்கப்பட்ட

கோயிலுள் யாமுமுளமாகி இல்லறம் பூண்டு விருந்தோம்பு கின்றனம். அதுபோல வென்பதாகலான் உவமைக்குப் பிறிதொரு பொருள் எதிர்ந்து உவமஞ் செய்யாது ஆண்டுப் பிறந்தன வற்றோடு நோக்கிக் கருத்தினாற் கொள்ள வைத்தலின் இஃது உள்ளுனறை யுவமமாயிற்று. அவற்றுள்ளும் இது சுரும்பு பசி களையும் தொழிலோடு விருந்தோம்புதல் தொழில் உவமங் கொள்ள நின்றமையின் வினையுவமப் போலி யாயிற்று. இங்ஙனங் கூறவே இதனை இப்பொருண்மைத் தெல்லாம் உணருமாறு என்னையெனின் முன்னர் 'துணிவோடு வரூஉந் தணிவினோர் கொளினே' எனல் வேண்டியது அதன் அருமை நோக்கியன்றே என்பது. அல்லாக்கால் கரும்பு நடு பாத்திக் கலித்த தாமரை சுரும்பு பசி களையும் பெரும்புனலூர என்பது பயமில் என்பது கூறலாமென்பது.

4.4.2. இவ்வாறே பய உவமப் போலி,[2] மெய் உவமைப் போலி,[3] உரு உவமைப் போலி,[4] முதலியவற்றிற்கும் சங்கப் பாடல்களை எடுத்துக் காட்டாகத் தந்து தொல்காப்பிய உவம வியற் பகுதியை விளக்குவர். இச்சூத்திரங்களுக்கு மாறுபட்ட கருத்தும் உளது என்பது இளம்பூரணர் உரையால் தெரிகிறது.

4.4.3. உள்ளுறை வினை, பயன், மெய், உரு, பிறப்பு என்ற பாகுபாடுகளைக் கொண்டது என்பது பேராசிரியர் கருத் தாகும். இளம்பூரணர் இப் பகுதிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தைத் தருவது குறிப்பிடத்தக்கதாகும். அவர் கருத்தின்படி உவமப்போலி என்பது உவமையைப் போன்று வருகின்ற ஒருசில. அணி வகைகளைக் குறிக்கின்றது. அவையே வினை. பயன், மெய், உரு, பிறப்பு என்னும் ஐவகைக் காரணங்களால் அமையும் என்பதும் அவர் தரும் விளக்கமாகும். மற்றும் உள்ளுறை உவமைகளை இன்னின்னார் இவ்விவ் வகையில் கூறுவர் என்னும் கருத்தினைப் பேராசிரியர் வற்புறுத்துவர். இவை ஏனை உவமங்களுக்கே பொருந்தும் என்பது இளம்பூரணர் தரும் விளக்கமாகும். பிற்கால உரையாசிரியர்கள் பேராசிரியரைப் பின்பற்றியே உரை வகுத்துச் சென்றுள்ளனர் என்பது அவர்கள் வினை உவமம், பய உவமம், உரு உவமம், பிறப்பு உவமம் எனத் தெரித்துக் காட்டுவதால் புலனாகின்றது.

4.5. பொருட் புறத்தனவாக அமையும் இறைச்சிக்கும் உவமை வழிஅமையும் இறைச்சிக்கும் வேறுபாடு உள்ளது.

1. இறைச்சி-ஐங் 177/23; உள்ளுறை-ஐங் 151/4.
2. தொல் உவம சூ. 25. பேரா. உரை. 3. ஐங். 12.
4. குறு. 208. 5. ஐங் 73.

முன்னதில் உவமையே அமைவது இல்லை. பின்னதில் உவமை அடிப்படையாக நிற்கும். கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் இவ் வேறு பாட்டை உணர்த்தும்.

4.5.1. ''பல்கோட் பலவின் சாரல் அவர் நாட்டு''- நற். 102/5. இதற்குத் தரும் இறைச்சிப் பொருள் பின் வருமாறு: 'என்னைக் கைவிட்ட கொடுமையை உடையவர் சாரலாய் இருந்தும் அச்சாரலின் கண் உள்ள பலா மரங்கள் பிறர்க்குப் பயன் படுமாறு காய்க்கின்றனவே. இஃது என்ன வியப்பே எனப் பொருட்புறத்தே இறைச்சி தோன்றியது அறிக' என விளக்கம் தரப்படுகிறது.

4.5.2. ''இலங்கும் அருவிதத்தே இலங்கும் அருவித்தே
வானின் இலங்கும் அருவித்தே தானுற்ற
சூள்பேணான் பொய்த்தான் மலை'' -கலி.41

இதற்கு நச்சினார்க்கினியர் தரும் விளக்கம் பின்வருமாறு: ''சூளைப் பொய்த்தான்'' என்பதே கூறவேண்டும் பொருள். அதன் புறத்தே ''இங்ஙனம் போய்த்தான் மலையகத்து நீர் திகழ்வான் என் என இறைச்சிப் பொருள் தோன்றியவாறு காண்க'' என்பர்.

4.5.3. உவமை வழியில் அமைந்த இறைச்சிப் பொருள்கள் சில பின்வருமாறு:

4.5.3.1.''சிறுகுடிப் பரதவர்
கங்குல் மாட்டிய கனைகதிர் ஒண்சுடர்
முதிரா ஞாயிற்று எதிரொளி தடுக்கும்
கானலம் பெருந்துறைச் சேர்ப்பன்'' நற்.219/47

இதற்குத் தரும் இறைச்சிப் பொருள் பின்வருமாறு: ''பரதவர் கங்குல் மாட்டிய விளக்கு இளங்கதிரின் ஒளி போல விளங்கும் என்றது தலைவன் என்னைக் கலந்து நின்னிற் பிரியேன் என்று சொல்லி விடுத்த வாய்மை என் நெஞ்சில் இலங்காநின்றது என்றாள் என்பதாம்.

4.5.3.2. ''பெருங்கடல்
இரவுத்தலை மண்டிலம் பெயர்ந்தென
உரவுத்திரை எறிவன போல வெரூஉம்
உயர்மணல் படப்பை'' -நற்.375/69

இதற்குத் தரும் உரை பின்வருமாறு: ''திங்களைக் கண்டு கடல் பொங்கி அலை யெழுந்து ஆரவாரிக்குமென்றது. நீ வரைவொடு வருதற்கண் எமர் எதிர்கொண்டு மகிழ்ந்து ஆரவாரிப்பரென்றதாம்.''

4.5.4. முன்னிரண்டு எடுத்துக்காட்டுகளில் பொருள் உவமை வழியாக அமையவில்லை என்பதும், சூழ்நிலை ஒட்டிக் கொள்ளப்படும் குறிப்புப் பொருள் என்பதும்தெலிய வருகின்றன. பின்னிரண்டு எடுத்தக் காட்டுகளுள் சூழ்நிலை ஒட்டி அமைந்த பொருளாயினும் அவை உவமை வழியாகவே அமைந்துள்ளன என்பதும் தெரியவருகிறது.

4.6. பொருட் புறத்தனவாக அமையும் இறைச்சிப் பொருள்களில் வியப்புணர்ச்சியோ இரக்க உணர்ச்சியோ தலை சிறந்து விளங்குகிறது என்பது உரையாசிரியர்கள் காட்டும் உரை விளக்கத்தால் தெரியவருகிறது.

4.6.1. "பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு"-நற். 1025 இதற்குத் தரும் இறைச்சிப் பொருளாவது: "என்னைக் கை விட்ட கொடுமையை உடையவர் சாரலாய் இருந்தும் அச் சாரலின் கண் உள்ள பலாமரங்கள் பிறர்க்கும் பயன் படுமாறு கமழ்கின்றனவே. இஃது என்ன வியப்போ" எனப் பொருட் புறத்தே இறைச்சி தோன்றியது அறிக. இதில் வியப்புணர்ச்சி தலைசிறந்து விளங்குகிறது.

4.6.2. "மணியின் தோன்றும் இம்மலை கிழவோன்"
-நற் 173/67.

இதற்குத் தரும் இறைச்சிப் பொருள் "ஒன்றினேம்யாம் என்று புகல்புக்க எம்மைக் கைவிட்ட அன்னோன் மலை யாயிருந்தும் நீலமணி போலத் தோன்றி விளங்காநிற்கும். இஃது என்ன வியப்போ" எனப் பொருளின் புறத்தே தோன்றியதாம். இதிலும் வியப்புணர்ச்சி வற்புறுத்தப்படுகிறது.

4.6.3."செந்நெல் அஞ்செறுவில் அன்னம்துஞ்சும்
பூக்கெழு படப்பைச் சாய்க்காட்டன்ன"நற்73/89

உரை விளக்கம் : "செறுவில் அன்னம் துஞ்சும் என்றது யானும் சேக்கையின்கண்ணே அவர் மார்பில் துஞ்சியிருந்தேன். இப்போழுது அஃது இல்லை போலும்" என்று இரங்கியதாம். இதில் இரக்க உணர்ச்சி வற்புறுத்தப் படுகிறது.

4.6.4."முதைச்சுவல் கிளைத்த பூழி மிகப்பல
நன்பொன் இமைக்கும் நாடனொடு" -நற்.389/910

**உரை விளக்கம்:** கோழிகிளைத்த பூழியிடத்து நன்பொன் இமைக்கு மென்றது செல்வக் குறைபாடிலனாதலால் எமர்க்கு வேண்டும் பொருள் கொடுத்து என்னை மணம் புரிந்து கொண்டான் இல்லையே என்றிரங்கியதாம்" இதில் இரக்க **உணர்ச்சி** வற்புறுத்தப்படுகிறது.

இவ்வாறே ஏனைய இடங்களிலும் பொருட் புறத்தவாக வந்த இறைச்சிப் பொருள்கள் இவ் உணர்வுகளின் அடிப் படையில் அமைந்துள்ளன என்பது உரைக் குறிப்புகளால் விளங்குகின்றது.

4.7. புறநானூற்றில் குறிப்புப் பொருள் அமைந்துள்ள பகுதிகள் மூன்று வந்துள்ளன. இதன் பழைய உரையாசிரியர் அவற்றை உள்ளுறை என்றே குறிப்பிடாமல் வெறும் குறிப் புரை மட்டும் தருகின்றார். அவை உள்ளுறை இறைச்சி ஆகிய தன்மைகளைப் பெற்றுள்ள போதும் உள்ளுறை என்றோ இறைச்சி என்றோ குறிப்பிடப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்க செய்தியாகும். எனவே உள்ளுறையும் இறைச்சியும் அகப்பொருளுக்கே உரிய உவமைப் பொருள் நய உத்திகள் என்னும் மரபு போற்றப் பட்டமைக்கு இவை சான்று பகர்கின்றன எனலாம்.

4.8. உள்ளுறையும் இறைச்சியும் உவமைகளாகக் கொள்ளும் பொழுது உரையாசிரியர்கள் இரண்டு வகை நெறி களைக் கையாளுகின்றனர். மொத்தமாகத் தொகைப் பொருளாக உவமைகளைக் கொள்ளுதலும், ஒவவொன்றனோடு தனித்து இயைத்துப் பொருள் கொள்ளுதலும் என இருவகை நெறிகளை மேற்கொள்ளுகின்றனர்.

*4.8.1.* உள்ளுறை *(தொகைப் பொருள்):* உரை: ''பிடி புலம்புமாறு புலியானது களிற்றைத் தாக்கிக் கொல்லா நிற்கும் நாடன் என்றதனால் இரவு இந்நெறியின் கணவரின் யாம் புலம்புமாறு எமர் என்னை ஏதம்செய்யா நிற்பர் என்பதாம்.'' நற். *48/35* உரை

*4.8.2.* உள்ளுறை (விரித்துக் கூறல் அல்லது தனித்தனி இயைத்தல்*):* ''கனி தலைவியாகவும், தும்பி தோழி யாக வும், அலவன் தம்மேல் தவறிழைக்கும் தமராகவும், இறைதேர் நாரை தலைவனாகவும், கொண்டு கனியைத் தும்பி மொய்த் தலும் அலவன் கைப்பற்றிக் கொள்ள நாரை வரக்கண்டு விட்டது போலத் தலைவியைத் தோழி சார்ந்திருப்பவும் தமர் முதலா யினார் இற்செறிப்பத் தலைவன் வரலும் அவர் மகட்கொடை நேர்ந்து இற்செறிப் பொழித்தார் என்றதாம்''. நற்35/27 உரை.

இறைச்சி (விரித்துக் கூறல்*):* ''குறுமாக்கள் தலைவி யாகவும் எருமையில் பால் மிகுதியாகக் கறக்க விரும்புதல் நோன்பின் பயனை மிக விருமபுதலாகவும், அவற்றை ஊர்ந்து செல்லுதல் தைத் திங்கள் விடியல் நீராடச் சொல்லுதலாகவும் அதற்கேற்ற வாறு கொள்க.''

4.9. தெய்வத்தை வைத்து உள்ளுறை அமைவது இல்லை என்பர் ஆசிரியர் தொல்காப்பியனார். புள்ளும் விலங்கும் செடி கொடிகளும் உவமைக்கு இடமாதல் போலத்தெய்வங்கள்

உவமைக்கு இடனாக அமையவில்லை தெய்வத்தின்பால் அவர்கள் கொண்டிருந்த மதிப்பும் உயர்வும் இதனால், புலப்படுகின்றன. உவமையில் வைத்துப் பேசக்கூடிய எளிய பொருள்களாக அவர்கள் தெய்வத்தைக் கருதவில்லை என்பது தெரிகிறது. தெய்வத்தைப் பற்றிய செய்திகளைக் கொண்டு பெறப்படும் உவமச் செய்திகளை உள்ளுறை இறைச்சியாகக் கொண்டனர் என்பதும், நற்றிணை உரையாசிரியர் தரும் குறிப் பால் விளங்குகிறது. அதனால் உள்ளுறையினின்று வழுவி வரும் உவமப் பகுதிகளெல்லாம் இறைச்சியாகக் கொண்டனர் என்பதும் தெரிகிறது. நற்றிணை உரையாசிரியர் தரும் குறிப்புகள் பின்வருமாறு:

''சூரரமகள் எனத் தெய்வத்தை இடையிட்டு உரைத் தமையின் உள்ளுறை அன்மை உணர்க'' நற்.4/15 உரை.

''ஏனை உவமம் ஆயினும் ஞாயிற்றுப் புத்தேளை உவமித்தமையின் இஃது உள்ளுறை அன்மை உணர்க'' -நற்.163/712 உரை.

4.10. உள்ளுறை உவமத்தில் குறிப்புப் பொருள் தலை சிறந்து நிற்குமானல் அஃது இறைச்சி ஆகக் கொள்ளப்பட்டது என்பது கீழ்வரும் நற்றிணை உரைக் குறிப்பால் தெரியவருகிறது. ''சிறைப்புறம் என்றதால் அவனறியும் ஆற்றானே கூறினன் ஆதலின் இவ்வாறு உள்ளுறையும் இறைச்சி கொள்ளலா யிற்று''. -நற் 372/10-13 உரை. எனவே உள்ளுறையே இறைச்சி ஆகும் என்பதும் தெரிகிறது.

4.11. உள்ளுறை என்பதும் கவிஞன் தெரிந்து அமைப்பதா அன்றிக் கொள்பவரின் கற்பனை ஆற்றலா என்று முடிவு செய்வது எளியது அன்று. குறுந்தொகையில் வரும் ஒரு பாட்டில் உரிப் பொருளே கூறப்படாமல் கருப்பொருளும் முதற்பொருளும் மட்டும் அமைந்த பகுதி காணப்படுகிறது. உரிப் பொருள் இல்லையெனில் அப்பாட்டு முழுமை பெறாது. உரிப் பொருள் இன்றித் தமிழ் அகப்பாடல் அமைவது இல்லை என்பது தமிழ் இலக்கிய மரபாகும். ஈண்டு உள்ளுறையால் கொள்ளப்படும் செய்தியே உரிப் பொருளாக அமைகிறது. எனவே உள்ளுறை இறைச்சி என்பன கவிஞனின் கற்பனை ஆற்றலாலேயே அமைவது என்பதற்கு இப்பாடல் சான்று தருகிறது.

மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை
மகளிர் அன்ன துணையொடு வதியும்
நிழல்முதிர் இலஞ்சிப் பழனத்து அதுவே
கழனித் தாமரை மலரும்
கலின்பெ றுசுடர் நுதல் தந்தை ஊரே - ஐங்.94/1-5



# நூல்கள் கிடைக்குமிடம்

## அணியக வெளியீடுகள்

**ஆசிரியர் : ரா.சீ**

1. அணியகம், சென்னை-30. ✆ 644 9630
2. பாரி நிலையம், சென்னை - 108.
3. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
4. ஹிக்கின் பாத்தம்ஸ், சென்னை - 2.
5. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
6. நியூ புக் லாண்ட், சென்னை - 17.
7. கிரி டிரேடிங் ஏஜென்சி, சென்னை-4.